கண்டறியாதன கண்டேன்!

சின்ன அண்ணாமலை


தமிழ்ப் பண்ணை லிமிடெட்
தியாகராய நகரம்.........சென்னை

முதற் பதிப்பு
1951 அக்டோபர்

விலை ரு. 3—0—0

தமிழ்ப்பண்ணை அச்சகம்,
தி. நகர், சென்னை-17.





இந்நூலாசிரியர் திரு சின்ன அண்ணாமலையும், ரஸிகமணி திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், கல்கி ஆசிரியர் திரு. ரா. கிருஷ்ண மூர்த்தி அவர்களும் சேர்ந்து செய்த பிரயாண அனுபவங்களின் தொகுப்பே இந்நூல்.

இந்நூல் சுவையாக இருக்குமேயானால் அதற்குக் காரணம் இந்நூலாசிரியர் மட்டுமல்ல. இவர்கூடப் பிரயாணம் செய்த மற்ற இருவரையும் சாரும். மேலே கண்ட படத்தில் இருவரையும் காணலாம். இந் நூலாசிரியருடன்.

பேராசிரியர் "கல்கி" அவர்களின்

முன்னுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு தேவகோட்டையில் தமிழிசை மகாநாடு நடந்தது. அப்போது ஹிட்லரின் சைன்யங்கள் மாஸ்கோ நகரின் வாசலில் நின்றன. "இன்றைய தினம் உலகத்தின் கவனமெல்லாம் இரண்டு கோட்டைகளின் மீது இருக்கிறது. ஒன்று மாஸ்கோ கோட்டை; இன்னொன்று இந்தத் தேவகோட்டை" என்று மேற்படி தமிழிசை மகா நாட்டில் ஒருவர் தமது பிரசங்கத்தைத் தொடங்கினார். அந்த ஒருவர் யார் எனில், இந்த முன்னுரையை எழுதுகிறவரேதான்!

அத்தகைய பிரசித்தி பெற்ற தேவகோட்டைத் தமிழிசை மகாநாடு நல்லபடியாக நடந்து சபை கலையும் சமயத்தில் ஓர் இளைஞர் திடீரென்று என் முன் தோன்றி வழிமறிப்பவர் போல நின்றார்.

"ஐயா! பாரதியார் உயிரோடிருந்த காலத்தில் அவரைச் சரி வர மதிக்கவில்லை என்ற பழி இந்தத் தமிழ் நாட்டுக்கு உண்டு என்பது தெரியுமல்லவா?" என்று கேட்டார்.

'ஆம்; தெரியும். ஆனால் அதற்குப் பொறுப்பாளி நாம் இருவரும் அல்ல" என்றேன்.

"அது உண்மை தான், ஆனால் இன்றைய தினம் நம்மிடையே நாமக்கல் கவிஞர் ஜீவியவந்தராயிருக்கிறார் அல்லவா? பாரதியார் விஷயத்தில் ஏற்பட்ட பழி நாமக்கல் கவிஞர் விஷயத்திலும் தமிழ் நாட்டுக்கு ஏற்படக் கூடாதல்லவா?" என்று கேட்டார்.

"கூடாது தான் !" என்றேன்.

"அப்படியானால் அதற்கு நீங்கள் என்ன செய்வதாக உத்தேசம்?" என்றார்.

"ரயிலுக்குப் போகும் அவசரத்தில் ஒன்றும் செய்ய முடியாது. சென்னைக்கு வந்தால் சாவகாசமாக அதைப் பற்றி யோசிக்கலாம்!" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டு திரும்பினேன்.

தேவகோட்டைக்கும் சென்னைக்கும் பல காத தூரம். அத்துடன் அந்த நாட்களில் ரயில் பிரயாணம் மிகவும் அபாயகரமாயுமிருந்தது. ஆகையால் அந்த இளைஞரை இந்த ஜன்மத்தில் மறுபடி சந்திக்கப் போவதில்லை என்று நினைத்தேன். ஆனால் நாம் நினைக்கிறபடி இந்த உலகில் என்ன காரியந்தான் நடைபெறுகிறது? சில காலத்திற்குப் பிறகு அந்த இளம் நண்பர் சென்னைக்கு வந்து சேர்ந்தார். நினைத்த காரியத்தைப் பிடிவாதமாக நிறைவேற்றியும் வைத்தார். நாமக்கல் கவிஞருக்குப் பண முடிப்பு அளிக்கும் வைபவம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஒரு கவிஞரை அவருடைய ஜீவிய காலத்திலேயே சிறப்பித்த பெரும் புகழைத் தமிழ் நாடு அடைந்தது.

அதனால் மேற் கூறிய இளம் நண்பரும் ஒரு பெரும் பயனை அடைந்தார். ராஜாஜி அவர்களின் திருவாக்கினால் "சின்ன அண்ணாமலை" என்ற சிறப்புப் பெயரை அடைந்தார்.

அது முதல் அவரை என் சிறந்த நண்பராகக் கருதி வந்திருக்கிறேன். பல இடங்களுக்கு அவருடன் பிரயாணம் செய்திருக்கிறேன். ஆனால், இத்தனை நாளும் அவர் என் பேரில் ஏதோ ஒரு வைரம் வைத்திருந்தார் என்பதை, இப் புத்தகத்தைப் புரட்டிப் பார்த்த பிறகுதான் தெரிந்து

கொண்டேன். நாமக்கல் கவிஞரைச் சிறப்பிக்கும் காரியத்தில் அவருடன் நான் சரியாக ஒத்துழைக்கவில்லை யென்பதற்காகத்தானோ என்னமோ, இந்தப் புத்தகத்தில் அநேக இடங்களில் என் தலையில் கல்லைத் தூக்கிப் போட்டிருக்கிறார்! போனால் போகட்டும்! மலையைத் தூக்கிப் போடமல் விட்டாரே, அதற்காக என் நன்றி.

நண்பர் ஸ்ரீ சின்ன அண்ணாமலை அபூர்வமான பல ஆற்றல்கள் படைத்தவர். பதினாயிரம் இருபதினாயிரம் ஜனங்கள் அடங்கிய சபையில் மணிக் கணக்கில் பிரசங்க மாரி பொழியக்கூடியவர். ஆவேசமாகப் பேசுவார்; அழவைக்கும்படி பேசுவார்; சிரித்து வயிறு புண்ணாகும் படியும் பேசுவார். பேசும் ஆற்றலைப் போல் எழுதும் ஆற்றலும் படைத்திருக்கிறார். அழகிய சிறு கதைகள் எழுதியிருக்கிறார். ரஸமான பிரயாணக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். அவர் எழுதிய பிரயாணக் கட்டுரை களில் சில இந்நூலில் வெளியாகியிருக்கின்றன. கட்டுரை களில் சில பெயர்களும் புனைபெயர்களும் அடிக்கடி வருகின்றன. அந்தப் பெயர்களை யெல்லாம் எடுத்து விட்டிருந்தால் கட்டுரைகளின் விஷயங்கள் மிக ரஸமா யிருக்கும். சின்ன அண்ணாமலையின் எழுத்துத் திறமையை அறிந்து அநுபவிப்பதும் எளிதாகியிருக்கும்.

புத்தகம் அச்சாகிவிட்டபடியால் மேற்படி திருத் தத்தை நிறைவேற்றுவதற்கில்லை. இப்போதெல்லாம் கிடைக்கும் 'ரேஷன்' அரிசியில் உள்ள கற்களைப் பொறுக்கி எறிந்துவிட்டுச் சாப்பிட வாசகர்கள் பழக்கப் பட்டிருப்பார்கள். அதுபோல் இந்நூலில் 'கல்கி' என்னும் பெயர் வருமிடங்களிலெல்லாம் அந்தப் பெயர் இல்லை யென்று எண்ணிக்கொண்டு நேயர்கள் படித்து ரஸிக்கலாம்.

அல்லது பத்திரிகைகளின் முகப்பில் வழக்கமாய்ப் பிரசுரமாவதுபோல் "இதில் வரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; யாரையும் குறிப்பிடுவனவல்ல!" என்று எண்ணிக்கொண்டும் படிக்கலாம்.

எப்படிப் படித்தாலும் சரி, புத்தகத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு தடவையாவது வாசகர்கள் சிரித்தே தீரும்படியிருக்கும்.

"அடடா! சின்ன அண்ணாமலை இப்படிப் பண்ணி விட்டாரே!" என்ற சோக உணர்ச்சியுடனே படித்த நானே அடிக்கடி சிரிக்கவேண்டி வந்தது என்றால், மற்ற வாசகர்கள் சிரிப்பதற்குக் கேட்பானேன்?

காந்திநகர், சென்னை
27—10—51

ரா. கிருஷ்ணமூர்த்தி
"கல்கி"

சரணம் சாமி, ஐயப்பா!

1. பிரயாணம்

கட்டுரையாகட்டும், கதையாகட்டும், விரு விருப்பாகவும் ஓட்டமாகவும் இருக்கவேண்டுமென்று இலக்கிய சிகாமணிகள் கூறிவந்திருக்கிறார்கள். ஆகையால் என்னுடைய கட்டுரையைத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஆரம்பிக்கிறேன்.

குற்றாலம் போவதென்றால், தமிழ் ரஸிகர்களுக்கும் கும்மாளியும் கொண்டாட்டமும்தான். ஏனெனில், அங்கே உடலைக் குளிர்விப்பதற்குத் தூய்மையான அருவியிருக்கிறது. உள்ளத்திற்கோ தெவிட்டாத இன்பம் அளிக்கும் கவிதைகளைச் சொல்ல டி.கே.சி. அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே, கல்கி ஆசிரியர் அவர்களுடனும் 'ட்ரோஜன்' அண்ணாமலைச் செட்டியாரவர்களுடனும் எழும்பூர் ஸ்டேஷனில் ரயில் ஏறிய போதே கும்மாளி ஆரம்பமாகிவிட்டது!

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸும் எங்களுடைய ஆர்வத்தை அறிந்து கொண்டு அதிவேகமாகச் செல்ல ஆரம்பித்தது. ஆனாலும் அதன் வேகம் எங்களுக்குப் போதவில்லை.

இரவு சுமார் மூன்று மணிக்குக் கல்கி ஆசிரியர், "பொழுது விடிந்து விட்டதா?" என்று கேட்டார். "இல்லை, இன்னும் ரொம்ப நேர மிருக்கிறது; தூங்குங்கள்!" என்றேன். பத்து நிமிஷங் கழித்து, மறுபடி

யும், "விடிந்து விட்டதா?" என்று கேட்டார். "என்ன ஸார் இது! இப்பொழுதுதானே விடிவதற்கு வெகு நேர மிருக்கிறது என்று சொன்னேன்? அதற்குள் மறுபடியும் கேட்கிறீர்களே!" என்று சலித்துக் கொண்டேன்.

"இந்தச் சூரியன் சுத்த மோசம்!" என்றார் கல்கி.

"ஒருவேளை சூரியனைப் பாம்பு விழுங்கி யிருக்கலாம். அல்லது சூரியனுடைய தேரின் அச்சு மரம் இற்று நொறுங்கிப் போயிருக்கலாம்! வீணாகச் சூரியனைக் குறை சொல்கிறீர்களே!" என்றேன்.

"இந்தமாதிரி டி. கே. சி. ஒரு பாட்டுச் சொல்வார்களே!" என்றார் ட்ரோஜன்.

உடனே அசல் டி. கே. சி. பாணியில் நானே அந்தப் பாட்டை ஆரம்பித்துவிட்டேன்.

ஒரு காதலி தன் நாயகன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்து, வராதபடியால் வருத்தப்பட்டு, பாங்கியை எழுப்பிச் சூரியனைப் பற்றிக் குறை கூறுகிறாள். காதலியின் ஆர்வத்தைப் பற்றியும் தோழியின் அலட்சியத்தைப் பற்றியும் விவரமாய்ச் சொல்லிவிட்டு, "இப்பொழுது வருகிறது பாட்டு. அற்புதமான பாட்டு. நாயகி தோழியைப் பார்த்துச் சொல்வதாக பாவம். இப்போது பாட்டைப் பார்க்கலாம்" என்று பாட ஆரம்பித்தேன் :—

"அரவம் கரந்ததோ?

ஒருவேளை சூரியனை ராகு என்கிற பாம்பு விழுங்கி விட்டதோ!

அச்சுமரம் இற்றுப் புரவி
கயிறுருவிப் போச்சோ?

சூரியன் ஏறிவந்த தேரின் அச்சு மரம் இற்றுப் போய் அதில் பூட்டியிருந்த குதிரைகள் கயிற்றை உருவிக்

கொண்டு ஓடிப்போய் விட்டதால் சூரியன் வர முடியாமல் தவிக்கிறுனே!

இனிப் பாடலை முழுதும் பார்க்கலாம்:

அரவம் கரந்ததோ
அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப்
போச்சோ—இரவிதான்
செத்தானே வேறுவழி
சென்ருனே, பாங்கிளனக்(கு)
எத்தால் விடியும்
இரா?"

இப்படி நான் உற்சாகமாகப் பாடி முடித்ததும், "சூரியன் எப்படியாவது செத்து ஒழியட்டும். உங்களுடைய பாட்டைக் கேட்டதில் எனக்குக் கவிதைத் தாகம் அதிகமாகி விட்டது. ஒரு சோடா கிடைக்குமா, பாருங்கள்!" என்ருர் கல்கி.

அந்த நேரத்தில் சோடா எங்கே கிடைக்கப் போகிறது! அதுவும் திருச்சி ஜங்ஷனில்! நான் கல்கியைப் பார்த்துச் சொன்னேன்:—

"அவ்வளவு முக்கியமான தாகம் தணிக்கும் பொருளைச் 'சோடா' என்று 'டா' போட்டுப் பேசினுல் அது கிடைக்குமா? 'டா' போடுவது என்ருல் பாட்டிலே தான் போடலாம். ஒரு பொதுக் கூட்டத்தில் நான் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு கிழவர் என் எதிரில் உட்கார்ந்து தூங்கி விழுந்து கொண்டிருந்தார். உடனே நான்,

'என்ன உறக்கமடா! உனக்கு
என்ன மயக்கமடா?'

என்று நாமக்கல் கவிஞரின் பாட்டைப் பெருங்குரலில்

பாடினேன். அவ்வளவுதான்! அந்தக் கிழவர், 'படார்' என்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்!" என்று சொல்லிக் கொண்டே, கிழவர் நிமிர்ந்து உட்கார்ந்தது போல் நானும் நிமிர்ந்து உட்கார்ந்து காட்டினேன். அப்போது, 'படார்' என்று என் தலையில் இடித்தது. "ஓஹோ! ரயிலில் மேல் ஸீட்டில் உட்கார்ந்திருக்கிறோம்" என்று நினைவு வந்தது. இவ்வளவு நேரம் மேலிடத்தில் இருந்தது போதுமென்று கீழே இறங்கினேன். அதே சமயத்தில் சூரியன், அரவம் விழுங்காமலும், அச்சுமரம் இற்று விழாமலும், வேறுவழி செல்லாமலும், திண்டுக்கல்லுக்குச் சமீபமாகக் கிழக்கில் உதித்தான்.

அப்புறம் கேட்க வேண்டுமா? இன்னும் அதிகக் கொம்மாளிதான்!

* * * *

மதுரை ஜங்ஷனில் வண்டி நின்றபோது, பின் பக்கமாக ஒரு பிச்சைக்காரப் பெண் வந்து, "ஐயா, முதலாளி, ஐயா, முதலாளி" என்று கல்லுங் கரையும்படி கதறினாள். "இந்தப் பெண்ணுக்கு ஜோசியம் தெரியும்போலிருக்கிறது. இல்லாவிட்டால், 'ட்ரோஜன்' செட்டியார் இந்த வண்டியில் இருப்பது இந்தப் பெண்ணுக்கு எப்படித் தெரிந்தது?" என்றார் கல்கி. 'ட்ரோஜன்' செட்டியாரோ, சட்டைப் பைக்குள் கையைச் செலுத்தி, அகப்பட்டது என்ன என்பதை எங்களிடம் காட்டாமல் அந்தப் பெண்ணின் நீட்டிய கையில் போட்டார். அவள் உடனே அங்கிருந்து நகர்ந்து அடுத்த வண்டிக்குப்போய், "ஐயா, முதலாளி" என்று கதற ஆரம்பித்தாள்.

அடாடா! இந்தச் சமயம் இங்கே ரஸிகமணி டி. கே. சி. இல்லையே என்று வருத்தப்பட்டோம். இருந்திருந்தால்,

'முதலாளி' என்ற தமிழ் வார்த்தையின் அழகையும் பாவத்தையும் பண்பாட்டையும் பற்றி எவ்வளவோ சொல்வார்களே. "ஐயா, முதலாளி!" என்ற தமிழ் வார்த்தைக்குப் பதிலாக "ஓ! காபிடலிஸ்ட்!" (Oh Capitalist) என்று அந்தப் பெண் அழைத்திருந்தால், எப்படியிருக்கும்? "முதலாளி" என்ற வார்த்தை எவ்வளவு கனிவாக இருக்கிறது? "காபிடலிஸ்ட்" என்னும் வார்த்தை எவ்வளவு கொடூரமாகத் தொனிக்கிறது?

இப்படியாகத் தமிழையும் ரஸிகமணி டி. கே. சி. அவர்களையும் பற்றியே அடிக்கடி பேசிய காரணத்தினால் "தென்காசி எப்போது வரும்?" என்ற பரபரப்பு எங்கள் எல்லாருக்கும் உண்டாகி விட்டது. அந்தப் பரபரப்பு திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸுக்கும் உண்டாகி யிருந்தது என்பதைத் தென்காசி ஸ்டேஷனில் வண்டி நின்றதும் தெரிந்துகொண்டோம்.

* * * *

தென்காசி பிளாட்பாரத்தில் டி. கே. சி. அவர்களும் அவருடைய சீடர்களான ஸ்ரீ சுப்ப ராஜா முதலியவர்களும் கும்பலாக நின்று கொண்டிருந்தார்க்ள்.

ரயிலைவிட்டு நாங்கள் இறங்கியதும், "ரயில் இன்றைக்குச் சீக்கிரம் வந்துவிட்டதே!" என்று டி. கே. சி சொன்னார்கள்.

"தங்களுக்கு ரயிலைப் பற்றிய ஒரு விகடத் துணுக்குத் தெரியுமோ?" என்று கேட்டுவிட்டுச் சொல்ல ஆரம்பித்தேன்.

திருநெல்வேலி—திருச்செந்தூர் ரயில் பாதையில் சாதாரணமாக ரயில்கள் குறித்த நேரத்துக்கு வருவது கிடையாது. ஒரு நாள் எதிர்பாராத விதமாகச் சரியான

நேரத்துக்கு ரயில் வந்துவிட்டது. ரயிலுக்காகக் காத்திருந்த ஜனங்கள் சந்தோஷம் தாங்காமல் என்ஜின் டிரைவரைப் பாராட்டத் தொடங்கினார்கள். சிலர் சோடா, கலர் வாங்கிக் கொடுத்தார்கள். சிலர் அவசரமாக ஓடிப் பூ மாலை வாங்கிக்கொண்டுவந்து டிரைவருக்குப் போட்டார்கள். "இன்று ரயிலைச் சரியான நேரத்துக்குக் கொண்டு வந்தீர்களே? அதை ரொம்பவும் பாராட்டுகிறோம்!" என்றார்கள். என்ஜின் டிரைவர் திருதிருவென்று விழித்துவிட்டுக் கடைசியில், "இல்லை இல்லை! இது நேற்று வரவேண்டிய ரயில்; இன்றைக்கு வந்திருக்கிறது!" என்றாராம்.

இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டு டி. கே. சி அவர்கள் நின்ற இடத்திலேயே நின்றார்கள். ரயிலும் நகர ஆரம்பித்துவிட்டது. அப்போது ஒருவர் கையில் ரோஜாப் பூ மாலைகளுடன் விரைவாக வந்துகொண்டிருந்தார். "அடடா! ரயில் நகர்ந்து, என்ஜின் டிரைவரும் போய்விட்டாரே!" என்றேன்.

"மாலைகள் டிரைவருக்கு அல்ல; அவ்வளவு சீக்கிரமாய் ரயிலைக் கொண்டு வந்தவருக்கு மாலை வேறேயா?" என்று டி. கே. சி. தம்முடைய 'காபிரைட்' புன்னகையுடன் சொன்னார்கள். ரயில் சீக்கிரம் வந்துவிட்டது பற்றி டி. கே. சி புகார் சொன்னதின் காரணம் எங்களுக்கு விளங்கிற்று. டிரைவர் தப்பிவிட்டார். நாங்கள் அகப்பட்டுக் கொண்டோம்.

பிறகு நண்பர் சுப்பராஜாவின் காரில் ஏறிக்கொள்ள, கார் குற்றாலத்தை நோக்கிக் 'கார் எனக் கடிது' சென்றது!

* * * *

அருவியில் ஸ்நானம் செய்து, ரசிகமணியின் வீட்டில் உணவருந்தினேமோ, இல்லையோ, "கல்லிடைக்குறிச்சியிலிருந்து நவாப்பின் மோட்டார் வந்திருக்கிறது" என்று ஒருவர் வந்து சொன்னார். நாங்கள் மூவரும் இந்தப் பிரயாணம் எதற்காகக் கிளம்பினேம் என்பதை நான் இப்போது சொல்லியாக வேண்டும்.

நவாப் டி. எஸ். ராஜமாணிக்கம் என்றால் தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரே குதூகலம். ஏனெனில், அவர் பல வருஷ காலமாக நாடகத் துறையில் பல நூதன முறைகளைக் கையாண்டு, தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கிறார். அப்பேர்ப்பட்ட நவாப் ராஜமாணிக்கம் சில வருஷ காலமாகத் தமிழ் நாட்டுப் பக்கமே தென்படவில்லை. திருவிதாங்கூர் சமஸ்தானத்திலேயே இருந்து நாடகங்களை நடத்தி வந்தார்.

ஸ்ரீ ராஜமாணிக்கம் அசைக்க முடியாத உயர்ந்த லட்சியங்களை உடையவர். நல்ல காரியங்களுக்கு உதவி செய்ய எப்பொழுதும் பின் வாங்காதவர். எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த நிதி ஆரம்பமானவுடன் கல்கி ஆசிரியருக்கு ரூ. 500/–அனுப்பினார். அத்துடன் அவர் திருப்தியடையவில்லை. மலையாள தேசத்தை விட்டு விட்டுத் தமிழ் நாட்டுக்கு வந்தவுடன் கல்லிடைக் குறிச்சியில் நடத்திய முதல் 'ஐயப்பன்' நாடகத்தின் வசூலைப் பாரதி ஞாபகார்த்த கைங்கரியத்துக்குத் தருவதென்று தீர்மானித்தார். அதன்படி மேற்படி நாடகத்தை வெற்றிகரமாக நடத்தி, அதில் வசூலான தொகையில் வரி போகப் பாக்கி ரூ. 1951/யும் கல்கி ஆசிரியரிடம் கொடுக்கப் போவதாகத் தெரியப்படுத்தினார். மேற்படி தொகையைப் பெற்றுக்கொள்ள டி. கே. சியும் கல்கியும் செல்லும் சமயத்தில் நானும் கூடப்

போவதென்று முடிவு செய்தேன். ஒரு வேளை நவாப் ராஜமாணிக்கம் கொடுக்கும் பணம் வெள்ளி ரூபாயாக இருந்துவிட்டால், கல்கியும், டி. கே. சியும் தூக்க முடியாமல் கஷ்டப்படக் கூடுமே, நாமும் போனால் உதவியாக இருக்குமே என்ற பரோபகார நோக்கந்தான்!

இந்தப் பிரயாணத்தோடு பிரயாணமாக எட்டயபுரம் சென்று, அங்கே ராஜாஜியினால் அஸ்திவாரம் இடப்பட்ட பாரதி மண்டபம் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்த்து வரவும் எண்ணியிருந்தோம்.

* * * *

ஆற்றுலத்திலிருந்து கல்லிடைக்குறிச்சிக்குப் போகும் போதே நவாப் ராஜமாணிக்கம் நாடகக் கம்பெனியின் மானேஜரான ஸ்ரீ மணி ஐயர் அவர்கள், ஐயப்பன் கதையையும், அந்தக் கதையை ஸ்ரீ ராஜமாணிக்கம் நாடகமாக்கி நடிக்கும்படி ஏற்பட்ட வரலாற்றையும், அவருடைய பக்தியின் சிறப்பையும் பற்றி எங்களுக்கு இதிகாசமாகச் சொல்லிக் கொண்டு வந்தார். கல்லிடைக் குறிச்சி போனதும் இதிகாசம் உண்மையாகவே இருந்ததைக் கண்டோம்.

நவாப் ராஜமாணிக்கம் கட்டுக் கட்டாக விபூதி பூசிக் கொண்டு, நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு வைத்துப் பக்தி வடிவமாக விளங்கினார். அன்புடன் எங்களை வரவேற்று, அவரும் மற்ற நடிகக் குழந்தைகளும் தினமும் பூஜை செய்வதற்காக நிர்மாணித்திருக்கும் கொட்டகைக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். அங்குத் தேவி, சரஸ்வதி, லக்ஷ்மி, ஐயப்பன் முதலிய தெய்வங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன. ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர், மகாத்மா காந்தி முதலிய மகான்களின்

படங்களும் வைக்கப்பட்டிருந்தன. சந்நிதியில் தீபாலங்காரம் அற்புதமாயிருந்தது.

சந்நிதிக்கு எதிரே தேவி நாடக சபையைச் சேர்ந்த சுமார் 250 பேர் (பெரும்பாலோர் பாலர்கள்) இரு வரிசையாக உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தக் காலத்தில் இவ்வளவு பேருக்கும் உணவுப் பொருள்கள் சேகரித்துச் சாப்பாடு போடும் அதிசயத்தைப் பற்றி ரசிகமணி குறிப்பிட்டார்கள். உடனே, அதில் ஏற்படும் கஷ்டங்களைப் பற்றி ஸ்ரீ ராஜ மாணிக்கம் விவரித்து, "எல்லாம் தேவியின் அருளால் தான் நடக்கின்றன!" என்று முடித்தார். தேவியின் அருளால் எங்களுக்கும் நல்ல விருந்து கிடைத்தது. நவாப்பின் அபார உபசாரத்தை ஏற்றுக் கொள்வதில் என்னுடைய கடமையை நான் ஒழுங்காகச் செய்தேன்.

இதற்குள் நாடகத்திற்கு நேரம் ஆகிவிட்டதால் எல்லோரும் கொட்டகைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

2. ஐயப்பன் நாடகம்

சாம்பிராணிப் புகை 'குப் குப்' என்று கிளம்பிக் கொட்டகை முழுதும் மணம் பரப்பியது. வாத்தியங்கள் பரபரப்பாக ஒலிக்கத் தொடங்கின. மணி 'டங் டங்' என்று அடித்தது. குபீரென்று விளக்குகளும் அணைந்தன. சரி, நாடகம் ஆரம்பித்துவிட்டது என்று அறிந்தோம். அதற்குப் பிறகு வேறு எதிலும் கவனம் செல்லவில்லை.

எல்லா விக்கினங்களையும் தீர்த்துவைக்கவேண்டிய விக்னேஸ்வரர் பெரிய திரையின் மத்தியில் ஒரு சிறிய துவாரத்தின் மூலம் தோன்றினர். சின்னஞ் சிறு விநாயகர்; பால் வடியும் முகம். அவர் கல்லுப் பிள்ளையாராக

இருந்து விடாமல் தாளத்திற்குத் தகுந்தாற்போல் ஆட ஆரம்பித்த அழகே அழகு! மனத்தை உருக்கி ஆனந்த பரவசத்தில் ஆழ்த்திவிட்ட அந்த ஆரம்பக் காட்சியை மறக்கவே முடியாது. பிறகு பல தெய்வங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் தோன்றி ஆசி கூறிய பிறகு நாடகம் ஆரம்பமாயிற்று.

நாடகக் கதை பழைய புராணத்தில் ஆரம்பமாகிறது. இடையில் ராஜா ராணி கதையாக மாறுகிறது. கடைசியாகத் தற்காலத்தில் பக்தர்கள் திருவாங்கூர் சமஸ்தானத்திலுள்ள சபரி மலை ஐயப்பன் கோயிலுக்குப் பக்தி பரவசத்துடனும் "சாமி! சரணம்! ஐயப்பா!" "சரணம்! சாமி ஐயப்பா!" என்ற கோஷங்களுடனும் யாத்திரை செய்யும் காட்சியில் பூர்த்தி அடைகிறது.

தேவேந்திரனுடைய அகம்பாவச் செயல் காரணமாகக் கோபம் கொண்ட முனிவர் அவனுக்குச் சாபம் கொடுக்கிறார்; சாப நிவர்த்திக்குப் பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்து உண்ணும்படி சொல்லுகிறார். தேவர்களால் மட்டும் அக்காரியம் முடியாததினால் அசுரர்களையும் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். பாற்கடலைக் கடைந்து அமிர்தம் எடுத்தவுடன், அசுரர்கள், தங்களுக்குத்தான் பூரா அமுதமும் வேண்டுமென்று சண்டை பிடிக்கிறார்கள். மகாவிஷ்ணு மோஹினியாக அவதாரம் எடுத்து வந்து தேவர்களுக்கு மட்டும் அமுதத்தைக் கொடுத்துவிடுகிறார்.

மகாவிஷ்ணுவின் மோகினி அவதாரத்தைப்பற்றிக் கேள்விப்பட்டுப் பரமசிவன் அங்கு வருகிறார்; மோகினி அவதாரத்தைக் கண்டு மோகித்து விடுகிறார். அதிலிருந்து ஹரியையும் ஹரனையும் 'புத்' தென்ற நரகத்திலிருந்து காப்பாற்ற ஹரி ஹர புத்திரன் அவதரிக்கிறான். குழந்தையை ஒரு காட்டில் விட்டுவிடுகிறார்கள்.

புத்திரனே இல்லாத பந்தள தேசத்து அரசன் அக்குழந்தையைக் கண்டு, எடுத்து, மகிழ்ச்சியுடன் வீட்டிற்குக் கொண்டு வந்து வளர்க்கிறான்; 'மணி கண்டன்' என்று பெயரும் சூட்டுகிறான். மணிகண்டன் வந்த முகூர்த்தமாகப் பந்தள தேசத்து அரசனுக்கு ஒரு சொந்தக் குழந்தையும் பிறக்கிறது. மணிகண்டன் சிறுவனாகப் பள்ளியில் படிக்கும்போது உபாத்தியாயரின் குழந்தைக்கு இருந்த குருடு, செவிடு, ஊமை, நொண்டி முதலிய ஊனங்களைச் சொஸ்தமாக்கி விடுகிறான்.

பந்தள தேசத்து அரசாங்கத்தின் இரண்டாவது மந்திரி, பிரமாத அட்டகாசம் செய்து, மக்களைக் கொடுமைப் படுத்தி வருகிறான்; "கள்ளுக் குடிக்காதே!" என்று பிரசாரம் செய்த தொண்டர்களைச் சவுக்கால் அடித்துத் துன்புறுத்துகிறான். இந்தக் கொடுஞ் செயல்களை மணிகண்டன் கண்டிக்கிறான். அதிலிருந்து மணிகண்டன்மீது மேற்படி மந்திரிக்குத் துவேஷம் உண்டாகிறது. ஒரு மந்திரவாதியைக் கொண்டு, மணி கண்டனை மந்திரத்தினால் கொல்லும்படி ஏவுகிறான். இதை அறிந்த மணிகண்டனுடைய முஸ்லிம் நண்பன் கோபம் கொள்கிறான்; அது பலிக்காமற் போகவே மேலும் சூழ்ச்சி செய்கிறான்; மகாராணியின் தோழியை முதலில் சரிப்படுத்துகிறான்; பிறகு மகாராணியிடம் போய் அவளுடைய மனத்தையும் மாற்றிவிடுகிறான். மகாராணி அவன் சொன்னபடி தலைவலி என்று படுத்துக் கொள்கிறாள்; தலைவலி தீரப் புலிப்பால் வேண்டுமென்று சொல்லுகிறாள். உடனே மணிகண்டன் புலிப்பால் கொண்டுவரக் காட்டுக்குப் போகிறான். நிற்க. தத்தாத் திரேயரால் "மகிஷியாகப் போவாய்!" என்று சாபம் பெற்ற ரிஷி பத்தினி எருமையாக மாறி விடுகிறாள். அப்படி உருவெடுத்த எருமை, இந்திரனையும் தேவர்களையும்

துரத்திவிட்டுத் தேவலோக சிம்மாசனத்தில் வீற்றிருக்கிறது! (அப்பொழுது என்ன? இப்போதுகூட உலகத்தில் பல பாகங்களில் மகிஷம் அல்லது மகிஷியின் ஆட்சி நடப்பதாகவே தோன்றுகிறதல்லவா?) அந்த மகிஷியைக் கொன்று, அவளுடைய சாபத்தைப் போக்கிவிடுகிறான் மணிகண்டன்.

பின்னர் இந்திரனைச் சிங்கமாகவும் மற்றத் தேவர்களைப் புலிகளாகவும் ஆக்கிச் சிங்கத்தின் மீது ஏறிக்கொண்டு புலிக் கூட்டங்களுடன் பந்தள தேசத்திற்கு வருகிறான் மணிகண்டன். "வேண்டிய மட்டும் புலிப்பால் இருக்கிறது; எடுத்துக்கொள், தாயே!" என்று மகாராணியிடம் கூறுகிறான். பந்தள தேசத்து அரசன், மணிகண்டனைப் பார்த்து, "நீ யார்? உண்மையைச் சொல்! நீ சாதாரண மனிதன் அல்ல! சொல் அப்பா! சொல்!" என்று அலறிக் கதறுகிறான். மணிகண்டன் தான் ஹரிஹரப் புத்திரன் என்பதைத் தெரிவித்து, "இப்பூவுலகத்தில் நான் இருக்க வேண்டிய காலம் முடிந்துவிட்டது" என்று சொல்லி மறைகிறான். அரசன் மணிகண்டன் ஞாபகார்த்தமாக ஒரு கோவில் கட்ட உத்தரவு கேட்கிறான். (ஞாபகார்த்தக் கோவில் கட்டும் வழக்கம் நம் தேசத்தில் வெகு காலத்துக்கு முன்பே ஏற்பட்டுவிட்டதைக் கவனிக்கவும்.) மணிகண்டனும் சபரிமலையில் கோயில் கட்டும்படியாக உத்தரவு கொடுத்துவிட்டு மறைந்துவிடுகிறான். உடனே பந்தள மன்னன், "ஐயா! அப்பா! ஐயப்பா! நீ எங்கே போனாய்?" என்று அலறிக் கதறுகிறான். அதிலிருந்து "ஐயப்பன்" என்ற பெயர் ஹரிஹர புத்திரனுக்கு ஏற்படுகிறது.

பந்தள தேசத்து ராஜா பெரிய பெரிய இடையூறுகளை எல்லாம் தாண்டி, சபரி மலையின் உச்சியில் ஐயப்பன் கோயில் கட்டி முடிக்கிறான்.

தீவிர வைஷ்ணவர் ஒருவரின் வயிற்று வலி ஐயப்பன் விபூதிப் பிரசாதம் சாப்பிட்ட மாத்திரத்திலே தீர்ந்து விடுகிறது. இம்மாதிரி பக்தர்களுக்குப் பலவித நன்மைகளை ஐயப்பன் இன்றைக்கும் செய்து கொண்டு சபரிமலையில் கோவில் கொண்டிருக்கிருன்.

* * * *

மேலே சொன்ன கதையை வைத்துக் கொண்டு, "ஐயப்பன்" நாடகத்தைப் பிரமாத விரு விருப்புடனும் உணர்ச்சி பாவத்துடனும் பக்திப் பெருக்குடனும் மதுரை தேவி பால விநோத சங்கீத சபையார் நடத்துகிருர்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் இந்திர ஜாலத்தைப்போல் காட்சிகள் மாறிய அதிசயத்தைச் சொல்லி முடியாது. மின்சார விளக்கை அணைத்து, உடனே மறுபடியும் ஏற்ற வேண்டியதுதான்; காடு, அரண்மனையாக மாறியிருக்கும்! பூலோகம் தேவலோகமாக மாறியிருக்கும்!

நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் தாமே சபரி மலைக்குச் சென்று, ஐயப்பனைத் தரிசித்து, ஐயப்பனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டே இந்த நாடகம் நடத்த ஆரம்பித்தாராம்; தமது நாடக சபையைச் சேர்ந்த சுமார் 250 பேரையும் சபரி மலைக்கு அழைத்துச் சென்று, ஐயப்பன் தரிசனம் செய்வித்தாராம். இது காரணமாக நடிகர்கள் எல்லாரும் (திரை தூக்கி விடுவோர், விளக்கு அணைத்து ஏற்றுவோர் உள்பட) அபார சிரத்தையுடனும் உண்மையான ஆர்வத்துடனும் தங்கள் கடமையைச் செய்கிருர்கள்.

பந்தள தேசத்து அரசனுக நடித்தவர் சோக ரஸமான கட்டங்களில் நன்ருக உணர்ச்சியை வெளிப்படுத்தி நடித்தார்; வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாகவும்

கணீர் கணீர் என்றும் உச்சரித்தார். மணிகண்டனாக முதலில் நடித்துத் தாய்ப்பால் அருந்திய பொம்மைக் குழந்தை மிக்க அழகாயிருந்தது. அதைக் காட்டிலும் பால ஐயப்பனாக நடித்த குழந்தையின் முகத்தில் குறுகுறுப்பும் களையும் விளங்கின. பேச்சும் நடிப்பும் வெகு கம்பீரமாக இருந்தன.

பள்ளிக்கூடத்தை நன்றாகச் சித்திரித்திருந்தார்கள். மாணவர்களில் கோணல் புத்தி மாணவனாக நடித்த பையன் அபார நகைச்சுவையுடன் நடித்தான். உபாத்தியாயர், பிள்ளைகளைப் பார்த்து, "உங்களில் ஒருவருக்காவது மூளையே கிடையாது!" என்று சொன்னபோது, ரஸிக மணி அவர்கள், "பலே! பலே!" என்று ஆர்ப்பரித்து, "பள்ளிக்கூடத்துக்கு வந்த பிள்ளைகளுக்கு மூளை எப்படி இருக்கும்?" என்றார்கள்.

துஷ்ட மந்திரியாக நடித்தவர், தமக்குக் கொடுத்திருந்த பாத்திரத்தின் இயல்பை உணர்ந்து பிரமாத ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தார்.

நாடகத்தில் எல்லோருடைய மனத்தையும் அபிப்பிராய பேதமில்லாமல் கவர்ந்தது, மந்திரவாதியின் நடிப்பும், வயிற்று வலியால் கஷ்டப்பட்ட ஐயங்கார் சுவாமிகளின் நடிப்புந்தான். மந்திரவாதியாக நடித்தவர் உயர்தர நடிகர். அவருடைய கண்கள் சுழலும் சுழற்சியிலே, கைகள் வீசும் வீச்சிலே, கால்கள் போடும் குதியிலே, வார்த்தைகளின் அழுத்தத்திலே, உண்மையான பாவத்தையும் நல்ல ஹாஸ்யத்தையும் கண்டோம். "ஓம், ரீம்-ரிங்-டாம்-டூம்-தம்-தும்" என்று அவர் போட்ட போடு இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

வயிற்று வலி ஐயங்காராக நடித்தவரின் முக பாவங்கள் எங்கள் எல்லோருடைய மனத்தையும் மிகவும்

கவர்ந்தன. பாவத்தின் நயங்களை அறிந்த கலா ரஸிகர் டி. கே. சி. அவர்கள் மிகவும் பாராட்டினார்கள்.

சிங்கத்தின் மீது ஏறிக்கொண்டு மணி கண்டன் புலிகளைக் கூட்டிக் கொண்டுவரும் காட்சி மிக்க கவர்ச்சிகரமாக இருந்தது. புலிக் கூட்டம் வந்ததைக் கண்டு, ஜனங்கள் எல்லோரும் பயந்து ஓடியதும், பலவாறு பேசியதும், இயற்கையாகவும் ரஸிக்கும்படியாகவும் இருந்தன.

வைத்தியர்களாக வந்தவர்களில் ஒருவன், "பித்தம் தூக்குது, சுரம் அமுக்குது, வாதம் தூக்குது, காசம் அமுக்குது" என்று, இது தூக்க, அது அமுக்க, அது தூக்க, இது அமுக்க, எங்களை எல்லாம் ஒரே சிரிப்புக் கடலில் அமுக்கிவிட்டான்.

"கலை என்றால் உணர்ச்சிகளைக் கவர வேண்டும்; களிப்பூட்டி அறிவினைப்போய்க் கவ்வவேண்டும்" என்று நாமக்கல் கவிஞர் சொல்வதுபோல், ஐயப்பனில் நாங்கள் கடைசியாகக் கண்ட காட்சி எங்கள் உள்ளத்தையும் உணர்ச்சியையும் கவர்ந்து கவ்விவிட்டது. அதை மறக்க முயன்றும் முடியவில்லை. அப்படி எங்கள் உள்ளத்தைத் தொட்ட காட்சி பக்த கோடிகள் சபரி மலைக்குச் செல்லும் காட்சிதான். நூற்றுக் கணக்கான ஜனங்கள் மூட்டை முடிச்சுகளைத் தலையில் தூக்கிக் கொண்டு, வரிசை வரிசையாக, "சாமி! சரணம் ஐயப்பா!" "ஹரிஹர சுதனே ஐயப்பா!" "ஐயப்பா!" "சாமியோ!" "சாமியே! ஐயப்பா!" என்று கோஷித்துக் கொண்டு சென்ற காட்சி சபையில் ஒரு பெரிய கிளர்ச்சியையும் பரபரப்பையும் உண்டாக்கிவிட்டது.

லட்சக்கணக்கான மக்கள் கூடிநின்று, "அண்ணு மலைக்கு அரோகரா!" என்று கோஷிக்கும்போது, பக்திப் பிரவாகமாகக் கிளம்பும் இதய ஒலியும், ஆயிரக்கணக்கான

தேச பக்தர்கள் கூடி, "வந்தே மாதரம்" என்று கோஷிக்கும்போது உள்ளத்தில் பொங்கும் உணர்ச்சியும், ஒரு வருஷத்துக்கு முன்னால் தமிழ் நாட்டில், "ராஜாஜி வேண்டும்!" என்று பதினையிரக்கணக்கான மக்களின் கூட்டத்தில் எழுந்த கோஷத்தினால் என் மனத்தில் உண்டான கிளர்ச்சியும், "சாமி சரணம் ஐயப்பா!" என்ற கோஷத்தினால் சபையிலே ஏற்பட்டது. இதைக் காட்டிலும் நவாப் ராஜமாணிக்கம் அவர்களுக்கு வேறு என்ன வெற்றி வேண்டும்?

ஐயப்பன் நாடகத்தில் சிகரமாய் அமைந்திருந்த சபரிமலைக் காட்சியில் எல்லாரும் ஐக்கியமாகி மெய்ம் மறந்திருந்த சமயத்தில், நவாப் ராஜாமாணிக்கம் அவர்கள் கையில் பெரிய பெரிய பூ மாலைகள் தொங்க மேடைமீது தோன்றினார். அவருடைய அகன்ற மார்புப் பிரதேசத்தை யெல்லாம் விதவிதமான வேலைப்பாடுள்ள தங்க மெடல் களும், ராம கிருஷ்ண பரமஹம்ஸர் முதலிய பெரியோர் களின் திருஉருவம் பதித்த மெடல்களும் அலங்கரித்தன.

அந்தக் காட்சியைப் பார்த்த பிறகு, தமிழ் நாட்டில் நாடகக்கலை அபிமானம் இல்லை என்று யாராலும் சொல்ல முடியாது. பொது மக்களிடமிருந்து நாடகக் கலை அரசு, நாடகக் கலா நிதி, நாடகக் கேசரி முதலிய பட்டங்களைப் பெற்றவரான நவாப் ராஜமாணிக்கம் அவர்கள் அன்று பேச ஆரம்பித்தபோதே உணர்ச்சி வெள்ளமும் பெருக ஆரம்பித்தது. பாரதியாரிடம் அவருக்குள்ள தலை சிறந்த பக்தியை முதலில் தெரிவித்துக் கொண்டார்கள். நல்ல காரியங்களுக்குத் தம்மால் இயன்ற வரையில் இதுவரை பண உதவி செய்து வந்திருப்பதாகவும், இனியும் இயன்ற வரையில் உதவி செய்யத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார். இதனால் தமக்கு மிதமிஞ்சிப் பணம்

வருவதாக அர்த்தமில்லை யென்றும், எவ்வளவோ கஷ்டப்பட்டுச் சுமார் 250 குழந்தைகள் உள்ள இந்தப் பெரிய நாடக சபைக் குடும்பத்தை நடத்திவருவதாகவும், இன்றைய தினம் கம்பெனிக்கு ரூ. 35,000 கடன் இருப்ப தாகவும், கடன் எப்படித் தீரப் போகிறதோ தெரியவில்லை என்றும் நவாப் சொன்னபோது எல்லோருக்கும் மனம் உருகிவிட்டது. பாரதி மண்டப நிதிக்காக இந்த நாடகம் நடத்திய தினத்தில் ஒருவரிடமும் வற்புறுத்தி டிக்கட் விற்கவில்லை என்றும், ஜனங்கள் ஆர்வத்துடன் தாங்களாகவே நாடகத்திற்கு வந்து பாரதி நிதிக்கு உதவி செய்தார்களென்றும், வரி போக ரூ. 1951 கொடுக்கும் படியான பாக்கியம் கிடைத்தது என்றும், இம்மாதிரி பெரிய தொகை எவரும் நாடகத்தின் மூலம் இதுவரை கொடுத்ததாகத் தெரியவில்லை என்றும் கூறினர்.

இந்த நாடகத்திற்கு ரஸிகமணி டி. கே. சி. யும் கல்கி யும் இன்னும் ட்ரோஜன் அண்ணுமலைச் செட்டியார் எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்றத்தார் எல்லோரும் வந்திருப்பது தமக்கு மிகவும் பெருமையாக இருப்பதாகச் சொன்னுர். ('சின்ன அண்ணுமலை வந்திருப்பதும், ரொம்பப் பெருமையாக இருப்பதாகக் குறிப்பிட் டார். ஆனல் தன்னடக்கம் காரணமாக அதை நான் பிராக்கெட்'டுக்குள் அடக்கி இருக்கிறேன்.)

பிறகு நவாப் எங்களை மேடைக்கு வரும்படி அழைக் கவும், டி. கே. சி. கல்கி, ட்ரோஜன் செட்டியார் முதலியவர் களுடன் நானும் மேடைக்குப் போய்ச் சேர்ந்தேன். மேடையில் ஏறியவுடன் என்னையறியாமல் ராஜபார்ட் நடை எனக்கு வந்தது! அதைச் சபையோர் கவனித்தால் தம்முடைய தொழிலுக்கு ஆபத்து வந்துவிடுமென்று எண்ணியோ என்னமோ நவாப் அந்தச் சமயம் பார்த்து

மேடையில் வந்தவர்களுக்கு மாலே சூட்டினுர். இந்தச் சூழ்ச்சியினுல் என்னுடைய ராஜபாட் நடைக்காகச் சபையோர் செய்த கரகோஷத்தை மாலே சூட்டியதற்காக ஏற்பட்டது என்று நினைக்கும்படி செய்து விட்டார்! போனுல் போகிருர்! நல்ல மனுஷர்!

பிறகு நவாப் ராஜமாணிக்கம் கல்கியிடம் ரூ. 1951 அடங்கிய ஒரு சிவப்புப் பையைக் கொடுத்தார். தொகை பெரிதே ஒழியப் பை சின்னதாகத்தான் இருந்தது.

எப்பொழுதும் பொதுப் பணத்தில் வெகு கவனமாக இருக்கும் கல்கி மேற்படி பணப்பையை நான் பார்க்கிறேன் என்று கேட்டதற்குக் கூடக் காண்பிக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டுப் பேச ஆரம்பித்தார். ஒரு கையில் பூமாலே; மற்ருெரு கையில் பாரதி பணப்பை! வேறு என்ன வேண்டும்? பேச்சு ஹாஸ்ய மயமாகக் குதித்து வந்தது.

"இந்தச் சிவப்புப் பையைக் கையில் வாங்கும்போது எனக்குக் கொஞ்சம் பயமாயிருந்தது. ஆனுல் நான் மந்திரவாதியும் அல்ல; மகாராணியின் தோழியும் அல்ல!" என்று ஆரம்பித்த போதே சபையில் ஏகச் சிரிப்பு ஏற்பட்டது.

ஏனெனில், நாடகத்தில் பந்தள தேசத்து இரண்டாவது மந்திரி, மந்திரவாதிக்கும் மகாராணியின் தோழிக்கும் அம்மாதிரி சிவப்புப் பையிலேதான் பணம் கொடுத்தார்.

பத்து வருஷத்துக்கு முன்பு சென்னேயில் நவாப்பின் ஏசுநாதர் என்ற நாடகத்தைப் பார்த்துவிட்டுக் கல்கி கிறிஸ்துவராகத் தயாராகி விட்டாராம். பின்னர் மேற்படி ஏசுநாதர் நாடகம் நடத்திய ஸ்ரீ ராஜமாணிக்கம் ஹிந்துமத பக்தி யுள்ளவர் என்றும், தேவி உபாசகர் என்றும் கேள்விப்பட்ட பிறகுதான், ஹிந்துமதத்திற்கு நேரவிருந்த பெரிய நஷ்டம் தடுக்கப்பட்டதாம். அப்படி

ஸ்ரீ ராஜமாணிக்கம் எந்த நாடகம் நடத்தினாலும் மக்களின் மனதை உருக்கக்கூடிய முறையில் அமைந்து விடுகிறது என்று பாராட்டினார்.

"இந்த நாடகத்தில் ஒரு மந்திரவாதி வந்து திடீரென்று இருட்டாக்கினார்; உடனே வெளிச்சம் வரும்படி செய்தார். ஆனால் நமது நவாப் ராஜமாணிக்கமோ மந்திரவாதிக்கெல்லாம் பெரிய மந்திரவாதி. இந்த நிமிஷம் அரண்மனை இருந்த இடத்தை அடுத்த நிமிஷம் அரண்யமாக்குகிறார். அரண்யமிருந்த இடத்தை மறுநிமிஷம் தேவலோகமாகக் காட்டுகிறார். இது மட்டுமா? தேவலோக சிம்மாசனத்தில் ஒரு சமயம் இந்திரனை ஏற்றி வைக்கிறார். உடனே அவனைக் கீழே தள்ளிவிட்டு அதே சிம்மாசனத்தில் எருமை மாட்டை உட்கார வைக்கிறார். கண் மூடித் திறக்கும் நேரத்தில் மாளிகை மலையாக மாறுகிறது. மலை கோயிலாகி விடுகிறது. இந்த நாடகத்தைப் பார்த்த பிறகு எனக்கு எட்டயபுரத்தில் பாரதி மண்டபம் கட்டும் வேலையை ஸ்ரீ ராஜமாணிக்கத்திடம் ஒப்படைத்திருக்கலாமே என்று தோன்றுகிறது!" என்று கல்கி சொன்னதும் கரகோஷம் கொட்டகையின் கூரையைப் பிளந்து விடும் போலிருந்தது.

"நான் ஒரு காலத்தில் பாகிஸ்தான் கொடுத்தாலும் பரவாயில்லை என்று சொல்லிக்கொண்டு வந்தது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதற்கு முக்கியமான காரணம் பாகிஸ்தான் ஏற்பட்டாலும் நமது நவாப் ராஜமாணிக்கந்தானே அங்கே ஆளப்போகிறார் என்னும் தைரியந்தான்!" என்று கல்கி சொன்னதைச் சபையோர் ரஸித்துக் குதூகலித்துக் கொண்டிருந்தபோது, அவர் திடீரென்று பயந்துவிட்டவர்போல் மேடையில் அங்குமிங்கும் பார்த்தார். என்னை நோக்கி, "ஐயா! சின்ன

அண்ணுமலே! திடீரென்று புலி சிங்கம் ஏதாவது வந்து வைக்கப் போகிறது! ஜாக்கிரதை!" என்ருர். இதனல் ஏற்பட்ட சிரிப்பு அடங்குவதற்குள்ளே, "நவாப் ராஜ மாணிக்கம் அவர்களைச் சென்னைக்குக் கூடிய சீக்கிரம் வரும்படி அழைக்கிறேன். சென்னையில் இப்போது பாலுக்கு அசாத்திய கிராக்கி. அவரும் நானும் கூட்டாகச் சேர்ந்து ஒரு புலிப் பால் பண்ணை வைக்கலாம் என்று உத்தேசம்! வெறும் மாட்டுப் பாலுக்கே பட்டணத்தில் அவ்வளவு கிராக்கி இருக்கும்போது புலிப் பாலுக்குக் கிராக்கி இல்லாமற் போகுமா?" என்று சொல்லி மேலும் சபையில் அமளியை உண்டு பண்ணினுர்.

கடைசியாக, நவாப் ராஜமாணிக்கத்தின் ஒழுக்க சீலத்தைப் பற்றியும், அவரால் தமிழ் நாட்டில் நாடகக் கலை மேம்பட்டிருப்பதோடு, நாடக மேடையின் அந்தஸ்து உயர்ந்திருப்பது பற்றியும் கல்கி பெரிதும் பாராட்டிப் பேசினுர்.

எட்டயபுரம் பாரதி ஞாபகார்த்த மண்டபத்துக்கு ரூ. 1951—0—0 அளித்ததைக் குறிப்பிட்டு, "பாரதியாரின் புகழ் தமிழ் நாட்டில் சிரஞ்சீவியாக விளங்குவதுபோல் ஸ்ரீ ராஜமாணிக்கத்தின் தேவி நாடக சபையும் சிரஞ்சீவி யாக விளங்கட்டும்!" என்று வாழ்த்தி முடித்தார்.

பின்னர் ரசிகமணி டி. கே. சி. அவர்கள் ஐயப்பன் நாடகத்திலுள்ள பக்தியையும் பண்பாட்டையும் உயர்ந்த கொள்கைகளைப் போதிக்கும் தன்மையையும் எடுத்துக் காட்டி நவாப் ராஜமாணிக்கத்துக்கும் அவருடைய சபை யினருக்கும் ஆசி கூறினுர்.

பிறகு, என்னைப் பேசும்படி நவாப் கேட்டுக்கொண் டார். நான் 'வேண்டாம்' என்று கொஞ்சம் பிகு பண்ணிக்கொண்டு பிறகு பேச ஆரம்பித்தேன்.

"பெரியோர்களே, இந்த நவாப்பின் நாடகத்தை வாழ்த்த எனக்கு வயது போதாது. ஆராய்ச்சி செய்து அபிப்பிராயம் கூற அநுபவம் கிடையாது. ஆனால் ஒன்று மட்டும் சொல்லுவேன். இந்த நாடகம் 'பேஷாக இருக்கிறது' என்று 'கல்கி' சொல்லிவிட்டதால், அது கட்டாயம் பேஷாகத்தான் இருக்க வேண்டும். ஏனெனில் கல்கி தான் தற்சமயம் தமிழ் நாட்டின் சங்கப் பலகை.

தமிழ்நாட்டில் மதுரை மா நகரம் மிகவும் பிரசித்தி பெற்றது. அறுபத்துநான்கு திருவிளையாடல்கள், பாண்டிய மன்னர்களின் ஆட்சித் திறமை, தமிழ் வளர்த்த சங்கம்—இவைதான் அதற்குக் காரணமாகும். இதெல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் நாகரிகத்தையே உலகிற்கு எடுத்துக் காட்டுவது போன்ற விண் மறைக்கும் கோபுரமாகவும், விண் மறைக்கும் கோயிலாகவும், கண்ணமைந்த காட்சியாகவும் மீனாட்சி அம்மன் ஆலயம் மதுரை மா நகரம் நிரந்தரமான சிறப்புக்குச் சிகரம் வைத்தது போல் அமைந்திருக்கிறது.

தற்போது மதுரை அரசியல் துறைகளிலும் பிரசித்த யடைந்திருக்கிறது. தேசீய இயக்கத்தில் மதுரை எப்போதும் முன்னணியில் நின்று வருகிறது. ஆலயப் பிரவேசம்கூட முதன் முதலில் மதுரையில்தான் நடந்தது!

இப்படி எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் மதுரை சங்கீத விஷயத்திலும் முன்னணியில் நிற்பதில் ஆச்சரியமில்லை.

காலஞ்சென்ற பிரபல சங்கீத வித்வான் புஷ்பவனம் அய்யர், தற்காலம் பிரசித்தி யடைந்துள்ள மதுரை மணி அய்யர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி முதலிய முதல்தர வித்வான்களைத் தமிழ்நாட்டுக்கு ஈந்த பெருமை மதுரைக்குத்தான் உண்டு.

இத்தகைய பிரசித்தி வாய்ந்த மதுரைமா நகரத்தில், "பொற்ருமரைக் குளம்" என்று ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் வெகு காலத்துக்கு முன்பு 'சங்கப் பலகை' என்பதாக ஒரு பலகை இருந்ததாம். அந்தப் பலகைக்குத் தயை தாட்சண்யம் என்பது கொஞ்சமும் கிடையாதாம். தகுதியுள்ளவர்களை ஏற்றுக் கொள்வதும், மற்றவர்களைத் தள்ளிவிடுவதும் அதன் பிடிவாத துர்க்குணமாக இருந்ததாம்!

இதனுல் அநேகர் அதில் ஸ்தானம் பெற முயன்றும் முடியாமற் போய்விட்டது. சங்கப் பலகை அங்கீகரித்த வித்வான்கள்தான் வித்வான்கள் என்றும் மற்றவர்கள் எல்லாம் 'போலி' என்றும் ஆகிவிடுமாம். ஆகவே சங்கப் பலகையால் ஏற்றுக்கொள்ளப்படாத பண்டிதர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் கோபம் கொண்டு மேற்படி பலகையைச் சுக்கு நூருக்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

ஒரு சிலர் பொற்ருமரைக் குளத்தில் படகேறிச் சென்று சங்கப் பலகையில் தொத்திக்கொள்ள முயற்சித்தார்கள். சிலர் கட்டு மரம் கட்டிக்கொண்டு போய்ப் பலகையைத் துண்டுத் துண்டாக வெட்டிவிட வேண்டுமென்று கோடாலியுடன் புறப்பட்டார்கள்.

சிலர் ஜலத்துக்குள் கண் மறைவாக நீந்திப்போய் முக்குளித்துப் பலகையில் ஏறிவிடப் பிரயத்தனப்பட்டனர். ஒன்றும் பலிக்கவில்லை. ஏமாற்றத்துக்குள்ளான பண்டிதர்கள் பலர் ஆத்திரமடைந்து, பலகையைப் பொசுக்கிவிட நெருப்புப் பந்தத்துடன் கிளம்பினுர்கள். நெருப்புதான் அணைந்ததே ஒழியப் பலகையைப் பொசுக்க முடியவில்லை.

கடைசியாக, "இது தெய்விக சக்தி வாய்ந்தது. தமிழ் மக்களின் தரத்தையும் தகுதியையும் அறிந்து கொள்ளத்

தமிழ்க் கடவுளால் அளிக்கப்பட்ட தராசு. இதில் ஏறுவதற்கு நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமே ஒழியப் பலகை மீது கோபப்படுவதில் பயனென்றுமில்லை" என்று கண்டு கொண்டார்கள்.

இப்படி மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்த மேற்படி சங்கைப் பலகை திடீரென்று ஒருநாள் காணமற் போய்விட்டது. சங்கப் பலகை எப்படி மறைந்தது, எங்கே போயிற்று என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அனைவரும் கையை நெரித்துக் கொண்டார்கள். செம்படவர்களை வரவழைத்துப் பொற்றாமரைக் குளத்தில் வலைபோட்டுப் பார்த்தார்கள். ஊஹூம்! சங்கப் பலகை கிடைக்கவேயில்லை.

* * * *

சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன் 'கர்நாடகம்' என்ற பெயரில் ஒருவர் கலைகளைப்பற்றி விமரிசனம் செய்ய ஆரம்பித்தார். நாடகம், சங்கீதம், நாட்டியம் சம்பந்தமாக அவர் எழுதிய விமரிசனங்களைப் படிக்கப் படிக்கத் தமிழ் மக்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது.

"இப்படியும் தராதரம் அறிந்து எழுத முடியுமா?" என்று அதிசயித்து மூக்கின் மேல் விரல்வைத்தார்கள்! தமிழ்நாட்டில் காணமற்போன சங்கப் பலகைதான் இப்படி மனித உருவத்தில் 'கர்நாடகம்' என்ற பெயரில் தோன்றித் தமிழர்களுக்குத் தராசாக இருக்கிறதோ என்று கூடச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய சந்தேகம் நாளடைவில் ஊர்ஜிதமாயிற்று.

தமிழ்க் கடவுள் "சங்கப் பலகைக்கு வேறு எந்த தேசமும் லாயக்கில்லை. அது தங்குவதற்குரிய இடம் தமிழ்

நாடுதான்" என்று முடிவு கட்டியிருக்க வேண்டும். எனவே, மேற்படி பலகைக்கு மனித ரூபமளித்து 'கர்நாடகம்' என்ற மாற்றுப் பெயருடனே தமிழ் மக்களின் இதயத்திலே மிதக்கவிட்டிருக்கிறார். அன்று முதல் கர்நாடகம் ஏற்றுக் கொண்ட கலைஞர்தான் உண்மையான கலைஞர் என்ற மனப்பான்மை தமிழ் மக்களுக்கு உண்டாயிருக்கிறது. ஆகவே தமிழ்க் கடவுளால் அளிக்கப்பட்ட "கர்நாடகம் என்னும் சங்கப் பலகை இன்று நவாப் அவர்களின் நாடகங்களைப் பாராட்டி ஏற்றுக் கொண்டிருப்பது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்" என்று என் பிரசங்கத்தை முடித்தேன். ஆகா! சபையோர் செய்த கரகோஷத்தை எப்படி வர்ணிப்பேன்?

ஆம்; தெளிந்த நீரோட்டத்தைத் தெளிந்த நீரோட்டமென்றும் பாசிபிடித்த குட்டையைப் பாசிபிடித்த குட்டை என்றும் கர்நாடகம் எப்போதும் சொல்லத் தயங்கியதே கிடையாது. தம்முடைய ஊரில் ஓடும் சாக்கடையாயிற்றே என்பதற்காக அவர் அதற்கு விசேஷ சலுகை காட்டி அதைப் புண்ணிய தீர்த்தம் என்றும் கூறுவது கிடையாது. கல்கியின் பாரபட்சமற்ற கலை விமரிசனங்களுக்குத் தகுந்த உதாரணங்களும் உண்டு:

ஒரு சமயம் காங்கிரஸ் வாதியும் கதர் அபிமானியுமான ஒரு பெண்மணியின் டாக்கி நடிப்பு சுகமில்லை என்று கல்கி எழுதினார். உடனே சிலர், "அடடா! அந்தப் பெண்மணி எப்போதும் கதர் அணிபவராயிற்றே! தேர்தல் கூட்டத்தில் வந்துகூடப் பாடுவாரே! அவரைப் பற்றி இப்படி எழுதலாமா?" என்று கேட்டார்கள். அதற்கு கல்கி "அந்தக் கதரபிமானமுள்ள பெண்மணி காங்கிரஸ் அபேட்சகராக எங்கேயாவது தேர்தலுக்கு நின்றால், 'அவருக்கு ஓட்டுக் கொடுங்கள்' என்று

பிரசாரம் செய்வேன். ஆனால், ஒருவர் காங்கிரஸ்வாதி என்பதற்காக அவருடைய அபஸ்வரங்களை ஸுஸ்வரங்களென்றே, மோசமான நடிப்பை நல்ல நடிப்பென்றே நான் ஒப்புக்கொள்ள முடியாது. அம்மாதிரி நிலைமை ஏற்பட்டுவிட்டால் அப்புறம் டாக்டர் ராஜன் பாட்டுக் கச்சேரி செய்தால் நன்றாயிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீ முத்துரங்க முதலியார் கதா காலட்சேபம் செய்தால் அதற்கும் பலே போடவேண்டும். ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பரதநாட்டியம் ஆடினால்கூடத் தலையை ஆட்டவேண்டி நேரும், இப்படியெல்லாம் வந்து விட்டால் தமிழ் நாட்டில் கலைகள் உருப்பட்டாற்போலத் தான்!" என்றார்.

பரத நாட்டியத்திலும் சங்கீதத்திலும் அவருக்குள்ள அபிமானம் காரணமாகத் தமிழ் நாட்டில் காலைத் தூக்கிக் குதிப்பவர்களையெல்லாம் உயர்ந்த நாட்டியக்காரர்களென்றே, வாயைத் திறந்து பாடுபவர்களை யெல்லாம் சிறந்த சங்கீத வித்வான்களென்றே, வேஷம் போட்டு மேடையில் தோன்றுபவர்களை யெல்லாம் சிறந்த நடிகர்களென்றே கூறிவிடமாட்டார்.

ஒரு வித்வானுடைய சங்கீதம் கர்நாடகத்துக்குப் பிடிக்கிறது என்று வைத்துக்கொள்வோம். ஆனால், மேற்படி வித்வான் பிடிவாதமாய் "தமிழ்ப் பாட்டுப் பாடமாட்டேன் வேறு பாஷையில்தான் பாடுவேன்" என்றால் அதற்காக அவருடைய சங்கீதம் நன்றாயில்லை யென்று சொல்லும் வழக்கம் கல்கிக்குக் கிடையாது. "ஐயோ! இந்தப் பாவி மனிதர் இவ்வளவு நன்றாகப் பாடுகிறாரே, இவர் தமிழ் அபிமானியாகவும் இருக்கக் கூடாதா?" என்று எண்ணித் தான் வருந்துவார்.

நாடகம் முடிந்தது. காலை நாலுமணிக்கு எல்லோரும் படுத்துக் கொண்டோம். இரண்டு மூன்று தடவை 'கல்கி'யை எழுப்பி, "பணம் பத்திரமாயிருக்கிறதா?" என்று கேட்டேன். "ஐயப்பன் அருளால் பத்திரந்தான் நீங்கள் நிம்மதியாகத் தூங்கலாம்!" என்றார். "அப்படி என்றால் சரி!" என்று நானும் நிம்மதியாகத் தூங்கினேன்.

4. பாரதி மண்டபம்

ஐயப்பன் அருளால் மறுநாள் அதிகாலையில் ஆறு மணிக்குள் எல்லாரும் எழுந்து, கல்லிடைக்குறிச்சி ரயில்வே ஸ்டேஷனுக்குப் பிரயாணம் ஆனோம். ஐயப்பன் அருளால் நாங்கள் தங்கியிருந்த பங்களாவுக்கும் ஸ்டேஷனுக்கும் சில அடி தூரந்தான் இருந்தது.

(இப்படி நான் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஐயப்பன் அருளைக் குறிப்பிடுவதிலிருந்து இதில் ஏதோ பரிகாசம் மறைந்து கொண்டிருக்கிறதோ என்று யாரும் எண்ண வேண்டாம். நாவப் ராஜமாணிக்கம் அவர்களின் நாடகத் திறமைக்கு இது அத்தாட்சியாகும்.)

ஐயப்பன் நாடகம் பார்த்தவர் யாராயிருந்தாலும், பார்த்துச் சிலநாள்வரை அவர்களுக்கு உலகத்தில் எல்லாக் காரியங்களும் ஐயப்பனுடைய சக்தியால் நடப்பதாகவே தோன்றும். அற்புத சம்பவங்களில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும் நம்பிக்கை உண்டாகிவிடும்.

உதாரணமாக அன்று காலை எங்களில் ஒருவர் தூக்கத்திலிருந்து எழுந்து பங்களாவுக்கு வெளியில் வந்ததும், தென்னை மரத்தின் அடியில் ஒரு பாம்பைப் பார்த்தாராம் உடனே கண்ணை மூடிக்கொண்டு ஐயப்பனைத் தியானித்தாராம். கண்ணைத் திறந்து பார்த்ததும் பாம்பு தென்னை

ஓலையாக மாறிப் போயிருந்ததாம்! ஐயப்பன் நாடகம் அப்பேர்ப்பட்ட பக்தியையும் நம்பிக்கையையும் பார்த்தவர்களின் மனதில் உண்டுபண்ணிவிடுகிறது!

கோவில்பட்டி ஸ்டேஷனுக்கு டிக்கட் வாங்கிக் கொண்டு ரயில் ஏறினோம்.

எட்டயபுரத்தில் பாரதி மண்டபக் கட்டிட வேலை எந்த நிலையில் இருக்கிறது என்று பார்க்கும் ஆசை எங்களைப் பிடர் பிடித்து உந்தியது.

அதைக் காட்டிலும் அதிக வலிமையுடன் கல்லிடைக் குறிச்சி ஸ்டேஷனில் ரயில் ஏறிய ஜனக்கூட்டம் எங்கள் பிடரியைப் பிடித்து ரயிலுக்குள்ளே தள்ளியது!

வழியில் திருநெல்வேலி ஜங்ஷன் வந்ததும், "இட்டிலி கிடைக்குமா?" என்று நண்பர்கள் பலர் தனித் தனியாகவும் கூட்டம் கூட்டமாகவும் விசாரித்தார்கள். என்ன தான் விசாரித்தும் இட்டிலி கிடைக்கவில்லை. உடனே சிதறிக் கிடந்த நண்பர்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு மாபெரும் இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. கல்கி ஆசிரியரையே இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம். கல்கியும் அதற்கிணங்கி மிக மகத்தான இ. தோ. கா. இயக்கத்தைத் திருநெல்வேலி ஜங்ஷனிலேயே ஆரம்பித்து வைத்தார். இ என்பது இட்டலியையும், தோ என்பது தோசையையும், கா என்பது காப்பியையும் குறிக்கும் என்று கல்கி விளக்கியதும், கூடியிருந்த நண்பர்கள் அனைவரும் துக்க சாகரத்தில் முழுகி,

"இனிமை மிகுந்த இட்டலி வாழ்க!" "தொன்மையான தோசை வாழ்க!" "கவலை தீர்க்கும் காப்பி

வாழ்க!" என்று ஈனஸ்வரத்தில் வானைப் பிளக்கும்படி கோஷங்களை யிட்டு, மேற்படி இ.தோ.கா. இயக்கத்தை ஏகமனதாக அங்கீகரித்தார்கள். பிறகு ஆளுக்கொரு பூரி வாங்கி வேண்டா வெறுப்பாகத் தின்று தொலைத் தார்கள்!

மேற்படி மகத்தான இயக்கத்தைப் பற்றி அன்று மாலை எட்டயபுரத்தில் நடந்த ஆரம்ப ஆசிரியர் மகாநாட் டில் கல்கி பிரஸ்தாபித்துக் கொடி ஏற்று விழா நடத்தினர்! மேற்படி மகாநாட்டின்போது எட்டய புரம் ஹோட்டல் சொந்தக்காரர்களும், ஹோட்டல் தொழிலாளரும் தனித் தனியாக வரவேற்புப் பத்திரம் அளித்ததற்குப் பதில் சொல்லும்போது "ஹோட்டல் தொழில் உலகத்திலேயே இரண்டாவது மகா பெரிய தொழில்" என்று வர்த்தகப் பொருளாதார நிபுணர் கள் கண்டு பிடித்திருப்பதைக் கல்கி குறிப்பிட்டார். அப் படிப்பட்ட தொழில் தமிழ் நாட்டில் நன்ருய் வளர்ந்து பெருகி, ஹோட்டல் சொந்தக்காரர்களுக்கு அதிக லாப மும், ஹோட்டல் தொழிலாளருக்கு அதிக சம்பளமும் கிடைக்க வேண்டுமென்று சமரச வாழ்த்துக் கூறினர். அப்படி ஹோட்டல் தொழில் முன்னேற்ற மடைவதற்கு இட்டலிதான் ஆதாரமானது என்றும், அதற்காகவே அதாவது இட்டலியின் புனருத்தாரணத்துக் காகவே அன்று காலையில் திருநெல்வேலி ஜங்ஷனில் இ. தோ. கா. இயக்கத்தை ஆரம்பித்திருப்பதாகவும் தெரிவித்தார். "எங்களுடைய பிரயாணத்தின்போது திண்டுக்கல்லிலே, மதுரையிலே, விருது நகரிலே, மணியாச்சியிலே, திருநெல் வேலியிலே— ஒரு இடத்திலும் இட்டிலி கிடைக்கவில்லை! ஆனல் பம்பாயிலே இட்டிலிக்குக் கட்டுப்பாடு கிடையாது! இதைப் போன்ற விநோதமான நிலைமை வேறு உண்டா? இட்டலி இல்லாத தமிழ் நாடு சந்திரன் இல்லாத வானத்

தைப் போலவும், கதாநாயகி இல்லாத கதையைப் போலவும், சின்ன அண்ணுமலை இல்லாத பொதுக் கூட்டத்தைப் போலவும் சோபையற்று இருக்கிறது!......'' என்று 'கல்கி' சொன்னபோது, சபையில் ஏற்பட்ட குதூகலத்தைச் சொல்லி முடியாது, போங்கள்! ஆரம்ப ஆசிரியர்கள் தங்களுக்குச் சம்பளம் குறைவாகக் கொடுக்கப்படும் அக்கிரமத்தைக் கூட அந்தச் சமயத்தில் மறந்து விட்டார்கள்.

இ. தோ. கா. இயக்கத்தின் அபாரமான முன்னேற்றமானது என்னைத் திருநெல்வேலியிலிருந்து நேரே எட்டயபுரம் ஆசிரியர் மகாநாட்டில் கொண்டுபோய்ச் சேர்த்து விட்டது! எனவே சிலமணி நேரம் பின்னேக்கிச் செல்வது அவசியமாகிறது.

அன்று ஒரே கோலாகலமாகப் பாரதி மண்டபத்தை அடைந்தோம். கம்பீரமாகக் காட்சி யளித்த அந்த மண்டபத்தைப் பார்த்ததும் எங்களை யறியாமலே ஒவ்வொருவருடைய கரங்களும் சிரங்களுக்கு மேலே சென்று குவிந்தன. பக்தி உணர்ச்சி அப்படிப் பொங்கியது. "பாரதியார் 'காணி நிலம் வேண்டும்' என்றும், அதிலே 'ஒரு மாளிகை கட்டித் தரவேண்டும்' என்றும் கேட்டுவிட்டுப் போனுரே; அவர் கேட்டதற்கு மேலேயே தமிழ் மக்கள் கொடுத்திருக்கிருர்களே!'' என்று ஒவ்வொருவர் மனதிலும் தோன்றியது.

பாரதியார் கவிதையைப் போலவே கட்டிடமும் அழகாயும் கம்பீரமாயும் அமைந்திருக்கிறது. ஒரு பக்கத்தில் வாசக சாலைக்கு இடம்; மத்தியில் விஸ்தாரமான ஹால்; பின்புறம் பிரசங்க மேடை. (சங்கீத மேடையாகவும் உபயோகிக்கலாம்) முன் புறத்தில் நீண்டுயர்ந்த தூண்கள். எடுப்பான முகப்பு. ரம்யமான தாழ்வாரம்.

கட்டிடம் அநேகமாகப் பூர்த்தி யடைந்து விட்டது. பூச்சு வேலையும் மேலே கோபுரம் கட்டுவதும்தான் பாக்கி. இந்த வேலைகளும் முடிந்து விட்டால், "ஐயா! கவியரசரே! தாங்கள் தமிழ் நாட்டில் பிறக்கத் திருவுளம் கொண்டதற்குக் காணிக்கையாகத் தமிழ் மக்களாகிய நாங்கள் இதோ இந்த அழகிய மண்டபத்தைத் தங்கள் ஞாபகத்திற்குச் சமர்ப்பிக்கிறோம்! " என்று பெருமையோடு சொல்லலாம். திறப்பு விழாவும் கோலாகலமாக நடத்தலாம்.

மண்டபத்தை நாங்கள் பார்த்து அதிசயித்துக் கொண்டு வந்தபோது, ரஸிகமணி அவர்கள், "கட்டிடத்துக்கு இதுவரை என்ன செலவாகி யிருக்கிறது? " என்று கேட்டார்கள். "சுமார் முப்பதாயிரம் ஆகியிருக்கிறது" என்று கல்கி சொன்னதும். "முப்பதினாயிரமா? முப்பதினாயிரந்தானா? முப்பதினாயிரத்துக்குள் இவ்வளவு பெரிய கட்டிடம் எப்படிக் கட்டி முடிந்தது? அதுவும் இந்தக் காலத்தில்? " என்று மூக்கில் விரல் வைத்து ஆச்சரியப் பட்டோம்.

"எல்லாம் இந்த ஊர் மகாராஜாவின் சிரத்தையினாலும் ஊக்கத்தினாலுந்தான். அவர்கள் சொந்த மேற்பார்வையில் வேலை நடப்பதனால்தான் இந்தத் தொகைக்குள் முடிந்திருக்கிறது. ஆனாலும் கட்டிடம் பூர்த்தியாக இன்னும் பத்தாயிரம் ரூபாய் வேண்டும் போலிருக்கிறதே? யாரைப் போய்க் கேட்பது? " என்று கல்கி கவலையுடன் கூறினார்.

"வேறு யாரைக் கேட்பது? தமிழ் மக்களைத்தான் கேட்க வேண்டும். கேட்டால் கட்டாயம் கொடுக்கிறார்கள். நவாப் ராஜமாணிக்கம் நம்மை வலியக் கூப்பிட்டுக் கொடுக்கவில்லையா? " என்று டி. கே. சி. சொன்னார்.

டி. கே. சி. சொன்னதற்கு ஒப்பம் வைப்பதுபோல், பாரதி மண்டபத்தைப் பார்த்துப் பரவசமடைந்த

ட்ரோஜன் அண்ணுமலைச் செட்டியார் அவர்கள், மண்டபத்துக்குப் போகும் பாதை முகப்பில் இரு புறத்திலும் நாட்டுவதற்கு, சிற்ப வேலை யமைந்த இரண்டு கல் தூண்களைக் காணிக்கை யளிப்பதாக ஒப்புக் கொண்டார்கள்.

பாரதி மண்டபத்தைப் பார்த்ததும் எனக்கு என்ன தோன்றிற்று என்பதையும் டி. கே. சி. அவர்களிடம் சொன்னேன். "இந்த மாதிரி ஒரு ஞாபகார்த்த மண்டபம் கட்டுவதாக வாக்களித்தால், இந்த நிமிஷமே உங்களிட மெல்லாம் விடை பெற்றுக் கொண்டு பாரதியாரைப் பின் தொடரத் தயாரா யிருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்? நான் அவ்விதம் செய்யலாமா? தமிழ் நாட்டார் இன்னொரு ஞாபகார்த்த மண்டபம் கட்டும் பொறுப்பைத் தாங்குவார்களா?" என்று கேட்டேன். "எல்லாம் தாங்குவார்கள்; தகுதியுள்ளவர்களா யிருந்தால் தாங்குவார்கள்!" என்று டி. கே. சி. பட்டுக் கொள்ளாமல் பதில் சொன்னார்கள். எனவே, பாரதியாரைப் பின் தொடரும் யோசனையைத் தாற்காலிகமாகக் கைவிட்டு விட்டேன். பிறகு எல்லாருமாக எட்டயபுரம் ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டுக்குச் சென்றோம்.

மேற்படி ஆரம்ப ஆசிரியர் மகா நாட்டை ட்ரோஜன் ஸ்ரீ அண்ணுமலைச் செட்டியார் அவர்கள் திறந்து வைத்துக் கச்சிதமான ஒரு பிரசங்கமும் செய்தார்கள். எட்டயபுரத்துக்கு வந்து பாரதி மண்டபத்தைப் பார்த்ததனால் நம்முடைய ஆயுளில் ஐந்து வருஷம் கூடி விட்டது என்று அறிவித்து விட்டு காங்கிரஸ் சர்க்கார் கல்வி முன்னேற்றத்தில் மிக்க அக்கரை யுள்ளவர்கள் என்றும், ஆரம்ப ஆசிரியர்கள் தக்கபடி தங்கள் கோரிக்கையை எடுத்துச் சொன்னால் கட்டாயம் வெற்றி கிடைக்கும் என்றும் கூறினார்கள்.

மகாநாட்டிற்கு அக்கிராசனம் வகித்த டி. கே. சி. அவர்கள் தமது பிரசங்கத்தில் பிள்ளைகளின் 'பெற்றோர்களை' வெளுத்துக் கட்டினார்கள்! "எங்கள் பிள்ளைகளுக்கு அது வரவில்லை, இது வரவில்லை" என்று எந்தப் பெற்றோராவது ஆசிரியர்களை வந்து தொந்தரவு செய்தால் உடனே அந்த ஆசாமியைக் கட்டிப் போட்டு, 'இந்தப் பாடத்தை நீ படி! இந்தக் கணக்கை நீ போடு!' என்று சொல்ல வேண்டுமாம்! உடனே அந்தப் பெற்றோர்களுக்குப் புத்தி வந்து "எங்கள் பிள்ளைகளுக்கு வந்தது போதும்!" என்று சொல்லி விடுவார்களாம்! எப்படி யிருக்கிறது யோசனை? (குழந்தைகளிடம் கருணையில்லாத 'வாத்தியான்'கள் மீது டி. கே. சி. க்கு எவ்வளவு கோபமோ, அவ்வளவு 'பெற்றோர்'கள் மீதும் கோபம் என்பதாகத் தெரிந்து கொண்டேன்.)

பிறகு, எட்டப்ப ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் தலைவரான டெபுடி இன்ஸ்பெக்டர் அவர்கள் உபாத்தியாயர்களுக்குப் பொறுமையா யிருக்கும்படி உபதேசித்தார், திருச்சி நேஷனல் ஹைஸ்கூலில் தாம் உபாத்தியாயரா யிருந்தபோது "கல்கி" தம்மிடம் படித்தவர் என்பதையும் சொல்லி வைத்தார்.

ஆனால் "கல்கி"யோ குருவுக்கு மிஞ்சிய சீடராகி, உபாத்தியாயர்களைப் பார்த்து, "உங்களுடைய பொறுமையைப் பார்த்து எனக்குக் கோபம் வருகிறது! பொறுமைக்கும் ஓர் எல்லை இல்லையா?" என்று கேட்டார்.

கல்கியின் பேச்சு இந்த மகாநாட்டில் வெகு கோபமாக இருந்தது. பிறகு நானும் பேசினேன். "ஒரு நாய்க்குட்டி தனக்கு ஆகாரம் வேண்டும் என்று தன் எஜமானைக் கேட்டதாம். எஜமான் அதன் வாலை நறுக்கிப் போட்டு, 'இதோ! சாப்பிடு' என்றானாம். அந்தமாதிரி உபாத்தியா

யர்களின் பிள்ளைகள் படிப்பதற்காக அவர்களிடம் சம்பளம் வாங்கி அதை உபாத்தியாயர்களுக்குச் சம்பளமாகக் கொடுக்கிறார்கள்!'' என்று நான் சொன்னதைக் கேட்டு ஆசிரியர்கள் சோகக் கடலில் மூழ்குவதற்குப் பதிலாகச் சிரிக்கத் தொடங்கி விட்டார்கள். எனவே, சுருக்கமாக முக்கால் மணி நேரத்தில் என் பேச்சை முடித்துக் கொண்டேன்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களில் முக்கியமாக எனக்கு நினைவிருக்கும் தீர்மானம், "கல்வி மந்திரி ஸ்ரீ அவினாசிலிங்கம் அவர்கள் சீக்கிரத்தில் கிரகஸ்தாசிரமத்தை மேற்கொள்ள வேண்டும்; அப்போதுதான் குடும்பஸ்தர்களின் கஷ்டங்கள் அவருக்குத் தெரியும்'' என்பதுதான்!

மேற்படி யோசனை மகாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப் பட்டதா, அல்லது யாருடைய பேச்சிலேயாவது சொல்லப் பட்டதா என்பது நன்றாக ஞாபகமில்லை.

எப்படி யிருந்தாலும் இனிமேல் அதைப் பற்றிக் கவலையும் இல்லை. மேற்படி யோசனையை நிறைவேற்றுவதற்கு அவசியமில்லாதபடிதான் ஸ்ரீ அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி மந்திரி பதவியை ராஜிநாமா செய்து விட்டாரே!

கடைசியாக, நாங்கள் வந்த காரியம் எல்லாம் முடிந்து ஊருக்குக் கிளம்பினோம். எட்டயபுரம் மகாராஜாவின் மைத்துனர் ஸ்ரீ அமிர்தசாமி அவர்கள், எட்டயபுரம் மேயர் கந்தசாமி செட்டியார் அவர்கள், எட்டயபுரம் பாரதி இலக்கிய மன்றத்தைச் சேர்ந்த மற்ற நண்பர்கள் எல்லாரும் ஒரு முகமாக "மறுபடியும் சீக்கிரம் வர வேண்டும்!'' என்றார்கள்.

"அதெல்லாம் முடியாது; பாரதி மண்டபத் திறப்பு விழாவின் போதுதான் மறுபடியும் வரமுடியும். அதற்கு முன்னுல் வர முடியாது!" என்று கண்டிப்பாகப் பதில் சொன்னேம்.

"அப்படியானுல் நீங்கள் சீக்கிரம் திரும்பி வருவது கண்டிப்பாக நிச்சயம்!" என்று நண்பர்கள் சொன்னூர்கள்

பாரதியார் வாழ்க! பாரதி மண்டபம் என்றென்றும் வாழ்க! பாரதி மண்டபத்தை நாங்கள் பார்க்கக் காரணமாயிருந்த நவாப் ராஜமாணிக்கம் நீடூழி வாழ்க!

சபரிமலே ஐயப்பன் திருவடிகளே சரணம்.

கண்டறியாதன கண்டேன்!

சென்னைச் சட்ட சபைக்குச் சபாநாயகர் தேர்தல் நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னால் ராஜாஜி அவர்களிடம் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை வந்திருந்தார். வந்தவர் ராஜாஜியைப் பார்த்துத் தாம் சபா நாயகர் தேர்தலுக்கு நிற்கப் போவதாகவும் தம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். அதற்கு ராஜாஜி, "அந்தப் பதவிக்கு இன்னும் யார் போட்டி போடுகிறார்கள்?" என்று கேட்டார்.

தென்னேட்டி ஸ்ரீ டி. விசுவநாதன் போட்டி போடுவதாக ஸ்ரீ சிவசண்முகம் பதிலளித்தார். உடனே ராஜாஜி "ஸ்ரீ விசுவநாதனைக் காட்டிலும் தாங்கள் எந்த விதத்தில் அந்தப் பதவிக்குத் தகுதி?" என்று ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளையைப் பார்த்து வெகு அமைதியுடன் கேட்டார்.

மேற்படி கேள்வியானது அருகிலிருந்த என்னை ஒரு உலுக்கு உலுக்கியது. நான் நிதானம் அடைவதற்கு முன் ஸ்ரீ சிவசண்முகம் ராஜாஜியின் கேள்விக்குப் பளிச்சென்று பதில் கூறினார். "நான் சென்னை நகர சபையில் மேயராக இருந்து சபை நடத்தி அனுபவம் பெற்றிருக்கிறேன். ஸ்ரீ விசுவநாதனுக்கு அத்தகைய அநுபவம் கிடையாது. ஆகையால் நான் அவரை விடத் தகுதியுடையவன்" என்று கூறினார்.

"பேஷ்! அப்படியானால் சரி: தாங்கள் தேர்தலுக்கு நிற்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம்" என்று ஆசீர்

வதித்து அனுப்பினார் ராஜாஜி. ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை ராஜாஜியிடம் விடை பெற்றுக்கொண்டு போன பிறகு, ராஜாஜி என்னைப் பார்த்து, "பார்த்தீர்களா? சிவசண்முகம் பிள்ளை, 'நான் ஒரு ஹரிஜன், ஆகையால் சபாநாயகர் பதவியை எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டும்' என்ற பலவீனமான பதிலைச் சொல்லாமல், 'எனக்குச் சபை நடத்தி அனுபவமிருக்கிறது; ஆகையால் நான் அதிக தகுதியுடையவன்' என்று கூறினார்! இந்தச் சரியான பதிலைச் சொல்லுகிறாரா என்று பார்ப்பதற்காகவே மேற்படி கேள்வியைக் கேட்டேன். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும் சரி, வேறு யாராயிருந்தாலும் சரி, இப்படித்தான் தங்கள் தகுதியில் நம்பிக்கை யுடைவர்களாய் இருக்க வேண்டும். ஸ்ரீ சிவசண்முகம் உண்மையான ஹரிஜனத் தலைவர்; சட்ட சபையையும் நன்றாய் நடத்துவார்" என்று சொன்னார்கள்.

இப்படிப்பட்ட உயர்ந்த அறிவாளியும் சிறந்த தேச பக்தரும் தெய்வபக்தியுள்ளவருமான ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளையைப் போன்றவர்களைத் தீண்டாதவர்கள் என்று ஒதுக்கி வைத்து அவர்களை நமது ஆலயங்களுக்குள் வர விடாமல் இவ்வளவு நாள் வைத்திருந்ததை நினைத்தால் நமக்கெல்லாம் எவ்வளவோ வெட்கமாக இருக்கிறது; துக்கமாகவும் இருக்கிறது.

மகாத்மாஜி ஆரம்பித்த தீண்டாமை விலக்கு இயக்கத்தைக் காங்கிரஸ்கார்கள் கடந்த முப்பது ஆண்டுகளாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். ராஜாஜி இதற்காக அல்லும் பகலும் பாடுபட்டு வந்தார். அவர் சென்னை மாகாணப் பிரதமரானவுடன் கள்ளரக்கன் தலையிலும் தீண்டாமைப் பேயின் தலையிலும் ஒரு பெரிய அடியாகக் கொடுத்து அவர்களுடைய கொடுமைகளிலிருந்து மக்களைக்

காப்பாற்றினர். மதுரை ஆலயம் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டவுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆலயப் பிரவேசம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இடையில் அரசியல் நிலைமை காரணமாக இந்தக் கைங்கரியம் தடைப்பட்டு நின்றிருந்தது.

மறுபடியும் நமது மாகாணத்தில் காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டவுடன் ஆலயப் பிரவேச இயக்கம் வேகம் அடைந்தது. அதிலும் திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த காங்கிரஸ் நண்பர்கள் ஆலயப் பிரவேச வைபவத்தைத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் வேகத்தில் நடத்தலானார்கள். மேற்படி ஜில்லாவிலுள்ள 350 முக்கியமான பெரிய கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டிருக்கிறார்கள். இதெல்லாம், ஆலயப் பிரவேசச் சட்டத்துக்கு முன்னால் ஆங்காங்குள்ள சாதி ஹிந்துக்களின் சம்மதத்தைப் பெற்று அவர்கள் சாதித்த காரியம். திறந்து விடப்பட்ட கோவில்களுக்குத் தரிசனம் செய்ய வரும்படியும் புதிதாகச் சில கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடும் வைபவத்தை நடத்தித் தரும்படியும் நமது சட்ட சபை சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்களையும், கல்கி ஆசிரியர் அவர்களையும் அழைத்திருந்தார்கள். அத்துடன் 'வாழ்நாள் பூராவும் தீண்டாமை விலக்குக்காக அரும்பாடு பட்டிருக்கும்' என்னையும் கருணை கூர்ந்து அழைத்தார்கள். (நேயர்களுக்கு ஒரு ரகசியச் செய்தி, என்னுடைய வாழ்நாள் அப்படி ஒன்றும் அதிகமாகி விட வில்லை. சொல்லப் போனால், என் வாழ்க்கையே இப்பொழுதுதான் ஆரம்பமாகி யிருக்கிறது!)

திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தொண்டர்கள் சாதித்திருக்கும் மேற்படி மகத்தான வேலையைக் கண்டு அனுபவிக்கும் பொருட்டு நானும் கல்கி ஆசிரியர் அவர்களும் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸிலே புறப்பட்டோம்.

திருவாளர் சூரியன் அவர்கள் நாங்கள் எப்பொழுது திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் பிரயாணம் செய்தாலும் திண்டுக்கல்லில்தான் எங்களைச் சந்திப்பது என்ற வழக்கம் ஏற்படுத்திக்கொண்டு விட்டார் போலும்! ஆனாலும் அவரைக் காண் பதில் சிரத்தையில்லாமல் நான் அரை குறைத் தூக்கத்திலிருந்தேன். திடீரென்று "தமிழ்ப் பண்ணை ஸார், வாங்கோ, வாங்கோ!" என்று கல்கி ஆசிரி யர் அவர்களின் குரலைக் கேட்டுத் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். கல்கி ஆசிரியரைச் சூழ்ந்து ஏகப்பட்டவர் கள் நின்று கொண்டிருந்தார்கள். என்ன ஆபத்தோ வென்று நானும் வீரத்தோடு அந்தப் போர்க்களத்தில் புகுந்தேன். கூட்டத்திற்குள் பிரவேசித்த பிறகுதான் அது போர்க்களம் அல்லவென்றும் 'இ.-தோ.-கா. இயக்க'த்தைச் சேர்ந்த தொண்டர் குழாம் என்றும் தெரியவந்தது. திண்டுக்கல்லைச் சேர்ந்த ஸ்ரீ மணிபாரதி முதலிய நண்பர் கள் ஒரு கூடை இட்டிலியுடன் வந்திருந்து கோடைக் கானல் ரோடு வரையில் வந்து எங்களை வழி அனுப்பிவிட் டுப் போனார்கள். அவர்கள் அப்படி எதிர்பாராத முறை யில் வந்து எங்களைத் திடுக்கிடச் செய்ததற்கு மூல காரண புருஷர் திருநெல்வேலி ஸ்ரீ மேகநாதன் என்று தெரிந்து கொண்டோம்.

சிவகாசி ஸ்டேஷனில் சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் எங்களுடன் பிரயாணத்தில் கலந்து கொண்டார்கள். திண்டுக்கல் நண்பர்கள் சபாநாயகருக் காகக் கொண்டுவந்திருந்த மாலையைக் கல்கி ஆசிரியர் வாங் கிப் பத்திரமாய் வைத்திருந்தார். சபாநாயகர் வண்டியில் ஏறியவுடன் திண்டுக்கல் வாசிகளின் சார்பாக அவருக்கு மாலை சூட்டினார்.

சங்கரன் கோவில்

சில மணி நேரத்துக்கெல்லாம் 'ஜே' கோஷங்கள் சங்கரன் கோவில் ஸ்டேஷன் வந்து விட்டதாக அறிவித்தன. நாங்களும் இறங்குவதற்குத் தயாரானோம். ஆனால் எப்படி இறங்குவது? ஸ்டேஷனில் ஒரே திரளாக ஜனக் கூட்டம். திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தலைவர்களான ஸ்ரீ சோமயாஜுலு, ஸ்ரீ மீனாட்சி சுந்தரம், ஸ்ரீ மேகநாதன் முதலியவர்களும் அவர்களுடைய திருக் கூட்டங்களும் சபாநாயகரை எதிர்கொண்டழைக்க வந்திருந்தார்கள். மெதுவாக முண்டியடித்துக் கொண்டு கூட்டத்தை ஒருவாறு சமாளித்துத் தாண்டிச் சென்றோம். ஸ்டேஷனுக்கு வெளியே நின்ற கார் ஒன்றில் உட்காரும்படி சொன்னார்கள். "இது மகாராஜாக்கள் கார்போலிருக்கிறதே!" என்று சொல்லி நான் வாய் மூடுமுன், "ஆமாம், இது நம்ம எட்டயபுரம் மகாராஜாவின் கார் தான்!" என்று பதில் கிடைத்தது. நாங்கள் வருவது தெரிந்து எட்டயபுரம் மேயர் ஸ்ரீ கந்தசாமி செட்டியார் எங்களை வர வேற்க மேற்படி மகாராஜாவின் காருடன் ஸ்டேஷனுக்கு வந்திருந்தார்.

சங்கரன் கோவில் வீதி எல்லாம் தோரணங்கள் கட்டி அமர்க்களம் செய்திருந்தார்கள். மேள தாளங்கள் முழங்கிக் கொண்டிருந்தன. சங்கரநயினார் கோவில் புகழ் பெற்ற ஆலயம். காங்கிரஸ் நண்பர்களின் முயற்சியால் ஹரி ஜனங்களுக்குத் திறந்து விடப் பட்டதை நேயர்கள் அறிவார்கள். மேற்படி கோவில் தமிழ் நாட்டின் முக்கியமான பெரிய கோவில்களில் ஒன்று. காசியிலிருந்து கூடத் தங்கள் குல தெய்வம் என்று சங்கரன் கோவில் இறைவனைத் தரிசிக்க ஜனங்கள் வருவார்களாம்.

கோவிலின் பிரவேச வாசலை அடைந்தபோது, மேற்படி கோவிலைக் கட்டியது உக்ரபாண்டிய மன்னன் என்றும், கோவில் கோபுரத்தை நிர்மாணித்தது தெய்வேந்திரன் என்ற ஒரு ஹரிஜன் என்றும் ஸ்தல புராணம் கூறுவதாக நண்பர் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் கூறினார். ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் சங்கரன் கோவில் காங்கிரஸ் தலைவர். அந்த ஊரில் அவர் இட்டதுதான் சட்டம். அவர் சொல்லுவதே வேத வாக்காகவும் ஜனங்கள் மதிக்கிறார்கள். ஆகையால் நானும் அவர் சொல்லிய கதைகளை 'வேதக் கதைகளாக' மதித்து நேயர்களுக்கும் சொல்லுகிறேன்.

கோவிலின் அஸ்திவாரக் கல் ஒவ்வொன்றிலும் 'இன்னின்ன குடும்பன் உபயம்' என்று குறிப்பிட்டிருப்பதை ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் சுட்டிக் காண்பித்தார். ஆகவே மேற்படி கோவிலுக்கு அஸ்திவாரமும் போட்டுக் கோபுரமும் நிர்மாணித்தவர்கள் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்களாக இருந்தும் சொந்தக்காரர்களாகிய அவர்களை ஆலத்துக்குள் விடாமல் இத்தனை நாளும் நம்மவர்கள் வைத்திருந்தார்கள். இது மட்டுமல்ல, இன்னுமொரு சுவாரஸ்யமான விஷயத்தையும் எனது நண்பர் மீனாட்சிசுந்தரம் கூறினார். :—

"இந்தச் சங்கர நாராயணர் கோவில் இருக்குமிடத்தில் ஆதியில் ஒரு பாம்புப் புற்று இருந்ததாம். அந்தப் புற்றை ஒரு ஹரிஜன் மண் வெட்டி கொண்டு வெட்டினாராம். புற்றின் கால் பாகம் வெட்டி முடிந்து விட்டபோது புற்றினுள்ளிருந்த பாம்பின் வாலும் வெட்டப்பட்டு விட்டதாம். இதை யறிந்த பாண்டிய மன்னன் மனம் துடித்து அந்த இடத்திலேயே கோவிலைக் கட்டத் தீர்மானித்தானாம். அதனால்தான் சுவாமிக்கு 'கூழைவால் சங்கரன்' என்ற பெயரும் உண்டானதாகக் கூறப்படுகிறது.

கால் புற்றை வெட்டிய ஹரிஜனருடைய பெயர் மணிக்கிரீவன் என்று சொல்லி, அவருக்கும் கோவிலுக்குள் ஒரு தனிச்சிலை நிர்மாணிக்கப்பட்டிருப்பதை ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் காண்பித்தார். இதைத் தவிர இன்னொரு தனிக் கோவிலும் கோவிலுக்குத் தென் பாகத்திலிருக்கிறது. அதற்குக் 'காவல் பறையன் கோவில்' என்று பெயராம். அந்தத் தெருவுக்கே காவல் பறையன் தெரு என்று பெயராம்.

இப்படியாகச் சங்கரன் கோவில் ஆதியிலிருந்தே ஹரி ஜனங்களுடன் அதிக சம்பந்தமுள்ள கோவிலாக இருந்து வந்திருக்கிறது. சைவமும் வைஷ்ணவமும் கலந்து பாதி சங்கரராகவும் பாதி நாராயணராகவும் சுவாமி எழுந் தருளியிருக்கிறார். இந்தச் சுவாமிக்கு வைத்தியலிங்கம் என் றும் பெயர் சொல்லுவதுண்டு. ஏனெனில் கோவில் தீர்த் தத்தையும் கோவிலுக்குள் இருக்கும் புற்று மண்ணையும் சாப்பிட்டால் தீராத வியாதிகள் தீரும் என்பது ஜனங் களுடைய நம்பிக்கை. பாம்பாட்டிச் சித்தர் அடக்கமான இடமும் இதுதானாம்.

முதல் முதலில் இந்தக் கோவில் ஹரி ஜனங்களுக் குத் திறந்து விடப்பட்டபோது பல்லாயிரக் கணக்கான ஹரிஜனங்கள் மெய்ம்மறந்து பக்தியுடன் ஆண்டவனைத் தரிசனம் செய்த காட்சி வெகு அற்புதமாக இருந்ததென் றும் சொன்னார்கள். அதை நான் கண்டு களிக்கும் பாக்கி யத்தைப் பெறவில்லை. ஆனால், சபாநாயகர் ஸ்ரீ சிவசண் முகம் பிள்ளை அவர்களுடன் கோவிலுக்குச் செல்லும் போது என்னை அறியாமலே என் உடம்பில் புல்லரிப்பு ஏற்பட்டது! பக்கத்தில் வந்த கல்கியவர்களோ பக்தி பர வசராகத் தம்மையே மறந்து நடந்து கொண்டிருந்தார். எதிரில் ஒரு அழகிய பிரம்மாண்டமான யானை நிற்பது

கூட அவருக்குத் தெரியாமல் அதன்மேல் முட்டிக்கொள்ளப் பார்த்தார் என்றால், அவருடைய பக்தி எவ்வளவு கண் மூடித்தனமாகப் போயிருக்க வேண்டும் என்பதை நேயர்கள் ஊகித்துக் கொள்ளலாம்!

எத்தனையோ நூற்றாண்டுகளாக நமது மூதாதையர் ஹரிஜனங்களுக்குச் செய்து வந்த அநியாயத்திற்கு இப்போது பரிகாரம் நடைபெறுகிறது என்ற எண்ணமே அவருடைய மனதில் வட்டமிட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும்.

கோவில் அர்த்த மண்டபத்துக்குள் பிரவேசித்ததும் அர்ச்சகர்கள் எங்களை முக மலர்ச்சியுடன் வரவேற்றார்கள் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளையைச் சிறிதும் தயங்காமல் தொட்டு அவர் தலையில் பரிவட்டமும் கட்டினார்கள். தீண்டாமைப் பேய் இதைக் கண்டு அலறி ஓடுவது போன்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன்; யானை பிளிறிக் கொண்டிருந்தது!

சபா நாயகரோ இதையெல்லாம் கவனியாமல் ஆனந்தக் கண்ணீர் உகுத்துச் சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தார். "இத்தனை நாள் என்னுலும் என் மூதாதையர் பலராலும் தரிசனம் செய்ய முடியாமலிருந்த ஈசுவரனே!" என்று சபா நாயகர் கதறிக் கண்ணீர் மல்கியிருக்க வேண்டும். சபா நாயகர் சாஷ்டாங்கமாகக் கீழே விழுந்து நமஸ்காரம் செய்த காட்சி எல்லோருடைய மனத்தையும் உருக்கும் பக்தி பரவசக் காட்சியாக இருந்தது. கீழே விழுந்து நமஸ்காரம் செய்தால் சட்டை அழுக்காகப் போய்விடும் என்று பல சாதி—ஹிந்து பக்தர்கள் நினைக்கும் இக் காலத்தில் சபா நாயகர் ஒவ்வொரு சன்னிதானத்திலும் விழுந்து விழுந்து நமஸ்காரம் செய்த காட்சி, "சட்டை மட்டும் வெண்மையாக இருந்தால் போதாது; மனதும் சுத்தமாக

இருக்க வேண்டும்" என்ற தத்துவத்தைப் போதிப்பதாக இருந்தது.

ஒவ்வொரு சன்னிதானத்திலும் சபா நாயகருக்கும் கல்கிக்கும் மாலை போட்டு மரியாதை செய்தார்கள். மாலை போட்டால் நமது சபா நாயகருக்குத்தான் போட வேண்டும். ஏனெனில் மாலையின் உயர்வும் அது போடப்படும் தாத்பரியமும் அவருக்கு நன்கு தெரிகிறது! கழுத்தில் விழுந்த மாலைகளைச் சடக்கென்று கழற்றி விடாமல் கழுத்திலேயே வைத்துக் கொள்ளும் நல்ல வழக்கம் அவரிடம் தான் இருக்கிறது. ஆனால் நமது கல்கி ஆசிரியருக்கு மாலை போடுவதே வீண்தான். போட்டவுடனே கழற்றிப் பக்கத்திலிருப்பவரிடம் கொடுத்து விடுவார். ஆனால் இதற்கு மாறாக ஒரு சமயம் கல்கிகூட ஒரு சன்னிதானத்தில் போட்ட மாலையைக் கழற்றாமலேயே நடக்க ஆரம்பித்து விட்டார். எனக்கு அவர் முகத்தை அந்தச் சமயம் பார்த்த போது கொஞ்சம் யோசனையாகப் போய்விட்டது. மெதுவாக அவரைத் தொட்டுப் பார்த்தேன். தொட்டால் கூடத் தெரியாமல் உணர்ச்சி மங்கி விட்டது! "அந்தோ தமிழ்நாடே! உன் தலைவிதி இப்படியாயிற்றா?" என்று என்னை நானே கேட்டுக்கொண்டேன். பிறகு இனியும் சும்மா இருக்கக்கூடாது என்று நினைத்து, "ஸார், கல்கி ஸார்!" என்று இரைந்து கூப்பிட்டேன். என் குரலோசை மேள தாள ஓசைகளையும் ஊடுருவிச் சென்று கல்கியின் காதில் பாய்ந்திருக்க வேண்டும். கல்கி ஆசிரியர் திரும்பி பார்த்தார்.

"மாலையைக் கழற்றாமல் நடக்கிறீர்களே!" என்றேன். உடனே அவர் தம் கழுத்தைப் பார்த்தார். கண்டார் மாலையை; உடனே கழற்றி என் கையில் கொடுத்தார். "என்ன? பக்தி பரவசமாகி மெய்ம்மறந்து விட்டீர்களோ?"

என்று கேட்டேன். "என் சொந்த பக்தியினால் அல்ல; ஸ்ரீ சிவசண்முகம் அவர்களின் பக்தி பரவசத்தைப் பார்த்ததனால் மெய்ம்மறந்து போனேன்!" என்றார். "நல்லவேளை!" என்று ஆறுதல் அடைந்தேன்.

தெய்வங்களைத் தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்தோம். சபா நாயகரைப் பார்ப்பதற்காக ஆயிரக்கணக்கான மக்கள் கோவில் வாசலில் காத்துக் கொண்டிருந்தார்கள்.

ஸ்ரீ சோமயாஜுலு அவர்கள் சபா நாயகரையும் கல்கியையும் மிகப் பாராட்டி வரவேற்றார். (இந்த இடத்திலேதான் 'நாம் ஏன் இந்தக் கட்டுரையை எழுதுகிறோம்' என்ற வருத்தம் எனக்கு அளவு மீறி உண்டாகிறது! ஸ்ரீ சோமயாஜுலு என்னையும் தான் பாராட்டிப் புகழ்ந்து பேசினார். ஆனால் அவற்றை நானே எழுதிக் கொள்ள முடியவில்லை அல்லவா? நேயர்கள் ஊகித்துத் தெரிந்து கொள்ளும்படி தான் விட வேண்டியிருக்கிறது!)

முதலில் அந்த மாபெரும் கூட்டத்தில் அடியேனுடைய 'கதா காலேட்சபம்' நடை பெற்றது. பிரசங்கம் முடியும் தறுவாயில் பலத்த கரகோஷம் உண்டாயிற்று. சரி, நம்முடைய பேச்சை ரஸித்துத்தான் இவ்வளவு கரகோஷமாக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது சபா நாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்கள் பேச எழுந்ததற்காகச் செய்யப்பட்டது என்று பின்னர் தெரிந்தது!

பலத்த கரகோஷங்களுக்கிடையே சபாநாயகர் பேசிய பேச்சைக் கொஞ்சம் அமைதியாகக் கேளுங்கள்:—"சட்ட சபைக்குச் சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப் படுகிறவர் ஜனநாயக ரீதிப்படி கட்சிச் சார்பற்றவராக இருக்க

வேண்டியது அவசியமாகும். ஆகையால் நான் அரசியல் சம்பந்தமாக எந்தவித அபிப்பிராயமும் சொல்வதற்கில்லை. அத்துடன் நான் இங்கே பிரசங்கம் செய்யவும் வரவில்லை. கருணை மூர்த்தியான ஆண்டவனைக் கண் குளிரக் கண்டு தரிசனம் செய்யவே வந்தேன். ஆனாலும் ஒன்று சொல்ல வேண்டும். தீண்டாமை இருக்கிற வரையில் இந்த நாட்டுக்குச் சுபிட்சம் கிடையாது. அரசியல் விஷயமாக நான் பேசுவது யுக்தமல்ல ஆனாலும் ஒன்று. கிழக்கிந்தியக் கம்பெனி தஸ்தாவேஜிகளைக் கொஞ்சம் புரட்டிப் பார்த்தால் ஜாதி ஹிந்துக்களால் ஒதுக்கப்பட்ட, கொடுமை செய்யப்பட்ட ஹரிஜனங்களைப் பட்டாளத்தில் சேர்த்து அவர்களைக் கொண்டே ஆங்கிலேயர் இந்தியாவைப் பிடித்திருக்கிறார்களென்பது தெரியவரும். தேசிய விஷயமாக நான் பேசுவதற்கு வரவில்லை. ஆனாலும் ஒன்று சொல்கிறேன். ஜாதி ஹிந்துக்களுடைய கொடுமை தாங்காது ஹரி ஜனங்கள் வெவ்வேறு மதத்திற்கு ஓடுகிறார்கள். இதையெல்லாம் ஜாதி ஹிந்துக்கள் மனதில் வைத்து நமது ஹிந்து மதம் க்ஷீணதசை யடைந்து விடாமல் பாதுகாக்க வேண்டும். அதிகமாக நான் பேசப் போவதில்லை. ஆனாலும் ஒரு விஷயம். இங்கிலீஷ்காரன் போய் விட்டாலும், அவனுக்குப் பதிலாக இன்னொருவன் வராமலிருக்க வேண்டும், இதற்கு ஹரி ஜனங்களுடைய ஒத்துழைப்பைப் பெற வேண்டும்.''

இப்படியாக, 'ஆனாலும் ஒரு விஷயம்' 'ஆனாலும் ஒன்று சொல்கிறேன்.' என்று சொல்லிக் கொண்டே, ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை ஒன்றைக்கூட விடாமல் முக்கியமான விஷயம் எல்லாவற்றையும் சொல்லி முடித்தார்.

சங்கரன் கோயில் பொதுக் கூட்டத்தில் சபா நாயகருக்குப் பிறகு கல்கி ஆசிரியர் பேசினார். நெற்றியில்

பட்டை பட்டையாக விபூதி பூசிக் குங்குமத் திலகமிட்டுப் பழுத்த சிவாச்சாரியார் போல் கல்கி தோற்றமளித்தார். அதன் காரணம் அவருடைய பேச்சில் வெளியாயிற்று. கல்கி அவர்களுக்கு முன்னேயெல்லாம் கோவிலுக்குப் போனால் பக்தி உண்டாவதில்லையாம். அதற்குப் பதிலாகக் கோவில்களிலுள்ள பழைய சிற்பங்களையும் சித்திரங்களை யும் பார்த்து விட்டுத் திரும்பி வந்து விடுவாராம். சத் சங்கத்துடன் சேர்ந்தால் பக்தி உண்டாகும் என்று பெரியோர் சொல்லியிருப்பதின் உண்மையை அன்றுதான் உணர்ந்த தாகக் கல்கி கூறினார். மகா பக்திமானான ஸ்ரீ சிவசண் முகம் பிள்ளை அவர்களுடன் சேர்ந்து சுவாமி தரிசனம் செய்ய வந்ததனால் தம்மை அறியாமலே அன்று அவருக்குப் பக்தி உண்டாயிற்றாம்.

சபா நாயகர் ஸ்ரீ சிவசண்முகம் அவர்கள் சட்டசபை வேலை செய்யும் நேரம் போக பாக்கி நேரத்தில் ஹரிஜனச் சேரிகளுக்குச் சென்று ஏழைப் பிள்ளைகளின் வயிற்றுக்குப் பால் வார்க்கும் காரியம் செய்துகொண்டு வருகிறாராம். இந்தக் காரியத்திற்காக ராஜாஜி வெளிநாட்டிலிருந்து சில அபிமானிகள் அனுப்பிய ஆயிரம் பால் டின்களைச் சபா நாயகரிடம் கொடுத்திருக்கிறாராம். தாம்பரத்துக்குப் பக் கத்துக் கிராமத்தில் சபாநாயகர் பால் வார்க்கச் சென்ற போது கல்கியும் அங்கு சென்றிருந்தாராம். அப்பொழுது சபாநாயகர் கூட்டத்திலிருந்த ஒருவரைப் பார்த்து, "ஏனப்பா, நீ ஒரு ஹிந்துதானே? ஏன் பாழும் நெற்றி யுடன் இருக்கிறாய்? நெற்றியில் ஒன்றும் இட்டுக் கொள் ளக் கூடாதா?" என்று கேட்டாராம். உடனே கல்கிக் குத் தமது நெற்றியை எங்கே சபாநாயகர் பார்த்துவிடப் போகிறாரோ என்ற பயம் ஏற்பட்டு விட்டதாம். உடனே சபாநாயகர் தம்மைப் பார்க்க முடியாதபடி முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாராம்.

பலர் விபூதியைப் பட்டை பட்டையாய்ப் பூசிக் கொண்டு பல அயோக்கியத் தனங்களைச் செய்து கொண்டிருப்பதாலும், பலர் தங்கள் நெற்றியில் நாமம் போட்டுக் கொள்வதுடன், நாமக் கட்டிக்குக் கண்ட்ரோல் ஒன்றும் இல்லாததினால் மற்றவர்களுக்கும் நாமத்தைக் குழைத்துச் சாத்தி விடுவதாலும், கல்கிக்கு நெற்றிக்கு இட்டுக் கொள்வதில் அதுவரை பிரியம் இல்லாமலிருந்ததாம். ஆனால் நல்ல உத்தமர்களும் நெற்றிக்கு இட்டுக் கொள்கிறார்கள் என்று சபாநாயகரைப் பார்த்த பிறகு தெரிந்து போய் விட்டதாம். ஆகையால் தாமும் நெற்றிக்கு இட்டுக் கொள்ளலாம் என்ற தைரியம் ஏற்பட்டு விட்டதாம். அதனால் தான் சங்கரன் கோவில் விபூதி ஸ்டாக்குக்கே ஆபத்து வரும்படியாக அவ்வளவு விபூதியைப் பூசிக் கொண்டாராம், அதற்குத் தமது நெற்றியே சாட்சி என்று கல்கி சுட்டிக் காட்டியபோது சபையில் பலத்த சிரிப்பு ஏற்பட்டது.

அன்று மத்தியானச் சாப்பாடு ஆன உடனே "கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று ஸ்ரீ சோமயாஜுலு சபாநாயகரிடம் சொன்னார். அதற்குச் சபாநாயகர், 'ஓய்வெடுத்துக் கொள்வது அப்புறமிருக்கட்டும்; நான் ஏதாவது ஒரு சேரியைப் போய்ப் பார்க்க வேண்டும்! புறப்படலாமா?" என்றார்.

"ஓகோ! இந்தச் சபாநாயகர் பொல்லாதவர் போலிருக்கிறது! இவருக்குக் காரியந்தான் குறி!" என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் ஸ்ரீ சோமயாஜுலு அவரை விட ரொம்பப் பொல்லாத பேர்வழி என்பது தெரிந்தது. "பிரயாணத்தின் போது போகிற பாதையிலுள்ள சேரிகளைப் பார்வையிட ஏற்பாடு செய்திருக்கிறேன். ஆகையால் இப்போது நிம்மதியாய்ப் படுத்துக் கொள்ளுங்கள்" என்று

சொல்லி விட்டார். சபாநாயகரும் திருப்தி அடைந்தவராய்ப் படுக்கப் போனார்.

ஆனால் படுக்கச் சென்றவர்களை ரொம்ப நேரம் படுத்திருக்கும்படி திருநெல்வேலித் தொண்டர்கள் விட்டு விடவில்லை. படுத்துக் கண்ணை மூடித் திறப்பதற்குள்ளே "புறப்படலாமா!" "போகலாமா!" "ஓய்வு போதுமல்லவா?" "சிரமபரிகாரம் ஆகிவிட்டதா?" என்ற கூக்குரல்கள் எழுந்தன. "சந்தை இரைச்சலில் குடியிருந்து கெட்டேனே!" என்று சொல்லிக் கொண்டே எழுந்தோம். சங்கரன் கோவிலுக்கு ஏழு மைல் தூரத்திலுள்ள கரிவலம் வந்த நல்லூர் என்ற கிராமத்திற்குப் புறப்பட்டோம்.

கரிவலம் வந்த நல்லூர்

ஒரு சிறு கிராமத்தில் அத்தனை பெரிய அழகான கோவில் இருப்பது கண்டு அதிசயித்தோம். நமது தமிழ் நாட்டு முன்னோர்களின் பக்தி மயமான வாழ்க்கையை நினைத்து வியந்தோம். அந்த நாளில் தமிழ் மக்கள் உழுது பயிரிடுவதும் ஒழிந்த நேரமெல்லாம் கோவில் கட்டுவதுமாக வாழ்க்கை நடத்தி யிருப்பார்கள் போலும்! இல்லாவிட்டால் இப்படிச் சின்னச் சின்ன கிராமங்களிலே கூட இவ்வளவு பிரம்மாண்டமான ஆலயங்களை நிர்மாணித்திருக்க முடியுமா?

சபா நாயகருக்கும் கல்கிக்கும் வழக்கமான கோவில் மரியாதைகள் நடைபெற்றன. சுவாமி தரிசனம் செய்து விட்டுக் கோவிலை வலம் வந்தோம். கரிவலம் வந்த நல்லூர், சபாநாயகர் வலம் வந்த நல்ல ஊராகவும் ஆயிற்று! பிறகு, ஆலயத்துக்கு எதிரே நடைபெற்ற பொதுக் கூட்டத்தில்

சபா நாயகர் பேசியதாவது:—"பழைய காலத்தில் நமது நாட்டிலிருந்த ராஜாக்கள் இந்த மாதிரி அற்புதமான கோவில்களைச் சின்னச் சின்ன ஊர்களிலே கூடக் கட்டினார்கள். அந்த ராஜாக்கள் எல்லாம் எங்கே? தங்கள் ராஜ்யங்களை இங்கிலீஷ்காரர்களிடம் பறி கொடுத்து விட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். ஒரு சில ஆங்கிலேயர் எப்படி இந்தப் பெரிய தேசத்தை ஜயித்தார்கள்? கிழக்கிந்தியக் கம்பெனியின் பழைய ரிகார்டுகளை யெல்லாம் நான் சென்னை மேயராக இருந்த காலத்தில் படிக்கும்படி நேர்ந்தது. இங்கிலீஷ்காரர்கள் ஆதித் திராவிடர்களைத் தங்கள் சைன்யத்தில் சேர்த்துக்கொண்டுதான் இந்த மாகாணத்தை ஜயித்தார்கள் என்று அந்தப் பழைய ரிகார்டுகளிலிருந்து நிச்சயமாய்த் தெரிய வருகிறது. இதிலிருந்து நாம் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நமது தலைவர்கள் எவ்வளவோ தியாகம் செய்து போராடியதன் பலனாக நமக்குச் சீக்கிரத்திலேயே சுயராஜ்யம் வரப்போகிறது. அதை மறுபடியும் பறி கொடுத்து விடக்கூடாது. பறி கொடுக்காமல் இருப்பதற்கு ஹிந்து சமூகத்தோடு ஹரிஜனங்கள் ஒன்றாகிவிட வேண்டும்."

அழகுனேரி

காரிவலம் வந்த நல்லூரிலிருந்து கோவில் பட்டிக்குப் புறப்பட்டோம், வழியில் அழகுனேரி என்னும் அழகான ஹரிஜன கிராமத்துக்கு வந்து சேர்ந்தோம். இந்தக் கிராமத்திலுள்ளவர்கள் எல்லோரும் ஹரிஜனங்கள் என்று தெரிந்தது. தங்கள் சமூகத்தைச் சேர்ந்த சட்டசபைத் தலைவரை வரவேற்க அழகுனேரி வாசிகள் சிறப்பாக ஏற்பாடுகள் செய்திருந்தார்கள்.

அழகுனேரி சமரச சன்மார்க்க சங்கத்தார் எங்கள் எல்லோருக்கும் நல்ல இளநீர் கொடுத்தார்கள். சபாநாயகருக்கு உபசாரப் பத்திரமும் வாசித்துக் கொடுத்தார்கள். உபசாரப் பத்திரத்தை ஒரு ஹரிஜன இளைஞர் வாசித்தார். அதை எழுதியதும் அந்த இளைஞர்தான் என்று தெரிய வந்தது. கணீர் கணீர் என்ற குரலோசையுடன் சுத்தமாகவும் அழுத்தமாகவும் தமிழை நன்கு உச்சரித்து வாசித்தார் கொஞ்சம் கேளுங்கள்:—

"மறைகள் நம்மைக் குறைத்துரைத்தன; மக்கள் நம்மைக்குத்தலாகப் பேசினர். நாமோ பித்தராய் வாளாவிருந்தோம். காலம் வந்தது; கலை பயின்றோம். இதற்கு இன்று தலையாய் விளங்கும் தாங்களே சான்று. தலைவா, முதல்வா, எங்கள் நாயகா, உமது வருகையால் இந்தச் சேரி புனிதமடையக் கிருபை புரிவீர்!"—இந்த அழகிய தமிழ்ச் சொற்கள் கேட்டவர் காதில் ரீங்காரம் செய்தன. சபாநாயகர் அந்தப் பத்திரத்தை மிகவும் பாராட்டி ஹரிஜனங்கள் எல்லோரும் இம்மாதிரி நல்ல தமிழ் படிக்கக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இப்பொழுது ஹரிஜன சமூகம் முன்னுக்கு வந்து கொண்டிருப்பதையும் பலர் பெரிய உத்தியோகங்கள் வகிப்பதையும் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:—

தீண்டாமை அடியோடு தீர்ந்து போய் விட்டதென்று நான் சொல்லவேயில்லை. இன்றும் எத்தனையோ கொடுமைகளுக்கு நம்மவர்கள் ஆளாகி வருகிறார்கள். ஆனால், உங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். இருபது வருஷத்துக்கு முன்பிருந்த நிலைமையையும் இப்போதுள்ள நிலைமையையும் ஒத்திட்டுப் பாருங்கள். எவ்வளவோ நாம் முன்னேறித்தான் இருக்கிறோம். இதெல்லாம் மகாத்மாவினாலும் காங்கிரஸினாலும்தான் ஏற்பட்டது. இதை நாம் மறந்தால் நன்றி கொன்றவர்களாவோம்!"

மேலே போகையில் வழியிலிருந்த ஆலங்குளம் கிராமத்தில் ஹரிஜனங்கள் கூடித் தங்கள் குறைகளைச் சபாநாயகரிடம் எடுத்துச் சொன்னார்கள். சபாநாயகர் அவற்றைப் பரிவுடன் கேட்டார். குறைகளை நிவர்த்திக்கத் தம்மாலானவற்றைச் செய்வதாக வாக்களித்தார்.

சபா நாயகர் தமது பிரசங்கங்களில் ஒரு நல்ல முறையை நெடுகிலும் அனுசரித்து வந்ததைக் கவனித்தேன் சாதி ஹிந்துக்கள் அதிகமாகக் கூடியுள்ள கூட்டங்களில் தீண்டாமையை அடியோடு ஒழிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசினார். ஹரிஜனங்கள் அதிகமாகச் சேர்ந்திருக்கும் கூட்டங்களிலோ, மகாத்மாவினாலும் காங்கிரஸினாலும் ஹரிஜனங்கள் அடைந்திருக்கும் நன்மைகளைப் பற்றியே பெரிதும் பேசினார். "இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னால் புத்தர் முயற்சி செய்தும், ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் இராமானுஜர் முயற்சி செய்தும் முடியாமற் போன காரியம் இன்று மகாத்மா காந்தியினால் நடந்திருக்கிறது!" என்று தமது சமூகத்தினருக்கு அடிக்கடி நினைவூட்டினார். அதைக் கேட்ட ஹரிஜனங்களும் பலத்த கரகோஷம் செய்து அதை ஆமோதித்தார்கள்.

கோவில் பட்டி

சுமார் எட்டரை மணிக்குக் கோவில் பட்டி போய்ச் சேர்ந்ததும் ஸ்ரீ செண்பக வல்லி அம்மன் கோவிலுக்கு முதலில் சென்றோம். இந்தக் கோவிலில் அம்மனுக்குத்தான் சுவாமியைக் காட்டிலும் பிரதானம் கொடுக்கிறார்கள். இதை அறிந்துதான் நமது பெரியவர் ஒருவர், "அம்மையே அப்பா!" என்று அம்மையை முன்னால் வைத்துப் பாடினார் போலும். ஸ்ரீ செண்பக வல்லி அம்மன் மிகவும்

சக்தி வாய்ந்த தெய்வம் என்று சொன்னார்கள். தரிசனம் செய்து முடிந்ததும் கோவிலுக்கு வெளியில் காத்துக் கொண்டிருந்த பதினாயிரக் கணக்கான ஜனங்கள் அடங்கிய பொதுக் கூட்ட மேடைக்குச் சென்றோம். தலைவர்களை அப் பெருங்கூட்டம் ஆரவாரம் செய்து வரவேற்றது. திருநெல்வேலி ஜில்லாவின் புரட்சி வீரர் ஸ்ரீ மேகநாதன் கூட்டத்திற்குத் தலைமை வகித்து எல்லோரையும் வரவேற்றார். "பங்குனி மாதம் ஒருவருக்கு ஜே!" "சித்திரை மாதம் மற்றொருவருக்கு ஜே!" என்று சொல்லும் சில தேசபக்தர்களின் பச்சோந்திக் கொள்கையைப் பலமாகக் கண்டித்தார். இன்னும் சில தேசத் துரோக அரசியல் வாதிகளைத் தெற்கு வடக்காகப் பிய்த்து வாங்கினார். அன்று முதல் இன்று வரையில் தாம் ராஜாஜியை ஆதரித்து வருவதின் காரணம் இப்போது எல்லாருக்கும் விளங்கி விட்ட தல்லவா என்று கேட்டார். சபையோரும் விளங்கி விட்டதென்பதைப் பலத்த கரகோஷத்தினால் தெரிவித்தார்கள்.

பிறகு, "ஹிந்து மதம் ஹரிஜனங்களுக்குத்தான் சொந்தம்; சாதி ஹிந்துக்களுக்குச் சொந்தமல்ல!" என்று ஸ்ரீ மேகநாதன் கர்ஜித்துவிட்டு, என்னைப் பேசும்படி கட்டளையிட்டார்.

வழக்கம்போல் நாமக்கல் கவிஞரின் சங்கநாதப் பாட்டுடன் அடியேன் ஆரம்பித்தேன்;

"'மகாத்மா காந்திக்கு, ஜே!' என்று சொல்லுகிறோம் 'ஜவஹர்லாலுக்கு, ஜே!' என்று கோஷிக்கிறோம். இப்படி எல்லாருக்கும் 'ஜே!' என்று கடைசியில் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆனால் நமது சபா நாயகருக்கோ இயற்கையிலேயே அவருடைய பெயருக்கு முன்னால் 'ஜே' ஒட்டிக் கொண்டிருக்கிறது. அவரது பெயரே ஜே. சிவ சண்முகம் பிள்ளை! (கரகோஷம்,)

"சபா நாயகருடன் இன்று காலையிலிருந்து பிரயாணம் செய்து வந்ததில், அவரைப் பற்றிய ஓர் உண்மையை அறிந்து கொண்டேன். மகாகவி டாகுர் தமது கவி ஒன்றில் ஒரு ரஸமான விஷயம் சொல்லியிருக்கிறார். ஒரு பக்தன் கடவுளைப் பார்த்து, 'பகவானே! உலகத்தில் தினம் தினம் எத்தனையோ மனிதர்களைப் படைத்துக் கொண்டிருக்கிறாய்! ஆனால் மனிதர்களோ, போட்டியும் பொறாமையும் கொண்டு ஒருவரை ஒருவர் மாய்த்து வருகிறார்கள், அப்படி இருந்தும், மேலும் மேலும் ஏன் மனிதர்களைப் படைத்துக்கொண்டிருக்கிறாய்?' என்று கேட்டானும். அதற்குப் பகவான், 'பக்தா! உன் கேள்வி ரொம்பவும் நியாயமானது தான். ஆனால் எப்போதாவது நல்ல மனிதன் ஒருவன் கிடைக்க மாட்டானா என்ற ஆசையினால்தான் மேலும் மேலும் மனிதர்களைப் படைத்துக் கொண்டிருக்கிறேன்!' அப்படிக் கடவுள் தேடிக் கொண்டிருந்த நல்ல மனிதர் கடைசியாக இவ்வுலகில் தோன்றிவிட்டார்! அவர் நமது சபாநாயகர் சிவசண்முகம் பிள்ளை அவர்கள் தான்! (பலத்த கரகோஷம்) அப்படிப்பட்ட கடவுளுக்கு உகந்த நல்ல மனிதரை இத்தனை நாளும் கோவில்களுக்குள்ளே போகக் கூடாது என்று நாம் வைத்திருந்தோம். (பலமற்ற கர கோஷம்) அதை நினைத்தால் எனக்கு ரொம்பவும் அவமானமாயிருக்கிறது. (கரகோஷமே யில்லை!)"

இவ்வாறு பொதுக் கூட்டத்தின் உற்சாகத்தை அடியோடு விழச் செய்து, மறுபடியும் அதைத் தூக்கிவிடுவதற்காகப் பல அரசியல் விஷயங்களைப் பற்றிக் காரசாரமாகவும், வீராவேசமாகவும் நான் பேசி முடித்தேன்.

பின்னர் சபாநாயகர் கரகோஷத்தினிடையே எழுந்து பேச ஆரம்பித்தார். ஆலயப் பிரவேசம் சம்பந்தமாகத் தமது அளவற்ற மகிழ்ச்சியைத் தெரிவித்தார். திருநெல்

வேலி ஜில்லா காங்கிரஸ் தொண்டர்களின் அரிய ஊழியங்களைப் பாராட்டினார். பின்னர் தாம் வந்த வழியில் பல இடங்களில் ஹரிஜனங்கள் கூட்டம் கூடி நின்று தங்கள் குறைகளைத் தெரிவித்துக் கொண்டதைக் குறிப்பிட்டார்.

“என்னிடம் குறைகளைத் தெரிவித்துக் கொண்டவர்கள் என்னையும் மந்திரியைப் போல் அரசாங்க அதிகாரம் உள்ளவன் என்று எண்ணித் தெரிவித்தார்கள். ஆனால் நான் மந்திரி இல்லை. என்னிடம் சொல்லப்பட்ட குறைகளையெல்லாம் நான் சம்பந்தப்பட்ட மந்திரிகளிடம் அவசியம் சொல்லுவேன். அவ்வளவுதான் என்னால் முடியும். குறைகளைக் கேட்டுக் கொண்டிருந்த போதெல்லாம் ராஜாஜி பிரதம மந்திரியாக இருந்தபோது செய்த பல காரியங்கள் என்னுடைய ஞாபகத்திற்கு வந்து கொண்டிருந்தன. நண்பர்களைக் காணாத இடத்தில் தான் புகழ வேண்டும். ராஜாஜி இப்போது நம்மை விட்டு வெகு தூரத்திற்குப் போய் விட்டார். ஆனால் அவர் இந்த மாகாண ஹரிஜனங்களுக்குச் செய்திருக்கும் நன்மையை அளவிட முடியாது!” என்று கூறிவிட்டு, ஸ்ரீ சிவசண்முகம். ராஜாஜி ஹரிஜனங்களுக்குச் செய்த நன்மைகளுக்குப் பல உதாரணங்கள் கூறினார். அவை யெல்லாம் எனக்கும் “கல்கி” ஆசிரியருக்கும் கூட வியப்பை அளித்தன. ஏனெனில், இதற்கு முன் அவை எங்களுக்கே தெரியாமலிருந்தன. ஹரிஜனப் பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பளமும் காலேஜ் சம்பளமும் இல்லாமல் செய்தது; படிக்கும்போது சாப்பாட்டிற்குப் பணம் கொடுக்கச் செய்தது; சர்க்கார் உத்தியோகத்தில் சேருவதற்கு ஹரிஜனங்களுக்கு வயது நிபந்தனையில்லாமல் செய்தது—இதுபோன்ற பல காரியங்களை எடுத்துச் சொன்னார். படித்த ஹரிஜன இளைஞர்களுக்கு உத்தியோகம் பண்ணி வைப்பதில் ராஜாஜி எடுத்துக் கொண்ட பெரு முயற்சிகளையும் குறிப்

பிட்டார். அவர் கொடுத்த ஓர் உதாரணம் மிக்வும் ரஸமாயிருந்தது.

வகுப்பு வாரியாக சர்க்கார் உத்தியோகங்களைக் கொடுக்க வேண்டுமென்ற விதி ஒன்று ஏற்பட்டிருக்கிற தல்லவா? இந்த விதியானது ஒவ்வொரு சாதியாகத் தாண்டி ஹரிஜனங்களிடம் வரும்போது பயனில்லாமல் போய் விடுவது வழக்கமாயிருந்ததாம். அதாவது, அந்த உத்தியோகத்துக்குத் தகுந்த ஹரிஜன அபேட்சகர் இல்லை. என்று காரணம் சொல்லி விட்டு, மேல் சாதிக்காரர்களுக்குக் கொடுத்து விடுவார்களாம். ஒரு தடவை போலீஸ் டிபுடி சூபரிணடெண்டு வேலைக்கு ஹரிஜன வகுப்பின் உரிமை வந்ததாம். வழக்கம் போல் "ஹரிஜனர் ஒருவரும் இல்லை" என்று சொல்லி, ஒரு சாதி ஹிந்துவுக்கு வேலையைக் கொடுக்கச் சிபார்சு வந்ததாம். ராஜாஜி அதை ஒப்புக் கொள்ளாமல் ஸ்ரீ சிவசண்முகத்தையும் இன்னும் சில ஹரிஜனத் தலைவர்களையும் கூப்பிட்டனுப்பி, விஷயத்தைச் சொல்லித் தகுதியான ஆளைக் கூட்டி வரும்படி சொன்னாராம். அவ்விதமே ஹரிஜனத் தலைவர்கள் பீ. ஏ. பாஸ் செய்த ஒரு ஹரிஜன இளைஞரைக் கொண்டு வந்தார்களாம். அவரைக் காரியாலயத்திற்கு வரச் சொல்லி, போலீஸ் இலாகாத் தலைவரையும் வரச்சொல்லி, அங்கேயே பரீட்சை செய்யும்படி சொன்னாராம், ஸ்ரீ சிவசண்முகத்தையும் தம் அருகில் இருக்கச் செய்திருந்தாராம். பரீட்டை முடிந்தவுடன் மேற்படி அதிகாரி, "மற்றத் தகுதி யெல்லாம் இருக்கிறது; ஆனால் ஆள் ரொம்பவும் மெலிவாக இருக்கிறார். போலீஸ் உத்தியோகத்திற்கு ஆள் ஆஜானுபாகுவாக இருக்க வேண்டும்" என்றாராம். அதற்கு ராஜாஜி "இவர் ஏழை ஹரிஜன இளைஞர். இதுவரை சரியான சாப்பாடே இவருக்குக் கிடைத்திராது: ஆகையால் இப்படி மெலிந்திருக்கிறார். உத்தியோகத்தைக் கொடுத்தால்,

சந்தோஷத்தினாலேயே சீக்கிரம் பருத்து விடுவார்!'' என்று கூறியதும், இன்ஸ்பெக்டர் ஜெனரல் ''சரி'' என்று சொல்லி, அந்த ஹரிஜன இளைஞருக்கு வேலையைக் கொடுத்தாராம்.

''ராஜாஜி சொன்னது போலவேதான் நடந்தது. மேற்படி இளைஞர் உத்தியோகம் ஏற்றுக்கொண்ட ஆறு மாதத்துக்குள் கட்டிப் பிடிக்க முடியாதபடி பருத்துப் போய் விட்டார், திறமையாக உத்தியோகமும் பார்க்கிறார்!'' என்று சபா நாயகர் சொன்னபோது, சபையில் ஏற்பட்ட சிரிப்பையும் குதூகலத்தையும் கட்டிப் பிடிக்க முடியாமல் போயிற்று,

சபா நாயகருக்குப் பின்னர் கல்கி ஆசிரியர் பேச எழுந்தார். இரவு மணி பத்துக்கு மேல் ஆனபோதிலும் ஜனங்கள் அமைதியுடனும் ஆர்வத்துடனும் கல்கியின் பேச்சைக் கேட்கக் காத்திருந்தார்கள்.

கல்கி பேசலானார்:—''இந்தப் பெரிய கூட்டத்தின் ஆரம்பத்தில் வீரர் மேகநாதனின் மேகநாதம் கேட்டது; பின்னர் நமது சின்ன அண்ணாமலையின் சங்கநாதம் கேட்டது. இரு நாதங்களும் இக் கூட்டத்தையே உலுக்கி விட்டன. ஸ்ரீ சின்ன அண்ணாமலை சபாநாயகரைப் பற்றிப் பேசும் போது ஒரு விஷயம் சொன்னார். எப்போதாவது ஒரு நல்ல மனிதர் அகப்பட மாட்டாரா என்ற ஆசையினால் கடவுள் இத்தனை நாளும் மனிதர்களைப் படைத்துக் கொண்டிருந்தார் என்றும், கடைசியாக நல்ல மனிதராகிய ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அகப்பட்டு விட்டார் என்றும் கூறினார். இதைக் கேட்டதும் எனக்கு ஒரு பெரும் பயம் உண்டாகியிருக்கிறது. நல்ல மனிதர் அகப்பட்டு விட்டபடியால் மனிதர்களைப் படைக்கும் காரியத்தைக் கடவுள்

ஒரு வேளை நிறுத்தி விடுவாரோ என்று பயப்படுகிறேன். (சிரிப்பு) அதிலும் நமது ஹிந்து மதக் கடவுள் மட்டும் மனிதர்களைப் படைப்பதை நிறுத்தி விட்டு, மற்ற மதங்களின் கடவுள்கள் மனிதர்களைப் படைத்துக் கொண்டே இருந்தால் நம்முடைய கதி என்ன ஆவது? (பெரும் சிரிப்பு) இப்பொழுது ஹிந்துக்கள் முப்பது கோடியும் மற்ற மதஸ்தர்கள் பத்துக் கோடியும் இந்தியாவில் இருக்கிறார்கள். இப்படி யிருக்கும்போதே ஹிந்துக்களின் பாடு பெரிய பாடா யிருக்கிறது. இதற்குக் காரணம் மற்ற மதத்தினரெல்லோரும் 'வா! வா!' என்று சொல்லி அழைத்துக் கொண்டிருக்கும் போது, ஹிந்துக்களாகிய நாம் மட்டும் 'போ! போ!' என்று தள்ளிக் கொண்டிருப்பது தான். நமது புராதனமான, அற்புதமான ஹிந்து மதத்திலும் சாதி வேற்றுமை, தீண்டாமை முதலிய முட்டாள் தனங்கள் புகுந்து கொண்டன. இந்த முட்டாள் தனங்களை நாம் உடனே ஒழிக்கா விட்டால் ஹிந்து மதம், ஹிந்து சமூகம் எல்லாமே ஒழிந்து போகுமென்பது நிச்சயம்."

இவ்வாறு பேசிக் கூட்டத்தைக் கதிகலங்க அடித்து விட்டுக் கல்கி ஆசிரியர் வட இந்தியாவில் பம்பாய் போன்ற இடங்களில் வகுப்புக் கலவரங்களினால் ஏற்பட்டிருக்கும் 'கிலி'யைப் பற்றிப் பேசினார். பம்பாயில் ஏற்பட்ட தமது அனுபவங்கள் சிலவற்றையும் எடுத்துக் கூறினார். பம்பாயில் ஒருநாள் இரவு சினிமா பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்ப அநேகம் டாக்ஸிக்காரர்களைக் கூப்பிட்டாராம். ஒவ்வொருவனும் "மாதுங்கா போக வேண்டுமென்றவுடன் அங்கே போக வேண்டுமானால் ரொம்ப நேரம் ஆகும். வழியில் கலகப்பிரதேசம் இருக்கிறது. 'கர்ஃப்யூ' ஆர்டர் வேறு இருக்கிறது. மணியோ இரவு 8-30 ஆகிவிட்டது. ஆகையால் வர இயலாது, அப்படி வந்தாலும் யார் என்னைத் திருப்பிக் கொண்டு வந்து விடுவார்

கள்? துணையில்லாமல் நான் தனியாக எப்படித் திரும்ப முடியும்'' என்று ஒவ்வொரு டாக்ஸி டிரைவரும் சொல்லி விட்டாளும். கல்கிக்கோ நெஞ்சு 'பக் பக்'கென்று அடித்துக் கொண்டதாம். 'இன்று தீர்ந்தோம்' என்று நினைத்துத் தம் முடைய இஷ்ட தேவதைகளை எல்லாம் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தாராம். அப்பொழுது ஒரு டாக்ஸி வந்ததாம். அந்த டிரைவரிடம் போய் (அரைகுறை ஹிந்துஸ்தானி யில் தான்) மாதுங்கா போக வேண்டுமென்று சொன்னா ராம். அவனும் பழைய கதையைத்தான் திருப்பிச் சொன் னானும். பிறகு அவனிடம் 'நானும் ஒரு ஹிந்து; நீயும் ஒரு ஹிந்து; உதவி செய்ய வேண்டாமா?' என்றாராம். உடனே டாக்ஸி டிரைவர் 'ஆமாம்; ஹிந்துவுக்கு உதவி செய்யத் தான் வேண்டும்; சரி, காரில் ஏறு' என்று ஏற்றிக் கொண்டு போய் வீட்டில் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தா னும். இப்படி ஒரு சமூகத்தைக் கண்டு மற்றொரு சமூகம் பயந்து கொண்டு வடக்கே எல்லாம் வாழுகிறார்கள். தில்லி ஒரு காலத்தில் ஹஸ்தினா புரமாக இருந்தது. ஆனால் இன்றோ ஒரே மசூதியாக இருக்கிறது! டில்லியில் உயிருடன் இருப்பவர்களுக்கு வீடே கிடைக்காது. செத்துப் போனவர்களுடைய சமாதிக்கு வேண்டிய இடம் உண்டு.

பிறகு கோவில்பட்டி வாசிகளை ரொம்ப புத்திசாலிகள் என்று வெகுவாகப் பாராட்டினார். அவர்களுடைய ஊர்ப் பெயரிலேயே 'கோவில்' என்ற வார்த்தையை வைத்துக் கொண்டார்களாம்!

"அது மட்டுமல்ல; உங்களுடைய ஊர்க் கோவிலைத் திறந்து விட அவசியமே இல்லாதபடி உங்கள் கோவிலுக்கு வாசற் கதவே போடாமல் வைத்து விட்டீர்கள்!'' என்று கல்கி சொன்னபோது, எல்லோரும் கோவிலைப் பார்த்

தோம். அவர் சொன்னதுபோல் கோவில் முன் வாசலில் கதவையே காணோம்!

கோவில் பட்டி வாசிகள் எல்லாக் காரியங்களையுமே புரட்சிகரமாகச் செய்கிறார்கள் என்று கல்கி ஆசிரியர் பாராட்டினார். "எல்லா ஊரிலும் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பவர் 'ஜம்' என்று நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, வெளியூரிலிருந்து வந்தவர்களைக் கீழே உட்காரச் சொல்வது வழக்கம்! ஆனால், இந்தக் கூட்டத்தில் தலைமை வகிக்கும் ஸ்ரீ மேகநாதன் கீழே உட்காந்து கொண்டு, மேடையிலுள்ள மூன்று நாற்காலிகளிலும் எங்களை உட்கார வைத்தார். இப்போது நான் பேசிக் கொண்டிருக்கிறேனே என்று தலைவர் மேகநாதன் நான் உட்கார்ந்திருந்த நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறார்! அவர் என் நாற்காலியில் உட்கார்ந்திருக்கிறாரே என்பதற்காக நான் பேசிக் கொண்டிருக்கிறேன்! ஆனால் எட்டய புரத்திலிருந்து எங்களைக் கூட்டிக்கொண்டு போக வந்திருக்கும் மேயர் கந்தசாமி செட்டியாரோ, எட்டயபுரம் இன்று எட்டாத புரமாகப் போய்விடுமோ என்று அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறார்!" என்று கல்கி கூறிய முடிவுரையின் போது, சபையோர் வானம் இடிந்து விழும்படி குதூகல மாய்ச் சிரித்தார்கள். இதற்குள் ஸ்ரீ மேகநாதனும் நாற் காலியிலிருந்து எழுந்து விடவே, இரவு பதினொரு மணிக் குக் கூட்டமும் கோலாகலமாக முடிவடைந்தது.

எட்டயபுரம்

நள்ளிரவு பன்னிரண்டு மணிக்கு எட்டயபுரம் போய்ச் சேர்ந்தோம். "சரி, பன்னிரண்டு மணியாகி விட் டது. இனிமேல் எட்டயபுரத்தில் கூட்டம் எங்கே நடக்கப்

போகிறது? போனதும் நிம்மதியாகப் படுத்துத் தூங்கலாம்!'' என்று பேசிக் கொண்டு போனோம். ஆனால் எட்டயபுரத்தில் அந்த அகாலமான நள்ளிரவிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடி ஆரவாரம் செய்து கொண்டிருந்தார்கள்.

எட்டயபுரம் ராஜா சட்டமெல்லாம் வருவதற்கு எவ்வளவோ காலத்திற்கு முன்னால் ராஜாஜியை வரவழைத்து ஹரிஜனங்களுக்குத் தமது சொந்தக் கோவிலைத் திறந்து விட்டவர். அந்தக் கோவிலைச் சபாநாயகர் தரிசனம் செய்தவுடன் மகாராஜா ஓர் அருமையான விருந்தளித்தார். இரவு சுமார் ஒரு மணிக்குப் பொதுக் கூட்டம் ஆரம்பமாகி இரண்டு மணிக்கு முடிவடைந்தது!

பின்னர் தூக்கமும் அசதியும் எங்களை ஒரே அமுக்காக அமுக்கின! ஆனாலும் காலை ஐந்து மணிக்கே ஸ்ரீ சோமயாஜுலுவும் ஸ்ரீ மேகநாதனும் எங்களை எழுப்பி விட்டார்கள். காரியத்தில் அவர்கள் அவ்வளவு குறியாக இருந்தார்கள். காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு மகாகவி பாரதியாரின் மண்டபத்தைப் பார்க்கப் புறப்பட்டோம். சபாநாயகர் மண்டபத்தைப் பார்த்து மன மகிழ்ந்தார். மண்டபத்தின் கம்பீரத்தையும் அழகிய அமைப்பையும் பார்த்த மாத்திரத்திலே தமக்கு இரண்டு நாட்களாக ஏற்பட்ட பிரயாண அலுப்புக்கூட நீங்கிவிட்டதாகக் கூறினார்.

எட்டயபுரத்திலிருந்து தூத்துக்குடிக்குப் பிரயாணமானோம். வழியில் குறுக்குச் சாலை என்ற ஊரில் சிலர் குறுக்கே நின்றுகொண்டு வரவேற்பளித்தார்கள். இப்படி வழி நெடுகச் சபாநாயகருக்குக் கிடைத்த வரவேற்புகளைப் பெற்றுக்கொண்டு தூத்துக்குடி போய்ச் சேர்ந்தோம்.

தூத்துக்குடி

நகருக்கு வெளிப்புறத்திலே பெரிய திருவடி ஸ்ரீ துரைசாமி நாடார் அவர்களும் விட்டலபுரம் நண்பர் ஸ்ரீ வேங்கடாச்சாரியார் சுவாமிகளும் வரவேற்க வந்து விட்டார்கள். அவர்களுடனே தூத்துக்குடியிலுள்ள சங்கர ராம ஈசுவரர்—பாகம் பிரியாள் அம்மை கோவிலுக்குச் சென்றோம். இங்கே கோவிலுக்குள் செல்ல வேண்டுமானால் மேல் சட்டையைக் கழற்றி விட வேண்டுமாம். சபாநாயகர் ஹரிந்து சமூகத்தின் நன்மைக்காகத் தாம் எதையும் செய்யத் தயார் என்று சொல்வதுபோலச் சட்டையைக் கழற்றி விட்டு ஆலயத்துக்குள் பிரவேசம் செய்து விட்டார். நானும் சபா நாயகரைப் பின் பற்றினேன். இந்தக் கோவிலில் ஒரு விசேஷம் என்னவென்றால், சுவாமிக்கு அர்ச்சனை தமிழிலேயே செய்கிறார்கள். "நமசிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!" என்று திருவாசக மந்திரங்களைச் சொல்லி அர்ச்சனை செய்தார்கள். இந்தப் புதுமையான ஏற்பாடு எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி தந்தது. சுவாமியும் சந்தோஷப் பட்டிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. செந்தமிழால் வைதவர்களையும் வாழ்விக்கும் தமிழ் நாட்டுத் தெய்வங்கள், தமிழில் மந்திரம் சொல்லி அர்ச்சனை செய்வதைக் குறித்து மகிழ்ச்சி அடையாமல் இருக்க முடியுமா?

பின்னர் திருநெல்வேலி ஜில்லா காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எம். ஸி. வீரபாகு பிள்ளை அவர்களின் இல்லத்தில் ஏற்பாடாகியிருந்த காலைஆகாரத்தை முடித்துக்கொண்டு நேரே வைகுண்டத்துக்குப் புறப்பட்டோம்!

ஸ்ரீ வைகுண்டம்

தூத்துக்குடியிலிருந்து நாங்கள் புறப்பட்டபோது "இந்த வயதிலேயே வைகுண்டத்துக்குப் போவதா?" என்று கொஞ்சம் தயக்கமாயிருந்தது.

வைகுண்டத்துக்குப் போகும் பாதை அவ்வளவு கரடு முரடாயும் மேடு பள்ளமாயும் இருக்குமென்று எனக்கு அதற்கு முன்னால் தெரியாது! முன்பின் போயிருந்தால் அல்லவா தெரியும்? வழியிலேயே பல தடவை வைகுண்டத்தை எட்டி, மறுபடியும் பூமிக்கு வந்து,— இப்படியாகப் பெரும் அவஸ்தைக்கு உள்ளானோம். கடைசியாக வைகுண்டத்தை நாங்கள் அடைந்தபோது, அது நிஜமான வைகுண்டமல்லவென்றும், ஆனால், வைகுண்டத்தைப் போலவே மகிமை வாய்ந்த ஸ்தலம் என்றும் தெரிந்து கொண்டேன்.

ஸ்ரீ வைகுண்டத்தில் காங்கிரஸ் பிரமுகர்களான ஸ்ரீ செந்திப் பெருமாள் தேவர், ஸ்ரீ சின்னத் தம்பித் தேவர், ஸ்ரீ ஆதித்தன் எம். எல். ஏ. முதலிய ஸ்தல காங்கிரஸ் பிரமுகர்கள் சபாநாயகரை வரவேற்றுக் கோவில் மரியாதைகளுடன் ஆலயத்துக்குள் அழைத்துச் சென்றார்கள். கள்ளர் பிரானும், நின்ற நாராயணப் பெருமாளுமான ஸ்ரீ வைகுண்டநாதர் நமது சபாநாயகருக்குத் திவ்ய தரிசனம் கொடுத்துத் நம் பிரதிநிதிகளான அர்ச்சகர்கள் மூலம் "மார்க்கண்டனைப் போல என்றும் பதினாறாக வாழ்வீராக!" என்று ஆசீர்வாதம் செய்ய, மற்றவர்கள் "ததாஸ்து" என்று சொன்னார்கள்.

ஊரின் பேரை உத்தேசிக்கும் போது மேற்படி ஆசீர்வாதம் அவசியமாகவே காணப்பட்டது. ஸ்ரீ வைகுண்டத்தில் எழுந்தருளி யிருக்கும் 'நின்ற பெருமாள்' ஹரிஜனங்

களுக்குத் தரிசனம் கொடுத்தவுடன், பக்கத்து ஸ்தலங்களில் உள்ள 'இருந்த பெருமாள்' 'கிடந்த பெருமாள்' எல்லோரும் ஹரிஜனங்களுக்குத் தாராளமாய்த் தரிசனம் கொடுத்து விட்டார்களாம். ஸ்ரீ வைகுண்டத்திலிருந்து ஆழ்வார் திருநகரிக்குப் பிரயாணமானோம்.

ஆழ்வார் திருநகரி

திருக்குருகூர் என்னும் ஆழ்வார் திருநகரி தமிழுக்கு மிகவும் சொந்தமான இடம். சடகோபர் என்னும் நம்மாழ்வார் இங்குள்ள புளியமரத்தடியில் வீற்றிருந்து தான் 'தமிழ் மறை' என்று போற்றப்படும் ஆயிரக் கணக்கான பாசுரங்களை 'அமுதொழுகுகின்ற தமிழினில்' விளம்பினார். இக்கோவிலை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடுவதில் கொஞ்சம் சிரமம் ஏற்பட்டு விட்டதாம். ஆலயப் பிரவேசத்துக்குக் குறிப்பிட்ட தேதியில் அர்ச்சகர்கள் கோவிலை இழுத்துப் பூட்டிக் கொண்டு போய் விட்டார்களாம்! பெருமாள் மூன்று நாட்கள் பூஜையும், பிரசாதமும் இல்லாமல் பட்டினி கிடந்தாராம்! பின்னர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஊழியர்கள் முன்வந்து பெருமாளுடைய பட்டினியைப் போக்கத் தகுந்த நடவடிக்கை எடுத்துப் போலிஸாரின் சாத்வீக உதவியுடன் கோவிலைத் திறந்த பிறகுதான் பெருமாள் உபவாசத்தை முடித்தாராம். ஆயினும் உள்ளூர் அர்ச்சகர்கள் இன்னும் 'ஸ்ட்ரைக்'கை வாபஸ் செய்யாததால் வேறு ஊர்களிலிருந்து அர்ச்சகர்கள் வந்து பூஜை நடத்தி வருகிறார்கள்.

ஆழ்வார் திருநகரியில் பல ஆச்சரியமான விஷயங்களைக் கேட்டோம்; பார்த்தோம். ஆயிரம் வருஷத்துக்கு முன்னால் நம்மாழ்வாருக்கு நிழல் அளித்த புளியமரம் நாலு பிரம்மாண்டமான கிளைகளாகப் பிரிந்து இன்றும் நின்று

வருகிறது. அதற்கு 'உறங்காப் புளி' என்று பெயராம். மற்றப் புளிய மரங்களைப்போல் இந்தப் புளியமரம் இரவில் இலை குவிந்திருப்ப தில்லையாம். அதில் காய்க்கும் காய்கள் பழமாகப் பழுப்பதும் கிடையாதாம். இப்பேர்ப்பட்ட அருமையான ஸ்தலத்தைப் பற்றி எங்களுக்கு எடுத்துச் சொல்லவும், திருநகரியைப் பற்றிய தமிழ்ப் பாடல்களைப் பாடிக் காட்டவும் ரஸிகமணி டி. கே. சி. வந்தாரில்லையே என்று நாங்கள் கவலைப் பட்ட சமயத்தில், ஆசிரியர் சீனி வாச ராகவன் அங்கு வந்து சேர்ந்தார். அவரால் ஓரளவு எங்கள் மனக்குறை தீர்ந்தது. ஆழ்வார் திருநகரி கோவி லைத் திறப்பதற்கு மிக்க ஊக்கத்துடன் பாடு பட்டவர் களில் ஒருவர் ஆசிரியர் சீனிவாச ராகவன் என்று நண்பர் விட்டலபுரம் வேங்கடாச்சாரியார் எங்களுக்கு ஏற் கெனவே தெரியப்படுத்தி யிருந்தார்.

ஸ்ரீ சீனிவாச ராகவன் தலைமையில் கோவிலுக்குள்ளே ஒரு சிறு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தமிழன்பு கொண்ட இந்த ஆங்கில ஆசிரியர் நம்மாழ்வார் பாடல்கள் சிலவற்றைச் செவி குளிர எடுத்துச் சொல்லிச் சபாநாயக ரையும் கல்கியையும் வரவேற்றார். வரவேற்புக்கு வந் தனம் சொல்லச் சபாநாயகர் எழுந்த சமயத்தில் ஒரு மாடு கோவிலின் உட் பிராகாரத்தில் ஆனந்தமாக நடமாடிய காட்சி புலப்பட்டது. அத்துடன் ஒரு ஆடு கூட்டத்துக்கே வந்து விட்டது! உடனே சபாநாயகர், "இதோ ஒரு மாடு கோவிலுக்குள் செல்லுகிறது. "இதை யாரும் தடுத்து நிறுத்துவதில்லை. மனம் ஒப்பி அதைக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்கிறோம். ஆனால், மனிதர்களில் ஒரு சாராரைக் கோவிலுக்குள் செல்ல அனுமதிக்காமலிருப் பது எவ்வளவு அநியாயம்?" என்று பிரத்யட்ச உதாரணங் களுடன் விஷயத்தை விளக்கமாகக் கோவில் என்பதைக் கூடக் கவனியாமல், "முருகன் உங்கள் எல்லோருக்கும்

அருள் புரிவாராக!" என்று பிரசங்கத்தைச் சுருக்கமாகவே முடித்து அருள் புரிந்தார். இதிலிருந்து சபாநாயகரின் உடம்பு திருக்குருகூரில் இருந்தாலும் அவருடைய உள்ளம் ஏற்கெனவே திருச்செந்தூருக்குப் போய் விட்டது என்பதை நண்பர்கள் அறிந்து கொண்டு, மேலே புறப்பட விரைந்தார்கள்.

நாங்கள் தரிசித்த எத்தனையோ க்ஷேத்திரங்களில் ஆழ்வார் திருநகரில் மட்டும் வழக்கமான அர்ச்சகர்கள் இல்லையென்பது சிறிது வருத்தத்தை அளித்தது. ஸ்ரீ சிவ சண்முகம் அவர்களைப் போன்ற பக்த சிரோமணியை வரவேற்பதற்கு அந்த அர்ச்சகர்களுக்குக் கொடுத்து வைக்கவில்லை! பெருமாள் கோவில் பிரசாத மகிமையைப் பற்றி ரொம்பவும் கேள்விப்பட்டிருந்த எங்களில் சிலருக்குப் பிரசாதம் பெறக் கொடுத்து வைக்கவில்லை!

சீக்கிரத்தில் பழைய அர்ச்சகர்கள் மனமாற்றம் அடைந்து பெருமாள் பணி செய்யத் திரும்பி வர வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டு பெட்ரோல் ஆழ்வார் சந்நிதிக்குச் சென்று மோட்டார் மெஷின் பெருமாளுக்குப் பூஜை செய்து விட்டு மேலே பிரயாணமானோம்.

திருச்செந்தூர்

ஆழ்வார் திருநகரிக்கும் திருச்செந்தூருக்கும் மத்தியிலிருக்கும் பாதையிலே உள்ள பள்ளத்தாக்குகள் எங்களைத் தாக்கு தாக்கென்று தாக்கிவிட்டன! பல ஊர் வாசிகளின் வரவேற்புக்களும் தாக்கின. இவ்வளவு தாக்குதலுடன் திருச்செந்தூருக்குப் பகல் ஒரு மணிக்குப் போய்ச் சேர்ந்தோம். எனக்குப் பசி கண்ணைச் சுற்றியது.

ஆனால், சபாநாயகரோ முருகனைத் தரிசனம் செய்துவிட்டுத் தான் சாப்பிடவேணும் என்று அடம் பிடித்தார். இந்தச் சந்தர்ப்பத்திலேதான் திருச்செந்தூர் முருகனுக்கு என்னிடம் உள்ள அந்தரங்க அபிமானம் தெரியவந்தது! முருகன் நமது சபாநாயகருக்காக இத்தனை நேரம் காத்திருந்துவிட்டு இப்போதுதான் ஓய்வு எடுத்துக் கொண்டதாகவும், ஆகையால் சபாநாயகர் கோஷ்டியைச் சரியாக மூன்று மணிக்கு வரச் சொல்லியதாகவும் ஆலயத்திலிருந்து தகவல் வந்தது. அதன்பேரில் வேறு வழி இல்லாமல் வேண்டா வெறுப்புடன் ஸ்ரீ சிவசண்முகம் உணவு அருந்தச் சம்மதித்தார். திருச்செந்தூரின் 'தாஜ்மகால் ஹோட்டல்' என்று பெயர் பெற்ற மனோ ரஞ்சித விலாஸ் ஹோட்டலை நடத்தும் ஸ்ரீ சீனிவாசய்யர் சபாநாயகர் கோஷ்டிக்காகத் தயாராய் வைத்திருந்த அபார விருந்து முருகன் அருளால் தப்பிப் பிழைத்தது!

மூன்று மணிக்கு ஆலயத்துக்குப் புறப்பட்டோம். வழி நெடுக அழகான பந்தல் போட்டுத் திருச்செந்தூர் வாசிகள் வெயிலே தெரியாமல் செய்து வைத்திருந்தார்கள். கோவிலுக்குச் செல்லும் பாதை பெரிய சக்கரவர்த்தியின் தர்பார் மண்டபத்திற்குப் போகும் வழிபோல் கம்பீரமாக அமைக்கப்பட்டிருந்தது. கோவில் வாசலில் மேள தாளங்களுடன் வரவேற்பு. அங்கே எல்லோரும் சட்டைகளைக் கழற்றி வைத்துவிட்டுப் பயபக்தியுடன் திருச்செந்தூர் வேலாண்டியைத் தரிசனம் செய்யப் புறப்பட்டோம். ஆகா! கோவில் என்றால் இதுதான் கோவில்! அற்புதமான கோவில். அலைகடலின் ஆரவாரம் ஆலயத்தில் மோத, அன்பர்களின் பக்தி வெள்ளம் கடலிலே கலக்க, அமுதங் கலந்த கடற் காற்று உடம்பிலே பட்டுக் கொஞ்ச, கண்களும் கண்களின் வழியாக உள்ளமும், முருகன் திருஉருவத்தில் ஈடுபட்டு லயித்திருக்க, பக்த கோடிகள்

மெய்ம்மறந்து நிற்கும் காட்சியை வேறு எங்கு காண முடியும்?

திருச்செந்தூர் ஆலயத்தில் சிற்ப நூலின் அற்புதத்தைக் கண்டேன்; விண் மறைக்கும் கோபுரத்தைக் கண்டேன்; வினை மறைக்கும் திருமதிள்களைக் கண்டேன்; கண்ணமைந்த காவனத்தைக் கண்டேன்; கன்னித் தமிழ் அளித்த கந்தனையும் கோயிலுக்குள்ளே கண்டேன். இன்னும் கண்டறியாதனவெல்லாம் கண்டேன்!

சபாநாயகர் கோயிலுக்குள்ளே சென்றார். "முருகா, முருகா!" வென்று கதறிக் கண்ணீர் உகுத்துக் கொண்டே வலம் வந்தார். முருகனுடைய சந்நிதானத்தை அடைந்ததும் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தார்.

முதலில் சங்கரன் கோவிலுக்குப் போனபோது அந்தக் கோவிலில் இருந்த 1,126 தூண்களோடு 1,127 தூணைக் கல்கியும் 1,128-வது தூணை நானும் நின்று கொண்டிருந்தோம். (நேயர்கள் இதற்கென்று சங்கரன் கோயில் சென்று தூண்களை எண்ணிப் பார்க்கமாட்டீர்கள் என்ற தைரியத்தினால் மேற்படி புள்ளி விவரம் கொடுத்திருக்கிறேன்.) ஆனால் ஒவ்வொரு கோவிலாகச் சபாநாயகருடன் தரிசித்து வந்தபோது, கல்கியின் தலை கொஞ்சம் கொஞ்சமாக வணங்கிக் கொண்டு வந்தது. தமிழ் வேதம் அருளிய நம்மாழ்வார் சந்நிதியைக் கண்டதும் தமிழ்ப் பற்றுடைய கல்கியின் இடுப்பு வளைந்துவிட்டது. திருச்செந்தூரில் தமிழ்க் கடவுளாகிய முருகனைக் கண்டவுடன் கல்கியின் உடல் அவரை அறியாமலே தரையில் விழுந்து தமிழ்த் தெய்வத்தை வணங்கியது. திருச்செந்தூரில் கோயில் கொண்டிருக்கும் தமிழ்த் தெய்வத்தின் அழகிய தோற்றத்திற்கு ஈடுமில்லை, இணையுமில்லை! அந்தத் தெய்வத்தின் சந்நிதியில் மனமுருகிப் பரவசமடையாத

தமிழன் எவனும் இருக்க முடியாது. தெய்வம் எதிரே நின்று நம்முடன் உரையாடுவதுபோலவே தோன்றுகிறது.

பாஞ்சாலங்குறிச்சியை ஆண்ட கட்டப்பொம்மு ஊமைத் துரை முதலியவர்கள் திருச்செந்தூர் முருகனிடம் மிக்க பக்தி செலுத்தி வந்தார்களாம். தினம் முருகனுக்குப் பூஜையான பிறகே தாங்கள் சாப்பிடுவது என்ற வழக்கம் வைத்திருந்தார்களாம். பாஞ்சாலங்குறிச்சி திருச்செந்தூரிலிருந்து சுமார் நாற்பது மைல் இருக்கும். மேற்படி பாதையில் நாலு மைலுக்கு ஒன்று வீதம் மணி மண்டபங்கள் கட்டியிருந்தார்கள். கோவிலில் பூஜை மணி கேட்டவுடன் முதல் மணி மண்டபத்தில் மணி அடிக்கப்படும். அதைக் கேட்டதும் இரண்டாவது மணி மண்டபத்தில் மணி அடிப்பார்கள். இப்படி வரிசைக் கிரமமாக அடித்துக் கொண்டேவந்து கடைசியாகப் பாஞ்சாலங்குறிச்சியில் மணி அடிப்பார்களாம். இந்த மணி ஓசையைக் கேட்டுவிட்டுத்தான் கட்டப்பொம்மு சாப்பிடுவாராம்.

திருச்செந்தூர், திருவனந்தபுரம் ராஜாக்களின் ஆதிக்கத்தில் கொஞ்ச காலம் இருந்ததாம். அதனால் இன்றும் மலையாளத்துப் போத்திமார்தான் முருகனுக்குப் பூஜை செய்கிறார்கள். கோவிலுக்கு ஆறு லட்சம் ரூபாய் சொத்து உண்டு என்றும் வருஷ வருமானம் இரண்டரை லட்சம் இருக்குமென்றும் சொன்னார்கள். தூத்துக்குடியில் பல வியாபாரிகள் தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தில் நூற்றுக்கு இவ்வளவு பங்கு என்று திருச்செந்தூர் முருகனுக்குக் காணிக்கை செலுத்தி வருகிறார்களாம்.

முருகனைத் தரிசனம் செய்துவிட்டு வெளியே வந்ததும், சந்நிதிக்கு எதிரிலுள்ள கடற்கரை மண்டபத்தில்

ஜனங்கள் நின்று தலைவர்களை வரவேற்றார்கள். ஸ்ரீ சோமயாஜுலுவின் தலைமையில் பொதுக்கூட்டம் நடந்தது. சபாநாயகர் ஜாதி ஹிந்துக்களுக்கு மனமாற்றம் உண்டாகி ஹரிஜனங்களை இந்தப் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயத்துக்குள் விட்டது பற்றித் தம் பெரு மகிழ்ச்சியைத் தெரிவித்தார்.

கல்கி ஒரே உணர்ச்சிப் பிரவாகத்தில் முழுகி இருந்தாலும், ஹாஸ்யமாகவே பேசினார். ஒருவன் வெள்ளிக் கிழமை நன்றாகச் சாப்பிட்டுவிட்டுத் தூங்கிப்போனானும். சனிக் கிழமையும் தூங்கிவிட்டு ஞாயிற்றுக் கிழமைதான் எழுந்தானும். எழுந்தவன் "இன்றைக்கு என்ன கிழமை?" என்று கேட்டானும். இன்று ஞாயிற்றுக் கிழமை என்று பக்கத்திலிருந்தவர்கள் சொன்னார்களாம். உடனே அவன் "அப்படியானால் சனிக் கிழமை எங்கே போச்சு?" என்று கேட்டானும். அதைப்போல நான்கு வருஷத்துக்கு முன் திருநெல்வேலி ஜில்லாவைவிட்டுப் போனவர்கள் இன்று மறுபடியும் திரும்பி வந்தால் "தீண்டாமை என்பதாக ஒரு முட்டாள்தனம் இருந்ததே, அது எங்கே போச்சு?" என்பதாகக் கேட்க வேண்டியிருக்கும் என்று கல்கி கூறினார். "அப்படி அந்தத் தீண்டாமைப் பேயை, நமது சோமயாஜுலு, மேகநாதன், மீனாட்சிசுந்தரம் முதலிய திருநெல்வேலி காங்கிரஸ் தொண்டர்கள் சேர்ந்து கொண்டு, திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஒவ்வொரு ஊராக விரட்டி அடித்துக்கொண்டு வந்து, கடைசியாக இந்தத் திருச்செந்தூர் சமுத்திரத்திலே முக்கி மூழ்க அடித்துவிட்டார்கள்! அவர்களுக்கு ஹிந்து சமூகம் எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது!" என்று கல்கி ஆசிரியர் சொன்னதைச் சபையோர் அங்கீகரித்துக் கரகோஷம் செய்தார்கள்.

ஸ்ரீ மேகநாதன் வந்தனோபசாரம் கூறுகையில், பழைய சம்பவம் ஒன்றை ஞாபகப்படுத்தினார். முன்னொரு சமயம் ராஜாஜி திருச்செந்தூருக்கு வந்திருந்தபோது ஆலயத்துக்கு வரும்படி அழைக்கப்பட்டாராம். "ஹரிஜனங்களை விடாத கோயிலுக்கு நான் வருவதற்கில்லை" என்று ராஜாஜி சொல்லிவிட்டாராம். "இப்போது திருச்செந்தூர்க் கோயிலைத் திறந்துவிட்ட செய்தி ராஜாஜிக்கு அளவில்லாத மகிழ்ச்சி யளித்திருக்கும். அவர் இன்று இங்குவர முடியாவிட்டாலும் அவருடைய அந்தரங்க அன்புக்குரிய சீடர்கள் வந்திருக்கிறார்கள். ஆகையால், என்னைப் பொறுத்தவரை, இன்றுதான் உண்மையாகத் திருச்செந்தூர் ஆலயப் பிரவேசம் நடந்தது" என்று ஸ்ரீ மேகநாதன் உணர்ச்சி ததும்பக் கூறினார்.

மணப்பாடு

திருச்செந்தூரிலிருந்து மணப்பாடு கிராமத்துக்குப் பிரயாணமானோம். மணப்பாடு, குலசேகரப்பட்டினத்துக்கு அப்பால் கடற்கரை ஓரத்திலுள்ள அழகிய கிராமம் 1942 ஆகஸ்டு இயக்கத்தில் குலசேகரப் பட்டினம் எவ்வளவு முக்கியமான ஸ்தானத்தைப் பெற்றது என்பதை நேயர்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. அந்தப் பிரதேசத்தில் ஸ்ரீ மேகநாதன் பதினைந்து நாள்வரையில் தலைமறைவாய் ஒளிந்திருந்த காட்டைக் காட்டும்படி "கல்கி" ஆசிரியர் அவரைக் கேட்டார். "இங்கே மூன்று நாள் நீங்கள் தங்குவதா யிருந்தால்தான் அவ்விடத்துக்குப் போக முடியும்!" என்று ஸ்ரீ மேகநாதன் சொல்லிவிட்டார்.

குலசேகரப்பட்டினத்தில் நாங்கள் சென்ற பெரிய காரை நிறுத்திவிட்டு, அங்கிங்கெனாதபடி எங்குமே செல்லக்கூடிய அபூர்வ ஆற்றல் படைத்த 'ஜீப்' காரில்

ஏறிக் கடற்கரை மணலிலே 'ஜம்'மென்று சென்றோம். அந்தப் பிரயாணம் வெகு சுகமாயிருந்தது. வானத்தில் பூரண சந்திரன் வட்டவடிவத் திலகமாகக் காட்சி அளித்தது. வெண் மணல் பரப்பு என் உள்ளத்தில் ஒரு கிளர்ச்சியை உண்டு பண்ணியது. உடனே பொங்கி எழுந்தது ஒரு தமிழ்ப் பாடல்:—

கடற்கரை ஓரத்திலே—அங்கே
　　காணற்கரியதோர் ஜீப்பினிலே—நெஞ்சம்
படக்கென அடித்திடவே—அலை
　　பாய்ந்து வந்தே ஜீப்பை மோதிடவே—இளந்
தென்றல் தவழ்ந்திடவே—எங்கள்
　　சிரிப்பொலி எங்கும் முழங்கிடவே......... !

மேற்படி கவிதை பூர்த்தியாவதற்குள்ளே மணப்பாடு எல்லைக்கு வந்துவிட்டோம். மணப்பாடு எல்லையில் ஒரு சின்னக் கால்வாய் கடலில் கலக்கிறது. அந்தக் கால்வாய் மீது கட்டியிருந்த பாலம் இடிந்து கிடந்தபடியால் தோணியில் ஏறித்தான் மணப்பாடு செல்ல வேண்டியிருந்தது. அழகிய மூவர்ணக் கொடிகளும் கட்டிப் பிரமாதமாக அலங்காரம் செய்திருந்த தோணி தயாராக நின்றது. அதில் நாங்கள் ஏறி உட்கார்ந்ததும், தோணி நகர ஆரம்பித்தது. காற்றின் வேகத்தினால் சில சமயம் அப்படியும் இப்படியும் தோணி சாய்ந்தபோது சிலருக்குப் பயமாக இருந்தது. ஆயினும் ஒருவித ஆபத்துமில்லாமல் அக்கரை சேர்ந்தோம். கடற்கரையிலிருந்து வீதிகளிலே எல்லாம் தோரணங்கள் கட்டியிருந்தார்கள். வாத்திய கோஷங்கள் முழங்கச் சபாநாயகரை ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். சிற்றுண்டி விருந்துக்குப் பிறகு பொதுக்கூட்டத்துக்குப் புறப்பட்டோம். பொதுக்கூட்டத்துக்குப் போகும்போது மணப்பாடு கிராமத்தைப் பற்றி இன்னும் பல அதிசயமான விவரங்களைத் தெரிந்து

கொண்டோம். மணப்பாட்டில் உள்ளவர்களில் நூற்றுக்கு நூறு பேரும் படித்தவர்களாம். அத்தனை பேரும் கிறிஸ்துவர்களாம். ஆண்களும் பெண்களும் போட்டி போட்டுக் கொண்டு 'கல்கி' படிப்பவர்களாம். எல்லாரும் சிறந்த தேச பக்தியுள்ளவர்கள் என்பதும் வெளியாயிற்று. கடற்கரையில் பொதுக்கூட்ட மேடைக்கு எதிரே பண்டித ஜவாஹரின் மாபெரும் சிலை ஒன்றை ஸ்தாபித்திருந்தார்கள். பொதுக்கூட்டத்துக்குப் பெண்களும் ஆண்களும் திரள் திரளாக வந்து குழுமியிருந்தார்கள்.

சபாநாயகருக்கும், கல்கிக்கும் அவ்வூரார் ஓலையினால் செய்த அருமையான வர்ண வேலைப்பாடமைந்த பெட்டிகளையும் இன்னும் சில பொருள்களையும் பரிசளித்தார்கள். மேற்படி அழகான ஓலைப் பெட்டிகளில் சபாநாயகர் பெயரும் கல்கியின் பெயரும் பொறிக்கப்பட்டிருந்தன. அதன் பின்னர் சித்திர விசித்திரமாகக் கையால் எழுதியிருந்த உபசார பத்திரங்களைச் சபாநாயகருக்கும் கல்கிக்கும் படித்துக் கொடுத்தார்கள். உபசார பத்திரங்களில் கையாண்டிருந்த தமிழ் நடை அபூர்வமாயிருந்தது.

இந்த உபசாரங்கள் எல்லாம் கிறிஸ்துவ சமூகத்தினரால் செய்யப்படுகிறது என்பதை நம்புவதே கஷ்டமாயிருந்தது. என்னை நம்பச் செய்வதற்காகவே, அவ்வூரின் கத்தோலிக்க மத குருவாகிய பெரிய சுவாமியார் மேடையில் தோன்றினார்! தோன்றிய தோடல்லாமல், அழகிய செந்தமிழில் எல்லாரும் வியக்கும் வண்ணம் பேசினார். "பாரத நாடு சுதந்திரம் அடையப் போகும் சமயத்தில் இவ்வளவு தூரத்திலுள்ள இந்தச் சிறு கிராம வாசிகளாகிய எங்களுக்குச் சுதந்திர உணர்ச்சி ஊட்ட வந்த உங்கள் அனைவருக்கும் நல்வரவு" என்றார்.

சபாநாயகர் ஒரே ஆனந்தத்தில் மூழ்கி யிருந்தார். அந்த ஊர் ஜனங்களின் தேச பக்தியைப் பாராட்டினார்.

சுவாமியாரின் வரவேற்பையும், மக்களின் உற்சாகத்தையும் வியந்து வாழ்த்தினார்.

"உங்கள் ஊரின் இடிந்த பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று உபசாரப் பத்திரத்தில் கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நான் மந்திரி யல்ல; எனக்குக் கொடுக்கப் படும் உபசாரப் பத்திரங்களிலுள்ள குறைகளை எல்லாம் தனித் தனியாகக் கிழித்து அந்தந்த மந்திரிகளுக்கு அனுப்பி விடுவது வழக்கம். அதேபோல உங்கள் ஊருக்குப் பாலம் கட்டும் விஷயமாகவும் மந்திரிகளிடம் சொல்லுகிறேன்" என்று தெரிவித்தார்.

"கல்கி" ஆசிரியர் தம்முடைய பேச்சில் உபசாரப் பத்திரங்களின் தமிழ் நடையைப் பாராட்டினார். "உங்களுடைய தமிழ் இந்தக் கடற்கரையில் மோதும் அலைகளைப் போலவே அழகாகத் துள்ளி விளையாடுகிறது!" என்றார்.

பிறகு அந்த ஊரின் இடிந்த பாலத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்.

"யுத்த காலத்தில் அயலார் வரக் கூடாதென்று பாலங்களை உடைத்து விடுவது வழக்கம். அதைப் போலவே, யாராவது கெட்டவர்கள் வந்து இந்த நல்ல ஊரைக் கெடுத்துவிடக் கூடாதென்ற நோக்கத்தோடு நீங்களே பாலத்தை உடைத்துவிட்டுச் சபாநாயகரைப் போன்ற உத்தமர்களை மட்டும் தோணியில் ஏற்றி ஊருக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்திருக்கிறீர்கள் என்று நினைத்தேன். ஆனால் நீங்களோ பாலம் கட்ட வேண்டுமென்று கோருகிறீர்கள். அப்படிக் கட்டினாலும் கண்டவர்களை எல்லாம் உள்ளே சுலபமாக விட்டுவிட

வேண்டாம்!'' என்று கேட்டுக் கொண்ட பின்னர், ஸ்ரீ மேகநாதன், ஸ்ரீ சோமயாஜுலு இவர்கள் மீது தமது கோபத்தை வெளியிட்டார். ஒரு வாத்தியார் "குழந்தை பிறந்தது என்பது என்ன காலம்?'' என்று கேட்டாராம். "இறந்த காலம்'' என்று பையன் பதில் சொன்னானாம். அதுபோலவே கல்கி ஆசிரியருக்கு மேகநாதன் பேரிலும் சோமயாஜுலு பேரிலும் பிறந்திருந்த நல்ல எண்ணம் இப்பொழுது இறந்த காலமாகிவிட்டதாம். ஏனெனில் அவர்கள் மணப்பாட்டுக்குத் தம்மைக் கூட்டிக்கொண்டு வந்தபோது, பிரயாணத்தின் தூரம், படகின் ஆட்டம், ஊர்வலப் புழுதி முதலியவைகளினால் மிகவும் கஷ்டப் பட்டுப் போனாராம். "அப்படித்தான் கூட்டிக்கொண்டு வந்தார்களே! இந்த அழகான ஊரில் இரண்டு நாள் இருந்துவிட்டுத் திரும்பிப் போகும்படி ஏற்பாடு செய்தார்களா? இப்போதே பாளையங்கோட்டைக்குப் புறப்பட வேணும் என்கிறார்கள். அவர்களுடைய வற்புறுத்தல் இல்லாவிடில், இந்த ஊரையும் இதில் வசிக்கும் தமிழன்பு வாய்ந்த ஜனங்களையும் விட்டுப் போகவே எனக்கு மனம் வராது!'' என்று கூறினார்.

வந்தனோபசாரங்களுடன் கூட்டம் முடிவடைந்தது. இந்த வைபவங்களை யெல்லாம் நடத்தி வைத்த ஸ்ரீ பிச்சை வில்வராயனும், ஸ்ரீ ஸேவியர் விக்டோரியாவும் எங்களை மீண்டும் படகில் ஏற்றி அக்கரைக்குப் பத்திரமாய்க் கொண்டு சேர்த்தார்கள். பழையபடி 'ஜீப்' வண்டியில் ஏறிக் குலசேகரப் பட்டினத்துக்குப் புறப்பட்டோம். வழி யில் மாடசாமிபுரம் என்ற ஹரிஜனச் சேரியில் சபா நாயகருக்கு வரவேற்பு நடந்தது. சபாநாயகர் வரவேற் புக்குப் பதில் கூற எழுந்தபோது, கூட்டத்தில் ஒருவர் எழுந்திருந்து தாம் பேச வேண்டுமென்றும், அதனால் சட்ட சபைத் தலைவர் உட்கார வேண்டும் என்றும்

சொன்னார். அரசாளும் மந்திரிமார்களையும் சட்டசபை அங்கத்தினர்களையும் பேச்சை நிறுத்தி உட்காரவைக்கும் அதிகாரம் படைத்த சபாநாயகரை, அன்று மாடசாமி புரத்தில் ஒரு ஹரிஜன உபாத்தியாயர் உட்கார வைத்து விட்டார்! அவரும் மற்றும் சிலரும் கூறிய குறைகளை யெல்லாம் சபாநாயகர் பரிவுடனும் பொறுமையுடனும் சுமார் ஒரு மணி நேரத்துக்குமேல் கேட்டுக் கொண்டிருந்து, குறைகளைத் தீர்க்கத் தம்மாலியன்ற வரையில் முயற்சி செய்வதாகக் கூறினார். அதோடு அவர்களுடைய பெரும்பாலான குறைகளைப் போக்குவதற்கு ஏற்கெனவே சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன வென்றும், அந்தச் சட்டங்களைத் தெரிந்து கொண்டு உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும், யாராவது தடை செய்தால் அந்த ஜில்லா காங்கிரஸ் ஊழியர்களான சோமயாஜுலு வுக்கும் மேகநாதனுக்கும் உடனே தெரியப்படுத்த வேண்டும் என்றும் சபாநாயகர் கூறினார்.

குறைகளைப் பற்றி மந்திரிமார்களுக்கு எழுதுங்கள் என்றோ, உத்தியோகஸ்தர்களுக்கு எழுதுங்கள் என்றோ சொல்லாமல் சோமயாஜுலுவுக்கும் மேகநாதனுக்கும் எழுதுங்கள் என்று சபாநாயகர் கூறியது, அவர்களுடைய தொண்டின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டியது.

திருச்செந்தூர் மனோரஞ்சித விலாஸ் ஹோட்டலில் ஸ்ரீ சீனிவாச ஐயர் அளித்த விருந்தையும் உபசாரத்தையும் மறுபடியும் ஏற்றுக் கொண்டு இரவு பதினொரு மணிக்குப் பாளையங் கோட்டைக்குப் புறப்பட்டோம். ஆழ்வார் திருநகரிக்குப் பக்கத்திலுள்ள தென் திருப்பேரை நண்பர்கள் இரவு பன்னிரண்டு மணி வரையில் காத்து நின்று சபாநாயகரை உபசரித்த அன்பின் பெருமையை என்னால் இயலவில்லை.

திருநெல்வேலி

இரவு சுமார் இரண்டரை மணிக்குப் பாளையங் கோட்டை வந்து சேர்ந்தோம்.

பாளையங்கோட்டை ஜாகையில் நாங்கள் படுக்கையை விரித்துக் கொண்டிருந்தபோது மறுபடியும் ஸ்ரீ மேக நாதன் 'ஜீப்'பில் ஏறிக்கொண்டு கிளம்பினார். "இராத்திரி இரண்டரை மணிக்கு இவர் எங்கே புறப்படுகிறார்?" என்று கேட்டேன். "நாளைக் காலையில் நடக்கும் மகா நாட்டுக்கு ஏற்பாடு சரிவர நடந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு!" என்றார் சோமயாஜுலு. "இந்த நேரத்திலே போய் என்னத்தைப் பார்க்கப் போகிறீர்?" என்று நாங்கள் தடை செய்ததையும் பொருட்படுத்தாமல் மேகநாதன் போயே போய்விட்டார். அது மட்டுமல்லாமல் காலையில் எங்களை எழுப்புவதற்கும் வந்து விட்டார்.

"சீக்கிரம் எழுந்திருங்கள்; ஒன்பது மணிக்கு ஊர் வலம்!" என்றார்.

நாங்கள் பயந்து போய், "ஐயோ! ஊர்வலமா?" என்று கேட்டோம்.

"பயப்படாதீர்கள்; ஊர்வலம் உங்களை வைத்து இல்லை. ஆலயத்தில் நடக்கப்போகும் மகாநாட்டுக்கு ஹரிஜனங்கள் ஊர்வலமாகப் போவார்கள். அந்தக் காட்சியை நீங்கள் அவசியம் பார்க்க வேண்டும்" என்றார்.

"ஊர்வலம் பெரிதாயிருக்குமா? ஐந்நூறு, ஆயிரம் பேர் இருப்பார்களா?" என்று கல்கி கேட்டார்.

"ஐயாயிரம் ஹரிஜனங்கள் இருப்பார்கள்!" என்றார் மேகநாதன். இதை நாங்கள் நம்பவில்லை.

கடைசியில் நாங்கள் போய்ப் பார்த்தபோது, ஸ்ரீ மேகநாதன் கூற்று பொய்யாகவே போயிற்று. அதாவது ஊர்வலத்தில் ஐயாயிரம் ஹரிஜனங்கள் இல்லை; பத்தாயிரம் ஹரிஜனங்கள்தான் இருந்தார்கள்!

"சொல்வதைக் காட்டிலும் அதிகமாகச் செய்து காட்டுகிறவர்கள் இந்தத் திருநெல்வேலித் தொண்டர்கள் தான்" என்றார் கல்கி ஆசிரியர். சபாநாயகர் அதை ஆமோதிக்க, நான் உற்சாகமாக ஆதரிக்க, பிரேரணை ஏக மனதாக நிறைவேறியது.

மேற்படி பத்தாயிரம் ஹரிஜனங்களும் சாலையை அடைத்துக் கொண்டு, மற்றவர்களுக்கு இடைஞ்சல் செய்துகொண்டு அலங்கோலமாகச் சென்றார்களா?

ஐந்து ஐந்து பேராக அணிவகுத்துச் சுமார் இரண்டு மைல் நீளமுள்ள ஊர்வலமாக அமைதியுடனும் உற்சாகத்துடனும் சென்று கொண்டிருந்தார்கள். இந்தப் பக்கத்து ஹரிஜனங்கள் இவ்வளவு ஒழுங்கும் கட்டுப்பாடும் பெற்றிருப்பதற்கு ஸ்ரீ ஆர். எஸ். ஆறுமுகம் ஸ்ரீ சு. செல்லையா என்னும் இரு ஹரிஜனத் தலைகளுந்தான் காரணம் என்று அறிந்தோம்.

நெல்லையப்பர் கோவில் வாசலில் கூட்டம் தாங்கவில்லை. நகர காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ நெல்லையப்பப் பிள்ளையும், கோயில் நிர்வாக அதிகாரி ஸ்ரீ சீனிவாசய்யரும் பூரண கும்பம், மேளதாளம் முதலியவற்றுடன் சபாநாயகரை வரவேற்றார்கள். சபாநாயகர் கோவிலில் பிரவேசித்த போது பொது ஜனங்கள், பெருத்த ஆரவாரமும் கோஷங்களும் செய்தார்கள். சபாநாயகர் தம்முடைய காலில் ஏற்பட்ட ஏதோ ஒரு சிக்கலை நீக்கக் கொஞ்சம் தயங்கினார். அங்கே கூடியிருந்த மக்கள் அதைக் கூடப் பொறுக்கவில்லை. "ஆஹா! ஹரிஜனங்களை இவ்வளவு

நாட்களாகத்தான் கோயிலுக்கு வெளியிலே நிறுத்தி வைத்திருந்தோம். இனியுமா தாமதிப்பது?'' என்பது போலச் சபாநாயகரையும் அவருடன் சேர்ந்த எங்களையும் ஒரே தள்ளாகத் தள்ளிக் கொண்டு போய்க் கோவிலுக்குள் சேர்த்தார்கள்.

கோவில் பிராகாரத்தில் அவ்விதம் தள்ளிக்கொண்டு போகப்பட்ட பொழுது நானும் கல்கியும் கவலையில்லாமல் சென்றோம். ஆனால் திருக்குளத்துக் கருகில் சென்ற போது எங்களுக்கு ஒரே கவலையாகப் போய்விட்டது. ஆலயப் பிரவேசத்துக்கு வந்த சபாநாயகர் ஜனங்களுடைய உற்சாக மிகுதியில் திருக்குளப் பிரவேசம் செய்யும்படி நேர்ந்துவிடக் கூடாதே என்றுதான்! அப்படி ஏதாவது நடந்து விட்டால் பெரிய விபரீதமாக அல்லவா போய் விடும்? "ஹரிஜன வகுப்பில் ஒருவர் சபாநாயகராக வந்திருப்பது பொறுக்காமல் ஜாதி ஹிந்துக்கள் சூழ்ச்சி செய்து ஆலயப் பிரவேசம் என்று அழைத்துக் கொண்டு போய்க் குளத்திலே தள்ளிவிட்டார்கள்!'' என்றல்லவா பழிச்சொல் ஏற்படும்? எனவே, நானும் கல்கியும் ஜாதி ஹிந்துக்களுடைய பிரதிநிதிகளாகச் சபாநாயகரைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டோம். அவரைப் பத்திரமாக நெல்லையப்பரின் திருச்சந்நிதியில் கொண்டு சேர்த்தோம்.

ஆலயத்தில் பூஜை செய்த சிவாச்சாரியாரும் சபா நாயகருக்குச் சுவாமி தரிசனம் செய்து வைப்பதில் மிக்க ஆர்வமுடையவராக இருந்தார். இதைப் பற்றி விசாரித்த போது இன்னொரு விஷயம் தெரிந்தது. முன்னர் மதுரைக் கோவிலைத் திறந்துவிட்ட உடனே பட்டர்கள் பூஜை செய்யாமல் பகிஷ்கரித்தார்கள் அல்லவா? அச்சமயம் திருநெல்வேலியிலிருந்துதான் அர்ச்சகர்கள் மதுரைக்குச் சென்றார்களாம்! எனவே, திருநெல்வேலியின் பண்பாடு

பலவிதத்திலும் உயர்ந்ததுதான் என்று தீர்மானித்துக் கொண்டோம். நெல்லையப்பரையும் காந்திமதி அம்மனை யும் ஆறுமுகங்களுடன் பொலிந்த சுப்பிரமண்யரையும் தரிசனம் செய்தோம். ஒவ்வொரு சந்நிதியிலும் சிவாச்சாரி யார் சபாநாயகருக்குப் பரிவட்டம் கட்டிப் பிரஸாதம் கொடுத்து "ராஜத்துவாரே சர்வா பீஷ்ட சித்திரஸ்து" என்று வாழ்த்துரை கூறினார். அதாவது "அரசாங்கத்தின் மூலமாக எல்லாவித மனோரதங்களும் நிறைவேறட்டும்!" என்று வாழ்த்தினார். முன்னே யெல்லாம் இப்படிச் சொல்லி வாழ்த்துவதைக் கேட்டால், கல்கி ஆசிரியருக்கு மிகவும் சங்கடமாக இருக்குமாம். ஆங்கில அரசாங்கத் தையே ஒழித்துக்கட்ட வேண்டுமென்று முனைந்திருப்பவர் களிடம், "ராஜாங்கத்தின் மூலம் எல்லாவித சௌகரியங் களும் கிடைக்கட்டும்" என்று சொல்லுவது சங்கடமான விஷயந்தானே!

"ஆனால் இனிமேல் அப்படி வாழ்த்துவது ரொம்பப் பொருத்தமானதுதான். இப்போது நமது ஒப்பற்ற தலைவர்கள் அல்லவா ராஜாங்கம் நடத்துகிறார்கள்?" என்று கல்கி ஆசிரியர் கூறினதைக் கேட்டு அர்ச்சகரின் முகமும் மலர்ந்தது.

பின்னர் கோவில் பிராகாரத்தில் கூடியிருந்த ஹரிஜன மகாநாட்டுக்கு வந்தோம். அந்தக் கோவில் பிராகாரம் கட்டிய காலத்திலிருந்து மேற்படி பிராகாரம் ஏதாவது ஒரு நல்ல காரியத்துக்குப் பரிபூரணமாக உப யோகப்பட்டிருக்குமானால், அது அன்று நடை பெற்ற ஹரிஜன மகாநாட்டுக்குத்தான் என்று கூறலாம்.

"கண்டறியாதன கண்டேன்" என்னும் இந்தக் கட்டுரையின் தலைப்பும், அன்று அந்தப் பிராகாரம் அளித்த காட்சிக்கு மிகவும் பொருந்தும். இரண்டு பிரா

காரங்களிலும் ஜனங்கள் அமர்ந்து பிரசங்கங்களைக் கேட்கும்படியாக, இரு பிராகாரங்கள் சேரும் மூலையில் பிரசங்க மேடை அமைக்கப் பட்டிருந்தது. சுமார் இருப தாயிரம் ஜனங்கள் இரண்டு பிராகாரங்களிலும் அமர்ந் திருந்தார்கள். இவர்களில் முக்கால்வாசிப் பேர் ஹரி ஜனங்கள். இதைத் தவிர ஆலயத்துக்கு வெளியிலும் சுமார் இருபதாயிரம் ஜனங்கள் நின்று ஒலிபெருக்கியின் மூலம் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டிருந்ததாக அறிந்தேன்.

திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்தில் ஒரு பெரிய மகாநாட்டைப் போல நடந்த மாபெருங் கூட்டத்தில் சபா நாயகரும், 'கல்கி' ஆசிரியரும் ரொம்பவும் திணறித் திண் டாடிப் போனார்கள். ஒரு சமயம் அவர்கள் இருந்த இடமே தெரியாமல் போய்விட்டது! பற்பல ஸ்தாபனங் களின் சார்பாகப் போடப்பட்ட ரோஜாப்பூ மாலைகள் அவ்வாறு மேடையில் குவிந்து அவர்களை மறைத்து விட்டன.

"வைதிக ஹரிஜன ஆஸ்திக சங்கத்தின் சார்பாக இந்த மாலையைப் போடுகிறேன்!" என்று சொல்லிவிட்டு ஒரு பெரியவர்—விபூதி முதலிய சிவச் சின்னங்கள் அணிந்த ஹரிஜனப் பிரமுகர்—மாலை போட்டபோது கூட்டத்தில் ஒரே கரகோஷம். இந்த ஹரிஜனங்கள் இவ்வளவு சமூகக் கொடுமைகளுக்கு ஆளான பிறகும் இவர்களில் வைதிகர்களும் ஆஸ்திகர்களும் இருக்கிறார்களே யென்று நினைத்து எல்லோரும் ஆச்சரியப்பட்டோம். புஷ்பக் கடைக்காரர்களின் சார்பாக வந்த மாலை, அழகிலும் உருவத்திலும் மற்ற மாலைகளை யெல்லாம் தோற்கடித்து, திருநெல்வேலி பூக்கடை வியாபாரிகளின் ரஸிகத் தன் மைக்குச் சிறந்த விளம்பரமாக மேடையில் காட்சி அளித்தது.

உபசாரப் பத்திரங்களைப் பற்றியோ சொல்ல வேண்டியதில்லை. ஓர் உபசாரப் பத்திரத்தில் கல்கி ஆசிரியரைப் பற்றிப் பல விஷயங்கள் கூறிய பிறகு, "ஐயா! கல்கியே! ஒன்று மட்டும் நாங்கள் சொல்ல வேண்டும்......" என்று படிப்பவர் நிறுத்தியதும், என்ன வரப் போகிறதோ என்னமோ என்று நான் பயந்து போனேன்.

"ஐயா, கல்கியே! ஒன்று மட்டும் நாங்கள் சொல்ல வேண்டும். தாங்கள் எழுதும் தமிழ் எங்களுக்கு விளங்குகிறது!" என்று படித்து முடித்ததும், அந்தப் புராதனமான நெல்லையப்பர் கோவிலின் கல் தூண்கள் கூட அசைந்து ஆட்டம் கொடுக்கும்படியான கரகோஷம் எழுந்தது. "அடே அப்பா! இந்தத் திருநெல்வேலிக்காரர்கள் வெகு பொல்லாதவர்கள்!" என்று முடிவு செய்தேன்.

ஆலயம் அதிர்ந்தது!

மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களை வரவேற்க எழுந்த ஸ்ரீ மேகநாதன் எப்படி வரவேற்றார் தெரியுமா? சபையோர்களைப் பார்த்துப் பிரசங்கிகள், "கனவான்களே! சீமான்களே! சகோதரர்களே!" என்றெல்லாம் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஸ்ரீ மேகநாதன் தம்முடைய பேச்சின் போது, கூட்டத்திலிருந்த சாதி ஹிந்துக்களைப் பார்த்து, "திருடர்களே! திருடர்களே!" என்று அழைத்து மானத்தை வாங்கி விட்டார்! ராஜாஜி ஒரு சமயம் "ஹரிஜனங்களுக்கு நாம் கோவில்களைத் திறந்து விடுவது ஏதோ தர்மத்துக்காகச் செய்கிற காரியம் என்று நினைக்க வேண்டாம். ஹரிஜனங்களுக்குச் சொந்தமானதை இத்தனை நாளாக அவர்களிடம் கொடாமல் வைத்திருந்தோம்.

இப்போது திருப்பிக் கொடுக்கிறோம். இது திருட்டுச் சொத்தைத் திருப்பிக் கொடுப்பதுபோலத்தான்!" என்றாராம். இதைக் குறிப்பிட்டு ஸ்ரீ மேகநாதன் "ஆகையால் திருடர்களே! ஓ, திருடர்களே! ஏ, திருடர்களே! ஹரிஜனங்களுடைய சொத்தை அவர்களிடம் மரியாதையாகத் திருப்பிக் கொடுத்து விடுங்கள்!" என்று சாட்டை வாங்கினார்.

மகாநாட்டை ஆரம்பித்து வைத்த சபாநாயகர் ஸ்ரீ சிவ சண்முகம் பிள்ளை அவர்கள் அன்று ஓர் அருமையான பிரசங்கம் செய்தார். ஹரிஜனங்களைச் சமத்துவமாக நடத்தவேண்டிய அவசியத்தைச் சாதி ஹிந்துக்களுக்கு எடுத்துச் சொன்னார். காந்தி மகாத்மாவினாலும் காங்கிரஸினாலும் ஹரிஜனங்கள் அடைந்திருக்கும் நன்மைகளை அவர்களுக்கு ஞாபகப்படுத்தினார். "இங்கிலீஷ்காரன் மனது வைத்திருந்தால் ஒரே நாளில் தீண்டாமையைப் போக்கியிருக்கலாம். இங்கிலீஷ்காரன் அவ்விதம் செய்யவில்லை. மகாத்மாவினால்தான் தீண்டாமை போயிற்று. இதை நாம் ஒரு நாளும் மறக்கக் கூடாது!" என்று வற்புறுத்திக் கூறியதைச் சபையோர் ஏகமனதாக ஆமோதித்துக் கரகோஷம் செய்தார்கள். ஸ்ரீ சோமயாஜுலு மகாநாட்டுத் தலைவரைப் பிரேரணை செய்து பேசினார். மகாநாட்டுக்குத் தலைமை வகித்த கல்கி ஆசிரியர் ஆரம்பத்திலும் முடிவிலும் இரண்டு தடவை பேசினார். என்னுடைய தொண்டை பாறையாகக் கட்டியிருந்தபோதிலும் ஹிந்து சமூகத்தின் நன்மைக்காக அந்த மாபெரும் கூட்டத்தில் நானும் பேசினேன். எனக்கோ இன்று தொண்டை கட்டிப் போயிருக்கிறது. பேசுவதோ மிக மிகக் கஷ்டம். ஆயினும் உங்களுடைய உற்சாகத்தைப் பார்க்கிறபோது அடைபட்டிருக்கும் தொண்டையும் வழி விட்டிருக்கிறது. எனக்கும் உற்சாகம் அமோகமாக

உண்டாகியிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு நம்பூதிரியின் கதை ஞாபகத்திற்கு வருகிறது.

ஒரு நம்பூதிரி ஒரு விருந்திற்குச் சென்றார். மூக்குப் பிடிக்கச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார். சாதம் பரிமாறிக் கொண்டிருந்த ஒருவர் மேற்படி நம்பூதிரிக்கு சாதம் போட வந்தார். உடனே நம்பூதிரி கையைக் காட்டி நிறுத்தி வயிற்றில் ஒரு பருக்கைக்குக்கூட இடமில்லை என்றும் ஆகவே சாதம் வேண்டாம் என்றும் மறுத்து விட்டார். கொஞ்ச நேரத்திற்குப் பிறகு ஒருவர் பால் பாயசம் பரிமாறிக்கொண்டு வந்தார். உடனே மேற்படி நம்பூதிரி பால் பாயசக் காரரை அவசரம் அவசரமாகக் கூப்பிட்டு ஐந்தாறு தொன்னை பாயசம் வாங்கிச் சாப்பிட்டார். பக்கத்திலிருந்தவர் நம்பூதிரியைப் பார்த்து, "ஏன் ஐயா சாதம் வந்தபோது வயிற்றிலே ஒரு பருக்கைக்குக்கூட இடமில்லை என்றீர், இப்பொழுது பால் பாயசம் என்றதும் ஐந்தாறு தொன்னை சாப்பிட்டு விட்டீரே, எப்படி?" என்று கேட்டார்.

உடனே நம்பூதிரி பளிச் சென்று, "திருவனந்தபுரத்தில் பத்மநாப சுவாமி கோவில் திருவிழா நடக்கும். அப்பொழுது லட்சக்கணக்கான மக்கள் குழுமியிருப்பார்கள். ஒரே நெருக்கமாக இருக்கும். அந்தச் சமயம் யாராவது ஒருவர் அதோ மகாராஜா வருகிறார் என்றால் உடனே அத்தனை ஜனங்களும் பளிச் சென்று வழிவிட்டு விலகி நிற்பார்கள். அதேபோலப் பால் பாயசம் என்றதும் என் வயிறு வழிவிட்டு விட்டது என்று பதில் கூறினாராம். அதேபோல இந்த மாபெரும் கூட்டத்தைக் கண்டதும் என் தொண்டையும் வழிவிட்டுவிட்டது. என்று சொல்லி 'அபாரமாகப் பேசினேன். (என்ன செய்வது? நானே என்னைப்பற்றி 'அபாரம்' என்று சொல்லிக் கொள்ள வேண்டியிருக்கிறது.) அடிக்கடி தினப் பத்திரிகைகளில்.

"சின்ன அண்ணாமலையும் பேசினார். பிறகு கூட்டம் கலைந்தது!" என்னும் செய்தி வெளியாவதை வாசகர்கள் படித்திருக்கக் கூடும். என்னுடைய ஜாதக விசேஷத்தைப் பாருங்கள், நான் எழுதுகிற 'ரிப்போர்ட்'டிலும் அந்தச் சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து, "நானும் பேசினேன்!" என்று எழுத வேண்டியிருக்கிறது. ஆனால் சுற்றுப் பிரயாணத்தில் எந்த இடத்திலும் நான் பேசியதும் கூட்டம் கலையவில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு இடமில்லாமல் என்னை ஒவ்வொரு கூட்டத்திலும் முன்னடியே பேச விட்டு விட்டார்கள்! நானும் சக்கைப்போடு போட்டுச் சபையோரைக் கலைய விடாமல் குதூகலத்தில் ஆழ்த்தினேன்.

ஆனால், அன்றையப் பேச்சுகளில் எல்லாம் என் மனதில் நன்ருகப் பதிந்திருப்பது, ஹரிஜனத் தொண்டர் ஸ்ரீ எஸ். ஆறுமுகம் என்பவருடைய பேச்சுத்தான்.

"பெரியோர்களே! இந்தக் கூட்டத்தில் என்ன வெல்லாமோ பேசவேண்டும் என்று நினைத்திருந்தேன். என் சமூகத்தாரின் குறைகளை எடுத்துச் சொல்ல வேண்டும் என்று யோசித்துக் கொண்டு வந்தேன். ஆனால் என் வாழ்நாளில் முதன் முதலாக இந்த ஆலயத்துக்குள்ளே பிரவேசித்து, இந்த அற்புதமான சிற்பங்களை யெல்லாம் பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட வியப்பினால், நான் யோசித்துக் கொண்டு வந்ததெல்லாம் மறந்து போய் விட்டது!" என்று ஸ்ரீ எஸ். ஆறுமுகம் மனமுருகிப் பேசியதைக்கேட்டு, அந்தக் கூட்டத்தில் உருகாதவர்கள் இல்லை.

ஸ்ரீ எஸ். ஆறுமுகம் மறந்து போயிருந்த விஷயங்களை யெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக ஞாபகப்படுத்திக் கொண்டு சொல்லித் தீர்த்து விட்டார். முக்கியமாகத் திருநெல்வேலிப் பக்கத்தில் நிலச்சுவான்தார்களுக்கும்

பயிர்த் தொழில் செய்யும் ஹரிஜனங்களுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறைப் பற்றிச் சொல்லி, அதை நல்லபடியாகத் தீர்த்து வைக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். ஸ்ரீ எஸ். ஆறுமுகம் போன்ற அறிவாளிகளும் பிரசங்கிகளும் ஹரிஜன சமூகத்தில் தோன்றியிருப்பதைக் குறித்து கல்கி ஆசிரியர் தமது முகவுரையில் பாராட்டிவிட்டு, அத்தகைய சமூகத்தை ஆலயத்துக்குள் வரக் கூடாதென்று வைத்திருந்த மூடத்தனத்தைப் பலமாகக் கண்டித்தார். "ஸ்ரீ ஆறுமுகம் எடுத்துக் கூறிய விவசாயத் தொழிலாளிகளின் குறைகளை நிலச்சுவான்தார்கள் அனுதாபத்துடன் கவனித்துத் தீர்த்து வைக்கவேண்டும். கால நிலைமையை எண்ணிப் பார்த்து முன் யோசனையுடன் நடந்துகொள்ள வேண்டும். நம் நாட்டிலுள்ள 40 கோடி மக்களில் 30 கோடி ஜனங்களுக்குத்தான் இப்போது உணவு உற்பத்தியாகிறது. ஆகையால் உணவு உற்பத்தி எந்தவிதத்திலும் தடைப்படக் கூடாது. ஜவாஹர்லால்ஜி முதலிய நமது மாபெருந் தலைவர்கள் இப்போது பாகிஸ்தான் பிரச்னையைத் தீர்ப்பதிலும், இங்கிலீஷ்காரனை மூட்டை கட்டி அனுப்புவதிலும் ஈடுபட்டிருக்கிறார்கள். 1948 ஜூன் மாதத்திற்குப் பிறகு அவர்கள் இந்நாட்டு ஏழைத் தொழிலாளிகளின் நன்மையில் பூரண கவனம் செலுத்துவார்கள். ஆகையால் இன்னும் ஒரு வருஷம் எல்லாரும் பொறுமையுடன் இருக்கவேண்டும்" என்று கல்கி ஆசிரியர் கூறி முடித்தவுடனே, ஸ்ரீ மேகநாதன் எழுந்து நின்று ஒரு மகத்தான புதிய கோஷத்தைக் கிளப்பினார். "ஹிந்து மதம் எங்கள் சொந்த மதம்!" என்பதுதான் மேற்படி கோஷம். அங்கே கூடியிருந்த அவ்வளவு ஆயிரம் ஜனங்களும் ஏககாலத்தில் அந்த கோஷத்தைச் செய்யும் வரையில் ஸ்ரீ மேகநாதன் விடவில்லை. கடைசியாக, அவருடைய முயற்சி வெற்றி

பெற்றது. அவ்வளவு குரல்களும் சேர்ந்து எழுப்பிய மேற்படி கோஷத்தினால் அந்த ஆலயமே அதிர்ந்தது. என் உடம்பு புல்லரித்தது.

குற்றால யாத்திரை

மத்தியானம் பாளையங்கோட்டை சௌராஷ்ட்ர சங்கத் தலைவர் வீட்டில் விருந்தும், பிற்பகலில் ஜனுப் வி. எஸ். டி. முகம்மது இப்ராஹிம் அவர்கள் வீட்டில் சிற்றுண்டி விருந்தும் நடந்தன. மூவர்ண தேசியக் கொடிகளினால் அலங்கரிக்கப்பட்டு விளங்கிய ஜனுப் முகம்மது இப்ராஹிம் அவர்கள் வீட்டில் பல தேசிய முஸ்லிம்கள் கூடியிருந்து, சபாநாயகரையும் கல்கி ஆசிரியரையும் வரவேற்று உபசாரப் பத்திரம் வழங்கினார்கள். "வெப்பம் மிகுந்த பாலைவனத்தின் நடுவில் குளிர்ந்த பசுமரங்கள் அடர்ந்த ஜீவபூமியைப்போல் இந்தத் தேசிய முஸ்லிம் நண்பரின் வீடு விளங்குகிறது" என்றார் கல்கி ஆசிரியர். சபாநாயகர், "தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் ஹிந்துக்கள் முஸ்லிம்கள் எல்லாரும் ஒரே இனத்வர்தான்" என்று கூறி, அதற்கு உதாரணமாக, ஒரு முஸ்லிம் எம். எல். ஏ. சட்ட சபையில் ஆவேசமாகப்பேசி வரும்போது, "எங்கள் மதுரை மீனாக்ஷி அம்மன்!" என்று தம்மை மறந்து கூறியதைக் குறிப்பிட்டார். "தமிழ் நாட்டில் ஹிந்துக்களும் முஸ்லிம்களும் என்றென்றைக்கும் சகோதரர்கள்போல் வாழலாம். சண்டை சச்சரவுக்குக் காரணமே இல்லை" என்றும் கூறினார்.

அன்று மாலை சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் அவர்களின் தலைமையில் விரவநல்லூர் கிராமத்தில் ஆலயப் பிரவேச வைபவம் மேள தாளங்களுடனும் பொதுஜன ஆரவாரத்துடனும் நடைபெற்றது. பிறகு அம்பாசமுத்

திரத்திலுள்ள கண்ணன் கோவிலில் சுவாமி தரிசனம் செய்தோம். அம்பா சமுத்திரம் காங்கிரஸ் கமிட்டியாரும் பஞ்சாயத்தாரும் சேர்ந்து நடத்திய சிற்றுண்டி விருந்துக்குப் பிறகு பாபநாசத்துக்குச் சென்றோம். பாபவிநாச சுவாமியையும் லோகநாயகி அம்மனையும் தரிசித்துவிட்டு, நேரே தென்காசிச் சாலையில் பிரயாணமானோம். வழியில் விக்கிரமசிங்கபுரத்தில் சிலர் கும்பலாக நின்று வண்டியை மறி மறித்து நிறுத்தினார்கள். "கொண்டு வா, விளக்கை!" என்று கூவினார் ஒருவர். சபாநாயகரின் முகத்தை விளக்கு வெளிச்சத்தில் பார்த்துவிட்டு, "இவர்தான்!" "இவர்தான்!" என்று கூச்சல் போடவும், சபாநாயகரைக் காப்பாற்றும் பொறுப்பு எனக்கு ஏற்பட்டுவிட்டதாக எண்ணினேன். அதற்குள் அவர்கள் சபாநாயகரைச் சூழ்ந்து கொண்டார்கள். சூழ்ந்து கொண்டு கழுத்திலே பல நூல் மாலைகளைப் போட்டுவிட்டுப் பல தடவை 'ஜே ஹிந்த்' கோஷமும் போட்டார்கள்.

ஆகக்கூடி அதிகச் சேதம் ஒன்றுமில்லாமல் இரவு பத்து மணிக்குத் தென்காசியை அடைந்தோம். அங்கேயும் கோவில் வாசலில் பொது ஜனங்களோடு போலீஸ் அதிகாரிகளும் காத்திருந்தார்கள். ஆகவே, தென்காசி விசுவநாதஸ்வாமியையும் அவசர அவசரமாகத் தரிசித்துவிட்டுக் குற்றாலத்தில் வாழும் சிதம்பரநாத முனிவரின் இல்லத்துக்குப் புறப்பட்டோம். தென் காசிக்கும் குற்றாலத்துக்கும் மத்தியில் மேலகரம், சிந்தாமணி என்னும் இரண்டு கிராமங்களின் ஹரிஜனங்கள் சபாநாயகர் தங்கள் சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற உரிமை பாராட்டி, உபசாரம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அவற்றை ஏற்றுக் கொண்டு சபாநாயகரும் உரிமையுடன் அவர்களுக்குச் சில புத்திமதிகளைக் கூறினார். கடைசியாக நள்ளிரவு பன்னிரண்டு மணிக்குக் குற்றாலம் போய்ச் சேர்ந்த போது,

குற்றால நாதர் அதுவரை தூங்காமல் சபாநாயகருக்குப் பேட்டி கொடுப்பதற்காகக் காத்திருக்கிறார் என்ற செய்தி வந்தது. அவ்வளவுதான்; காரிலிருந்து இறங்கிய சபாநாயகர் உடனே மேல் வேட்டியை இடுப்பில் கட்டிக் கொண்டு கோயில் எந்தப் பக்கம் இருக்கிற தென்றுகூடத் தெரிந்து கொள்ளாமல் கிளம்பி விட்டார்! சரியான வழியில் அவரைத் திருப்பி ஆலயத்துக்கு அழைத்துச் சென்று சுவாமி தரிசனமும் செய்து வைத்தார்கள். குற்றாலம் கோயில் பிராகாரத்தில் இருந்த அகஸ்தியர் சந்நிதியில் சபா நாயகர், "தமிழுக்கு மரியாதை செய்ய வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு தரையில் விழுந்து நமஸ்கரித்தார்.

பிறகு, ரஸிக மணியின் இல்லத்துக்குச் சென்றோம். டி. கே. சியின் புன்னகை தவழ்ந்த முகத்தையும் அன்பு ததும்பிய உபசார வார்த்தைகளையும் கேட்டதும் எங்கள் பிரயாண அலுப்பெல்லாம் பறந்து போய் விட்டது.

திருமலை முருகன்

தென் பாண்டிய நாட்டில் "கடலாடிமலையாடுதல்" என்று ஜனங்கள் சொல்லுவதுண்டாம். அதாவது திருச்செந்தூர் கடலில் ஸ்நானம் செய்து அலைவாய் முருகனைத் தரிசித்த பிறகு, திருமலைமேல் ஆடிக் கொண்டே ஏறிக் குன்றம் குடிகொண்ட முருகனைத் தரிசிப்பது வழக்கமாம். அதன்படியே மறுநாள் காலையில், குற்றாலத்துக்குச் சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள திருமலைக்குச் சென்றோம். தென்காசி போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் எங்களுடன் திருமலைக்கு வந்திருந்து தரிசனம் செய்வித்தார். திருமலைக்குப் போகும் வழியில் திருவாங்கூர்ப் பிரதேசம் குறுக்கிடுவதால், நாலு இடத்தில் சுங்கப் பரிசோதனை நடந்தாக

வேண்டும். சபாநாயகரிடம் முருகனுடைய பக்தியைத் தவிர வேறு கள்ளமார்க்கெட் சரக்கு எதுவும் இல்லை என்றாலும், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் சபாநாயகருடன் வந்தபடியால் பரிசோதனைத் தடங்கல் இல்லாமல் பிரயாணம் சௌகரியமாயிருந்தது. திருமலையும் அதன் மேலுள்ள முருகன் கோவிலும் மிக அழகு வாய்ந்தவை. வெகு சுத்தமாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. இந்தத் தெய்விக அழகு வாய்ந்த ஆலயத்தில், மனோரம்யமான காலை நேரத்தில், கோயில் அதிகாரிகள் முருகனை அற்புதமாக அலங்கரித்து வைத்திருந்தார்கள். சபாநாயகரும் தாம் வழிபடும் குலதெய்வமான முருகனைப் பக்தி பரவசத்துடன் தரிசித்து மெய்ம் மறந்து நின்றார். அவருக்குச் சுய உணர்வு வரும்படி செய்து அழைத்துக் கொண்டு திரும்பினோம். 'கொடுக்கிற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுக்கும்' என்பார்கள். அதுபோல் வழியில் இலஞ்சி என்னும் அழகான கிராமத்தில் குமரர் கோவில் தரிசனமும் கிடைத்தது. அதோடு ஸ்ரீ துரைராஜ பாண்டியன் எம். எல். ஏ. அவர்களின் வீட்டில் விருந்தும் நடந்தது.

முடிவுரை

அன்றிரவும் மறு நாளும் குற்றாலத்தில் டி. கே. சி. யின் இல்லத்தில் விருந்துண்டு, செவிக்கினிய தமிழ் விருந்தும் அருந்திவிட்டுச் சபாநாயகர் தென்காசியில் ரயில் ஏறினார். நானும் அவருடன் புறப்பட்டேன்.

சென்னையை நோக்கித் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸின் சக்கரங்கள் அதிவேகமாகச் சுழன்று சென்றபோது என் மனக் கண்முன் சென்ற நாலு தினங்களின் பிரயாண அநுபவங்களும் ஞாபகங்களும் சுழன்று சுழன்று வந்து

போய்க் கொண்டிருந்தன. ஒவ்வொரு ஊரிலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்—முக்கியமாகப் போலீஸ் அதிகாரிகள்—சென்னை மாகாணத்தின் சபாநாயகருக்குரிய மரியாதைகளைச் செய்து, பிரயாண வசதிகளைச் செய்து கொடுத்ததோடு அல்லாமல், ஆலயங்களில் ஜனக் கூட்டங்களைச் சமாளிக்க வேண்டியிருந்தபோது, சாத்வீகமாக ஒத்துழைத்ததையும் அடிக்கடி நினைத்துப் பார்க்க வேண்டியிருந்தது. ஒவ்வொரு ஆலயத்திலும் கோயில் நிர்வாக அதிகாரிகள் சபாநாயகரின் வரவேற்புக்குத் திறமையான ஏற்பாடுகள் செய்திருந்ததும், அர்ச்சகர்கள் ஆயிரம் வருஷத்து மூடக் கொள்கைகளை உதறி எறிந்து விட்டுச் சபாநாயகருக்குப் பரிவட்டம் கட்டுதல் முதலிய மரியாதைகளுடன் சுவாமி தரிசனம் செய்வித்ததும் அடிக்கடி நினைவுக்கு வந்தன.

திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த காங்கிரஸ் ஊழியர்கள்—முக்கியமாக, ஸ்ரீ சோமயாஜுலு, ஸ்ரீ மேகநாதன், ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் ஆகியவர்கள் எப்படிப்பட்ட அற்புதமான காரியத் திறமை வாய்ந்தவர்கள் என்பதும், அவர்கள் தங்களுடைய சுயநலமற்ற தொண்டினால் பொது மக்களின் அன்பை எப்படிக் கவர்ந்திருக்கிறார்கள் என்பதும் என்றைக்கும் அழியாதபடி என் மனத்தில் பதிந்திருந்தன.

இவ்வளவையும் மகிழ்ச்சியுடன் எண்ணிப் பார்த்து விட்டுக் கடைசியில் நான் கண்ணயரும்போது, ஓடும் ரயிலின் சக்கரங்கள் எழுப்பிய தாளத்துடன் கூடிய ஓசையானது, "ஹிந்து மதம் எங்கள் சொந்த மதம்!" என்ற மேகநாத கோஷமாகவே என் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது!

கூடையாக, ஒரு வார்த்தை !

"இராமேசுவரத்திலும் ஆலயப் பிரவேசம் நடக்கிறதாமே? அதற்கு நமது பிரதம மந்திரி ஓமந்தூரும் சபாநாயகர் ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளையும் விஜயம் செய்கிறார்களாமே?" என்று கல்கி ஆசிரியர் சொல்லிக் கொண்டே, கையில் வைத்திருந்த அச்சிட்ட அழைப்புக் கடிதத்தைக் காட்டினார்.

"ஆமாம்; ஆமாம். அந்த வைபவத்துக்குக் கல்கி ஆசிரியரும் சின்ன அண்ணாமலையும் கூட விஜயம் செய்கிறார்களாம்!" என்றேன் நான்.

"அது எங்கே போட்டிருக்கிறது? என் கண்ணில் படவில்லையே?" என்றார் கல்கி.

"உங்கள் கையில் உள்ள அழைப்புக் கடிதத்திலே தான் போட்டிருக்கிறது. பிரதம மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை, மற்றும் அறிஞர்களும் தேசபக்தர்களும் விஜயம் செய்வார்கள் என்று அச்சிட்டிருக்கிறதல்லவா? 'அறிஞர்கள்—தேசபக்தர்கள்' என்னும்போது நம்மையும் சேர்த்துத் தானே சொல்லியிருக்க வேண்டும்?" என்றேன்.

* * * *

இராமேசுவரம் என்பது சாதாரண க்ஷேத்திரம் அல்ல. அதற்கு எத்தனையோ மகிமைகள் உண்டு. இந்தியா ஒரே தேசம் என்பதற்குச் சாட்சியாக விளங்கும் க்ஷேத்

திரம் இராமேசுவரம். தமிழ் நாட்டின் எல்லையை நாம் குறிப்பிடும்போது 'வட வேங்கடம் முதல் தென் குமரி வரையில்' என்று சொல்லுகிறோமல்லவா? அதுபோலவே, வடக்கத்தியார் இந்தியாவின் எல்லையைக் குறிப்பிடும் போது, 'இமயம் முதல் சேது வரையில்' என்றும், 'காஷ் மீரத்திலிருந்து இராமேசுவரம் வரையில்' என்றும் சொல்லுவார்களாம். தென்னாட்டையும் வடநாட்டையும் இணைப்பதற்கு இராமேசுவரம் ஒரு 'சேது'வாக விளங்கு கிறது. வருஷந்தோறும் ஆயிரக் கணக்கான வட இந்தி யர்கள் கங்கையில் முழுகிக் காசி விசுவநாதரைத் தரிசனம் செய்துவிட்டு நேரே இராமேசுவரத்துக்கு வருகிறார்கள். வரும்போது ஒரு சின்னச் செம்பில் கங்கை நீர் கொண்டு வந்து இராமேசுவரத்து சுவாமிக்கு அபிஷேகம் செய்கி றார்கள். வடக்கே பெண்கள் 'இராமேசுவரி' என்று பெயர் வைத்துக் கொள்ளுகிறார்கள். தென்னிந்தியாவில் பெண் மணிகள் 'விசாலாட்சி' என்றும், ஆண் மணிகள் 'விசுவநாதன்' என்றும் பெயர் சூட்டிக் கொள்கிறார்கள்.

இராமேசுவரத்துக் கோயிலில் உள்ள சுவாமிக்கு இராமநாதர் என்று பெயர். இராமர் சேதுவில் அணை கட்டுவதற்கு முன்னால் பிரதிஷ்டை செய்து பூஜை செய்த சுவாமியாகையால், இராமநாதர் என்று பெயர் ஏற்பட்டது.

* * * *

இவ்வளவு மகிமை பொருந்திய இராமேசுவர ஆலயத் திறப்பு வைபவத்துக்கு கனம் பிரதம மந்திரியும் கனம் சபா நாயகரும் வரும்போது இன்னும் பல கனம் தங்கியவர்களும் வருவது இயல்பேயல்லவா? இதைப்பற்றி நான் விசாரித்தபோது என் சந்தேகம் உறுதிப்பட்டது. கனம் மந்திரி கூர்மையா அவர்கள், மாஜி கனம் மந்திரி

ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை அவர்கள், இன்னும் பல சட்ட சபை அங்கத்தினர் எல்லாரும் வருகிறார்கள் என்று தெரிந்தது. இராமேசுவரத்துக்கு அருகில் போகும்போது, ரயில் கொஞ்ச தூரம் சமுத்திரத்தில் போட்ட பாலத்தின் மேல் போகவேண்டும் என்பதையும் நான் அறிந்திருந்தேன். கனம் தங்கியவர்கள் ரொம்பப் பேர் ஒரே ரயிலில் ஏறிவிட்டால், ரயில் தாங்கியபோதிலும் பாலம் தாங்க வேண்டுமல்லவா? எனவே, நாங்களும் அதே ரயிலில் ஏறிக் கனத்தை அதிகப்படுத்த வேண்டாம் என்று எண்ணி, முதல் நாள் காலையில் இராமேசுவரம் போய்ச் சேரும் ரயிலிலேயே ஏறிச் சென்றோம்.

* * * *

இராமேசுவரம் ஒரு தீவு. அந்தத் தீவுக்கு ரயில் பாலத்தைத் தவிர வேறு பாலம் கிடையாது. எனவே, இராமேசுவரத்தில் மோட்டார்கார், 'போபத்கார்,' 'அம்பேத்கார்,'—ஒன்றுமே இல்லை! இரட்டை மாட்டுப் பெட்டி வண்டியில் ஏறி தேவஸ்தானக் கமிட்டியார் ஏற்படுத்தியிருந்த ஜாகைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

அங்கே தேவகோட்டை ஜமீந்தார் ஸ்ரீ சோமநாதஞ் செட்டியார் அவர்கள் எங்களைப் பார்த்ததும் தலையை அசைத்து நல்வரவு கூறினார்கள். இராமேசுவரம் இராமநாத சுவாமி கோயிலைத் திறக்கும் விஷயத்தில் முதன்மையாக நின்று விழாவை நடத்தி வைத்தவர் ஸ்ரீ சோமநாதஞ் செட்டியார் அவர்கள்தான். எனவே, அன்றைய வைபவம் சரிவர முடிய வேண்டுமென்ற கவலை அவருடைய முகத் தோற்றத்தில் நன்கு தெரிந்தது.

ஸ்ரீ சோமையா அவர்கள் (ஸ்ரீ சோமநாதஞ் செட்டியாருக்குச் செல்ல பெயர்) இராமேசுவரத்தின் மகிமையைப்

பற்றிச் சில ரஸமான விவரங்களைச் சொன்னார்கள். ஒரு சமயம் ஸ்ரீ சோமையா குவாலியரில் நடந்த ரயில்வே மகாநாட்டுக்குச் செல்லவேண்டி யிருந்ததாம். வழியில் பரோடாவில் தங்கினார்கள். பரோடா திவான் ஸ்ரீ வி. டி. கிருஷ்ணமாச்சாரியார் குவாலியர் மகாராஜாவுக்கு, "இராமேசுவரம் கோவில் டிரஸ்டி ஸ்ரீ சோமநாதன் செட்டியார் வருகிறார்" என்று முன்னதாக எழுதினாராம். ஸ்ரீ சோமையாவும் அவருடைய சிநேகிதரும் குவாலியர் ரயில்வே ஸ்டேஷனில் இறங்கியபோது, அலங்கரித்த யானைகள், குதிரைகள், பூரண கும்பங்கள், கோஷ வாத்தியங்கள் முதலிய பிரமாத ஏற்பாடுகளுடன் வரவேற்பு நடந்ததாம். அவர்கள் இறங்கிய ஜாகையில், கங்கையிலிருந்து கொண்டு வரப்பட்டிருந்த தீர்த்தமும், ஒரு பெரிய அறை நிறையப் பூஜை செய்வதற்கு வேண்டிய சாமக்கிரியைகளும் தயாராக வைத்திருந்தார்களாம்! இராமேசுவரம் கோயல் டிரஸ்டி என்றால், சங்கராச்சாரியரைப் போன்ற ஆச்சாரிய புருஷரா யிருக்க வேண்டுமென்று எண்ணி இவ்வளவு ஏற்பாடும் செய்திருந்தார்களாம். ஸ்ரீ சோமையா அவர்களும் இராமேசுவரத்தின் பெருமையை நிலைநாட்டும் பொருட்டு பூஜை அறைக்குள் சென்று "இராமநாதா" "இராமநாதா" என்று சிறிது நேரம் ஜபம் செய்துவிட்டுப் பூஜையை முடித்துவிட்ட பாவனையாக வெளியில் வந்தாராம்! குவாலியர் மகாராஜா இராமேசுவரம் டிரஸ்டியிடம் ரொம்பவும் மரியாதையாக நடந்து கொண்டாராம். ஸ்ரீ சோமையாவுடன் இருந்த நண்பர் சந்தர்ப்பத்தை அறிந்து மடியில் வைத்திருந்த விபூதிப் பையை எடுத்து. "இராமேசுவரப் பிரசாதம்" என்று கொடுத்ததும் மகாராஜா பூரித்துப்போய்ப் பய பக்தியுடன் வணங்கி நெற்றியில் இட்டுக் கொண்டாராம்! அப்போதுதான் ஸ்ரீ சோமையா அவர்களுக்கு இராமேசுவரத்தின் மகிமை நன்றாய்த் தெரிந்ததாம்.

அவ்வளவு மகிமை வாய்ந்த இராமேசுவர ஆலயத்தில் பிரவேசிப்பதற்கு, சாயங்காலம் பிரதம மந்திரி—சபாநாயகர் கோஷ்டி வருகிற வரையில் நாங்கள் காத்திருக்கவில்லை. பிற்பகல் இரண்டு மணிக்கே ஆலயத்துக்குள் பிரவேசித்து விட்டோம். "ஆலயம் என்றால் இதுவல்லவோ ஆலயம் என்று நினைக்கும்படி எடுத்த எடுப்பிலேயே கோயில் வேலைப்பாடுகள் எங்கள் மனதைக் கவர்ந்து விட்டன. கோயில் பிராகாரம் இருக்கிறது, பாருங்கள்! அதை உலகத்திலே இல்லாத அதிசயம் என்று சொல்லலாம். அம்மம்மா! எவ்வளவு நீளம்? எவ்வளவு விசாலம்! தூண்களிலேதான் என்ன அற்புதமான சிற்ப வேலைகள்! ஒரு கோடியில் நின்று பார்த்தால் மற்றொரு கோடியைப் பார்ப்பதற்கே தூர திருஷ்டிக் கண்ணாடி வேண்டும் போலிருந்தது! பிராகாரத்தை ஒட்டிக் 'காரிடார்' வேறு நிர்மாணித்திருக்கிறார்கள். பிராகாரத்தின் சுற்றளவு சுமார் ஒரு மைல் இருக்கலாம்.

முப்பத்திரண்டு தீர்த்தங்கள் அதாவது கிணறுகள் கோவிலுக்குள்ளே இருப்பதாக அறிந்து கொண்டோம். ஒவ்வொரு தீர்த்தமும் ஒவ்வொரு கதையுடனிருக்கிறது.

ஒரு தீர்த்தக் கிணற்றுக்குச் சமீபம் வந்தவுடன் எங்களை அழைத்துக் கொண்டு வந்தவர் "இந்த சர்வசித்து தீர்த்தத்தினால் மற்ற எல்லாத் தீர்த்தங்களின் புண்ணியமும் கிடைக்கும்" என்று சொன்னார். "அப்படியானால் ரொம்ப சௌகரியமாய்ப் போச்சு!" என்று சொல்லி, நானும் கல்கி ஆசிரியரும் மேற்படி தீர்த்தத்தை இரண்டு மூன்று கை வாங்கி அருந்தினோம். கடற்கரை ஓரத்திலிருக்கும் மேற்படி தீர்த்தம் கொஞ்சங்கூட உப்புக் கரிக்காமல் நல்ல இளநீர்போல் ருசியாக இருந்தது. பின்னர் ராமநாத சுவாமி தரிசனம் செய்யலாமென்று போனோம்.

கூட வந்தவர், மூல ஸ்தானத்தைக் காட்டி, "இதுதான் இராமர் பிரதிஷ்டை செய்த லிங்கம்; ஆனால் முதலில் இந்த சந்நிதியைத் தரிசனம் செய்வது வழக்கமில்லை. அனுமார் பிரதிஷ்டை செய்த லிங்கம் பக்கத்தில் இருக்கிறது; அதைத்தான் முதலில் தரிசனம் செய்ய வேண்டும்" என்று சொன்னார். "அதென்ன? அனுமார் எதற்காக லிங்கப் பிரதிஷ்டை செய்தார்? அனுமார் இராம பக்தர் ஆயிற்றே?" என்று கேட்டேன். அதன் பேரில் அந்த வரலாற்றையும் தெரிந்து கொண்டோம்.

இராமர் சிவ பூஜை செய்வதற்காகப் பக்கத்தில் எங்கேயாவது சிவலிங்கம் இருக்கிறதா என்று அனுமாரைப் பார்த்து வரச் சொன்னாராம். உடனே அனுமார் ஒரு சிவலிங்கத்தைத் தேடிப் பிடித்தாராம். அதை இராமரிடம் கொண்டு போவதற்காக அசைத்துப் பிடுங்கி முயற்சித்தாராம். எவ்வளவோ முயன்றும் முடியவில்லையாம். நமது அண்ணாச்சிக்குக் கோபம் வந்து விட்டதாம்! உடனே வால் துடித்ததாம்! வாலினால் லிங்கத்தை இறுகப் பிடித்து முழு பலத்துடன் அண்ணாச்சி இழுத்த போது, திடீரென்று என்ன நடந்தது தெரியுமா? வால் அறுந்து போய் விட்டதாம்! அந்தோ! அனுமார் என்ன செய்வார்! அந்த வால் தானே அவருக்கு அழகு கொடுத்துக் கொண்டிருந்தது? வால் அறுந்த இடத்திலிருந்து குருதி பெருகிற்றும். (குருதி என்றால் இரத்தம் என்று அர்த்தம். இப்படி எல்லாம் சில வார்த்தைகளைப் போட்டு வைத்தால் தான் எனக்கும் தமிழ் எழுதத் தெரியும் என்று பண்டிதர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள்.)

குருதி பெருகி மணலிலே ஓடியதாம். அதனால் தான் இன்றுகூட அந்த இடமெல்லாம் சிவப்பு மணலாகவே இருக்கிறதாம்!

"பிறகு, எங்க அண்ணாச்சி என்ன ஆனாரு?" என்று கேட்டேன்.

"கர்வம் அடங்கிச் சிவனைத் தொழுது அருள் பெற்று லிங்கத்தை எடுத்துக் கொண்டு வந்தார். ஆனால் அதற்குள் இராமர், நேரமாகி விட்டதென்று வேறு ஒரு லிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து பூஜை செய்ய ஆரம்பித்து விட்டார். அனுமார் அண்ணாச்சிக்கு வருத்தம் அதிகமாகிவிட்டது! இராம பிரானிடம் ஒரு வரம் கேட்டு வாங்கிக் கொண்டார், அதாவது முதலில் அவர் கொண்டு வந்த லிங்கத்திற்குப் பூஜை செய்ய வேண்டு மென்றும் பிறகுதான் ஸ்ரீ இராம ருடைய லிங்கத்துக்குப் பூஜை செய்ய வேண்டு மென்றும் வரம் பெற்றார்!"

கோவிலுக்குள்ளே இன்னும் எத்தனையோ லிங்கங்கள் இருக்கின்றன. 'லவண லிங்கேச்வரர்' என்னும் லிங்கம் உப்பாலே செய்யப்பட்டதாம். ஆனால் தண்ணீர் விட்டு அபிஷேகம் செய்தால்கூட அது கரையாதாம். ஜோதி லிங்க மென்று மற்றொரு லிங்கம் இருக்கிறது. இது தீபாராதனை காண்பிக்கும்போது பளபள வென்று மின்னுகிறது. இந்த அதிசயத்தை எல்லாம் பார்த்து விட்டுப் பர்வதவர்த்தினி அம்மன் சந்நிதிக்குச் சென்றோம். அம்மன் சந்நிதிக்கு முன்னால் ஒரு மேடை இருக்கிறது. அதில் பிசாசு பிடித்தவர்களைக் கொண்டு போய் உட்கார வைத்தால் பிசாசு ஒரு ஆட்டம் போட்டுவிட்டு ஓடியே போய்விடுமாம். நாங்கள் போனபோது அந்த மேடையில் ஒரே ஒரு பிசாசு தனிமையாக உட்கார்ந்து ஆடிக் கொண்டும் "போகிறேன், இதோ போகிறேன்!" என்று கதறிக்கொண்டும் இருந்தது. அது தீண்டாமை என்னும் பிசாசுதான். "போய்விடு! ஐந்து மணி அடிப்பதற் குள்ளே போய்விடு! ஓடிப்போய்ச் சமுத்திரத்திலேயே

7

விழுந்துவிடு!" என்று தீண்டாமைப் பிசாசைப் பார்த்துச் சொல்லிவிட்டு, அப்பால் உள்ள அம்மனின் மந்திரிணி மண்டலத்தைப் பார்வையிட்டோம். ஒவ்வொரு தூணுக்கும் ஒரு மந்திரிணி வீதம் நிற்க வைத்திருக்கிறார்கள். நிதி மந்திரிணி லக்ஷ்மிதேவி யுத்த மந்திரிணி பத்திரகாளி—இப்படியாகப் பல மந்திரிணிகள் புடைசூழ வீற்றிருந்த அம்மனைத் தரிசித்துவிட்டு ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்குப் புறப்பட்டோம். எத்தனையோ ஆயிரக் கணக்கான யாத்ரீகர்கள் வரும் இராமேசுவரம் கோவில் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பது குறித்துக் கல்கி ஆசிரியர் மிகவும் மகிழ்ச்சி யடைந்தார். சமீபத்தில் நாங்கள் தரிசித்த கோயில்கள் எல்லாம் இவ்வளவு சுத்தமாக இருந்தன என்று சொல்ல முடியாது. எனவே, கோயில் சுத்தமாக வைக்கப்பட்டிருப்பதற்காகவே ஆச்சரியப்பட வேண்டியிருந்தது ஆனால், இவ்வளவு பெரிய பிரம்மாண்டமான கோயில்களை அந்தக் காலத்தில் கட்டி முடித்தவர்களைப் பற்றி என்னவென்று சொல்வது? எப்படி ஆச்சரியப்படுவது? இராமேசுவரத் தீவில் பாறை குன்று ஒன்றும் கிடையாது. வெகு தூரத்திலிருந்து படகுகளிலேதான் கருங்கற்களைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அப்படிக் கொண்டுவந்து இவ்வளவு அற்புதமான சிற்ப வேலைகளுடன் இந்தக் கோயிலைக் கட்ட எத்தனை காலம் எத்தனை மனிதர்கள் எவ்வளவு பக்தி சிரத்தையுடன் வேலை செய்திருக்க வேண்டும்?

மாலையில் பிரதமர் ஸ்ரீ ராமஸ்வாமி ரெட்டியார், சட்டசபைத் தலைவர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை, மந்திரி கூர்மையா, மாஜி மந்திரி ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை முதலியோர் இன்னும் பல தலைவர்களுடனும், தொண்டர்களுடனும் இராமேசுவரம் வந்து சேர்ந்தனர். நேரம் ஆக

ஆக ஜனத்திரள் அதிகமாகி வந்தது. சுமார் ஆறுமணிக்கு ஒரு பெரிய பக்த கோஷ்டியுடன் பிரதம மந்திரி கோவிலுக்குக் கிளம்பினூர். நானும் கல்கி ஆசிரியரும் மேல் வேஷ்டியை இடுப்பில் இறுக்கிக் கட்டிக்கொண்டு மறுபடியும் ஆலயப் பிரவேசம் செய்யப் புறப்பட்டோம்.

மங்கள கீதம் முழங்க, மேள தாளங்கள் ஒலிக்க, ஜெ கோஷங்கள் வானைப் பிளக்க ஊர்வலமாகக் கிளம்பி எல்லோரும் ஆலயத்திற்குள் பிரவேசித்தோம். பிரதமர் முன்னே 'ஜம்ஜம்' என்று செல்ல ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை 'விடுவிடு' என்று நடக்க, ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை மிடுக்காகச் செல்ல, ஸ்ரீ கூர்மையா ஒரே குதூகலத்துடன் ஓட, ஸ்ரீ ராமநாதஸ்வாமி பக்தர்களை யெல்லாம் எதிர் கொண்டு அழைக்க, எல்லோரும் பிரகாரத்தைச் சுற்றிப் பிரதட்சணம் செய்துவிட்டுச் சந்நிதிக்கு வந்து சேர்ந்தோம். பக்தர்கள் எல்லோரும் தலைகளில் கதர்ப்பரி வட்டம் கட்டிக்கொண்டு மெய்ம்மறந்து நின்றூர்கள்.

சுவாமி தரிசனம், அம்மன் தரிசனம், சுப்பிரமணியர் தரிசனம் எல்லாம் முடிந்து பிறகு கோவிலுக்கு வெளியில் வந்து சேர்ந்தோம். அங்கே பொதுக் கூட்டம் ஏற்கெனவே கூடி யிருந்தது. தலைவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க ஆயிரக்கணக்கான ஜனங்கள் தயாராயிருந்தார்கள். இராமேசுவரம் காங்கிரஸ் கமிட்டித் தலைவரும் உப்புச் சத்தியாக்கிரஹ வீரருமான ஸ்ரீ பாலசுப்பிரமணியம் தலைமை வகித்தார். தலைவரைச் சூழ்ந்து அமர்ந்திருந்த பிரமுகர்களைப் பார்த்தபோது, சென்னை சட்ட சபையே இராமேசுவரத்திற்கு வந்துவிட்டதோ என்று தோன்றியது. சட்டசபைத் தலைவர் நடுநாயகமாக வீற்றிருந்தார். பக்கத்தில் பிரதம மந்திரி அண்டையில் மந்திரி கூர்மையா, எம். எல். ஏ.க்கள் அநேகம் பேர்; பார்வையாளர்களோ ஏராளமானவர்கள்.

ராமநாதபுரம் ஜில்லா காங்கிரஸ் காரியதரிசி ஸ்ரீ கே. எஸ். முத்துசாமி வாழ்த்துச் செய்தி அனுப்பிய பெயர்களை யெல்லாம் வாசித்து முடித்த பிறகு சபாநாயகர் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை அவர்கள் எழுந்து மகாத்மாஜியின் வாழ்த்துச் செய்தியை ஒரு தடவைக்கு மூன்று தடவையாகப் படித்தார். "ஆலயங்களைத் திறந்து விடுவதோடு சாதி ஹிந்துக்கள் தங்கள் உள்ளங்களையும் பரிசுத்தப்படுத்திக் கொள்ளவேண்டும்" என்னும் மகாத்மாவின் வாக்கியத்தை வற்புறுத்தி, அதைப் பற்றியே முழுதும் பேசினார். "சில இடங்களில் ஆலயப் பிரவேச விழா நடத்திவிட்டு, இரவோடு இரவாகப் 'புண்யாவாசனம்' செய்து விடுகிறார்களாம். ஆகையால் உள்ளம் சுத்தமில்லாமல் வெளி வேஷம் போடுவதில் பிரயோஜனமில்லை" என்று கூறினார். சேலம் ஜில்லாவில் ஓர் ஊரில் ஹரிஜன ஆலயப் பிரவேசத்துக்குச் சபாநாயகரைக் கூப்பிட்டார்களாம். 'சரி' என்று சபாநாயகரும் சென்றாராம். ஆறு மணிக்கு ஆலயப் பிரவேச வைபவம் நடப்பதாக இருந்ததாம் ஆனால் கோவிலின் சாவியை வைத்திருந்த டிரஸ்டி மூன்று மணிக்கே கோயிலைப் பூட்டிக் கொண்டு போய் விட்டாராம். இதனால் அன்று சுவாமி இரவு ஒன்பது மணி வரையில் இருட்டில் இருந்ததுடன் நைவேத்யம் இல்லாமல் பட்டினி கிடக்கவும் நேரிட்டதாம். பின்னர் போலீஸார் வந்து பூட்டை உடைத்துக் கோவிலைத் திறந்து விட்டார்களாம். இப்படி இன்னும் சில சாதி ஹிந்துக்களின் மனம் மாறாமலிருப்பதைச் சொல்லிச் சபாநாயகர் வருத்தப்பட்டார். அவர் பள்ளியில் படிக்கும் போது எத்தனையோ முறை பாதிரிமார்கள், கிறிஸ்து மதத்தில் சேர்ந்து விடும்படி தூண்டினார்களாம். 'ஆப்ரஹாம்' என்று அவருக்குப் பெயர் வைத்து அநேக சௌகரியங்கள் செய்து கொடுப்பதாகச் சொல்லி

எவ்வளவோ ஆசை காட்டியுங்கூட, அவர் ஹிந்து மதத்தை விட்டுப் போக விரும்ப வில்லையாம்

"இப்படி சாதி ஹிந்துக்கள் எவ்வளவோ கொடுமைப் படுத்தியும் அவமானப்படுத்தியும் கூட நாங்கள் ஹிந்து மதத்தை விட்டுப் போகாம லிருந்தோமே? அதற்காக நீங்கள் எங்களுக்கு நன்றி காட்ட வேண்டாமா?" என்று சபாநாயகர் கேட்டபோது, சபையோர் முழு மனதுடன் அதை ஆமோதித்தனர். பின்னர் சபாநாயகர் தனது திருப்பரங் குன்றத்து அனுபவத்தைச் சொன்னார்.

"ஆறு வருஷத்துக்கு முன்னால் திருப்பரங் குன்றத்துக்கு ஒரு முறை போயிருந்தேன். ஆலயத்துக்கு எதிரே ஒரு வெற்றிலைப்பாக்குக்கடை இருந்தது. அந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரரிடம் பேச்சுக் கொடுத்துக் கொஞ்சம் சிநேகம் செய்து கொண்டு அந்தக் கடையில் ஒரு மூலையில் உட்கார்ந்தேன். நக்கீரரின் 'திருமுருகாற்றுப் படை'என்ற நூலைக் கையில் கொண்டுவந்திருந்தேன். அதை எடுத்துப் படித்தேன். ஒரு முறை, இரண்டு முறை, மூன்று தடவை படித்தேன். முருகனுடைய ஆறு படை வீடுகளில் திருப்பரங் குன்றம் ஒன்று என்பது தெரியுமோ, இல்லையோ? முருகனுடைய பக்தனாகிய எனக்கு ஆலயத்துக்குள் போய் முருகனைத் தரிசிக்க வேண்டும் என்று எவ்வளவோ ஆவலாயிருந்தது. நான் பக்தியோடு திருமுருகாற்றுப் படை படிப்பதைப் பார்த்துவிட்டுக் கடைக்காரர் 'ஏன்? கோயிலுக்குள் போய் சுவாமி தரிசனம் செய்வதுதானே? இன்று உற்சவம்; அலங்காரம் அற்புதமாயிருக்கும்' என்றார். என்னுடைய ஆவல் இன்னும் அதிகமாயிற்று. என்னை அந்த ஊரில் யாருக்கும் அப்போது தெரியாது. வேண்டுமானால் நான் கோயிலுக்குள் தாராளமாய்ப் போயிருக்கலாம். ஆனால் அப்படிச் சாதியை மறைத்துத்

திருட்டுத் தனமாகக் கோயிலுக்குள் போக இஷ்டப்பட வில்லை. ஆகையால் மொத்தம் ஆறு தடவை திருமுருகாற்றுப் படையைப் படித்துவிட்டு, 'முருகா! எப்போது உன் ஆலய வாசல் எனக்குத் திறக்குமோ? எப்போது என் பேரில் உனக்குக் கருணை பிறக்குமோ? என்று மனதிற்குள் பிரார்த்தித்து விட்டுக் கோவிலுக்குள் போகாமலேயே புறப்பட்டேன். அந்த வெற்றிலைப் பாக்குக் கடைக்காரர் என்னைப்பற்றி என்ன நினைத்தாரோ தெரியாது. 'ஒரு மாதிரி மனிதன்' என்று நினைத்திருக்கலாம்! அவ்விதம் ஆறு வருஷத்துக்கு முன்னால் எனக்குக் கிடைக்காத தரிசனம் சமீபத்தில்தான் கிடைத்தது!''

திருப்பதிக்கு ஒரு சமயம் ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை ராஜாஜியுடன் சென்றிருந்தாராம். திருப்பதி மலைமீது கூட ஹரிஜனங்கள் ஏறக்கூடாது என்று தெரிந்தவுடன் ராஜாஜிக்கு மிகவும் வருத்தமாய்ப் போய்விட்டதாம்.

"சிவசண்முகம்! என் உடம்பில் உயிர் உள்ள வரையில் ஹரிஜனங்களின் உரிமைக்காகப் பாடு படுவேன். என் உயிர் இருக்கும்போதே ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்வதைக் கண்ணால் பார்ப்பேன்!'' என்று ராஜாஜி சொன்னாராம்.

அந்தப்படியே ராஜாஜியின் காலத்திலேயே ஹரிஜனங்களுக்கு இந்த உரிமை கிடைத்து விட்டதென்று ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை பெருமகிழ்ச்சியுடன் கூறினார்.

* * * *

அடுத்தபடியாக மாஜி மந்திரி ஸ்ரீ முனிசாமிப் பிள்ளை பேசினார்.

"சில கூட்டங்களில் நான் பேசலாமா, வேண்டாமா என்று யோசிப்பதுண்டு. ஆனால் இந்தச் சந்தர்ப்பத்தில்

அந்த சந்தேகத்துக்கு இடமில்லை. நான் பேசித்தான் தீரவேண்டும் பேசக்கூடாதென்று யாராவது சொன்னாலும் கேட்க மாட்டேன். பேசாமலிருக்க என்னால் முடியாது. முடியவே முடியாது!" என்ற பீடிகையுடன் ஆரம்பித்தார்.

"ஹிந்து சமூகத்தில் எங்களுக்குச் செய்கிற கொடுமை இவ்வளவு அவ்வளவு அல்ல. ஆனாலும் காந்திஜி, ராஜாஜி போன்றவர்கள் எங்களுக்குக் கைகொடுப்பார்கள் என்று நம்பி நாங்கள் ஹிந்துக்களாக இருந்துகொண்டிருந்தோம். எங்கள் நம்பிக்கை வீண் போகவில்லை. பூனா ஒப்பந்தம் கையெழுத்து ஆனவுடனே காந்திஜி ஒரு ஹரிஜனப் பெண் கையினாலே பழ ரஸம் வாங்கிச் சாப்பிட்டு உண்ணாவிரதத்தை நிறுத்தினார். பூனா ஒப்பந்தம் நடந்த காலத்தில் நான் அங்கிருந்தேன். அரை மணி நேரத்துக்கு ஒரு தடவை 'காந்திஜியின் உயிர் மங்கிக் கொண்டிருக்கிறது! இன்னும் உங்கள் பேச்சு முடியவில்லையா? என்று ஸ்ரீ தேவதாஸ்காந்தி வந்து கேட்பார். ராஜாஜி துடியாய்த் துடிப்பார். டாக்டர் அம்பேத்கரோ பிடி கொடுக்க மாட்டார். இன்னொரு பக்கத்தில் பண்டித மாளவியா வழிக்கு வரமாட்டார். ராஜாஜியின் முழு சாமர்த்தியத்தையும் அந்தச் சந்தர்ப்பத்திலேதான் நான் கண்டேன். அவராலேதான் அம்பேத்கரும் மாளவியாவும் கடைசியில் ஒப்பந்தத்துக்கு இணங்கினார்கள். காந்திஜியும் உயிர் பிழைத்தார். பூனா ஒப்பந்தம் கையெழுத்தானவுடனே, மகாத்மா ராஜாஜியைப் பார்த்து, 'ஒப்பந்தம் கையெழுத்தானது மட்டும் போதாது. சாதி ஹிந்துக்களின் மனம் மாற வேண்டும். இல்லாவிட்டால் நான் உயிர் பிழைத்து என்ன பயன்?' என்று சொன்னார். "'அதற்கு நான் ஆயிற்று, நீங்கள் கவலைப்பட வேண்டாம்!'' என்று ராஜாஜி பதில் சொன்னார். அந்த வார்த்தைகள் என்

காதில் இன்னும் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ராஜாஜி அப்போது சொன்ன வார்த்தை இப்போது நிறைவேறி விட்டது! இராமேசுவரம் கோவிலே திறக்கப்பட்டது என்றால் இனிமேல் தீண்டாமை ஏது?" என்று ஸ்ரீ முனி சாமிப் பிள்ளை ஆர்வத்துடன் சரமாரியாகப் பேசியதுடன், ஹிந்து மதத்தில் தீண்டாமைக்கு ஆதாரம் இல்லை என்பதை நிரூபிக்க சமஸ்கிருத சுலோகங்களையும் எடுத்துச் சொல்லிச் சபையோரைத் திக்கு முக்காட வைத்து விட்டார்.

* * * *

பிறகு மந்திரி கூர்மையா அவர்கள் மிக்க உத்வேகத்துடனும் ஆவேசத்துடனும் ஆங்கிலத்தில் பேசினார்.

"கிறிஸ்துவர்கள் வருஷத்துக்கு மூன்று கோடி ரூபாய் மதமாற்றத்திற்காகச் செலவு செய்கிறார்கள். முஸ்லிம்களோ வேறு முறைகளில் ஹரிஜனங்களை மதம் மாற்றப் பார்க்கிறார்கள் 'முஸ்லிம் மதத்துக்கு வந்தால் எல்லா விதத்திலும் சம உரிமை தருகிறோம்; சமமாக நடத்துகிறோம்' என்று சொல்கிறார்கள். ஆனால் சாதி ஹிந்துக்களாகிய நீங்கள் என்ன செய்தீர்கள்? போகிற வர்கள் எல்லாம் போகட்டும் என்று சும்மா இருந்தீர்கள். அதனுடைய பலன்தான் இன்றைக்கு இந்தியா சின்னா பின்னம் ஆகிறது! இந்தியாவில் இன்றைக்கு முஸ்லிம்கள் பத்துக் கோடிப் பேர் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் வெளி நாடுகளிலிருந்து வந்தவர்களா? பெரும் பாலும் ஹரிஜனங்கள் முஸ்லிம்கள் ஆகியிருக்கிறார்கள். சாதி ஹிந்துக்களின் கொடுமைதான் இதற்குக் காரணம். நல்ல வேளையாக இப்போதாவது சாதி ஹிந்துக்களுக்கு நல்ல உணர்ச்சி வந்து ஹரிஜனங்களுக்குச் சம உரிமை

கொடுக்க முன் வந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படு கிறேன். தீண்டமைப் பேய் செத்து ஒழிந்து நாசமாய்ப் போய் விட்டது. செத்துப் போன தீண்டாமைப் பேயின் சாம்பலைக் கடலில் கரைப்பதற்காகவே நமது பிரதம மந்திரி இராமேஸ்சுவரத்துக்கு வந்திருக்கிறார்!" என்று ஸ்ரீ கூர் மையா சொன்னதும், சபையில் பிரமாதமான கரகோஷம் எழுந்தது. ஜனங்களின் உற்சாகத்தைக் கண்டதும் மந்திரி கூர்மையா அவர்களின் உற்சாகமும் பன் மடங்கு ஆகி விட்டது. "ஹிந்து மதத்தில் தீண்டாமைப் பேய் ஒழிந்து விட்ட படியால், இனிமேல் நான் ஊர் ஊராகச் சென்று ஹிந்து மதப் பிரசாரம் செய்வதற்கே என் வாழ் நாளைச் செலவிடப் போகிறேன்!" என்று சொல்லிச் சபையின் உற்சாகத்தை நூறு மடங்கு ஆக்கிவிட்டார்.

பழனி ஸ்ரீ பாலகிருஷ்ணன் எம். எல். ஏ. ரொம்ப ஹாஸ்யமாகப் பேசக் கூடிய திறமையுள்ளவர் என்று தெரிந்தது. முதலில் அவர் பெரிய நாஸ்திகராக இருந் தாராம். பழனிக் கோவில் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்டபோது பழனி ஆண்டவரின் சந்நிதிக்குப் போனாராம். பழனிஆண்டவரைத் தரிசனம் செய்ததிலி ருந்து அவருக்குத் தெய்வ பக்தி உண்டாகி விட்டதாம்.

பிறகு, ஹரிஜனங்களை சாதி ஹிந்துக்கள் கேவலப் படுத்தி வந்ததற்குச் சில ஹாஸ்யமான உதாரணங்களை ஸ்ரீ பாலகிருஷ்ணன் சொன்னார். 'ராமசாமி,' 'குப்புசாமி,' 'பழனிசாமி' என்று ஹரிஜனங்களுக்குப் பெயர் இருந் தால் சாதி ஹிந்துக்கள் 'சாமி'யை விட்டுவிட்டு 'ராமா!' 'குப்பா!' 'பழனி!' என்றுதான் அழைப்பார்களாம். இதற்காக ஒரு ஹரிஜனர் தனியாகச் 'சாமி' என்று மட்டும் பெயர் வைத்துக் கொண்டாராம். அவரை 'அடே சாமியான்!' என்று அழைத்தார்களாம். இதை ஸ்ரீ பால

கிருஷ்ணன் சொன்னபோது சபையோர் சிரித்தார்கள். "நீங்கள் சிரிக்கிறீர்கள். 'பறையன்' 'பள்ளன்' என்றெல்லாம் எங்களைச் சொல்லும்போது எங்கள் மனது எவ்வளவு புண்படுகிறது தெரியுமா?" என்று சொல்லி விட்டு ஸ்ரீ பாலகிருஷ்ண சாமி சோக ரசத்துடன் பேச்சை முடித்தார்.

(ஸ்ரீ பாலகிருஷ்ணன் அவர்களுக்கு இனி மேலாவது 'சாமி' விஷயமான மனக்குறை இருக்கக்கூடாது என்பதற்காகவே, 'பாலகிருஷ்ண சாமி' என்று எழுதியிருப்பதை அவர் கவனிக்கக் கோருகிறேன்.)

* * * *

பிரதம மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் பேச ஆரம்பித்ததும் சபையில் நிசப்தம் நிலவியது.

"சட்டசபைத் தலைவர் ஒரு விஷயத்தை என் கவனத்திற்குக் கொண்டு வந்தார். அதாவது கோவிலுக்குள் ஹரிஜனங்களை ஒரு நாள் விட்டுப் விட்டுப் பின்னர் புண்யாவாசனம் செய்வதாகச் சொன்னார். அதைக் கேட்டு நான் மிகவும் வருந்துகிறேன். கோவிலைத் திறந்து விட்ட பிறகு புண்யாவாசனம் செய்வது சட்ட விரோதம். அப்படி யாராவது செய்தால் கடுமையான தண்டனைக்குள்ளாவார்கள். இனிமேல் கோவில்களிலோ மற்றும் பொது இடங்களிலோ ஹரிஜனங்களை வரக்கூடாது என்று சொல்கிறவர்களுக்குத் தண்டனை கிடைக்கும். ஆனால் தண்டனைக்குப் பயந்து மட்டும் ஹரிஜனங்களுக்கு உரிமை கொடுங்கள் என்று நான் சொல்லவில்லை. சமூகத்தில் ஏற்பட்டுவிட்ட மூட வழக்கத்தை ஒழிக்கவே சட்ட சபையில் சட்டம் செய்திருக்கிறோம். நீங்கள் வோட்டுக் கொடுத்து அனுப்பியவர்கள் நாங்கள். உங்களுடைய மந்திரி சபைதான் இப்பொழுது நடைபெறுகிறது. ஆகை

யால் நாங்கள் செய்யும் சட்டங்களை நீங்கள் செய்த தாகவே பாவித்து அதன்படி நடக்க வேண்டும். இல்லை யெனில் உங்களை நீங்களே அவமதித்துக் கொண்டவர் களாவீர்கள்.

"தேசத்தில் பொதுவாக ஒழுக்கமும் நாணயமும் குறைந்து வருவதைப் பார்க்க எனக்கு மிகவும் வருத்தமா யிருக்கிறது. தரும உணர்ச்சி குன்றி வருகிறது. சமூகத் துக்கும் தேசத்துக்கும் இது ரொம்பவும் அபாயம். வியா பாரிகள் கள்ள மார்க்கெட் வியாபாரம் செய்கிறார்கள். அதைக் கண்டு பிடிக்க முயன்றால், அதிகாரிகளும் உடந் தையாக இருப்பதாய்த் தெரிகிறது. அதிகாரிகளையும் சேர்த்துப் பிடித்து விடலாமென்று பார்த்தால், பொது ஜனங்களே அவரவர்களின் சுயநலத்துக்காக மேற்படி குற்றங்களுக்கு உடந்தையாக இருக்கிறார்கள். இந்நிலை யில் எப்படி நாடு முன்னேற்ற மடையும்? இந்தப் பிரசித்தி பெற்ற இராமேசுவரம் கோவிலில் ஹரிஜனங்களுக்கு சுவாமி தரிசன உரிமை அளித்தது பற்றி மிகவும் மகிழ்ச்சி யடைகிறேன். ஆனால் நாங்கள் அப்பால் போனவுடன் புண்யாவாசனம் செய்து விடாதீர்கள்!" என்று பிரதம மந்திரி கம்பீரமாகவும் கண்டிப்புடனும் பேசி வந்த தைச் சபையோர் மிகவும் சிரத்தையுடன் கேட்டார்கள். அன்று பிரத மந்திரியின் பேச்சு, தேசத்தின் க்ஷேமத்திலும் முன்னேற்றத்திலும் அவருக்கு எவ்வளவு கவலை இருந்தது என்பதைத் தெளிவாக்கியது.

இடையிடையே, சம்ஸ்கிருத சுலோகங்களையும் திரு மூலரின் திருமந்திரப்பாடல்களையும் பிரதம மந்திரி எடுத்துச் சொல்லி ஹிந்து மதத்தின் உண்மைத் தத்து வங்களை விளக்கினார்.

கடைசியில் "இன்று தமிழ் நாட்டில் ஆலயப் பிரவேச இயக்கம் வெற்றிகரமாக நடந்ததற்குக் காரணம் ராஜாஜி

யின் தொண்டுதான். அதை நாம் ஒருநாளும் மறக்க முடியாது" என்று கூறிவிட்டுப் பலத்த கர கோஷங்களுக்கிடையில் அமர்ந்தார்.

* * * *

இன்னும் பேசுவதற்குக் கல்கி ஆசிரியரும் ஸ்ரீ சின்ன அண்ணுமலையும் (அதாவது அடியேன்தான்) பாக்கி யிருந்தோம். "பிரதம மந்திரி இவ்வளவு கம்பீரமாக எல்லா விஷயங்களையும் பேசிவிட்ட பிறகு நாம் என்ன பேச இருக்கிறது? வேண்டாம்!" என்று கல்கி சொல்லிப் பார்த்தார். ஆனால் அதை யார் கேட்கிருர்கள்? அக்கிராசனம் வகித்த ஸ்ரீ பாலசுப்ரமணியம் எழுந்து "நேரம் ரொம்ப ஆகிவிட்டது. ஆனபோதிலும் கல்கி ஆசிரியரை ஐந்து நிமிஷம் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்!" என்று சொன்னதிலேயே சபையில் பெரிய கலவரம் உண்டாகிவிட்டது. "ஐந்து நிமிஷமா? அது பொதுஜன அபிப்பிராயத்துக்கு விரோதம். ஒரு மணி நேரமாவது பேச வேண்டும்" என்ற கூக்குரல்கள் சபையின் நாலாபுறத்திலிருந்தும் எழுந்தன.

இதற்கிடையில் கல்கி ஆசிரியர் எழுந்தார், "இந்தக் கூட்டத்தின் தலைவர் சொன்னபடி நான் ஐந்து நிமிஷம் பேசப் போவதில்லை. நாலே முக்கால் நிமிஷந்தான் பேசுவேன்!" என்று கல்கி ஆரம்பத்தில் போட்ட போடே சபையைக் கலகலக்கச் செய்து விட்டது.

"பறையன் பள்ளன் என்று கூறும்போது தங்களுடைய மனம் புண்படுவதாக ஸ்ரீ பாலகிருஷ்ணன் சொன்னர். ஆனல் சாக்ஷாத் பரமசிவனையே ஒரு சமயம் பறையன் என்று சிலர் சொன்னர்கள். சோமயாஜு என்னும் சிவபக்தர் ஒரு யாகம் செய்தார். அந்த யாகத்துக்குச் சிவபெருமானே நேரில் வந்து அவிர்ப்பாகம் பெற்றுக்

கொள்ள வேண்டும் என்று பிரார்த்தித்தார். சிவபெருமான் 'அப்பனே! அப்படியே வருகிறேன். ஆனால் நான் வரும்போது நீ தூங்கிவிடாதே!' என்று சொன்னார். பரமசிவனே வரப்போகிறார் என்று அறிந்த சாஸ்திரிகளும் தீக்ஷிதர்களும் வேதமந்திரங்களைப் பலமாகக் கோஷித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு வெட்டியான் பறை கொட்டிக் கொண்டும், நாலு வேட்டை நாய்களைக் கூட்டிக் கொண்டும் அங்கே வந்தான். அவனைப் பார்த்ததும், 'பாவி, பறையா! சண்டாளா! போ! போ! தூரப் போ!' என்று எல்லாரும் கத்தினார்கள். 'ஏன் ஐயா, கூச்சல் போடுகிறீர்கள்? போகச் சொன்னால் போய் விடுகிறேன்!' என்று சொல்லிவிட்டு வெட்டியான் போய் விட்டான். பரமசிவன் வரவேயில்லை. பிராமணர்கள் கோபித்துக்கொண்டு சோமயாஜியையும் திட்டிவிட்டுப் போய்ச் சேர்ந்தார்கள். சோமயாஜி கோயிலுக்குப் போய்ப் பரமசிவன் பாதத்தில் முட்டிக்கொண்டு உயிரை விடப்போனார். பரமசிவன், 'அப்பனே! என்னை நொந்து என்ன பயன்? நான்தான் வந்தேனே? நாலு வேதங்களும் என்னுடன் நாலு நாய்களைப் போல் வந்தனவே! நான் வரும்போது நீ கண்களை மூடிக்கொண்டு விட்டாய். எவ்வளவோ வேத சாஸ்திரங்கள் படித்திருந்தும், 'எல்லா உயிர்களிலும் நான் இருக்கிறேன்' என்ற உண்மையை நீ அறியாமல் என்னைப் பார்த்துப் 'போ!' என்றாய். நான் திரும்பி வந்துவிட்டேன்!' என்று அருளினார்.

தஞ்சாவூர் ஜில்லாவில் எங்கள் கிராமத்துக்குச் சமீபத்திலுள்ள கிராமத்தில் வருஷந்தோறும் சோமயாஜி நாயனார் உற்சவம் நடக்கிறது. பரமசிவன் வெட்டியான் வேஷத்தில் யாசகசாலைக்கு வருவதும், அங்கிருந்து துரத்தப்படுவதும் அந்த உற்சவத்தில் நடைபெறுகின்றன. இப்படி எத்தனையோ சரித்திரங்கள் நமது நாட்டில் வழங்கி

வருகின்றன. எவ்வளவோ பெரியவர்கள் சாதி வேற்றுமை, தீண்டாமை இவைகளைக் கண்டித்துப் போதனை செய்திருக்கிறார்கள். ஆனால் எல்லாம் இதுவரையில் ஏட்டுச் சுரைக்காயாக இருந்துவந்தது. நமது காலத்தில் காந்தி மகாத்மாவின் ஆத்மசக்தியினால் தீண்டாமை உண்மையாக அழிந்து வருகிறது. ஸ்ரீ சிவசண்முகம் பிள்ளை முருகன் என்றதும் உருகிப் போகிறவர். ஸ்ரீ முனிசாமிப் பிள்ளையை நெற்றியில் விபூதி இல்லாமல் நான் பார்த்ததே கிடையாது. இப்படிப்பட்ட பரம பக்தர்களைக் கோயிலுக்குள்ளே வரக்கூடாது என்று சொன்னால், அப்படிப்பட்ட கோவிலில் நிச்சயமாகச் சுவாமி இருக்கமாட்டார்!'' என்று கல்கி ஆசிரியர் கூறிச் சபையோர் எல்லோரையும் உருக்கி விட்டார்.

கடைசியாகக் கல்கி கூறியதாவது:— "நான் சிறு பையனா யிருந்தபோது இராமேசுவரத்துக்குச் சந்தான பாக்கியத்தைப் பெறுவதற்காகப் பலர் வந்தார்கள். இப்போதெல்லாம் இருக்கிற சந்தானத்துக்குச் சோறு போடுவதே கஷ்டமாயிருப்பதால் அதிகம்பேர் வருவதில்லை. இராமேசுவரத்தின் சரித்திரத்தில் இரண்டு தினங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று ஸ்ரீ ராமபிரான் பாலங் கட்டுவதற்குமுன் இங்கே சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்த தினம். இன்னொன்று, சகல ஹிந்துக்களுக்கும் ஆலய தரிசன உரிமை அளிக்கப்பட்ட இன்றைய தினம். நமது பிரதம மந்திரி ஓமந்தூர் ரெட்டியார் சிறந்த ஆஸ்திகர்; மகாத்மாவின் பக்தர்; முன்னொரு தடவை இந்த இராமேசுவரத்துக்கு அவர் வந்தார். ஆனால் ஆலயத்துக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்யவில்லை. ஹரிஜனங்களை அப்போது ஆலயத்துக்குள் விடாமலிருந்ததுதான் காரணம். சேதுவில் ஸ்நானம் செய்துவிட்டுத் திரும்பிவிட்டார். மகாத்மா காந்தியின்

எல்லாக் கொள்கைகளையும் அவ்வளவு வைராக்யத்துடன் பின்பற்றுகிறவர். அத்தகைய உத்தமருடைய தலைமையில் இந்த வைபவம் நடந்தது நம்முடைய பாக்கியம்!" என்று கல்கி பிரசங்கத்தை முடித்துவிட்டு, "சரியாக நாலே முக்கால் நிமிஷந்தானே ஆயிற்று?" என்று சொல்லிக் கொண்டே அமர்ந்தார். அப்போது ஏற்பட்ட கரகோஷ அமர்க்களத்தில் நிமிஷக் கணக்கை யார் கவனித்தார்கள்?

* * * *

பிறகு அடியேனுடைய கதா காலட்சேபம் ஆரம்பமாயிற்று. "ஓட்டடா! ஓட்டடா!" என்ற பாட்டை நான் தொடங்கியதும், ஏற்கெனவே ஓடப் போவதாகச் சொல்லிவிட்ட வெள்ளைக்காரர்களைத்தான் ஓட்டச் சொல்கிறேன் என்று நினைத்துச் சபையோர் சந்தோஷப்பட்டார்கள். பிறகு, "திட்டடா!" என்றதும் சபையிலிருந்த அஹிம்சை வாதிகள் கொஞ்சம் திகைத்தார்கள். "தீண்டல் என்ற தீமையைத் திட்டடா! என்றதும் அனைவரும் மூக்கில் விரல்வைத்து அதிசயப்பட்டார்கள். பிறகு "சங்கநாதம் கேட்குது!" என்று நான் பாடியதும், "எங்கே கேட்குது?" என்று அங்கு மிங்கும் பார்த்தார்கள். பாட்டுக்குப் பிறகு அடியேன் பேசினேன். என்ன பேசினேன் என்பதைப்பற்றி இங்கே விஸ்தரிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் கூட்டம் முடிந்த பிறகு நடந்ததைமட்டும் செல்லிவைக்கிறேன். பேச்சு என்றால் அன்றைக்கு நான் பேசியதுதான் பேச்சு என்று எல்லாரும் என்னைப் பாராட்டினார்கள்! அவர்களுக்கு நான், "ஆமாம்; வாயிலிருந்து வருவது பேச்சு; மூக்கிலிருந்து வருவது மூச்சு; இரண்டும் நின்றால் போச்சு!" என்றேன். இப்படியாக, "ஆகாச வாணம் போன இடத்தைக் காணோம்" என்பதைப்போல் என் பேச்சும் முடிந்தது.

* * *

*

கடைசியாக வந்தனோபசாரம் சொல்ல ஸ்ரீ சோமநாதன் செட்டியார் அவர்கள் எழுந்தார். வந்தவர்களுக்கெல்லாம் வந்தனம் சொல்லிய பிறபாடு, ஸ்ரீ ராமநாத ஸ்வாமிக்கும் தம்முடைய விசேஷ வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டார்!

அகில உலக ரயில்வே மகாநாட்டுக்காக ஸ்ரீ சோமநாதஞ் செட்டியார் ஆகாய விமானத்தில் பிரயாணப் படுவதாக இருந்தாராம். இந்த ஆலயப் பிரவேசத்தை முன்னிட்டு மேற்படி பிரயாணத்தை நிறுத்தினாராம். அவர் எந்த விமானத்தில் புறப்படுவதாக இருந்தாரோ, அந்த விமானம் நடுவழியில் விழுந்து நொறுங்கிப் பலர் இறந்து போனார்களாம். "ஆகவே, இந்த ஆலயப் பிரவேசத்தினால் நான் உயிர் தப்பிப் பிழைத்தேன்!" என்று சொன்னதும், சபையோர் "ஆஹா! ஆஹா!" என்று சொல்லி ஆரவாரம் செய்தார்கள்.

இப்படியாக இந்தியாவின் தென் கோடியில் உள்ள புண்ய ஸ்தலமான இராமேசுவரத்தில் ஆலயப் பிரவேச வைபவம் பிரமாதமாக நடந்தேறி முடிந்தது! "ஆலயப் பிரவேசம் என்றால் இதுதான் ஆலயப் பிரவேசம்!" என்று சொல்லும்படியாக எல்லாம் நடந்தது. இராமேசுவரம் கோயில் திறந்தபிறபாடு, ஆலயப் பிரவேச இயக்கமே பூரண வெற்றிபெற்று முடிவடைந்தது என்றே சொல்ல வேண்டும். இனிமேல் ஆலயப் பிரவேசம் செய்வதற்குத் தமிழ் நாட்டில் பெரிய ஆலயம் எதுவும் கிடையாது.

ஆகவே, நானும் என்னுடைய கடைசி ஆலயப் பிரவேசக் கட்டுரையைப் பிரமாதமான முறையில் முடிக்க விரும்புகிறேன். கல்கி ஆசிரியர் முன்னொரு தடவை ஒரு கலியாணக் கட்டுரையைப் பின்வருமாறு முடித்திருந்தார்.

"கடைசியாக ஒரு வார்த்தை! மங்களம்!"

அதுவே என் கடைசி ஆலயப் பிரவேசக் கட்டுரையின் முடிவாகவும் இருக்கட்டும்.

"மங்களம்!!!"

காணக் கண் கோடி வேண்டும்

டாக்டர் அருணாசலம் அவர்களுக்கு தமிழ் மக்களின் சார்பாக எனது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். டாக்டர் அருணாசலம் மட்டும் அன்று காலை ரஸிகமணி டி. கே. சி. அவர்களுக்கு உடல் நிலை சரியில்லை என்று சொல்லியிருந்தால் நான் இந்தக் கட்டுரையை எழுதவேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது. அத்துடன் வங்காளத்தில் தமிழ்த் தாய்க்கு ஒரு சிம்மாசனமும் அமைத்திருக்க முடியாது. கல்கத்தா தமிழர்களின் குதூகலத்தையும் கண்டு அனுபவித்திருக்க முடியாது. மேற்கு வங்காளத்திற்கு ராஜாஜி கவர்னரான கண் கொள்ளாக் காட்சியையும் பார்த்திருக்க இயலாது.

நல்லவேளை; மகாராஜன் டாக்டர் அருணாசலம் ஸ்ரீ டி. கே. சி. யைச் சோதித்துவிட்டு, "உடல் நிலை சரியாகத்தான் இருக்கிறது; நீங்கள் ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்யலாம்" என்று சொன்னார். எனவே டி. கே. சியும், கல்கி ஆசிரியரும் நானும் மீனம்பாக்கம் ஆகாய விமான நிலையத்துக்குச் சென்றோம்.

இப்பொழுதெல்லாம் டி. கே. சியும் கல்கியும் நீரிலோ, நிலத்திலோ, வானத்திலோ எப்படிச் சென்றாலும் அடியேனும் உடன் செல்வது வழக்கமாகிவிட்டது! அன்று விமானம் புறப்படு முன்பாகக் கல்கி ஆசிரியர். என்னைப் பார்த்து, "நீங்கள் இதற்கு முன்பு விமானத்தில்

பிரயாணம் செய்ததுண்டா?'' என்று ஒரு கேள்வி கேட்டார். "ஆமாம், செய்ததுண்டு'' என்று பதில் சொன்னேன். "எப்பொழுது?'' என்று மேலும் கேட்டார். "நேற்று மாலை'' என்றேன். "நேற்று மாலையா? இதென்ன அதிசயம்! நேற்று மாலைதான் கபாலி கோபுர நிதிக்காக ஸ்ரீமதி எம். எஸ். கச்சேரி செய்தபோது என்னுடன் இருந்தீர்களே, அப்புறம் எப்படி ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்திருக்க முடியும்?'' என்று ஆச்சரியத்துடன் வினவினார். "ஆமாம்; அதைத்தான் நானும் சொல்லுகிறேன்; கச்சேரியில் தோடி ராகம் என்னை ஆகாயத்துக்கே தூக்கிக்கொண்டு போய்விட்டது. ஆகையால் நேற்று மாலையே நான் ஆகாயத்தில் பிரயாணம் செய்யத் தொடங்கிவிட்டேன்'' என்றேன். மேலும், "நம்ப அண்ணாச்சி ஒருவர் ஏற்கெனவே ஆகாயத்தில் போய்ப் பழக்கப்பட்டவர் தான்'' என்றேன். "அது யாரையா உங்கள் அண்ணாச்சி ஆகாயத்தில் பிரயாணம் செய்தவர்?'' என்று அதிசயத்துடன் கேட்டார் கல்கி. "இது தெரியாதா உங்களுக்கு? நம்ப அனுமார் அண்ணாச்சிதான்! இலங்கைக்கு அவர் விமான மில்லாமல் ஆகாயத்தில் பிரயாணம் செய்தவரா யிற்றே?'' என்று நான் கூறியதும் கல்கி ஆசிரியர், "சரி; முன்னால் நடவுங்கள்'' என்றார்.

மூவரும் விமானத்தில் ஏறினோம். விமானத்தில் ஏறி ஆசனத்தில் உட்கார்ந்ததும், ஆசனத்தில் பொருத்தி யிருந்த 'பெல்ட்'டைக் கட்டிக்கொள்ளும்படி பணிவிடைப் பெண்ணாக இருந்தவர் சொன்னார். அப்படியே இடுப்பைச் சுற்றிக் கட்டிக்கொண்டேன். பின்னர் காதில் சத்தம் கேளாதபடி வைத்து அடைத்துக்கொள்ள பஞ்சும் கொடுத்தார். அதைப் பெற்றுக்கொண்டதும் எனக்கு

நமது சங்கீத சபைகளின் ஞாபகமே வந்தது. இந்த மாதிரி ஏற்பாடுகளை நமது சங்கீத சபைக் காரியதரிசிகளும் மேற்கொண்டால் வெகு நன்றாக இருக்குமல்லவா?

கச்சேரி கேட்க வருகிறவர்கள் வித்வான் நன்றாகப் பாடவில்லை என்று எழுந்து போய்விடாமல் ஒவ்வொரு ஆசனத்திலும் 'பெல்ட்' போட்டு ரஸிகர்களைக் கட்டிவிட்டால் எவ்வளவு ஜோராக இருக்கும்? ஆனால் ஆகாய விமானத்தில் கொடுக்கிறதுபோல பஞ்சு மட்டும் ரஸிகர்களுக்குக் கொடுத்துவிடக் கூடாதல்லவா? இப்படி நான் சிந்தனையில் ஆழ்ந்திருந்தபோது, விமானம் தரையிலே வெகு வேகமாக ஓடி மெதுவாக மேலே கிளம்பியது. மேலே செல்லச் செல்ல நான் என் வயிற்றைக் கீழே வைத்துவிட்டு வந்ததாகத் தெரிந்தது. உடனே எங்களுக்குப் பணிவிடைப் பெண்ணாக வந்த விமானத் தாதியிடம் மேற்படி விஷயத்தைச் சொல்லலாமென்று வாயெடுத்தேன். ஆனால் வாயெடுப்பதில் பிரயோஜனமில்லை என்று தெரிந்தது. ஏனெனில் எல்லோர் காதிலும் பஞ்சு வைத்து அடைக்கப்பட்டிருந்தது. எனவே சமிக்ஞையின் மூலம் தெரியப்படுத்தலாம் என்றெண்ணிக் கையைத் தூக்கினேன். ஆனால், உடனே கையையும் கீழே போட்டுவிட்டேன். ஏனெனில் ஏற்கெனவே இது சம்பந்தமாக நான் ஒரு கதையைக் கேள்விப்பட்டிருந்தேன். அது அப்போது ஞாபகத்துக்கு வந்துவிட்டது.

ஒருவர் புதிதாக ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்தார். அவருக்குத் தலை சுற்ற ஆரம்பித்துவிட்டது. உடனே வாயால் கத்திப் பார்த்தார். ஒருவருக்கும் ஒன்றும் கேட்கவில்லை. ஆகையால் கையால் தலை சுற்றுகிறது என்பதற்கு ஆள்காட்டி விரலைச் சுழற்றி சமிக்ஞை காண்பித்தார். உடனே விமான டிரைவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். 'அடடா, இவர் ஒருவராவது

தம்மைக் கர்ணம்போடும்படி சொல்கிறாரே, என்ற ஆனந்தத்துடன் விமானத்தைக் கர்ணம்போட்டுக் காண்பித்தார்! அதன் காரணமாக மேற்படி பிரயாணிக்கு மிகவும் ஆபத்தான நிலைமை ஏற்பட்டுவிட்டது. இந்தக் கதை எனக்கு ஞாபகம் வந்ததும் சட்டென்று எடுத்த கையைக் கீழே போட்டுவிட்டேன். அதற்குள் விமானம் வெகு தூரம் வந்துவிட்டது. பின்னர் போகப் போக வயிற்றை மீனம்பாக்கத்தில் வைத்துவிட்டு வரவில்லை என்றும் வயிறு இருக்கவேண்டிய இடத்தில்தான் இருக்கிறது என்றும் தெரிய வந்தது.

விமானம் விசாகப் பட்டணத்தில் போய் இறங்கியது. அங்கு எங்களுடைய சாப்பாட்டை முடித்துக் கொண்டதும், மறுபடியும் கிளம்பி, சரியாக 3-30 மணிக்கு 'டம் டம்' விமான நிலையத்துக்குப் போய்ச் சேர்ந்தது. (கல்கத்தா நேரப்படி அப்போது மணி நாலரை.)

'டம் டம்' கல்கத்தாவிலிருந்து சுமார் 20 மைல் தூரத்திலிருக்கிறது. கல்கத்தாவிலிருந்து டம் டம் நிலையத்துக்கு வரும் வழியைக் கலகப் பிரதேசம் என்று சொன்னார்கள். ஆகையால் யாரும் அந்தப் பக்கம் போவதற்கு அஞ்சுவார்களாம். ஆனால் விமான நிலயத்தைச் சேர்ந்த மோட்டார் என்றால் கலகக்காரர்கள் ஒன்றும் செய்யமாட்டார்களாம். காரணம் அதில் முஸ்லிம் தலைவர்களும் போகக்கூடும், ஹிந்து தலைவர்களும் போகக்கூடுமல்லவா? ஆகையால், தன் படை, மாற்றான் படை தெரியாமல் ஏதாவது செய்துவிடக் கூடாதென்று கலகக்காரர்கள் ரொம்பவும் நியாய புத்தியுடன் நடந்து கொள்ளுவார்களாம்! அதனால் நாங்கள் விமான நிலயத்தின் காரிலேயே செல்வதுதான் நலம் என்று கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்தாரும் மற்றுமுள்ள கல்கத்தா

பிரமுகர்களும் அபிப்பிராயப்பட்டார்கள். அவர்கள் யோசனைப் படியே டம் டம் நிலையத்திலிருந்து ஒரு வித சந்தடியும் செய்யாமல் புறப்பட்டுச் சென்றோம். நமது 'ஹிந்து' பத்திரிகையின் கல்கத்தா கிளைக் காரியால யத்தில் எங்களுக்கு பிரமாத வரவேற்பு நடைபெற்றது. கல்கத்தாவிலுள்ள பிரபல பத்திரிகைகளான "அமிர்த பஜார்" "ஸ்டேட்ஸ்மென்" "ஹிந்துஸ்தான் ஸ்டாண்டர்ட்" முதலியவற்றின் பிரதிநிதிகள் பலர் போட்டோகிராபர்களுடன் வந்து படங்கள் எடுத்து அமர்க்களப் படுத்திவிட்டார்கள். டி. கே. சி., கல்கி முதலியவர்களுடன் பேசித் தங்கள் பத்திரிகைகளுக்கு விஷயங்கள் சேகரித்துக் கொண்டார்கள். என்னை ஒருவரும் 'ஏன்' என்று கூடக் கேட்கவில்லை. ஆனால் ஒரே ஒரு ஆசாமி மட்டும் என் அருகில் வந்து என் பெயரை விசாரித்தார்.

"என் பெயரைச் சொன்னால் அது தங்களுக்குப் புரியாது. ஆகையால் வார்த்தை வார்த்தையாகச் சொல்லு கிறேன், எழுதிக் கொள்ளுங்கள்" என்றேன். அதுவும் சரிதான் என்று சொல்லி அவர் எழுதிக் கொண்டார். என் பெயரை அவர் தம்முடைய நோட்டுப் புத்தகத்தில் எழுதிக் கொண்டதற்காக அவருக்கு என்னுடைய நன்றியறிதலைக் காட்டும் பொருட்டு தட்டிலிருந்த வடை ஒன்றை எடுத்து அவருக்கு இனாமாகக் கொடுத்தேன்!

பின்னர், பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சீதாபதி அவர்களுடைய காரில், நாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாகைக்குச் சென்றோம். எங்கள் கார் கல்கத்தாவின் ஒரு பகுதியான பாலிகஞ்சிலுள்ள ஒரு சிறு அழகிய பங்களாவின் முன்போய் நின்றது. அந்தப் பங்களாவின் முகப்பில் "வி. என். ராஜன் ஐ. சி. எஸ்." என்ற பெயர் பொறிக்கப் பட்டிருந்தது. இதென்ன

கூத்து? ஐ. சி. எஸ். காரர் வீட்டிற்கு வந்துவிட்டோமே என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் என் திகைப்பு வெகு நேரம் வரை நீடிக்கவில்லை. ஸ்ரீ ராஜனும் ஸ்ரீமதி ராஜனும் எங்களை வரவேற்று உபசரித்துக் குதூகலப் பட்டதைக் கண்டவுடன், 'ஓகோ! இந்த ஐ. சி. எஸ். காரர் ஒரு மாதிரி போலிருக்கிறது' என்று ஊகித்து மகிழ்ந்தேன். ஸ்ரீ ராஜன் அவர்கள் சென்ற பதினைந்து வருஷங்களாக வங்காளத்திலே உத்தியோகத்திலிருக்கிறார். வங்காளத்தில் சென்னை மாகாணத்தைச் சேர்ந்த ஐ. சி. எஸ். காரர்கள் ஆறு பேர் இருக்கிறார்கள். அவர்களில் நமது ராஜனும் ஒருவர். நேதாஜி வங்காளத்தில் ஒரு கோர்ட்டில் ஆஜராவதாகச் சொல்லிவிட்டுச் சொந்த ஜாமீன் பேரில் வெளியில் வந்து, இந்தியாவை விட்டு மறைந்து போனதாகக் கேள்விப்பட்டோமல்லவா? அப்போது மேற்படி கோர்ட்டில் மாஜிஸ்ட்ரேட் பதவி வகித்து நேதாஜியை ஜாமீனில் விட்டவர் இந்த ராஜன் தான் என்றும் தெரிந்து கொண்டேன். குழந்தையுள்ளம் படைத்தவராகவும், குதூகலமே உருவெடுத்தவராகவும் காணப்பட்டார் ராஜன். அவருடைய மனைவியார் ஸ்ரீமதி ஜயா ராஜனோ பதிக்கேற்ற சதியாக விளங்கினார்.

ஸ்ரீ ராஜன் வீட்டில் இட்டிலியும் சட்னியும் கிடைத்தது! சென்னையில் காலை 9-30 மணிக்கு இட்டிலி சாப்பிட்டுவிட்டு, வழியில் விசாகப்பட்டினத்தில் இறங்கி மறுபடியும் இட்டிலி சாப்பிட்டுவிட்டு, மாலை ஐந்து மணிக்குக் கல்கத்தாவிலும் இட்டிலி சாப்பிட்டதால் சென்னையிலிருந்து 1000 மைலுக்கப்பாலுள்ள கல்கத்தாவிற்கு வந்திருக்கிறோம் என்ற உணர்ச்சியே உண்டாகவில்லை. பாரதி தமிழ்ச் சங்கத்துத் தலைவர் ஸ்ரீ சீதாபதி, உபதலைவர் ஸ்ரீ கிருஷ்ணன், காரியதரிசி தியாகராஜன் முதலியவர்களும் மற்றும் சங்கத்தின் அங்கத்தினர்கள்

பலரும் வந்து எங்கள் மூவரையும் கவனிக்கத் தொடங்கி விட்டார்கள். அவ்வளவுதான்! கல கல வென்று பேச்சும் சிரிப்பும் ஆரம்பமாகிவிட்டன. பேச்சின் இடையே கீழ் வரும் விஷயமும் சொல்லப்பட்டது.

கல்கத்தாவில் அரசாங்கத்தார் ரொம்பவும் அதிக மாகப் பணம் செலவு செய்து வெளி நாட்டு நிபுணர்கள் பலரை வரவழைத்து ஒரு பாலம் கட்டும்படி செய்தார் களாம். மேற்படி நிபுணர்களும் இராப்பகலாக உழைத்து லட்சக் கணக்கில் பணத்தைச் செலவு செய்து பாலம் கட்டி முடித்தார்களாம். ஆனால், என்ன அதிசயத்தைச் சொல்ல! கட்டிய பாலத்துக்கு அடியில் எட்டிப்பார்த்த போது நதியைக் காணவில்லையாம்! நதி வேறு எங்கோ ஓடிக் கொண்டிருந்ததாம். ஆகையால் பிறகு அதற்கு வேறு பணம் செலவு செய்து நதியைப் பாலத்திற்குக் கீழே கொண்டு வந்தார்களாம்! மேற்படி கதையை நமது வி. என். ராஜன் சொல்லியபோது எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். பிறகு வங்காளிகளின் பழக்க வழக்கங்களைப் பற்றி ஒருவர் சொன்னார். கல்யாணம் என்றால் நாம் முதலில் சுபகரமாக மஞ்சள் என்றுதானே எழுதுகிறோம்? ஆனால், வங்காளிகள் 'மீன்' என்று தான் எழுதுவார்களாம. மீன் என்றால் வங்காளிகளுக்கு உயிர். இரும்பு வளையலைத்தான் மாங்கல்யமாக உபயோகப் படுத்துவார்களாம். கலியாணமான வங்காளிப் பெண் வகிடு எடுத்துக் குங்குமம் இட்டுக்கொள்ளுகிறாள் என்ற பேச்சுக்கு இடையில் மேற்கு வங்காளம் கிழக்கு வங்காளம் பற்றிய பேச்சும் வந்தது. "கிழக்கு வங்காளத்தில்தான் சோளம், கோதுமை முதலியவை விளைகிறது" என்று சீதாபதி சொன்னார். "அது சரிதான்; அவற்றை அரைக்க வேண்டிய இயந்திரங்களெல்லாம் மேற்கு

வங்காளத்திலல்லவா இருக்கின்றன?" என்று ஒரு பெரிய போடாகப் போட்டார் நண்பர் வி. டி. சுவாமி!

ஸ்ரீ வி. டி. சுவாமி அசகாயசூரர். (சூரர் என்று சொன்னால் சுப்பிரமணியரிடம் தோற்றவர் என்றுதான் அர்த்தம். நான் ஒருவன் சுப்பிரமணியராக இருப்பதனால் அவரைச் சூரர் என்று சொல்லுவதுதான் மிகவும் பொருத்தமாகும்!)

ஆசாமி எமகாதகப் பேர்வழி; கல்கத்தாவையே இவர் ஒரு சமயம் விலை பேசினாலும் நாம் அதிசயப்படுவதற்கில்லை! அவருடன்தான் நாங்கள் கல்கத்தாவைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று நண்பர்கள் வற்புறுத்தினார்கள். ஏனெனில், அவர் ஒருவர்தான் தைரியமாக முஸ்லிம்கள் வாழும் பிரதேசத்திற்குள் போய்ப் பத்திரமாகத் திரும்பி வரக்கூடிய சாமர்த்தியமுடையவர் என்று சொன்னார்கள். ஆகையால் அவருடனேயே நாங்கள் கல்கத்தாவைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்.

சுவாமி கார் ஓட்டிய வேகத்தைப் பார்த்ததும் எனக்கு உடனே மிட்லண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனியின் ஞாபகம் வந்தது. உடனே கல்கி ஆசிரியரைப் பார்த்து, "ஏன் ஸார், மிட்லண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனியைப் பற்றித் தங்களுக்குத் தெரியுமா?" என்றேன். "தெரியும்" என்றார். "நல்ல சரியான கம்பெனிதானே?" என்று சந்தேகத்துடன் கேட்டேன். "ஏன், அதிலென்ன சந்தேகம்? ரொம்ப ரொம்ப சரியான கம்பெனி" என்று அவர் உறுதியுடன் சொன்னார். "அப்படியானால் ரொம்ப ரொம்ப சரிதான்" என்றேன் நான். "ஏன் இந்தக் கேள்வி?" என்றார் அவர். "வேறொன்றுமில்லை, நமது நண்பர் சுவாமி கார் ஓட்டுகிற வேகத்தைப் பார்க்கும் போது கொஞ்சம் பயம் உண்டாயிற்று. நான் மிட்லண்டு

இன்ஷூரன்ஸ் கம்பெனியில் தான் இன்ஷூர் செய்திருக்கிறேன். ஆகவே, ஒருவேளை நாம் சொர்க்கத்திற்குப் போய் விட்டாலும் இன்ஷூரன்ஸ் கம்பெனி சரியானதாக இருந்தால் நமது குடும்பத்திற்கு கவலையில்லாமலிருக்கும் அல்லவா?'' என்றேன். நண்பர் வி. டி. சுவாமி இதைக் கேட்டுச் சிரித்துவிட்டு காரை மேலும் வேகமாகச் செலுத்தினார்!

''உலகத்திலுள்ள மாபெரும் நகரங்களில் கல்கத்தாவும் ஒன்று. கார்கள் எறும்பு சாரிகளைப் போல் தொடர்ந்து ஊர்ந்து கொண்டே இருக்கக் கூடிய நகரம். ஜனத் தொகையோ சுமார் நாற்பது லட்சம். ஆகையால் ஜனங்கள் வீதியில் இறைந்து கொண்டே இருப்பார்கள்'' என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், என்ன அதிசயம்? நாங்கள் சென்றபோது சில வீதிகளில் ஜன நடமாட்டமே இல்லை! வீதி எல்லாம் சூன்யமாகக் கிடந்தன. வீடுகள் பல எரிக்கப்பட்டுக் கிடந்தன. பல சாமான்கள் தெருக்களில் சின்னா பின்னமாகக் கிடந்தன. அநேகமாகக் கடைகள் திறக்கப்படவில்லை. எங்கள் காரோ விர்ரென்று பறந்து சென்றது. அது 'காலாபாக் குண்டாஸ்' என்று சொல்லக் கூடிய முஸ்லிம்கள் வசிக்கும் பிரதேசமென்று நண்பர் சுவாமி சொன்னார். இப்படிச் சில தெருக்கள் சுடுகாடுபோல் காட்சி அளிக்க வேறு சில தெருக்கள் 'கல கல' வென்று கல்கத்தாவாகக் காட்சி அளித்தது. 'அங்கே ஹிந்துக்கள் வசிக்கிறார்கள்' என்று நண்பர் சொன்னார். இப்படியாக ஹிந்துக்கள் முஸ்லிம்கள் வசிக்கும் இடங்களை மாறி மாறிப் பார்த்துக்கொண்டே கல்கத்தா 'காஸ்மாபாலிடன்' கிளப்புக்குப் போய்ச் சேர்ந்தோம். ஸ்ரீ வி. டி. சுவாமி தான் மேற்படி கிளப்புக்குக் காரியதரிசி. அன்று மாலை

'காஸ்மாபாலிடன்' கிளப்பில் எங்களுக்கு ஒரு சிற்றுண்டி விருந்து அளிக்கப்பட்டது.

அன்று இரவு ஒன்பது மணிக்கு பாரதி தமிழ்ச் சங்கத்தில் ஓர் அறிமுகக் கூட்டம் நடத்த வேண்டுமென்று மேற்படி சங்கத்தார் விரும்பினார்கள். அவர்கள் விருப்பப் படியே ஸ்ரீ டி. கே. சி., கல்கியுடன் நானும் போய்ச் சேர்ந் தேன். இரவு ஒன்பது மணிக்குக் கல்கத்தா வீதிகளில் நட மாட எல்லோரும் சற்று யோசிக்கத்தான் செய்வார்களாம். ஆனால், தமிழ் மொழியின் மீதுள்ள ஆசையின் காரண மாக அந்நேரத்திலும் ஆண்களும் பெண்களும் அங்கே கூடியிருந்தது ஆச்சரியமாக இருந்தது! எல்லோருடைய முகத்திலும் மகிழ்ச்சி தாண்டவமாடியது. கூட்டத்தில் உற் சாகம் கரை புரண்டு ஓடியது ஸ்ரீ டி. கே. சியையும் கல்கி ஆசிரியரையும் கண்டவுடன் ஒரே ஆரவாரம் செய்து விட்டார்கள். பாரதி தமிழ்ச் சங்கத்துத் தலைவர் ஸ்ரீ சீதாபதி எங்களை வரவேற்றுப் பேசினார்.

தமிழ்த் தாய் எங்கள் மூவரிடமும் "மைந்தர்களே! 1300 மைல்களுக் கப்பாலுள்ள கல் கத்தாவில் வசிக்கும் தமிழ் மைந்தர்களைப் போய்ப் பார்த்து விட்டு வாருங்கள்" என்று கட்டளை யிட்டார்களாம். அதனால் தான் நாங்கள் அங்கு வந்திருக்கிறோம் என்றார் சீதாபதி. மேலும், பகவான் கீதையில் "சோர்ந்திருக்கும மக்களை உற்சாகப் படுத்து" என்றும் சொல்லியிருக் கிறாராம். ஆகையால் மிகவும் சோர்ந்து போயிருக்கும் கல்கத்தா தமிழர்களை உற்சாகப் படுத்துவதற்காகவும் பகவானால் அனுப்பப் பட்டிருக்கும் மும்மூர்த்திகள் இவர்கள் என்று அறிமுகப் படுத்தினார். அதற்கு ரஸிக மணி டி. கே. சி.. அவர்கள் பதில் சொன்னார்கள்: உலகத்தை மூன்று சக்திகள் ஆளுகின்றன. அவை

மின்சாரம், ஸ்டீல், அன்பு ஆகிய மூன்றும்தான்'' என்றார்! பிறகு, இரவு ஒன்பது மணிக்குக் கூடி எங்களை வர வேற்று உபசரிக்கும்படி செய்தது அன்புதான் என்றும் அன்பிலும் தாயன்பு தான் மிகவும் மேலான தென்றும் பெண்களுக்குத்தான் அதை அறிந்து கொள்ளக் கூடிய சக்தி உண்டென்றும் ஆடவர்களுக்கில்லை என்பதற்காக நாம் வெட்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் கூறினார். அதைப் போலவே, புஷ்பத்தை ஆடவர்கள் அனுபவிப்பதைக் காட்டிலும் பெண்களுக்குத் தான் நன்கு அனுபவிக்கத் தெரியும். ஆகையால் பெண்களுக்கு ஒரு பாட்டுச் சொல்லுகிறேன் என்று கூறிவிட்டு, ஆண்களைப் பார்த்து ''அதற்காக நீங்கள் எல்லாம் கேட்கக் கூடா தென்பதில்லை. தாராளமாகக் கேட்கலாம்'' என்று ரஸிகமணி கூறியபோது வளைக்கரங்கள் கல கலவென்று கரகோஷ ஒலி செய்தன.

சில பெண்கள் கூடி ஒரு குழந்தையைக் கொஞ்சு கிறார்களாம். குழந்தையைப் பார்த்து ஒருவள், "தாய்ப்பூ'' என்றாளாம்; மற்றொருத்தியோ, ''தாமரைப்பூ'' என்றாளாம். இவர்களுக்கு இளைத்தவளா இன்னொருத்தி? "தங்கத்து வீட்டு செண்பகப்பூ'' என்று கூறி அவள் பாட்டை முடித்தாளாம். இப்பொழுது பாட்டை முழுமை யும் பார்ப்போம் என்று கூறிவிட்டு ரஸிகமணி அவர்கள்,

''தாய்ப்பூ, தாமரைப்பூ
தங்கத்து வீட்டுச்
செண்பகப்பூ''

என்பதை எடுத்துச் சொல்லும் போது கூடியிருந்தவர்கள் "ஆகா, தமிழ் பாஷை தான் எப்பேர்ப்பட்ட அற்புதமான பாஷை!'' என்று வியந்தார்கள்! தாயன்பைப் பேசும் போது, கர்ணன் குந்திதேவியிடம், "அம்மா! என் கடைசிக்

காலத்தில் நீ தான் என் தாய் என்பதை உலகறியச் சொல்லுவாயா?" என்று வேண்டிக் கொண்டதை ரஸிக மணி எடுத்துச் சொல்லியபோது எல்லோருடைய உள்ளமும் உருகி விட்டது. இப்படியே விட்டால் எல்லோருடைய உள்ளமும் உருகி ஓட ஆரம்பித்து விடுமே என்று பயந்து சங்கத் தலைவர் என்னைப் பேசும்படி கேட்டுக் கொண்டார். அவ்வளவுதான்; உருகிய உள்ளங்கள் ஸ்டீலைப்போல் கெட்டியாகப் போய்விட்டதாகத் தெரிந்தது!

அப்புறம் கல்கி ஆசிரியர் பேசுவதற்கு ஆரம்பித்தார். கூட்டத்தினர் வெகு ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள். "உங்கள் சங்கத் தலைவர் பகவான் ஏதோ கீதையில் சொல்லியிருப்பதாகச் சொன்னார். பகவான் உங்கள் தலைவருக்கு மட்டும் சொல்லவில்லை. எங்களுக்கும் கொஞ்சம் கொஞ்சம் சொல்லித்தானிருக்கிறார். அதாவது 'இரவு பத்து மணிக்கு மேல் கல்கத்தாவில் பேசாதே!' என்று சொல்லி இருக்கிறார். இப்பொழுது மணி பத்து ஆகப் போகிறது. பகவானுடைய ஆக்ஞையை உத்தேசித்து நானும் என் பேச்சை முடிக்க வேண்டியது தான்" என்றார். "அது சரி; "பகவான் எந்த மணியைச் சொன்னார்? கல்கத்தா மணியையா, சென்னை மணியையா? சென்னை மணி என்றால் இப்போது ஒன்பது தானே ஆகிறது?" என்றேன் நான். "பகவான் சொல்லியிருப்பது அந்தந்த இடத்திலுள்ள மணியைப் பற்றித் தான்" என்று கல்கி ஆசிரியர் பதில் சொன்னார்.

பகவான் கீதையில் சொல்லியிருப்பதை உத்தேசித்து கல்கி ஆசிரியரும் தம் பேச்சைக் கல்கத்தா மணி பத்துக்கே முடித்துக் கொண்டார். அன்று கூட்டம் அத்துடன் முடிந்தது. மறுநாள் காலை 9-30 மணிக்கு சாந்திநிகேதன்

புறப்பட்டுச் செல்லுவதற்கு ஹௌரா ஸ்டேஷன் வந்து சேர்ந்தோம்.

* * *

நாங்கள் மூவரும் ஏன் இந்தப் பிரயாணம் செய்கிறோம் என்பதை நேயர்களுக்குச் சொல்லுவதற்கு இது வரையில் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆகையால் ஹௌராவிலிருந்து சாந்திநிகேதன் செல்வதற்கு இறங்க வேண்டிய போல்பூர் ஸ்டேஷனுக்கு இன்னும் நூறு மைல் தூரம் இருப்பதால் அந்த நேரத்தை வீணாக்காமல் அங்கு போவதற்குள்ளாகச் சொல்லி விடுகிறேன்.

ராஜாஜி அவர்கள் மத்திய சர்க்காரில் கல்வி மந்திரியாகப் பதவி வகித்தபோது ஒரு தடவை சாந்திநிகேதனுக்கு விஜயம் செய்தார். அங்கே சீனம், ஹிந்தி, ஒரியா முதலிய எல்லா பாஷைகளுக்கும் இடமளிக்கப் பட்டிருந்தன. ஆனால் நமது தமிழ்த்தாய்க்கு மட்டும் சிம்மாசனமில்லாத குறையைக் கண்டு மனம் வருந்தினார். உடனே ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி சாந்திநிகேதனில் தமிழ்த்தாய்க்குச் சிம்மாசனம் அமைக்க ஏற்பாடு செய்தார். ராஜா சர் அவர்களும் ராஜாஜியின் விருப்பப்படி மனமுவந்து சாந்திநிகேதனில் தமிழ்ப் புத்தகாலயம் அமைக்க முன் வந்தார். ஸ்ரீ டி. கே. சி அவர்களை நல்ல தமிழ்ப் புத்தகங்களாகத் தேர்ந்தெடுக்கும்படி ராஜா சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். டி. கே. சி யோ அந்தப் பணியை என்னிடம் ஒப்புவித்தார்கள். அடியேன் சுமார் 2500 ரூபாய்க்குத் தமிழில் நல்ல புத்தகங்களாகத் தேர்ந்தெடுத்தேன். மேற்படி புத்தகங்களை சாந்திநிகேதனில் கொண்டு போய் வைத்துவிட்டு வருவதற்கு டி. கே. சி. யும் கல்கி ஆசிரியரும்தான் தகுதியுடையவர்கள் என்று ராஜா சர் அவர்களும் ராஜாஜியும் தீர்மானித்து இருவரையும் அங்கு அனுப்பினார்கள்

என்னை யார் அனுப்பினார்கள் என்று கேட்கிறீர்கள்? என்னை யார் அனுப்ப வேண்டும்? ஒரு வேளை டி.கே.சி.யும் கல்கியும் உலக மகா கவி டாகூரின் உலகப் பிரசித்தி பெற்ற கலா சமுத்திரமான சாந்திநிகேதனை விட்டுத் தமிழ் நாட்டுக்குத் திரும்பாவிட்டால் என்ன செய்வது? தமிழர்கள் மிகவும் ஏங்கிப் போவார்களே என்று தமிழ் மக்களின் சார்பாக அவர்களைத் திருப்பிக் கூட்டிக்கொண்டு வரும் பொறுப்பை என்னை ஏற்றுக்கொள்ளும் படி பகவான் கீதையில் சொல்லியிருந்தார்!

ஆனால், விஷயம் எப்படி முடிந்தது தெரியுமா? என்னைத்தான் அவர்கள் திருப்பிக் கூட்டிக் கொண்டு வரும்படி ஆயிற்று.

போல்பூருக்கு ரயிலில் செல்லும்போது இருபுறமும் எதிர்ப்பட்ட காட்சிகள் எல்லாம் பெரும்பாலும் சோழ நாட்டு மருதநிலக் காட்சிகள் போலவே இருந்தன. கண்ணுக் கெட்டிய தூரம் பசுமையான நெற்பயிர் அடர்ந்த நன்செய் வயல்கள்; இடையிடையே வாய்க்கால்கள்; நீர்த் தேக்கங்கள்; தென்னஞ் சோலைகள்; வாழைத் தோப்புக்கள்; செந்தாழைப் புதர்கள்; இவற்றினிடையே ஓட்டு வீடுகளும் கூரை வீடுகளும் உள்ள கிராமங்கள் காணப்பட்டன. ஒன்றே ஒன்று மட்டும் குறைவாயிருந்தது. அதாவது தமிழ் நாட்டில், முக்கியமாகச் சோழநாட்டில், காணப்படுவதுபோலக் கோயில்கள் மட்டும் இல்லை. ஒரு கோயில் கூடக் காணப்படவில்லை. கோயில், கோபுரம், விமானம், ஸ்தூபி, மண்டபம், அல்லது விழுந்த மண்டபத்தின் தூண்—ஒன்று கூடக் கிடையாது.

"ஏன் கோயில் இல்லை?" என்று நான் கல்கி ஆசிரியரைக் கேட்டேன். "கோயிலில் குடியிருக்க வேண்டிய கடவு

ளுக்கே அதைப் பற்றிக் கவலை இல்லை; நாம் ஏன் கவலைப் படவேண்டும்?'' என்றார் அவர். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று மனிதர்களுக்கும் சொல்லி யிருக்கிறதே!" என்றேன் நான். "அந்தத் தமிழ் மொழி இவ்வளவு தூரம் பிரயாணம் செய்யவில்லை" என்றார் கல்கி.

போல்பூரில் ரயிலை விட்டு இறங்கியவுடன் பிளாட். பாரத்தில் சிரித்த முகமுடையவர்கள் இருவரைக் கண்ட தும் அவர்கள் சென்னை மாகாணத்தைச் சேர்ந்தவர் களாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டோம். விசாரித்துப் பார்த்ததில் அவ்விருவரும் நம்மூர்க்காரர்கள் தான் என்று தெரியவந்தது. ஸ்ரீ பெரு மாளும், ஸ்ரீ வி. ஜி. நாயரும் மற்றும் இரு வங்காளிகளும் எங்களை அன்புடன் வரவேற்றார்கள். ஒரு சிறு காரில் போல்பூரிலிருந்து இரண்டு மைல் தூரத்திலுள்ள சாந்தி நிகேதனத்துக்குச் சென்றோம். அந்த இரண்டு மைல் பிரயாணமும் எங்கள் வாழ்நாளிலேயே மறக்க முடியாத சம்பவமாகும்!

உலகத்தின் கலைகள் யாவும் ஒன்று சேருமிடத்திற்குச் செல்லும் பாதையின் அழகை என்னவென்று சொல் லுவது? 'சடக் சடக்' கென்று கார் பள்ளத்தில் விழுவதும், திடீரென்று மேட்டில் ஏறுவதும், சேறு நாலா திசைகளி லும் எழும்பி எங்கள் மீது வர்ஷிப்பதும் மறக்க முடியாத காட்சியாகும்!

போல்பூர் ஸ்டேஷனி லிருந்து சாந்திநிகேதனம் இரண்டே இரண்டு மைல்தான். இந்த இரண்டு மைல் சாலையைக் காரில் கடக்க அரை மணிக்கு மேலாயிற்று. பெரிய பெரிய குழிகள், குட்டைகள், குளங்கள், ஏரிகள் பாதாளக் கிணறுகள் எல்லாம் அந்தச் சாலையிலேயே

இருந்தன. வங்காளத்தில் அன்று வரை நடந்து கொண்டிருந்த ஜனுப் ஷஹரவர்த்தி சாகிபுவின் நிர்வாகத்தைப்போல் அந்தச் சாலையும் இருந்தது.

ஒரு வழியாக நாங்கள் தங்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'ரத்தன் குடி'லுக்குப் போய்ச் சேர்ந்தோம். 'ரத்தன் குடில்' என்பது ஏதோ சாதாரண குடிசை என்று நேயர்கள் சொற்பமாக எண்ணிவிடக் கூடாது. ரத்தன் குடில் என்பது டாடா குடும்பத்தைச் சேர்ந்த ரத்தன் டாடா பெயரால் கட்டப்பட்டிருக்கும் பெரிய விஸ்தாரமான பங்களா. முக்கிய விருந்தாளிகள் வந்தால் அந்தக் குடிலில்தான் தங்குவார்களாம். எனவே எங்களையும் மேற்படி குடிலில்தான் இறக்கினார்கள்.

மாலை நாலு மணி சுமாருக்கு மகா கவி டாகூருடைய புத்திரரும், பொதுக் காரியதரிசியுமான ஸ்ரீ ரதீந்திர நாத் டாகூர், டி. கே. சி. அவர்களுக்கும் கல்கி ஆசிரியருக்கும் ஒரு சிற்றுண்டி விருந்து அளித்தார். எல்லா முக்கியஸ்தர்களும் மேற்படி விருந்துக்கு விஜயம் செய்திருந்தார்கள். உலகப் பிரசித்தி பெற்ற சித்திரக்காரரான ஸ்ரீ நந்தலால் போஸ், ரவீந்திரநாத டாகூருக்கு அடுத்த படியாக தற்சமயம் சாந்திநிகேதன் காரியங்களை நிர்வகித்து வரும் ஸ்ரீ சித்திமோஹன் சென் முதலியவர்களும் வந்திருந்தார்கள். விருந்து 'ரவீந்திர பவன'த்தில் நடைபெற்றது. ரவீந்திரபவனம் மிகவும் அழகு வாய்ந்த பங்களா. மேற்படி கட்டிடத்துக்குள்ளே சென்றால் குளு குளுவென்றிருக்கிறது. கவி டாகூர் எழுதிய படங்களை எல்லாம் அங்கே தான் மாட்டி வைத்திருக்கிறார்கள். அந்தக் கட்டிடத்துக்குள்ளே அருமையான புத்தகசாலை ஒன்றும் இருக்கிறது. பங்களாவைச் சுற்றி மிகப்பெரிய தோட்டமும் தோட்டத்துக்குள் பூத்துக் குலுங்கும் மரங்களும், செடி

கொடிகளும் மிகவும் ரம்யமான காட்சியாக அமைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட இயற்கைக் காட்சிகள் நிறைந்த இடத்தில் தான் விருந்து நடைபெற்றது. விருந்தில் அநேகம் வங்க தேசப் பலகாரங்களும் தமிழ் நாட்டுப் பலகாரங்களும் பரிமாறப்பட்டன. முதலில் நான் ஒரு குல்லாவை எடுத்துக் கடித்தேன். மேற்படி குல்லா துணியால் செய்யப்பட்டதில்லை. பாலிலே செய்து தேனிலே ஊற வைத்த பட்சணமாகும். தித்திக்கும் தீஞ்சுவை பொருந்திய மேற்படி பண்டத்துக்கு ரஸகுல்லா என்று பெயர். தித்திப்புப் பண்டங்களின் மகாநாட்டுக்குத் தலைவரைத் தேர்ந்தெடுக்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டால் நான் நிச்சயமாக ரஸகுல்லாவைத்தான் தேர்ந்தெடுப்பேன். விருந்து முடிந்தவுடன் ரஸிகமணி டி.கே.சி. தமிழ் நாட்டின் பெருமையைப் பற்றி அங்கு கூடியிருந்தவர்களிடம் சொல்ல ஆரம்பித்தார். அந்தப் பிரசங்கம் ரஸகுல்லாவை விட இனிமையாக இருந்தது.

[இதற்கு மேலே நான் ரஸகுல்லாவைப் பாராட்டி எழுதினால் ரஸக் குறைவு ஏற்படலாம் என்று அதை இத்துடன் விட்டு விடுகிறேன். அளவுக்கு மீறினால் ரஸகுல்லா அமிருதமும் நஞ்சாகு மல்லவா?]

ரஸிகமணி தமிழ் நாட்டின் பண்பாடு, சிற்பம், சித்திரம், நாட்டியம், சங்கீதம், கவிதை முதலியவற்றைப் பற்றி வெகு அழகாக ஆங்கிலத்தில் எடுத்துக் கூறி அங்கு கூடியிருந்தவர்களை ஆச்சரியக் கடலில் மூழ்கடித்தார். அவர்கள் எல்லோரும் டி.கே.சி. யின் புலமையையும் திறமையையும் கண்டு வியந்தார்கள். அத்துடன் டி.கே.சி. யைப் போல் ஒரு ரஸிகர் கிடைப்பது அருமையிலும் அருமை என்று பாராட்டி மகிழ்ந்தார்கள்.

சைவத்திலும் வைணவத்திலும் ஆழ்வார், நாயன்மார்களிடத்தும் மிகவும் ஈடுபாடுடைய சித்திமோஹன் சென் (சித்திபாபு) டி. கே சியிடம் அநேக விஷயங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். பின்னர், நந்தவனத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டோம். கவி டாகூரின் புதல்வர் ரதீந்திரநாத் டாகூருக்குத் தச்சு வேலை என்றால் மிகவும் பிரியமாம். அவர் செய்திருந்த வேலைகளைப் பார்வையிட்டோம். ஸ்ரீ ரதீந்திரரின் வேலைப்பாடு அபாரமாயிருந்தது. ரஸிக மணிக்கு ஒரே ஆனந்தம். இதுதான் கல்வி என்று சொல்லிப் பரவசமடைந்தார். கவி ரவீந்திரநாத் டாகூருக்கு மலர்கள், செடிகள், கொடிகள் என்றால் நிரம்பவும் ஆசை உண்டென்பது பிரசித்தம். சிறு சிறு அழகிய செயற்கைத் தடாகங்கள் ஆங்காங்கே தென்பட்டன. அவற்றைக் கடந்து செல்வதற்காகப் போடப்பட்டிருந்த படிகள் கூட கலை நுணுக்கங்கள் பொருந்தியனவாகக் காணப்பட்டன. கவி டாகூர் வசித்த சிறு பங்களாவைப் பய பக்தியுடன் தரிசித்தோம் அதற்கு அருகில் மகாத்மாஜி வந்தால் தங்குவதற்கென்று பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டுள்ள மண் குடிசை ஒன்று குளுகுளு வென்றிருக்கிறது. கவி டாகூர் சித்திரங்கள் எழுதும் இடம் முதலியவைகளைப் பார்க்கும் போது எங்களுக்கு ஒரு புது மாதிரி உணர்ச்சி உண்டாயிற்று. 'ஆகா! குருதேவர் எப்படி இயற்கையிலே திளைத்து மகிழ்ந்திருக்கிறார்' என்பதை நினைத்து நினைத்து ஆச்சரியமும் அதிசயமும் அடைந்தோம். எல்லாவற்றையும் பார்த்து முடிய இரவு மணி எட்டு ஆகி விட்டது. கொசுவலை இல்லாமல் தூங்குவது கஷ்டம் என்று சொல்லித் தமிழ் நாட்டு நண்பர் ஸ்ரீ பெருமாள் மிகுந்த முயற்சி எடுத்து எங்கள் மூவருக்கும் கொசுவலை கொண்டு வந்து கொடுத்தார்.

இரவு சுமார் பன்னிரண்டு மணிக்கு ரஸிகமணி வெளி வராந்தாவில் உலாவிக் கொண்டிருந்தார்.

"ஏன் தூக்கம் வரவில்லையா?" என்று கேட்டேன்.

"தூங்குவதிருக்கட்டும்; மீன் வலை பார்த்திருக்கிறீர்களா?" என்று பதிலுக்குக் கேட்டார்.

"ஆம்; பார்த்திருக்கிறேன்" என்றேன்.

"அது எதற்கு உபயோகம் தெரியுமா?" என்று மேலும் கேட்டார்.

"மீன் பிடிக்க உதவும்" என்று கூறினேன்.

"அது போலவே என்னுடைய கொசுவலையும் கொசுக்களைப் பிடித்து வைத்துக் கொண்டிருக்கிறது! நான் எப்படித் தூங்குவது?" என்றார். "சரி; அப்படியானால் நடை பயிலுங்கள்" என்று சொல்லிவிட்டு என்னுடைய படுக்கையை எட்டிப் பார்த்தேன். என் துரதிர்ஷ்டத்தை என்ன சொல்ல! என்னுடைய கொசு வலைக்குள் ஒரு கொசுக் கூட இல்லை! நான் மாம்பல வாசியானதால் கொசுக்கடி இல்லாமல் என்றால் நிம்மதியாகத் தூங்க முடியாது. எனவே, மெதுவாக டி. கே. சியை என் வலைக்குள் அனுப்பி விட்டு அவருடைய வலைக்குள் நான் புகுந்து கொண்டேன். உடனே கொசுக்கள் 'ஙொய்' யென்று சுருதி போட ஆனந்த நித்திரையில் ஆழ்ந்தேன்!

(நான் நன்றாக, நிம்மதியாகத் தூங்கும் போதே நேயர்கள் சாந்திநிகேதன் ஸ்தாபித்த வரலாற்றைத் தெரிந்து கொள்ளுவது நலம். பின்னர் நான் எழுந்து விட்டால் வேறு விஷயங்களைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்து விடுவேன்.)

கவியரசருடைய தகப்பனாரின் பெயர் மகரிஷி தேவேந்திர நாத் டாகூர் என்று சொன்னார்கள். அவர்

கல்கத்தாவிலிருந்து, லார்டு சின்ஹா குடும்பத்தினரைப் பார்க்க அடிக்கடி சாந்திநிகேதன் வழியாகச் செல்வது வழக்கமாம். இந்த வழியில் அக்காலத்தில் வழிப்பறிக் கொள்ளை அதிகமாம். ஒரு சமயம் தேவேந்திர நாத் டாகூர் ஒரு சப்தபரணி (சத்திம்) மரத்தின் கீழ் நிஷ்டையில் ஆழ்ந்திருந்தாராம். அப்போது அவரைக் கொள்ளைக்காரர்கள் வந்து சூழ்ந்து கொண்டார்களாம். மேற்படி கொள்ளைக்காரர்கள் மகரிஷியின் தோற்றத்தைக் கண்டு மயங்கி விட்டார்களாம். உடனே அவர் மீது அவர்களுக்கு விசேஷ பக்தி தோன்றி விட்டதாம். பிறகு தேவேந்திர நாத் டாகூர் அடிக்கடி அங்கே வந்து தங்கியதுடன் அந்தக் கொள்ளைக் கூட்டத்தினரையும் நல்வழிப் படுத்தினாராம். அந்த நாளில் அங்கே நாலா திசையிலும் எங்கு நோக்கினும் மரமேயில்லாமல் வெறும் தரையாக இருந்ததாம். அதனால் சூரியன் அஸ்தமனம் ஆகும்போது கடலில் அஸ்தமனமாவது போல வெகு அழகாக இருக்குமாம். ஆகையால் மகரிஷிக்கு மேற்படி இடம் மிகவும் பிடித்து விட்டதாம். இதை அறிந்து அந்த இடத்திற்குச் சொந்தக்காரரான லார்டு சின்ஹா மேற்படி இடத்தை மகரிஷிக்கே அளித்து விட்டாராம்.

மகரிஷியோடு கூட அவருடைய புதல்வர் ரவீந்திர நாத் டாகூரும் அடிக்கடி அந்த இடத்திற்கு வருவதுண்டாம். இயற்கை வாழ்வு வாழ விரும்பிய கவி டாகூருக்கு அந்த இடம் மிகவும் பிடித்துப் போனதில் ஆச்சரியமில்லையல்லவா?

"கலை மூலம் மனிதர்களை மனிதர் அறிய வேண்டும். இதுதான் உலக ஒற்றுமைக்குச் சிறந்த வழி" என்று திடமாக நம்பினார் கவி டாகூர். அதற்காக ஒரு கலாசாலை ஏற்படுத்தவும் விரும்பினார். அதற்குத் தகுந்த

இடம் தம் தகப்பனுர் வாழ்ந்ததும், அவர் சமாதியான இடமுமான சப்தபரணி மரம்தான் என்று முடிவு கட்டினுர். பல வருஷங்களுக்கு முன்னுல் கவி டாகூர் சாந்திநிகேதன் என்ற ஊரைச் சிருஷ்டித்து அதில் 'விசுவ பாரதி' என்ற குரு குலத்தையும் ஏற்படுத்தினுர். விசுவ பாரதி என்முல் 'சர்வ லோக சர்வ கலாசாலை' என்று அர்த்தம்.

மேற்படி கலாசாலைக்கு முதல் மாணவன் யார் தெரியுமா? கவி டாகூரின் மைந்தரான ரதீந்திரநாத் டாகூர் தான்!

இரண்டு மூன்று குடிசைகளுடன் ரவீந்திரநாத் டாகூர் விசுவ பாரதியை ஆரம்பித்தார். கொஞ்ச காலம் வரை ஐந்து மாணவர்களை வைத்துக் கொண்டே குரு குலத்தை நடத்தினுர். இப்பொழுது மேற்படி கலாசாலை வளர்ந்து பெருகி சுமார் 500 மாணவ மாணவிகளைக் கொண்ட விசுவ பாரதியாகத் திகழ்கிறது. மொத்தம் 1500 பேர் அங்கே வசித்து வருகிருர்கள்.

முதல் வகுப்பிலிருந்து பி. ஏ., வகுப்பு வரையில் வாசிக்கிருர்கள். மேற்படி கலாசாலை ஆரம்பமாகி முப்பது வருஷ காலம் வரையில் 'டிகிரி' படிப்பு இல்லாமல்தான் இருந்து வந்தது. பின்னர் 1930-க்குப் பிறகு பலருடைய பலவந்தம் காரணமாக கவி டாகூர் தமது கலாசாலையைக் கல்கத்தா யூனிவர்ஸிடியுடன் சேர்த்தாராம். ஆயினும் 'விசுவ பாரதி' 'டிப்ளொமா' ஒன்றும் கொடுப்பதுண்டு. இந்த டிப்ளொமாவுக்கு அந்நிய நாடுகளில் நல்ல செல்வாக்குண்டாம். விசுவ பாரதி டிப்ளொமா மட்டும் வாங்கிக் கொண்டு பலர் ஜெர்மன் யூனிவர்ஸிடிக்குச் சென்று அங்கே டாக்டராகி யிருக்கிருர்களாம்.

'ஸில்வன் லெவி' என்ற பெரிய மேதாவியான பிரெஞ்சுக்காரரும், 'வின்டர் நிக்ஸ்' என்ற ஜெர்மன் அறிஞரும், 'டுச்சி' என்ற இத்தாலி தேசத்துப் புலவரும் விசுவ பாரதியில் ஆசிரியர்களாக இருந்து சேவை செய்து வந்தவர்கள் தானும். உலகத்தில் பலருக்குப் பலவிதத்தில் நன்மையைக் கொடுக்கும் காந்தியடிகளால் இந்த விசுவ பாரதிக்கும் நன்மை உண்டாகி யிருக்கிறது. காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்ததும், அநேக மாணவர்கள் காலேஜுகளையும், யூனிவர்ஸிடிகளையும், பகிஷ்கரித்து விசுவ பாரதி கலாசாலையுடன் ஒத்துழைத்தார்களாம். அதாவது, நம் நாட்டுக் கல்வி முறை சொல்லிக் கொடுக்கிறார்கள் என்று தெரிந்து பலர் இதில் போய்ச் சேர்ந்து கொண்டார்கள். அது முதல்தான் விசுவ பாரதிக்கு யோகம் பிறக்க ஆரம்பித்தது.

அதோ மணிச் சத்தம் கேட்கிறது. சாலை மணி ஆறு ஆகிவிட்டது. எழுந்திருந்து பிரார்த்தனைக்குப் போக வேண்டியதுதான். மாணவர்களும், மாணவிகளும் அதிகாலையிலேயே ஸ்நானம் செய்துவிட்டுப் புதிய உடை உடுத்திக்கொண்டு வரிசை வரிசையாக வந்து நின்றார்கள். கொஞ்ச நேரத்திற்குள் எங்கிருந்தோ அத்தனை பேரும் வந்து கூடிவிட்டனர். பிரார்த்தனை, வாசக சாலை மண்டபத்துக்கு முன்னால் நடைபெற்றது. ஓர் அழகிய மேடை மீது மூன்று பெண்களும், மூன்று ஆண்களும் நின்றார்கள். சாந்திநிகேதனில் பெண்களுக்குத்தான் முதல் ஸ்தானம் என்பது போல அம்மூன்று பெண்மணிகளும் முன்னால் வந்து நின்றுகொண்டார்கள்!

மகாகவி டாகூருடைய பிரார்த்தனைப் பாடல்கள் சிலவற்றைப் பாடினார்கள். பிறகு அதை எல்லோரும் பின்னோடு சேர்ந்து கோஷ்டியாகப் பாடினார்கள். சுமார்

பதினைந்து நிமிஷ நேரத்துக்குப் பின்னர் கூட்டம் அமைதியுடன் கலைந்தது! அன்று காப்பி சாப்பிட்டானதும் விசுவபாரதியிலுள்ள கலாபவனத்தைப் பார்வையிடுவதெனத் தீர்மானித்தோம். ஆனல் காப்பிக்கு எங்கே செல்வது? எங்கும் 'டீ' பேச்சாகவே இருந்தது. நல்ல வேளையாக நம்மூர் பிராமணர் ஒருவர் காப்பி ஓட்டல் வைத்திருப்பதாக அறிந்து உடனே அங்கு விரைந்து சென்றோம். அங்கே ருசியான தோசையும் மணமான காப்பியும் கிடைத்தது! காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு கலாபவனத்தைப் பார்வையிடச் சென்றோம். கலாபவனம் தான் விசுவபாரதியில் முக்கிய ஸ்தானம் வகிக்கும் இடம். அங்கே சித்திரக் கலையும், சிற்பக் கலையும் கற்பிக்கப் படுகின்றன. மேற்படி கலாபவனத்துக்குப் பிரபல சித்திரக்காரர் நந்தலால் போஸ் தலைமை ஆசிரியராக இருக்கிறார். நந்தலால் போஸ் கல்கத்தாவிற்கு அருகிலுள்ள ஹூக்ளி ஜில்லாவைச் சேர்ந்தவராம். கல்கத்தா சித்திரக் கலாசாலையில் இவர் மாணவராகச் சேர்ந்த பொழுது ஈ. பி. ஹாவல் என்பவர் மேற்படி கலாசாலைக்குத் தலைவராக இருந்தாராம். அவருக்கு இந்திய சித்திரக் கலையில் அபார ஆர்வம் உண்டாம். மேற்படி ஈ. பி. ஹாவல் சென்னை சித்திரக் கலாசாலையிலும் தலைவராக இருந்தவர்தானும். அவர் கவி டாகூரின் சகோதரரான அவநேந்த்ர நாத் டாகூரின் கைத்திறமையைக் கண்டு வியந்து அவரைக் கல்கத்தா சித்திர கலாசாலைக்கு வைஸ் பிரின்ஸிபாலாக நியமித்தாராம். அவர்கள் இருவரின் கீழ் நந்தபாபு சித்திரம் கற்றுக் கொண்டாராம். பின்னர் கவி டாகூர் வீட்டில் நடைபெற்ற "விசித்ரா" என்ற சித்திரக் கலை சபைக்கு நந்தபாபுவைத் தலைவராக ஆக்கினர்களாம். இதற்குப்பிறகு கவி டாகூருடன் சேர்ந்து 1919-ல் இந்தக் கலாபவனத்தை

ஸ்தாபித்தாராம். 1919-லிருந்து இன்று வரை சித்திரம், சிற்பம் இவற்றுக்கே தம் வாழ்நாள் பூராவும் செலவழித்து வருகிறார். கவி டாகூருக்கு நந்தபாபு என்றால் உயிராம். கலா பவனத்தில் பஞ்சாப், ஒரிஸா, மராட்டி, குஜராத்தி, சிந்தி முதலிய நாடுகளிலிருந்தும் மாணவ மாணவிகள் பலர் வந்து சித்திரம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். நந்தபாபுவின் மேலுள்ள பிரியத்தால் மாணவ மாணவிகள் எல்லோரும் அவரை "மாஸ்டர் மகாஷை" என்று அழைக்கிறார்கள்.

மாஸ்டர் மகாஷையிடம் மகாத்மாஜிக்கு அபார பிரியமாம். லக்னௌ காங்கிரஸில் அகில இந்திய சித்திரக் காட்சியை நடத்துவதற்கு மகாத்மாஜி மாஸ்டர் மகாஷையைத்தான் தேர்ந்தெடுத்தார்.

பெய்ஸ்பூர் காங்கிரஸ் தான் முதன் முதலில் கிராமத்தில் நடைபெற்றது கிராமத்தில் கிடைத்த பொருள்களைக் கொண்டே நிர்மாணம் செய்ய வேண்டுமானால் அதற்கு நந்தபாபு தான் தகுதியானவர் என்று மகாத்மாஜி கருதினார். மகாத்மாஜியின் அழைப்புக் கிணங்கி நந்தபாபு தம்முடைய சிஷ்யர்கள் இருவருடன் சென்று மேற்படி காங்கிரஸை வெற்றிகரமாக நடத்தி வைத்தார். தித்தால் என்ற ஊரில் நந்தபாபு மகாத்மாஜியுடன் வசித்தபோதுதான் ராஜாஜி சந்திப்பு ஏற்பட்டதாம். அதிலிருந்து நந்தபாபுவுக்கு ராஜாஜியிடம் அபார அன்பு ஏற்பட்டு விட்டது என்பது தெரிய வந்தது. 'ராஜாஜி வெறும் அரசியல் தலைவர் மட்டுமல்ல. கலைகளின் நுட்பம் தெரிந்த மகா நிபுணர்' என்பது நந்தபாபுவின் திடமான அபிப்பிராயம்.

* * *

கலாபவனத்தில் மொத்தம் எட்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். எல்லா ஆசிரியர்களும் நந்தபாபுவிடம்

பயிற்சி பெற்றவர்கள். நந்தபாபுவிற்குத் துணை ஆசிரியராக இருப்பவர் ஒரு தமிழர். இவருடைய பெயர் பெருமாள். இவர் மதுரை ஜில்லாவைச் சேர்ந்த உத்தமபாளையத்துக்கு அருகில் பிறந்தவர். முன்பு 'பாரதி' பத்திரிகையை நடத்தி வந்த நாராயணசாமி செட்டியாரின் உதவியைக் கொண்டு சாந்திநிகேதனில் படிக்கச் சென்று அங்கேயே ஆசிரியராகி நல்ல பெயருடனும் செல்வாக்குடனும் இருக்கிறார். இனிய சுபாவமும், சிரித்த முகமும், சேவை செய்யும் மனப்பான்மையும் உடையவர். விசுவபாரதியில் "தமிழ் பவனம்" வேண்டுமென்று வெகு காலமாசுக் கனவு கண்டு கொண்டிருந்தவர்.

கலாபவனம் ஆசிரியர்களுக்குச் சாப்பாடு, ஜாகை முதலியவற்றுடன் அறுபது ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். மாணவர்கள் நான்கு வருஷம் கலாபவனத்தில் படிக்கவேண்டும். கலாபவனத்தில் சித்திரம் கற்பிக்கும் முறையைக் கண்டு கல்கி ஆசிரியரும் டி. கே. சி. யும் மிகவும் வியந்தார்கள். ஆசிரியர்கள் மாணவர்களைக் கூட்டிக் கொண்டு போய் மரம், செடி, கொடி, மாடு முதலியவைகளை நேரில் காண்பித்து அவற்றைத் தத்ரூபமாக எழுதச் சொல்லுகிறார்கள். மாணவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடனும் குதூகலத்துடனும் இயற்கையுடன் இயைந்து விளையாட்டாகவே எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளுகிறார்கள்.

கலாபவனத்தின் முகப்பின் ஒரு பக்கத்தில் மாணவர்களால் செய்யப்பட்டிருந்த பிரம்மாண்டமான புத்தர் சிலை எங்கள் மனதை வெகுவாகக் கவர்ந்து விட்டது. வழுவழுவென்றில்லாமல் சிலை சொர சொரப்பாக இருந்த போதிலும் அதில் ஒரு தனி அழகு இருப்பதைக் கண்டு மிகவும் மகிழ்ந்தோம். கலாபவனத்தில் உலகத்திலுள்ள

சித்திர சம்பந்தமான புத்தகங்கள் எவ்வளவு உண்டோ அவ்வளவும் வைக்கப் பட்டிருக்கின்றன. அர்ச்சுனனை ஒரு சிங்கம் போல் சித்திரித்து அந்தச் சிங்க அர்ச்சுனன் படுத்திருப்பது போல நந்தபாபு எழுதி யிருந்த அபூர்வமான சித்திர வேலைப்பாடு கலாபவனத் துக்கே மிகவும் எடுப்பாக இருந்தது. அத்துடன் கலா பவனத்தில் அமரேந்திரநாத டாகூர் படங்கள் நிறைய இருக்கின்றன. ஒரு ஜப்பானிய சித்திரக்காரர் மிக அழகாகத் தீட்டிய, 'ஜப்பானியக் கவிஞர்,' 'ஜப்பானிய வேதாந்தி' முதலிய சித்திரங்கள் பார்ப்போர் மனதைப் பரவசப் படுத்துகின்றன. கலாபவனத்திற்கு அடுத்தாற் போலிருக்கும் மாணவர்கள் தங்கும் மண் குடிசைச் சுவர்களைச் சுற்றி அருமையான சிற்ப வேலைகளைச் செய்திருக்கிருர்கள். மேற்படி சிற்பங்களில் தார் பூசப் பட்டிருப்பதால் சிற்பங்கள் கற்சிலைகள் போல் காட்சி அளிக்கின்றன!

பார்வதி, பரமசிவன் விவாக சம்பந்தமான சிற்பங்களை ரசிகமணி ஸ்ரீ டி. கே. சி வெகு ஆர்வத்துடன் கவனித் தார்கள். மணமகள் கோலத்திலிருக்கும் பார்வதி வெட்கத்துடனிருப்பதையும், பரமசிவன் மாப்பிள்ளை முறுக்குடன் காட்சி அளிப்பதையும் உறவினர்கள் மகிழ்ச்சியையும் பேரிகைக்காரர்களின் உற்சாகத்தையும் பார்த்து அதிசயப்பட்டோம். சுவரின் பின் புறத்தில் எகிப்து சித்திரம், மொகஞ்சதாரோ மாடு முதலியவை செய்யப்பட்டிருந்தன. ஒரு பெண்ணை மரம் போன்ற பாவனையில் சிலை செய்து வைத்திருந்தது ரொம்பவும் ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவு அதிசயங்களையும் ஆச்சரியத்தையும் ஒருவாறு நந்தபாபுவிடம் ரசிகமணி பாராட்டிச் சொல்லி விட்டுத் தமிழ் நாட்டிலுள்ள

சிற்பங்கள், சித்திரங்கள் முதலியவைகளைப் பற்றியும் விரிவாகச் சொன்னார்கள். நந்தபாபுவிடம் விடை பெற்றுக்கொண்டு சீன பவனத்தைச் சேர்ந்த ஸ்ரீ வி. ஜி. நாயருடன் ஸ்ரீநிகேதனுக்குப் புறப்பட்டோம்.

ஸ்ரீநிகேதன் சாந்தி நிகேதனிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது. ஸ்ரீநிகேதன் என்றால் லக்ஷ்மி வாழும் இடம் என்று பொருள். அதாவது சாந்தி நிகேதனுக்குப் பொருள் கொடுக்கும் இடமாக ஸ்ரீநிகேதனைக் கவி டாகூர் அமைத்தார். ஸ்ரீநிகேதனில் நெசவு, தச்சுவேலை, மண் வேலை, விவசாயம் முதலிய எல்லாத் தொழில்களும் நடை பெறுகின்றன. அங்கு ஒரு தபால் காரியாலயம் வைத்திய சாலை, கல்வி இலாகா எல்லாம் இருக்கின்றன நியூஜிலாந்துக் காரரான ஸ்ரீ ஷார்ட் துரை தான் விவசாயப் பண்ணையை மேற் பார்வை செய்துகொண்டிருக்கிறார். மாட்டுப் பண்ணை கோழிப் பண்ணை முதலிய பண்ணைகளும் வெகு செழிப்பாக இருக்கின்றன. (இவைகளுக்கு மத்தியில் தமிழ்ப் பண்ணை யையும் நான் கொண்டு போயிருந்தேன்!) எல்லாவற் றையும் பார்வையிட்டு முடிந்ததும் கண்காட்சி அறைக்குச் சென்றோம் மேற்படி காட்சி சாலையில் "என்ன பொருள் வாங்கலாம்?" என்று கல்கி ஆசிரியர் யோசித்தார். நானும் யோசித்தேன். அதாவது நான் சாமான் வாங்க யோசிக்க வில்லை! கல்கி ஆசிரியர் வாங்கப்போகும் சாமானை எதில் கொண்டு போவது என்பதைப் பற்றியே யோசித்தேன். நான் யோசித்தபடியே அவர் இரு பெரிய பிரம்பு ஆசனங்களை விலை பேசி வாங்கியும் விட்டார். வாங்கு வதைப் பெரிய சாமானாக வாங்குவோமென்று வாங்கிவிட் டார் போலிருக்கிறது. நல்லவேளை! எங்களுக்கு விசுவ பாரதியில் பெரிய பஸ் ஒன்றைக் கொடுத்திருந்தபடியால் நாங்கள் வாங்கிய சாமான்களைச் சுலபமாக ஏற்றிக் கொண்டு வர முடிந்தது. சாந்திநிகேதனுக்குத் திரும்பி

வரும்போது ராஜாஜி மத்ய சர்க்காரில் கல்வி மந்திரிப் பதவி வகித்த போது சர்க்காரிலிருந்து நன்கொடையாக அளித்த நாலு லட்சத்து எழுபத்தையாயிரம் ரூபாயைக் கொண்டு சார்ஜெண்ட் திட்டப்படிப்புக்காகக் கட்டிடம் கட்டிக்கொண்டிருப்பதைக் கண்டோம்.

இவ்வளவையும் பார்த்து முடிப்பதற்குள் எங்களுக்கு அதிகக் களைப்பு ஏற்பட்டு விட்டது. அதை உத்தேசித்து ஓய்வெடுத்துக்கொண்டோம்.

ஆறு மணிக்கு விசுவ பாரதியில் மணி ஓசை கேட்டது. டி. கே. சி. பிரசங்கம் நடைபெறப் போவதையே அம்மணியோசை எல்லோருக்கும் அறிவித்தது. கொஞ்சங் கொஞ்சமாக மாணவ மாணவிகள் ஆசிரியர்கள் எல்லோரும் வந்து கூடினார்கள். சரியாக ஆறரை மணிக்கு சித்திபாபு தலைமையில் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மேஜை நாற்காலி ஒன்றும் கிடையாது. முதலில் நமது தென்னாட்டைச் சேர்ந்த ஸ்ரீமதி விஜயம்மாள் 'அத் தருணம் அபயம்' என்ற பாடலைப் பாடினார்.

அதற்குப் பிறகு தலைமை வகித்த சித்திபாபு தமிழ் நாட்டின் பெருமைகளையும், ஆழ்வார் நாயன்மார்களின் பக்தியையும் தமிழ் நாட்டினர் கலைகளைக் கொண்டாடும் விசேஷத்தையும் எடுத்துச் சொல்லி ரஸிகமணி டி. கே. சி. யும் கல்கியும் விசுவபாரதிக்கு விஜயம் செய்திருப்பதற்குத் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார். ரஸிகமணியும், கல்கியும் பரதநாட்டியம் கவிதை, சங்கீதம். தமிழ் பாஷை முதலியவற்றுக்குச் செய்திருக்கும் சேவையைக் கேள்விப்பட்டிருப்பதாகவும் அதை அறிந்ததுமுதல் தமக்கு இவர்கள் இருவரிடமும் அபார பிரியம் உண்டாகியிருப்பதாகவும் தெரிவித்துக்கொண்டு ரஸிகமணி டி. கே. சி. யைப் பேசும்படி கேட்டுக்கொண்டார் டி. கே. சி யோ

அங்கு தாடியில்லாத டாகூராகவே காணப்பட்டார். ரஸிக மணிக்கு ஒரே உற்சாகம்! ஆங்கிலத்தில் தான் பேசினார். கூட்டத்தினர் மிகவும் நிசப்தமாக இருந்து பிரசங்கத்தைக் கேட்டனர். அருமையான ஹால். டி. கே. சி. பேச்சின் நாதம் கணீர் கணீர் என்று கேட்டது. "தமிழ் நாட்டுக்கு மூன்று பெருமை உண்டு. ஒன்று பரதநாட்டியம், இரண்டாவது சங்கீதம், மூன்றாவது கவிதை. பரதநாட்டியத்தை எந்த நாட்டவரும் கண்ணால் பார்த்து அனுபவிக்கலாம். சங்கீதத்தைக் கூடக் கேட்டுக்கொண்டு மற்ற நாட்டார் அனுபவிக்க முயற்சிக்கலாம். ஆனால் கவிதை இருக்கிறதே, அதை அனுபவிக்கத் தமிழனாகப் பிறந்தால் ஒழிய வேறு வழியில்லை! உலகத்தில் எந்த பாஷைக்கும் இல்லாத பெருமை தமிழ் பாஷைக்குத்தான் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியது இன்று எழுதியது போலவே இருக்கும் பாஷை தமிழ் ஒன்று தான். கலை என்று எடுத்துக் கொண்டால் தமிழ் நாட்டில்தான் கற்றுக் கொள்ள வேண்டும். கலையை தெய்வமாக மதித்துக் காப்பாற்றியவன் தமிழன் தான். வங்காளம் எங்களுக்கு எத்தனையோ உதவி செய்திருக்கிறது. ஆயினும் நாங்கள் தான் கலையைக் கற்றுக் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்" என்றும், கவி டாகூரைத் தான் திருநெல்வேலியிலே சந்தித்ததாகவும், சென்ற முப்பது ஆண்டுகளாக டாகூருடைய பாடல்களைப் பலருக்கு எடுத்துச் சொல்லி அனுபவிப்பதாகவும் அப்பேர்ப்பட்ட குருதேவருடைய சர்வகலாசாலைக்குத் தாம் விஜயம் செய்திருப்பது பற்றிப் பெருமைப் படுவதாகவும் உணர்ச்சி ததும்பும்படி பேசி முடித்தார். உடனே நான் பலத்த கரகோஷம் செய்தேன்! ஆனால் பக்கத்திலிருந்த ஒருவராவது கரகோஷம் செய்யவேயில்லை. எல்லோரும் கல்லாய்ச் சமைந்தது போலிருந்தார்கள்! அதனால் நான் கையை

ஒரு தட்டுத் தட்டியதும், வேருெருவரும் தட்டாதது கண்டு தட்டிய சத்தத்தை அப்படியே அமுக்கித் தேய்த்துக் கொண்டேன். 'இதென்ன இந்தக் கூட்டத்தினர் சுத்த மோசம் போலிருக்கிறது. கை தட்டத்தான் தெரியவில்லை; என்னைப்போல் ஒருவன் தட்டிக் காண்பித்த பிறகு கூடச் சேர்ந்து தட்டக்கூடவா தெரியாது!' என்று வருத்தப் பட்டேன். இதற்குள் கல்கியைப் பேசும்படிக் கேட்டுக் கொண்டார்கள். அவரோ ரஸிகமணி பேசியபிறகு தான் பேசவேண்டியதில்லை என்று மறுத்துவிட்டார். (ஏன் பேசவில்லை தெரியுமா? கல்கி வங்காளியாகப் பிறக்காத தனுல்தான்! தமிழனுகப் பிறந்ததிஞல்தானே சென்ற இருபது வருஷ காலமாகத் தமிழ் மக்களைச் சிரிக்க வைத்துக் கொண்டிருக்கிருர். வங்காளிகளுக்கு கல்கியைப் போன்ற ஆசிரியர் கிட்டவில்லை; கிடைக்கவில்லை போலும். அதனுல் அவர்களுக்கு அதிகம் சிரிக்கவும் தெரியவில்லை!)

பின்னர், சித்திபாபுவின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது மௌனமாகக் கலைந்தது

கூட்டம் முடிந்ததும் நண்பர் பெருமாளை அணுகி, "இதென்ன ஐயா, இவர்கள் சுத்த மோசமாக இருக் கிருர்கள். கை தட்டக் கூடத் தெரியவில்லையே?" என்று கேட்டேன். அவர், "உங்களுக்கு விஷயம் தெரியாது போலிருக்கிறது. இங்கு கூட்டத்தினர் கைதட்டக் கூடா தென்பது குருதேவரின் கட்டளை. 'நன்ருக இருக்கிறது' என்று சொல்லவேண்டுமானுல் 'சாது சாது' என்று தான் சொல்லவேண்டும்" என்ருர். "சரி; "சாது சாது" என்று சொல்லிவிட்டு நானும் வெகு சாதுவாக மாணவர்கள் சாப் பிடும் பொது இடத்திற்குச் சாப்பிடச் சென்றேன். வெகு சுத்தமாகப் பள பள வென்று விளக்கி முகம் பார்க்கக் கூடியது போன்ற பித்தளைத் தட்டுகள் வரிசையாக

வைக்கப் பட்டிருந்தன. மாணவர்களும் மாணவிகளும் ஒன்ருகச் சாப்பிடும் காட்சி வெகு அழகாக இருந்தது. ஆனல் வங்காளிகளுடைய சாப்பாட்டை நாம் இரண்டு தினங்களுக்குச் சேர்ந்தாற் போல் சாப்பிட முடியாது. கிராம்புகளையும் பட்டைகளையும் போட்டு அமர்க்களப் படுத்தி விடுகிருர்கள். தயிர் மட்டும் விசுவபாரதி தயிர் போல உலகில் எங்கும் கிடைக்காது என்று சொல்லலாம்.

அவ்வளவு கெட்டியான தயிர். சில சமயம் கோடாலி போட்டு வெட்ட வேண்டி வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

சாப்பாட்டை முடித்துக் கொண்டு நிம்மதியாகத் தூங்கப் போனேம். மறுநாள் விடிந்தால் கவி டாகூருடைய சிராத்த தினம். அன்று தான் ராஜா சர் அண்ணுமலைச் செட்டியார் அவர்களுடைய தமிழ் வாசகசாலை திறக்கப்பட வேண்டிய தினம். விருக்ஷாரோபணம் என்னும் செடி நடும் விழா. இவற்றை எல்லாம் காணக் கண் கோடி வேண்டும் என்று சொன்னுர்கள். ஆகையால் இருக்கிற இரண்டு கண்களையாவது நன்ருகத் தூங்கினுல்தானே சரியாக வைத்துக் கொள்ளலாம் என்று நிம்மதியாகத் தூங்கப் போனேன்.

மறுநாள் காலையில் விசுவபாரதியின் முகப்பில் கட்டப் பட்டுள்ள ஒரு சிறிய, அழகிய, அற்புத வேலைப்பாடமைந்த மண்டபத்தில் கவி டாகூரின் சிராத்தம் நடை பெற்றது. டாகூருடைய பாடல்களை வெகு உருக்கமாகப் பாடியபோது மண்டபத்திற்கு வெளியில் வானம் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தது. மண்டபத்தினுள்ளும் பலர் டாகூரை நினைத்துக் கண்ணீர் உகுத்தார்கள். இச் சமயதித்ல் திடீரென்று ஒரு பெண்

மணி அடியற்ற மரம் போலக் கீழே 'படார்' என்று விழுந்து விட்டாள்.

மண்டபத்தின் ஒரு மூலையில் ஏதோ சிறிது 'பரபரப்பு'க் காணப் பட்டது. அடுத்த நிமிஷம் அது அடங்கி விட்டது. பாட்டு, பேச்சு ஒன்றும் தடைப்பட வில்லை. எல்லாம் முடிந்து கூட்டம் கலைந்து கொண்டிருந்த போது, இடையில் அந்த மூலையில் ஏற்பட்ட பரபரப்புக்கு என்ன காரணம் என்று கேட்டேன். "வேறொன்றுமில்லை. ஆச்சாரிய க்ஷிதி மோகன் ஸென் பேச்சைக் கேட்டு ஒரு பெண்மணி உணர்ச்சி மிகுதியினால் மூர்ச்சையாகிவிட்டார். பக்கத்திலிருந்தவர்கள் அவரை எடுத்துச் சென்று ஆசுவாசப் படுத்தி மூர்ச்சை தெளிவித்தார்கள். வேறொன்றும் பெரிய விசேஷமில்லை!" என்று சொன்னார்கள். நமக்கு வங்காளி பாஷை தெரியாதது நல்லதாய்ப் போயிற்று என்று முதலில் எண்ணிச் சந்தோஷப்பட்டு விட்டு, இம்மாதிரி மூர்ச்சை யடையும் சம்பவம் நம் ஊரில் இம்மாதிரி கூட்டத்தில் நடந்திருந்தால் எப்படி ஆகியிருக்கும் என்று எண்ணிப் பார்த்தேன். எப்படி ஆகியிருக்கும்? ஏகக் கூச்சலும் குழப்பமும் ஆகியிருக்கும். எல்லாரும் எழுந்து நின்று கூட்டங் கூடி நெருக்குவார்கள். "இரையாதே!" என்று நூறு பேரும், 'கூட்டத்தை விலக்கு!" என்று இருநூறு பேரும், "தண்ணீர் கொண்டு வா!" என்று முந்நூறு பேரும் கத்திக்கொண்டே யிருப்பார்கள். ஒருவரும் நகரமாட்டார்கள். மூர்ச்சையாகி விழுந்த பெண்மணி தானே மனது வைத்து மூர்ச்சை தெளிந்து எழுந்தால்தான் உண்டு. பிரார்த்தனைக் கூட்டம் அத்துடன் முடிந்து போயிருக்கும்! இங்கே என்னடா என்றால் காதும் காதும் வைத்தாற்போல், ஓசைப்படாமல் ஒருவருக்கும் சொல்லாமல் மூர்ச்சையடைந்த பெண்மணியை

அப்புறப்படுத்தி விட்டார்கள். பிரார்த்தனை நடந்து கொண்டே இருந்தது.

சித்தி பாபுதான் சிரார்த்த காரியத்தை நடத்தி வைத்தார். டாகூரின் பாடல்களுக்கு வியாக்கியானம் கூறினர். ரொம்பவும் ஆவேசமாகப் பேசினர். பின்னர் ஆண்களும் பெண்களும் ஒரே கூட்டமாகப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு ஊர்வலம் போல் நடந்தார்கள். எல்லோரும் மஞ்சள் உடை தரித்திருந்ததனுல் அதிகாலை வெளிச்சம் அதற்கு அதிகச் சோபையைக் கொடுத்தது. வாத்தியங்கள் சகிதம் மேற்படி கோஷ்டியார் பாடிக் கொண்டே குருதேவர் கவி டாகூரும், அவரது தகப்பனர் தேவேந்திரநாத் டாகூரும் அடக்கம் செய்யப்பட்டிருக்கும் சப்தபரணி மரத்தைச் சுற்றி வந்து வணக்கம் செலுத்தினர்கள். பின்னர் மகாகவி டாகூர் கடைசியாக வாழ்ந்து வந்த இல்லத்திற்குச் சென்று அதன் முன்னல் நின்று பாட்டு பாடினர்கள். அத்துடன் மேற்படி கோஷ்டியார் கலைந்து விட்டனர். பிறகு பலர் டாகூர் இருந்த வீட்டிற் சென்று தரையைத் தொட்டு வணக்கம் செய்தார்கள். நானும் ஏன் சும்மாயிருக்க வேண்டுமென்று உள்ளே போய் டாகூர் உட்கார்ந்திருந்ததாகச் சொல்லப்பட்ட சோபாவில் உட்கார்ந்தும், பிறகு அதைத் தொட்டுக் கும்பிட்டு விட்டும் வந்தேன். அதற்குள் மறுபடியும் மணி ஓசை கேட்க ஆரம்பித்து விட்டது. சரி; 'வாசக சாலை' திறப்பு விழாவுக்குத்தான் என்று தெரிந்து போயிற்று. அவசரம் அவசரமாகப் போனேன். மாணவர்களும் மாணவிகளும் சரம் சரமாக வந்தார்கள். எல்லோரும் வந்து கூடி விட்டார்கள். புத்தகங்களை அடுக்கி வைத்திருந்த முறையே வெகு அற்புதமாக இருந்தது. ஆயிரத்துச் சொச்சம் தமிழ்ப் புத்தகங்கள். எல்லாம் தமிழ்ப் பண்ணை மூலம் தேர்ந்தெடுத்து அனுப்பிய

புத்தகங்கள்! ஜம்மென்று வங்காள பூமியில் விசுவ பாரதியில் கப்பீரமாக வீற்றிருந்தன!

புத்தகங்களுக் கெல்லாம் பூமாலை சூட்டியிருந்தார்கள். மேடை முழுதும் மலர் வகைகள் நிரம்பிக் கிடந்தன. டி. கே. சியும் கல்கியும் வந்தவுடன் சங்கம் முழங்கியது! பேரிகைகள் சப்தித்தன! கவி டாகூரின் புதல்வர் ரதீந்திர நாத் டாகூர் இருவரையும் வரவேற்று மேடைக்குக் கூட்டி வந்தார். ரஸிகமணியும், கல்கியும் மேடையில் அமர்ந் திருந்த கோலம் மாப்பிள்ளைக் கோலமாகவே இருந்தது. இருவருக்கும் ஒரு மாணவி நெற்றியில் மங்கள திலகமிட்டு வரவேற்பளித்தாள். எதிரில் பூரண கும்பம். பக்கங்களில் ஐந்தடுக்குத் தீபம். எங்கும் 'கமகம' வென்று சாம்பிராணி வாசனை. சரஸ்வதி தேவிக்குப் பூஜை நடத்துவதுபோல் தமிழ் நாட்டுக் கலைஞர்களுக்கு அன்று விசேஷ மரியாதை நடைபெற்றது. முதலில் கடவுள் வணக்கம் நடைபெற்றது. சித்திபாபு வரவேற்புப் பிரசங்கம் செய்தார்.

"தட்சண தேசத்திலிருந்து தாட்சண்யத்திற்காக தட்சணை கொண்டு வந்திருக்கும் கலைஞர்களுக்கு வரவேற்பளிக்கிறேன்" என்று சித்திபாபு கூறினார். இப்படி நம்மூரில் ஒருவர் கூறியிருந்தால் வானம் அதிரும்படி கரகோஷம் செய்திருப்போம். ஆனால் அங்குதான் 'கரகோஷம்' என்ற பேச்சு மூச்சுக் கூடாதே! ('சாது! சாது') பிறகு, டி. கே. சி. ரதீந்திரநாத் டாகூரைப் புத்தகங்களை ஏற்றுக் கொள்ளும்படி சில வார்த்தைகள் சொல்லிக் கேட்டுக் கொண்டார். ராஜா ஜியின் கட்டளைக் கிணங்க தாங்கள் வந்திருப்பதாகவும் ராஜாஜியின் ஆசைப்படி தமிழ்த் தாய்க்கு விசுவ பாரதியில் ஒரு சிம்மாசனம் அமைத்திருப்பதாகவும் இந்த சிம்மா

சனத்தை அமைக்க உதவிய பரோபகாரி செட்டிநாட்டு ராஜா அண்ணுமலைச் செட்டியார் என்றும், அவரும் அவருடைய சமூகத்தாரும் தமிழ் நாட்டுக் கலைக்கும் தமிழ்பாஷைக்கும்பரம்பரையாக எத்தனையோ சேவைகள் செய்து வந்திருப்பதாகவும், இன்னும் ராஜா சர் அவர்களின் சேவை பற்றி விரிவாக எடுத்துரைத்தும், வெகு விரைவில் தமிழ் பவனம் இங்கு ஏற்படுத்தத் தமிழர்கள் முனைவார்கள் என்று தான் நம்புவதாகவும், கூறிக் கடைசியில் புத்தகங்களை ஏற்றுக் கொள்ளும்படி ரதீந்திர நாத் டாகூரைக் கேட்டுக் கொண்டார். கல்கி ஆசிரியரும் மேற்படி பிரசங்கத்தைக் கேட்டுக் கொண்டதைத் தவிர ஒருவரையும் ஒன்றும் கேட்டுக் கொள்ளவில்லை! ரதீந்திர நாத் டாகூர் புத்தகங்களைப் பெற்றுக் கொண்டு, ராஜா சர், ராஜாஜி, ரஸிகமணி, கல்கி முதலியவர்களுக்கும் மற்றும் அவர்களுடன் வந்தவர்களுக்கும் வந்தனம் கூறினர். (எனக்கு அப்பொழுது தான் திருப்தி ஏற்பட்டது. எங்கே நமக்கு வந்தனம் கூருமல் விட்டு விடுவாரோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். நல்லவேளை! 'ரஸிகமணியுடன் வந்த அனைவருக்கும் வந்தனம்' என்றதும் திருப்தி யுண்டாயிற்று. அனைவரில் நானும் ஒருவன்தானே?' (சாது; சாது) பிறகு; கூட்டம் மங்கள வாத்திய கீதத்துடன் முடிந்தது.

* * *

நாங்கள் முக்கியமாக எந்தக் காரியத்தை முன்னிட்டு சென்றிருந்தோமோ அந்தக் காரியம் சிறப்பாக முடிந்து விட்டபடியால் தலையிலிருந்து பெரிய பாரம் இறங்கப் பெற்றவர்களைப் போல் கொஞ்சம் அதிக உற்சாகத்துடனேயே அங்கு மிங்கும் உலாவ ஆரம்பித்தோம். அன்று மத்தியானச் சாப்பாட்டின் போது டி. கே. சி. அவர்களின்

உற்சாகம் அபரிதமாயிற்று. ஏதேதோ பத்துப் பதினைந்து வகைக் கறிகாய்ப் பதார்த்தங்கள் அன்றைய தினம் எங்கள் சாப்பாட்டுக்காக வந்திருந்தன. அவற்றை ரஸிக மணியுடன் வந்திருந்த சங்கரன் எடுத்துப் பரிமாறினான்.

டி. கே. சி. உற்சாகமாக, "அதோ ஒரு தட்டில் இருக்கிறதே, அதை எடுத்துப் படை! இங்கே என்னமோ இருக்கிறதே, இதைப் படையேன்! ஏன் சும்மா நிற்கிறாய்? அங்கே அந்தப் பெரிய தட்டில் ஏதோ உருண்டையா யிருக்கிறதே! உன் கண்ணில் படவில்லையா?" என் றெல்லாம் அதட்டி உருட்டிப் படைக்கச் செய்தார். ஆனால், தட்டையா யிருப்பதைப் படைத்தாலும், உருண்டையா யிருப்பதைப் படைத்தாலும், மெலிந்திருப் பதைப் படைத்தாலும், பருமனாயிருப்பதைப் படைத் தாலும் எல்லாம் நாவுக்கு ஒரேமாதிரி ருசியாகத்தான் இருந்தது! எடுத்துப் படைத்த சங்கரனுடைய கைக் கோளாறுதான் காரணம் என்று எண்ணி, அவனுடைய கையை நன்றாய்க் கழுவிக் கொண்டு வந்து படைக்கச் சொன்னோம். நாங்களே படைத்துக் கொண்டும் பார்த்தோம். அப்படியும் எதை நாவில் போட்டாலும் ஒரே ருசியாகத்தான் இருந்தது!

பிற்பகல் விருக்ஷாரோபணம் என்னும் விழா நடை பெறுவதாக இருந்தது. ஆனால், அந்த சமயம் பார்த்து மழை அபாரமாகக் கொட்டத் தொடங்கவே, மேற்படி விழாவை ஒத்தி வைக்கும்படி ஆயிற்று.

மாலையில் குருதேவர் சிராத்தம் ரதீந்திரநாத் டாகூர் வீட்டில் நடைபெற்றது. அதற்குக் குறிப்பிட்ட சிலர் தான், அதுவும் டாகூர் குடும்பத்தினர்தான், வந்திருந் தார்கள். நாங்களும் இரண்டொரு நாட்களில் டாகூர்

குடும்பத்தில் ஒருவராகவே பாவிக்கப்பட்டு விட்டபடியால் எங்களையும் மேற்படி சிராத்த காரியத்துக்கு அழைத்தார்கள்.

சிராத்தம் 'ரவீந்திரபவன'த்தில் நடைபெற்றது. கலை அழகு பொருந்திய ஹாலில் மெழுகுவத்திகள் சுடர் விட்டு எரிய நாலாபுறமும் தீப அலங்காரங்கள் ஜொலிக்க, எங்கும் மலர் வகைகள் பரப்பிக் கிடக்க, சித்திபாபு நடு நாயகமாக இருந்து சிராத்தம் செய்தார். டாகூரின் பாடல்களில் சில பாடப் பெற்றன. எல்லோரும் மௌன மாக இருந்து மகா கவிக்கு வணக்கம் செலுத்தி விட்டு எழுந்தார்கள். பின்னர் மேற்படி பவனத்தின் முகப்பில் எங்களுக்குச் சில வங்காளிப் பாட்டுக்களைப் பாடிக் காண்பிக்க ஏற்பாடு செய்திருந்தார்கள். டாகூரின் நெருங் கிய உறவினரும் பிரபல ஆசிரியையுமான இந்திராணி அம்மையாரும் உடனிருந்து கச்சேரியை நடத்தி வைத்தனர். வங்காளிப் பாட்டு எதைக் கேட்டாலும் மிகவும் சோகரசமாகவே இருந்தது. எதற்குத் தலையை ஆட்டுவது, எதற்குத் தலையை ஆட்டக் கூடாது என்பதும் தெரியவில்லை. ஆனால் பேசாமலிருந்தாலோ, 'ஓகோ, இவர்களுக்குச் சங்கீத ஞானமில்லை போலிருக்கிறது!' என்று மற்ற வங்காளிகள் முடிவு கட்டி விடலாமல்லவா? இதற்கு என்ன செய்வது? தர்ம சங்கடமாகப் போய் விட்டதே என்று எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால், கல்கி ஆசிரியர் ஒரு யுக்தி செய்தார். பாட்டு நடந்து கொண்டிருக்கும் போதே தலையை ஆட்டுவது போலவும், என்னைப் பார்ப்பது போலவும் பாவனை செய்தார். தலையை ஆட்டக்கூடாத இடமாக இருந்தால் என்னைப் பார்ப்பதாக மற்றவர்கள் நினைத்துக் கொள்ளட்டும் என்பதுதான் அவருடைய யுக்தி! நானும் லேசுப்பட்டவனா என்ன? கல்கி ஆசிரியர் என்னைப் பார்த்துத் தலையை ஆட்டிய

போதெல்லாம் நானும் பதிலுக்குத் தலையை ஆட்டி வைத்தேன்!

இதைக் கவனித்துக் கொண்டிருந்த இந்திராணி தேவியார் "'கல்கி' ஆசிரியருக்கு அபார சங்கீத ஞானம் உண்டென்பது தெரிகிறது" என்று சொல்லி விட்டார். அப்புறம் கேட்பானேன்? கல்கி ஆசிரியரின் தலை அபாரமாக உருள ஆரம்பித்து விட்டது. இதன் காரணமாக அவர் தலை இரவு பூராவும் வலித்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

9-8-47 காலையில் எங்களுக்கு 'நம்மூர்க்காரரான' காப்பி ஓட்டல்காரர் ஒரு விருதுந் நடத்தினார். தோசை, வடை யெல்லாம் போட்டு ஜமாய்த்து விட்டார். விருந்திற்கு எங்களுடன் சாப்பிடுவதற்கு பிரபல சித்திரக் காரரான முகல்டேயையும் அவரது மனைவி மக்களையும் அழைத்திருந்தார்.

ஸ்ரீ முகல்டே ஓர் அபூர்வமான மனிதர். கல்கத்தா சித்திர கலாசாலையில் பிரின்ஸிபாலாக இருந்து, பின்னர் உலகமெல்லாம் சுற்றி ஆங்காங்கே உள்ள சித்திரம் சிற்பங்களை, அவற்றைப் போலவே வரைந்து, மிக அழகிய புத்தகங்களாக வெளியிட்டிருக்கிறார். இவருடைய ஆங்கிலப் புத்தகங்கள் லண்டனில் பிரசுரமாகின்றன. இவர் தமிழ் நாட்டிலும் நீண்ட நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்திருக்கிறார். உலகில் மற்ற பாகங்களை விடத் தமிழ் நாட்டில் தான் உன்னதமான கலைகள் வளர்ந்திருக்கின்றன என்றும், நம்முடைய கோவில் கோபுரத்துக்கு இணை உலகில் எதுவும் கிடையாதென்றும் உறுதியாகச் சொன்னார்.

எங்கள் மூவரையும் பக்கத்தில் உள்ள தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்றார். அவர் சித்திரவேலை

செய்யும் இடங்களை யெல்லாம் காட்டினர். எல்லோரா, எலிபெண்டா, அஜந்தா, சித்தன்னவாசல் முதலிய இடங்களுக்குச் சென்று மேற்படி குகைகளின் கற்கள் சிலவற்றை எடுத்து வந்து பத்திரமாக வைத்திருக்கிறார். முகல்டேயின் மனைவியார் வங்காள பாஷையில் குழந்தைகளுக்காகப் பாட்டு எழுதுவதில் தேர்ந்தவர். அவர்கள் இருவரும் ரஸிக மணியையும், கல்கி ஆசிரியரையும் மற்றும் எங்கள் எல்லோரையும் வெகு அன்புடன் உபசரித்து நம்மூர் காப்பி கொடுத்தார்கள். தமிழ் நாட்டுக் காப்பி என்றால் ஸ்ரீ முகல்டே குடும்பத்தினருக்கு மிகவும் பிடிக்குமாம்.

ஸ்ரீ முகல்டே எழுதிய பார்வதி பரமசிவன் படத்தைப் பார்த்தபோது ரஸிகமணிக்கு அபார உற்சாகம் உண்டாகி விட்டது. அவ்வளவுதான். முகல்டே குடும்பத்தினருக்கு பார்வதி பரமசிவன் சம்பந்தமாகத் தமிழில் உள்ள பாடல் ஒன்றைச் சொல்லி விரிவாக விளக்கினார்கள். அவர்கள் மிக்க ஆனந்தத்துடன் அந்தப் பாடலை ரஸித்தார்கள்! பின்னர், டி. கே. சி. தென்காசியிலுள்ள சிற்பங்களை முகல்டே பார்க்க வேண்டு மென்றும், அது போல உலகத்தில் எங்கும் காண முடியாது என்றும் சொன்னார். "அவற்றைச் செய்தது யார்?" என்று ஸ்ரீ முகல்டே கேட்டார். "பேர் ஊர் ஒன்றும் தெரியவில்லை. பழங் காலத்துச் சிற்பிகள் பேருக்கு ஆசைப்பட்டதில்லை போலும்!" என்று ரஸிகமணி கூறினார்.

"ஆம், இக்காலத்தில்தான் படம் சிறிதாக இருந் தாலும் எழுதியவர்கள் தங்கள் பெயரைப் படத்திற்கு அடியில் கொட்டை எழுத்தில் போட்டுக் கொள்கிறார்கள்" என்று முகல்டே சொன்னதைக் கேட்டு எல்லோரும் விழுந்து விழுந்து சிரித்தோம். அதற்குள் விசுவபாரதியில் மணியோசை கேட்க ஆரம்பித்து விட்டது. மழை யில்லாததனாலும், எங்களுக்காகவும் 'விருக்ஷாரோபணம்'

திருவிழா ஆரம்பமாகி விட்டது. எனவே நாங்கள் முகல்டேயின் குடும்பத்தினரிடம் விடைபெற்றுக் கொண்டு விசுவபாரதிக்குச் சென்றோம்.

இதென்ன, தேவலோகமா, பூலோகம்தானா என்ற பிரமிப்பு உண்டாகி விட்டது. இங்கே நடமாடும் கன்னிகைகள் தேவமாதர்களோ என்றும் சந்தேகம் உண்டாகி விட்டது அடடா! ஒரே மஞ்சள் நிற ஆடை! மாணவிகள் ஒருவர் பின் ஒருவராக நின்று கொண்டார்கள். ஒரு பெண் கரத்தில் சங்கு வைத்திருந்தாள். மற்றொரு பெண் பூத்தட்டு ஏந்தி நின்றாள். வேறொரு பெண் தீபத்தைக் கையில் பிடித்திருந்தாள். இப்படியாக ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொன்றைப் பிடித்து நின்றார்கள். இவர்களுக்கு மத்தியில் ஆண்கள் சிலர் ஒரு பல்லக்கைத் தூக்கிக் கொண்டு நின்றார்கள். அந்தப் பல்லக்கில் ஐந்து வகைச் செடிகள் வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பல்லக்கிற்கு ஒரு பெண் பெரிய குடையொன்றைப் பிடித்துக்கொண்டு நின்றாள். குடை பிடித்திருந்தது யார் என்று நினைக்கிறீர்கள்? நமது தென்னாட்டைச் சேர்ந்த பெண்மணிதான்! புராதனக் கலைகளுக்கு நிழல் தந்து காப்பாற்றிய பெருமை தென்னாட்டைச் சேர்ந்ததே அல்லவா?

வாத்தியங்கள் ஒலிக்க ஆரம்பித்தன. சங்கநாதம் முழங்கிற்று. டாகூரின் நாட்டுப் பாடல்கள் முழங்கின. மாணவிகள் மெதுவாக நடந்து கொண்டே நடனம் ஆட ஆரம்பித்தார்கள். மேற்படி காட்சி, சௌந்தரிய தேவதைகளே நடனம் செய்ய ஆரம்பித்து விட்டதைப் போல இருந்தது.

இப்படியாக நடனம் ஆடிக் கொண்டே மாணவிகள் கலாபவனத்தின் முன் வந்தார்கள். அங்கே அலங்காரமாக ஒரு மேடை போடப்பட்டிருந்தது. அதன் மேல்

பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஆகிய பஞ்ச பூதங்களுக்கும் ஐந்து சிறுவர்களுக்கு வேஷம் போட்டு உட்கார வைத்திருந்தனர். மேடையைச் சுற்றிலும் கோலங்கள் போட்டு மங்களகரமாக ஜோடனை செய்து ஐந்து செடிகளுக்கும் ஐந்து குழி பறித்து வைத்திருந் தார்கள்.

நடனம் ஆடிக் கொண்டு வந்த பெண்மணிகள் அந்த மேடையைச் சுற்றிப் பாட்டுப் பாடிக் கொண்டும் நாடனமாடிக் கொண்டும் வந்து தாங்கள் கொண்டு வந்த பல்லக்கைக் கீழே வைத்தார்கள். அதன் பின்னர் சித்தி பாபு சில சுலோகங்களைச் சொன்னார். அப்போது கவி டாகூரின் மருமகள் பிரதிமா தேவி மங்கள கோஷங் களுக்கு மத்தியில் ஐந்து செடிகளையும் நட்டார். செடிகளை நட்டவுடன் பஞ்ச பூதங்கள் ஒவ்வொன்றும் தாமே வந்து, ஒவ்வொரு சுலோகம் சொல்லும் பாவனையில், ஒவ்வொரு பூதத்திற்கும் ஒரு பெண் வந்து, சுலோகம் சொன்னாள். சுலோகம் சொல்லும்போது அந்தந்த பூதவேஷம் போட்ட சிறுவன் எழுந்து நின்றான். இதில் வேடிக்கை என்ன வென்றால் மற்ற பூதங்களுக்குப் பெண்மணிகளே சுலோகம் சொல்ல, நெருப்பிற்கு மட்டும் ஓர் ஆண்மணி வந்து சுலோகம் சொன்னார். பொருத்தம்தானே? சுலோகம் சொல்லி முடிந்தவுடன் ஒரு மங்கள வாழ்த்துப் பாட லுடன் விழா முடிந்தது.

ரஸிகமணிக்கு ஒரே ஆனந்தம். "படிப்பு என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும்? இருக்கிறதே நம்ம யூனிவர்ஸிட்டிகளும்!" என்று ஒரே எரிச்சலாகச் சொன் னார்கள். சொல்லி விட்டுக் கம்பன் சொல்லிய 'வேதங்கள் அறைகின்ற' என்ற பாடலை எடுத்து விளக்கினார்கள். இது வரையில் பார்த்த பூதங்களைக் கம்பன் எப்படிப்

பாடி யிருக்கிறன் என்பதைச் சொன்னார்கள். இதற்குள் சீனபவனம் வந்து விட்டதால் அதையும் ஒரு பார்வை பார்த்து விடுவது என்று உள்ளே நுழைந்தோம். சீன பவனத்தில் முக்கியஸ்தராக இருக்கும் ஸ்ரீ வி. ஜி. நாயர் எங்களுக்கு எல்லாவற்றையும் விவரமாகக் காட்டினார். சீன அரசாங்கம் எவ்வளவோ பணச் செலவு செய்து தங்கள் பாஷை, கலை, நாகரிகம் முதலியவற்றை உலகினருக்குக் காண்பிக்க ஒரு பிரமாதமான கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். அதில் ஏராளமான புத்தகங்கள் பத்திரிகைகள் முதலியவற்றை வைத்து, ஆராய்ச்சியாளர்களை நியமித்து நல்ல வேலை செய்து வருகிறார்கள். எவ்வளவோ தொலையிலுள்ள இன்னும் பல தேசங்களின் பவனங்களும் விசுவ பாரதியில் இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் மிகப் பழையதும் வெகு சிறப்பு வாய்ந்ததும் உன்னதக் கலைஞான முடையதுமான தமிழ் பாஷைக்கு மட்டும் விசுவபாரதியில் ஒரு 'தமிழ் பவனம்' இல்லாத குறையைச் சென்னை அரசாங்கம் கவனித்து ஆவன செய்வார்கள் என்று நம்புகிறேன்.

சாந்திநிகேதனில் எங்கள் வேலை முடிந்ததும் எல்லோரிடமும் விடை பெற்றுக் கொண்டோம். ஸ்ரீ பெருமாளும், வீ. ஜி. நாயரும் எங்களை ரயிலேற்றி விட போல்பூருக்கு வந்தார்கள். அவர்கள் இருவருக்கும் எங்களை வழி அனுப்புவதில் இருந்த உற்சாகம் சொல்லி முடியாது. அவர்கள் இருவரும் எங்களுக்குச் செய்த உபசாரமும், உதவியும் ஏட்டிலும் எழுத்திலும் அடங்காது. போல்பூர் ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் அவ்விருவரும் எங்களைப் பிரிய மனமின்றி நின்று கொண்டிருந்தார்கள். நாங்களும் அவர்களை விட்டுப் பிரிய மனமில்லாமல் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆனால், நாங்கள் ஏறியிருந்த ரயிலோ, கார்டோ, எஞ்சின்

டிரைவரோ எங்கள் சங்கடத்தைச் சிறிதும் பொருட் படுத்தவில்லை. ஸ்ரீ பெருமாளையும், நாயரையும் எங்களிட மிருந்து பிரித்துவிட்டுக் 'கூ' வென்று கத்தியவண்ணம் எங்கள் துக்கத்துக்கு எதிரொலி செய்து கொண்டே புறப்பட்டு விட்டது.

ரயில் போல்பூரை விட்டுப் புறப்பட்டதும், கல்கத்தா போகும் வரையில் பொழுது போக வேண்டுமே என்று ரஸிகமணியுடன் பேச்சுக் கொடுத்தேன். ரஸிகமணி சிறுவனாக இருந்த போது அவரை எல்லோரும் 'மக்கு, மக்கு' என்று சொல்லுவார்களாம். ஆகையால் ரஸிக மணியும் தம்மை 'மக்கு' என்றே கருதிக் கொண்டாராம். அதனால் ஒரு பாடத்தையோ, பாடலையோ திருப்பித் திருப்பிப் படிக்கச் சலிப்பதில்லையாம். மக்கு என்பதற் காகப் பல தடவை படித்தால்தான் மண்டையில் ஏறும் என்று நினைத்துக்கொண்டு அப்படி ஒவ்வொரு பாடலையும் பல தடவை படித்ததன் காரணமாகப் பாடலின் தராதரம் கண்டு பிடிப்பது சுலபமாகப் போயிற்றும். ஆகையால் இப்பொழுது கூட ஒரு பாடலை எடுத்தால் எத்தனை முறை படிப்பதற்கும் சலிப்பதில்லையாம்!

இப்படி ரஸமான விஷயங்கள் பலவற்றைப் பேசிக் கொண்டிருக்கும்போது எங்களுடன் வந்த போட்டோ கிராபர் ஸ்ரீ கணேசன், "கல்கத்தாவில் ஹௌரா பிரதேசத்தில் 'கர்பியூ ஆர்டர்'ராமே?' என்று வியப்புடன் சொன்னார்.

"அப்படியானால் என்ன செய்வது? நாம் ஹௌராவில் தானே இறங்க வேண்டும்? ரயில் போக இரவு மணி ஒன்பது ஆகிவிடுமே!" என்ற கவலை எங்களைப் பிடுங்கித் தின்றது. என்ன செய்யலாம்! அவரவர்களுக்கு இஷ்ட தேவதைகளைப் பிரார்த்தனை செய்து கொண்டோம். 'கர்பியூ ஆர்டர்' என்றால் எங்களை அழைத்துப் போகக்

கூட யாரும் வரமாட்டார்களே! 'கடவுளே! நீ தான் துணை' என்று சோர்ந்து படுத்து விட்டேன். படுத்ததுடன் வேறு வழியில்லாமல் தூங்கி விட்டேன்!

"ஹெளரா வந்து விட்டது" என்ற சப்தம் கேட்டு விழித்தபோது ரயிலும் ஸ்டேஷனில் மெதுவாகப் போய் நின்றது. திடுதிடு வென்று பலர் எங்கள் வண்டிக்குள் ஏறினார்கள். அவ்வளவுதான்; எனக்குச் சப்த நாடியும் அடங்கி ஒடுங்கி விட்டது.

ஏதோ கலகக்காரர் என்கிறார்களே. அவர்கள் நானோ என்று நடுங்கிவிட்டேன். பின்னர் அவர்கள் கலகக்காரர்கள் இல்லை என்றும் போர்ட்டர்கள் தான் அவ்வாறு பயமுறுத்தி விட்டார்கள் என்றும் தெரிந்தது. ஒரு வழியாக மனதைத் தைரியப்படுத்திக் கொண்டு பிளாட்பாரத்தில் இறங்கினோம்.

எப்பொழுதும் 'ஜே ஜே' என்றிருக்கும் ஹெளரா ஸ்டேஷனில், பதினாயிரக் கணக்கான ஜனங்கள் மொய்க்கும் ஹெளரா ஸ்டேஷனில், பத்துப் பதினைந்து போர்ட்டர்களைத் தவிர வேறு ஒரு ஈ காக்கை கூட மொய்க்கவில்லை.

பிளாட்பாரத்தில் நின்று கொண்டு, "என்ன செய்யலாம்? எங்கே செல்லலாம்?" என்று திகைத்துக் கொண்டிருந்தோம். நல்லவேளை ; கடவுள் காப்பாற்றினார்! கொஞ்ச தூரத்தில் ஸ்ரீ வி. என். ராஜனும் (ஐ.சி.எஸ்.) ஸ்ரீ வீ டி. சுவாமியும் தென்பட்டார்கள் 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டோம். இதற்குள் பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சீதாபதியும் மற்றவர்களும் வந்து விட்டார்கள். இனி கலகத்தை ஒரு கை பார்த்து விடலாம் அல்லவா? ஆனால் அதற்குச் சந்தர்ப்பமே ஏற்படவில்லை!

நண்பர் ஸ்ரீ வி. என். ராஜன் எங்களை மிகவும் சௌகரியமாக ஜாகையில் கொண்டு சேர்த்து விட்டார். மூன்று நான்கு நாட்களாக சாந்திநிகேதனில் வங்காளிகள் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கிட்டத்தட்ட பஞ்சத்தில் அடிபட்டவன் போலாகிவிட்ட என்னை ஸ்ரீமதி ஜயா ராஜன் அன்புடன் உபசரித்து, தமிழ்நாட்டு உணவளித்துப் புத்துயிர் கொடுத்தார்கள்.

மறுநாள் காலையில் பத்து மணிக்கு தென்னிந்தியப் பெண்மணிகள் சங்கத்தில் ரஸிகமணிக்கும், கல்கி ஆசிரியருக்கும் வரவேற்பு நடைபெற்றது. தென்னிந்தியப் பெண்மணிகள் சங்கத்தின் தலைவர் மிஸஸ் சிவராம கிருஷ்ண ஐயர் அவர்கள் உலகப் பிரசித்தி பெற்ற விஞ்ஞானப் பேராசிரியர் ஸர். ஸி. வி. ராமன் அவர்களின் சகோதரியாவார். அடக்க குணமும், உயர்ந்த பண்பாடும், தெய்வ பக்தியும், செயல் திறமையும் உடையவர்கள். நல்ல ரஸிகரும்கூட! ஆகையினால்தான் அன்று தலைமை வகித்து ரஸிகமணியைப் பற்றிப் பிரமாதமாகப் பாராட்டிப் பேசினார்கள். பேசியதுடன் மட்டுமல்லாமல் ஸ்ரீமதி சி. எஸ். ரங்கசாமி அவர்கள் தைத்த பை ஒன்றையும் டி. கே. சி க்குப் பரிசாக அளித்தார்கள். பைக்குள் ஏதாவது பணம் இருக்குமோ என்று மெதுவாக தொட்டுப் பார்த்தேன். இதைக் கவனித்த ஸ்ரீமதி சிவராமகிருஷ்ணன் "பணம் உள்ள பை வேறு இருக்கிறது. அதைப் பின்னால் கொடுக்கிறேன்" என்றார். சரி; ரஸிகமணிக்கு வெறும் பைதான்; நமக்குப் பணத்துடன் கூடிய பை தரப் போகிறார்கள் என்று எண்ணி மனதிற்குள்ளே மகிழ்ந்து கொண்டிருந்தேன்.

இந்தச் சமயத்தில் ஸ்ரீமதி சிவராமகிருஷ்ணன் மகா கவி பாரதியைப் பற்றிச் சொல்லிவிட்டு, "எட்டயபுரம்

பாரதி நிதிக்கு எங்களாலான தொகை தற்சமயம் ரூபாய் 201-தான். அதைக் கல்கி ஆசிரியரிடம் சமர்ப்பிக்கிறோம்" என்று சொல்லிப் பணப்பையை கல்கி ஆசிரியரிடம் கொடுத்து விட்டார்.

பின்னர், ரஸிகமணி டி.கே.சி "தாயன்பு" என்பதைப் பற்றிப் பேசினார்கள்.

ஒரு தாசில்தாருக்கு ஒரு மகன் இருந்தானும். அவன் தாயாரைத் தொந்தரவு செய்து பணம், நகை முதலியவற்றை வாங்கிச் சென்று செலவழிப்பது வழக்கமாம். ஒரு சமயம் அவனுடைய தாய், "பணமும் இல்லை, நகைகளும் இல்லை" என்று சொல்லி விட்டாளாம். உடனே அந்த சத் புத்திரனுக்குக் கோபம் வந்து விட்டதாம் உடனே ருத்ரமூர்த்தியாகித் தாயின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வீதியில் போட்டு நாலு மொத்து மொத்தி விட்டு ஓடி விட்டானும். காலையில் ஓடிப் போன பையன் வீட்டுக்கு வரவேயில்லை. சாப்பிடவும் இல்லை. அடிபட்ட தாயாருக்குத் தான் அடிபட்டது கூட மறந்து போய் விட்டதாம். "பையன் இன்னும் சாப்பிட வரவில்லையே" என்ற கவலை வந்து விட்டதாம். உடனே பக்கத்து வீட்டுக்காரரிடம் போய், "தம்பி, நம்ம அய்யாப் பிள்ளை காலையில் சாப்பிடாமல் வெளியில் போனவனை இன்னும் காணோம். தாங்கள் கொஞ்சம் பார்த்துக் கூட்டிக்கொண்டு வருகிறீர்களா? உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு' என்று கெஞ்சினாளாம்.

"அது யாரு அய்யாப் பிள்ளை? இன்று காலையில் உன்னைப் போட்டு அடித்தானே, அந்தச் சண்டாளப் பயலா? அவன் சாப்பிடவில்லை என்று கவலைப்படுகிறாயாக்கும். போ, போ" என்று பக்கத்து வீட்டுக்காரர் ரொம்பவும் கோபமாய்ப் பேசினாராம். ஆனாலும் அந்த

அம்மாள், விடாமல் "ஐயோ, அவன் ரொம்ப சின்னப் பிள்ளைங்க, தெரிஞ்சது அவ்வளவுதானுங்க. நீங்க கொஞ்சம் தயவு பண்ணி அவனைத் தேடிக் கூட்டியாங்க" என்று காலில் விழுந்து கெஞ்சினளாம்.

"அப்படிச் சொன்னது யார்? தந்தையல்ல;—தாய்!" என்று சொல்லி "தாயன்புக்கு மிஞ்சின கடவுள் கூட இல்லை" என்று ரஸிகமணி பிரசங்கத்தை முடித்தபோது சபையிலுள்ள பெண்மணிகள் ரொம்பவும் அனுபவித்து ரஸித்தார்கள்.

ரஸிகமணிக்குப் பிறகு ரஸிகமணியைப் பற்றி ஒரு சொற்பொழி வாற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

* * * *

கலைகளுக்குள்ளே கவிதை தான் மிகவும் மேன்மையான கலை. அதை அறிந்து அநுபவிப்பது அவ்வளவு சுலபமல்ல. அப்படியே அறிந்து அநுபவித்துவிட்டாலும் பிறர் அநுபவிக்கும்படிச் சொல்லுவது சாமான்யமல்ல. அதற்குத் தாய்ப் பாஷையிலே எவ்வளவோ பயிற்சி வேண்டும். அதிலுள்ள உண்மையை அறிந்துகொள்ள எவ்வளவோ அநுபவம் வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக அந்தக் கவியிலேயே ஐக்கியப்பட்டு விடவேண்டும்.

கவியை உணர்ந்து, அதன் உண்மைப் பொருளைக் கண்டு லயித்து அதைத் தானும் அநுபவித்து மற்றவர்களும் ரஸிக்கும்படிச் சொல்லும் ஆற்றல் வாய்ந்த ஒருவர் கிடைத்துவிட்டாலோ அந்தப் பாஷைக்குரிய மக்களுக்கு ஒரே கொண்டாட்டம் தான்!

அதனல்தான் அறிஞர்கள் 'கலைப் பண்டிதனை விட ரஸிகனே மேலானவன். கலைஞனுக்கு தான் பயின்ற கலை மட்டுமே தெரியும். ஆனல் ரஸிகனே எல்லாப்

பண்டிதர்களிடமும் உள்ள கலைச் செல்வத்தையும் பகிர்ந்து அநுபவித்து மகிழ்ச்சியடைகிறான்' என்று சொல்லுகிறார்கள்.

'ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் உயர் கவிஞன் ஒருவன் பிறக்கிறான்' என்று பெரியோர்கள் கூறுகிறார்கள். அதைப் போலத்தான் ரஸிகன் பிறப்பதும் அவ்வளவு அருமையான காரியம்!

சடையப்ப வள்ளல் போன்ற சிறந்த ரஸிகர் தோன்றியதே கம்பருக்கு உற்சாகமாக இருந்திருக்கக் கூடும்.

தமிழ் நாட்டை ஆண்ட அரசர்களில் பலர் உயர்தர ரஸிகர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதை நமது இலக்கியங்கள் கூறுகின்றன. அவர்கள் ரஸித்து ஆதரித்த கலைகள் கணக்கிலடங்காது! இவ்வளவு அருமையான ரஸிகர்கள் இருந்ததாலேயே மற்ற நாட்டாரைக் காட்டிலும் தமிழ் நாட்டில் கலைகள் உன்னத ஸ்திதியில் வளர்ந்து வந்திருக்கின்றன.

நம்முடைய சிற்பம், சங்கீதம், பரதநாட்டியம், நாதஸ்வரம் முதலியவற்றுக்கு ஈடான கலை வேறு எந்த நாட்டிலும் இல்லை என்று கூறலாம்.

இந்த அற்புதமான கலைகளை எல்லாம் அக்காலத் தமிழர்கள் தெய்வத்துடன் ஒட்டி, கோவிலில் வைத்து வளர்த்து வந்திருப்பதிலிருந்தே அவர்கள் கலைகளை எவ்வளவு மதித்தார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது.

இத்தகைய தமிழ்நாடு பிற்காலத்தில் சிறந்த ரஸிகர்கள் இல்லாமல் நிலை தடுமாறிவிட்டது மிகவும் வருந்த வேண்டிய விஷயமாகும்.

இதற்கெல்லாம் முக்கிய காரணம் அந்நிய ஆட்சியும் ஆங்கில பாஷையும் தான்! அத்துடன் ஓரளவு நச்சினார்க்

இனியர், பரிமேலழகர் பரம்பரையுமாகும் என்றால் மிகையல்ல.

தமிழ் என்றாலே வெறுப்பு ஏற்படும்படியாகவும் தமிழ்க் கவிதை என்றாலே தலைவலி உண்டாகும்படியாகவும் செய்த திருக்கூட்டத்திற்கு எவ்வளவு சாபம் கொடுத்தாலும் போதாது!

நன்றாகத் தமிழ் படித்திருக்கிறதாகச் சொல்லும் அநேக பண்டிதர்களுக்கும் கூட கம்பனுக்கும் காஞ்சி புராணம் பாடிய புலவருக்கும் வித்தியாசம் தெரியாமல் போய்விட்டது! சேக்கிழாருக்கும் சிவப்பிரகாசருக்கும் உள்ள வேறுபாடும் விளங்காமல் போய்விட்டது!

மாணிக்கத்திற்கும் மண்ணாங்கட்டிக்கும் தராதரம் கண்டுபிடிக்க முடியவில்லை! எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? அதுதான் நச்சினார்க்கினியரும் பரிமேலழகரும் கலக்கின கலக்கு இன்னும் பண்டிதர்கள் மனதைத் தெளிவடைய விடவில்லையே!

இதுமட்டுமல்ல; ஒன்றை நாம் அநுபவிக்கிறோமா, இல்லையா என்பதே நமக்குத் தெரியாமல் போய்விட்டது! மேலும் அநுபவிக்க முடியாத விஷயங்களை எல்லாம் 'அநுபவிக்கிறோம்' என்று சௌடால்த்தனம் செய்யும் துர்க்கதியும் நமக்கு ஏற்பட்டு விட்டது.

தமிழகம் மறுப்படியும் பெருமை மிக்க பழைய கலையகமாகவும் புதுமைப் பொலிவுடனும் திகழ வேண்டுமானால் உயர்தர ரஸிகர்கள் கூட்டம் தோன்றவேண்டும். அம் மாதிரி ரஸிகர் கூட்டத்தை உற்பத்தி செய்பவரே தமிழ் மொழிக்குச் சிறந்த சேவை செய்பவர் என்பதில் சந்தேகம் இல்லை.

இந்தப் புனிதமான காரியத்தைச் செய்து வருகிற பெரியார் ரஸிகமணி டி.கே.சி அவர்கள்தான் என்பதைத்

தமிழுலகம் நன்கு அறியும். ஸ்ரீ டி கே. சி உற்பத்தி செய்திருக்கும் ரஸிகர் கூட்டம் தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் மேன்மை தேடிக்கொடுக்கும் சிறந்த சங்கமாகும். என் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவம் ஒன்றைக் கூறுகிறேன் கேளுங்கள்:-

சுமார் ஆறு ஆண்டுகளுக்கு முன் காரைக்குடி கம்பன் திருவிழாவுக்குப் போயிருந்தேன். ஸ்ரீ டி.கே.சி என்னும் பெரியார் வெகு அருமையாக எல்லோரும் ரசிக்கும்படி கவிதைகள் சொல்லுகிறார்கள் என்று ஏற்கெனவே நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்தேன். ஆனாலும் அதை நான் நம்பவில்லை.

"இது வெறும் புகழுரையாய்த்தான் இருக்க முடியும். கவிதைகளையாவது எல்லோரும் ரஸிக்கும்படிச் சொல்லுவதாவது?" என்று எண்ணிக்கொண்டேன்.

ஸ்ரீ டி. கே. சி அவர்கள் மேடைக்கு வந்தார்கள் எல்லோரும் அவரைக் கரகோஷம் செய்து வரவேற்றனர். சபையோர் செய்த கரகோஷத்தையும் ஆரவாரத்தையும் வரவேற்பையும் உற்சாகத்தையும் பார்த்தால் சாக்ஷாத் கம்பருக்கு நடந்த வரவேற்பாகவே காணப்பட்டது. டி. கே. சியினுடைய கம்பீரமான மீசையும் சாந்தம் தவழும் முகமும் என்னை மிகவும் வசீகரித்து விட்டது. அவர்கள் 'மைக்'கின் முன் நின்ற நிலையும், எடுப்பான குரலும், பிரசங்க தோரணையும் என்னைப் பிரமிக்க வைத்து விட்டது. அன்று கம்ப ராமாயணத்திலிருந்து ஒரு முக்கியமான கட்டத்தை எடுத்துச் சொன்னார்கள். விசுவாமித்திரர் ஜனகனிடம் ராமனுடைய வீரச் செயலைப் பற்றிக் கூறும் கட்டம்.

"வரும் வழியில் ஒரு குன்று. அந்தக் குன்றைப் பற்றியும் அதில் வாழும் அரக்கியான தாடகையைப் பற்றியும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று குன்றின் உச்சியில் தாடகை பயங்கரமான உருவத்தில் தோன்றினாள். குன்றின் சரிவில் இறங்கி நின்றுகொண்டு அவள் ஒரு சூலாயுதத்தை எடுத்து எங்கள்மேல் வேகமாக வீசினாள். ராமன் ஒரு அம்பை எய்து அந்தச் சூலாயுதத்தை சுக்குச் சுக்காக முறியடித்தான். பிறகு பெரிய அம்பு ஒன்றை எடுத்து எய்தான். அது என்ன செய்தது? தன் கண்களில் கொல்லுலை போல அக்கினியைக் கொப்புளித்துக் கொண்டிருந்த தாடகையின் மார்பை ஊடுருவிப் போயிற்று!"

அலை அலையாக மோதிக் கொண்டிருக்கும் நீலக் கடல் போல் சக்தியும் அற்புதமும் வாய்ந்தவனாய் இருக்கிறான் ராமன். ஜனகனைப் பார்த்து விசுவாமித்திரர் பேசுகிற பேச்சு. இப்போது பாட்டைப் பார்க்கலாம்:

"அலையுருவக் கடல் உருவத்(து)
ஆண்டகை தன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை
நீ யுருவ நோக்கையா!
உலையுருவக் கனல் உமிழ்கட்
தாடகைதன் உரம் உருவி—"

தாடகையின் மார்பை உருவி விட்டு வேறு என்ன செய்தது அந்த அம்பு? அவளுக்குப் பின்னிருந்த மலையை உருவியது; பிறகு மலைக்குப் பின்பக்கத்தின் சரிவில் வளர்ந்து ஓங்கி நின்ற மரம் ஒன்றையும் உருவியது; தன் காரியங்களை இப்படியாக முடித்துக்கொண்டு அந்த அம்பு

கடைசியில் மண்ணுக்குள் பாய்ந்தது. செய்யுள் முழுமையும் பார்ப்போம்:

"அலையுருவக் கடல் உருவத்(து)
ஆண்டகை தன் நீண்டுயர்ந்த
நிலையுருவப் புயவலியை
நீ யுருவ நோக்கையா!
உலையுருவக் கனல் உமிழ்கட்
தாடகை தன் உரம் உருவி
மலையுருவி மரம் உருவி
மண் உருவிற்(று) உரு வாளி"

என்று பாட்டைப் பாடி முடித்தார்கள். ஒவ்வொரு வரியையும் நிதானமாக நிறுத்திப் பல தட்வை சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தப் பாட்டிலுள்ள அம்பானது தாடகையின் (உரத்தை) மார்பை உருவியது. மலையை உருவியது. மரத்தை உருவியது மண்ணை உருவியது. எல்லாம் அப்படியே கண் முன்னால் காட்சியளித்தது. ஆனால் ஸ்ரீ டி. கே. சி. அவர்களுடைய அழகிய பிரசங்கமோ முன்னாலிருந்த மைக்கை உருவியது. பின்னர் மின்சாரக் கயிறுகளை உருவியது. அப்புறம் எங்கள் இதயத்தை உருவி மனத்திலே பாய்ந்தது!

இப்படியாக ஓர் அதிசயமான காரியத்தை அன்று டி. கே. சி. செய்து விட்டார்கள். பாட்டு!-அதிலும் கம்பன் பாட்டு எவ்வளவு சுலபமாகப் போய்விட்டது. அடாடா! என்ன எளிமை! 'இந்த எளிமை இத்தனை நாளாக நமக்குப் புலப்படாமல் போய்விட்டதே' என்று ஒரே வருத்தமாகப் போய்விட்டது. அத்துடன் வியப்பும் ஆச்சரியமும் அதிசயமும் போட்டி போட்டுக்கொண்டு என்னைத் திக்கு முக்காடச் செய்துவிட்டது! அதிலிருந்து

ரஸிகமணி டி.கே.சியின் அடியார்களில் அடியேனும் ஒருவனாகி விட்டேன்.

பிறகு, இரண்டு மூன்று தினங்கள் காரைக்குடியிலே தங்கியிருந்து ஸ்ரீ டி.கே.சியின் பிரசங்கங்களைக் கேட்டு அநுபவித்தேன்.

கடைசி நாளன்று டி. கே. சியை நெருங்கிப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண் டிருந்தபோது, 'தாங்கள் எழுதிய புத்தகம் ஏதாவது இருக்கிறதா?' என்று கேட்டேன். அதற்கு, ரஸிகமணி அவர்கள் 'ஆம், இதய ஒலி என்ற புத்தகம் ஒன்றை நண்பர்கள் பிரசுரித்திருக்கிறார்கள்' என்று சொன்னார்கள்.

உடனே எனக்கு அப் புத்தகத்தைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று. அப்போது எனக்குப் பால்ய வயது. ஸ்ரீ டி.கே.சி. அவர்களின் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கும் வசதியற்றவனாயிருந்தேன். ஆயினும் எனக்கென்று ஒரு புத்தகம் இருக்கவேண்டும் என்ற ஆசை விட்டபாடில்லை. நான் அப்போது ஒரு தமிழன்பருடைய வீட்டில் தங்கியிருந்தேன். அவரிடம் நிறையப் புத்தகங்கள் இருக்கின்ற விஷயம் எனக்கு ஏற்கெனவே தெரியும். எனவே, இதய ஒலியும் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணி அவரது புத்தக சாலையைச் சோதனை போட்டேன். என் முயற்சி வீண் போகவில்லை. இதய ஒலி கிடைத்தது! எனக்கேற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது! ஒன்றிரண்டு பக்கம் வாசித்தேன். ஸ்ரீ டி-கே-சியே நேரில் வந்து நின்று கொண்டு முகத்தில் புன்னகை தவழப் பேசுவதுபோல் இருந்தது. அந்தப் புத்தகத்தை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. வேறு புத்தகம் வாங்கவும் வசதி இல்லை. என்ன செய்யலாம்? வேறு என்ன இருக்கிறது செய்வதற்கு?

மெதுவாகப் புத்தகத்தை எடுத்து ஒளித்துக்கொண்டு கம்பி நீட்டிவிட்டேன்! நேராக பஸ் ஸ்டாண்டுக்குப் போய் ஊரை அடைவதற்குள் என் பாடு வியர்த்து விறுவிறுத்து விட்டது. வீட்டை அடைந்தவுடன் ஓர் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு புத்தகத்தை ஒரு முறை பிரித்துப் பார்த்தேன். அதன் அட்டையில்

"அருமை நண்பர்

....அவர்களுக்கு,

டி. கே. சி."

என்று எழுதியிருந்தது. அந்தப் புத்தகத்துக்குடையவருடைய பெயரையும் ஒரு முறை வாசித்தேன். அதை அப்படியே வைத்திருந்தால் நம்முடைய குட்டு வெளிப்பட்டு விடும் என்று பயந்து மேற்படி எழுத்துக்களை மிகவும் கஷ்டப்பட்டு அழித்தேன். பிறகு அதன்மேல் ஒரு வெள்ளைத் தாளை ஒட்டி அதில் என் பெயரைக் கொட்டை எழுத்தில் எழுதிப் புத்தகத்தைச் சொந்தமாக்கிய பிறகுதான் நிம்மதி உண்டாயிற்று!

அந்தப் புத்தகத்தை நான் எத்தனை தடவை படித்திருப்பேன் என்பதைக் கணக்கிடவே முடியாது!

இதய ஒலி செய்த வேலையோ அபாரம் என்று சொல்லலாம் தமிழ்க் கவிதைகளை, படித்தவர்களும் பாமரர்களும் அநுபவிக்கலாம் என்று அது சொல்லித் தந்தது. உண்மைக் கவிதை எது, போலிக் கவிதை எது, என்பதையும் இதய ஒலி எடுத்துக் காட்டிற்று.

கம்பன், கலிங்கத்துப்பரணி ஆசிரியர், மகாமகோபாத்யாய சாமிநாத ஐயர், வெள்ளக்கால் முதலியார், கவிமணி. பாரதியார், நந்திக் கலம்பகம் ஆசிரியர், பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார், 'முத்தொள்ளாயிரம்

ஆசிரியர், திருப்பாப்புலியூர் ஞானியார் சுவாமிகள், குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் முதலிய அனைவரையும் அறிமுகம் செய்து வைத்து அவர்களின் கவிதைகளை அநுபவிக்கும்படி இதய ஒலி செய்தது. இதய ஒலியில் உள்ள 'சங்கீதமும் சாகித்யமும்' என்ற கட்டுரையைப் படித்த பிறகு உண்டான ஆவேசம்தான் என்னைத் தேவகோட்டையில் ஒரு தமிழிசை மாநாடு நடத்தும்படி தூண்டியது. தமிழிசைக் கிளர்ச்சிக்கே அந்தக் கட்டுரை தூண்டுகோலாகவும் அமைந்தது.

இப்படிப்பட்ட அற்புதமான காரியங்களைச் செய்த இதய ஒலியின் இரண்டாம் பதிப்பை வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதைவிட ஆச்சரியம் என்னவென்றால், இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடுவதற்காகத் திருத்திக் கொடுக்கப்பட்ட புத்தகம் நான் காரைக்குடி தமிழன்பர் வீட்டிலிருந்து அமுக்கிக்கொண்டு வந்த அதே புத்தகம் என்பது தான்!

இதய ஒலியைச் சொல்லாமல் எடுத்துக்கொண்டு வந்த குற்றத்திற்குப் பரிகாரமாக நானே ஆயிரக் கணக்கான புத்தகம் போட்டு விநியோகம் செய்யும்படி ஏற்பட்டிருப்பது எல்லாவற்றையும் விட அதிசயமான விஷயமாகும்.

* * * *

ஸ்ரீ டி. கே. சி அவர்கள் சாமான்யமான பாடல்களை கொஞ்சங்கூடத் தயை தாட்சண்யம் இல்லாமல் ஒதுக்கி விடுவார்கள். ஏதாவது ஒரு நூல், 'பயனற்றது' 'கலை வளர்ச்சிக்குத் தீங்கு பயப்பது' என்று தோன்றினால் அசோக வனத்தில் அனுமார் கையாண்ட முறையை உபயோகிக்கத் தயங்கமாட்டார்கள்!

ரத்னப் பரீட்சை செய்வதில் கை தேர்ந்த நிபுணன் உயர்ந்த ரத்னம் எது, மட்டச் சிகப்பு எது, வர்ணக்

கண்ணுடித் துண்டு எது என்பதைக் கண்டுபிடிப்பது போலக் கவிதையில் உயர்ந்தது எது, சிறந்தது எது, மட்டம் எது என்பதை அநாயாசமாகக் கண்டுபிடிக்கும் ஆற்றல் ஸ்ரீ டி. கே. சி அவர்களுக்கு இயற்கையிலேயே அமைந்திருக்கிறது. அந்தத் திறமையை அவர்கள் தமிழ் மொழியின் நல்வாழ்விற்காக அல்லும் பகலும் உபயோகப் படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

'கவி என்றால் என்ன?' என்ற கேள்வியை யாராவது கேட்டால் தயங்காமல் நாம் 'இதய ஒலியைப் படியுங்கள்' என்று தைரியமாகக் கூறலாம்.

கடைசியாக ஒரு வார்த்தை. நான் அழுக்கிக்கொண்டு வந்த மேற்படி இதய ஒலி புத்தகத்துக் குடையவரான தமிழன்பர் யார் என்று தெரிந்துகொள்ள நண்பர்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கலாம். அவர் வேறு யாருமில்லை. காரைக்குடி தேசபக்தரும் தமிழறிஞருமான ஸ்ரீ சா. கணேசன் அவர்கள்தான்!

இவ்வளவு பெருமை வாய்ந்த டி. கே. சி அவர்களைப் பற்றி இதற்குமேல் நான் பேசுவது அதிகப் பிரசங்கித் தனமாகும். அத்துடன் கல்கி ஆசிரியர் பேச்சைக் கேட்க நீங்கள் எல்லோரும் ஆவலாக இருப்பதை உங்கள் முகம் எனக்குக் காட்டுகிறது. ஆகவே, கல்கி அவர்களை பேசும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லி நான் ஆசனத்தில் அமர்ந்தேன்.

கல்கி ஆசிரியர் எழுந்ததும் கூட்டத்தில் ஒரு கல கலப்பு உண்டாயிற்று! குழந்தைகள் வாயை மூடிக் கொண்டன! பெண்கள் பக்கம் பேச்சு மூச்சில்லை. ஆண் களையோ கேட்க வேண்டியதில்லை!

"பெண்கள் கூட்ட மென்றால் நான்கு பெண்களும் இருபது குழந்தைகளும் பின்னர் ஹால் நிறைய ஆண்களும்

தான் இதுவரையில் எங்கும் வருவது வழக்கம். ஆனால் இந்த ஹால் முழுவதும் பெண்மணிகள் நிறைந்திருக்கிறார்கள்" என்று கல்கி ஆசிரியர் கூறியதும் பெண்கள் செய்த ஆரவாரத்திலிருந்து தான் அவ்வளவு பெண்களும் அதுவரை அடக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தார்கள் என்று தெரிய வந்தது. கல்கத்தாவில் பெண்கள் கூட்டத்தில் கூட நிசப்தமாக இருப்பதைக் கண்டு தாம் ரொம்பவும் ஆச்சரியப்படுவதாகக் கல்கி ஆசிரியர் கூறினர். குழந்தைகளும் சப்தம் போடாமல் இருப்பது உலக அதிசயமே என்றும் புகழ்ந்தார். அச் சமயம் மேடையிலிருந்து ஒரு குழந்தை திடீரென்று கீழே விழுந்து 'நச்' சென்று தரையில் மோதியது. ஆயினும் அக்குழந்தை கூட சாவகாசமாக எழுந்திருந்து அழாமல் கல்கியின் பிரசங்கத்தைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்ததையும் உலக மகா அதிசயம் என்றே கூறவேண்டும்.

நயாகரா நீர் வீழ்ச்சியைப் பார்ப்பதற்காகப் பத்து பெண்மணிகள் சென்றார்களாம். இவர்களுக்கு நீர் வீழ்ச்சியைச் சுற்றிக் காண்பிக்க ஒரு வழி காட்டியும் சென்றானும். நயாகரா நீர்வீழ்ச்சி உலகிலே பிரம்மாண்டமானதாம். அதன் சப்தம் எத்தனையோ மைல்களுக்கு அப்பால்கூடக் கேட்குமாம். ஆனால் வழிகாட்டியாகச் சென்றவனுக்கு நீர் வீழ்ச்சியின் சப்தம் துளிக்கூடக் கேட்கவில்லையாம். ஆகையால் அவன் பின்புறம் வந்த பெண்மணிகளைப் பார்த்து, "அம்மாமார்களே! கொஞ்சம் உங்கள் பேச்சை நிறுத்திவிர்களானல் இந்த நீர் வீழ்ச்சியின் சப்தத்தைக் கேட்க முடியுமென்று கருதுகிறேன். தயவுசெய்து நிறுத்துவீர்களா?" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டானும்.

இப்படிப் பெண்களின் பேச்சைப் பற்றி பல கதைகள் உண்டாம். அவ்வளவையும் கல்கத்தா தமிழ்ப் பெண்

மணிகள் பொய்யாக்கி விட்டார்கள் என்று கல்கி ஆசிரியர் கூறியபோது சபையில் எழுந்த கரகோஷம் நயாகரா நீர்வீழ்ச்சியின் சப்தத்தையும் மிஞ்சி விட்டது.

கல்கி ஆசிரியர், தாம் எப்பொழுதும் கடைசியிலேயே பேசுவது வழக்கம் என்றும், அப்பொழுதுதான் முதலில் பேசியவர்களின் பிரசங்கங்களைக் கேட்டு விட்டுக் குழந்தைகள் அலுத்து அதன் காரணமாகத் தூங்கிவிடுமென்றும், அப்புறம் தாம் பேசும்போது மிகவும் சௌகரியமாயிருக்குமென்றும் சொன்னார். இப்பொழுதுதான் கல்கி ஆசிரியரின் சூழ்ச்சி எனக்குத் தெரிகிறது. இது வரை என்னை யல்லவா எப்பொழுதும் முதலில் பேசும்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்!

"கல்கத்தாவில் முதலில் பேசினாலும் கடைசியில் பேசினாலும் எப்பொழுது பேசினாலும் அந்தப் பயம் கிடையாது. குழந்தைகள் உள்பட எல்லோரும் கூட்டத்தில் நன்றாக நடந்து கொள்ளுகிறார்கள் என்று கல்கி ஆசிரியர் சொன்னார். பின்னர் எட்டயபுரத்தில் பாரதி மண்டப நிதிக்குப் பணம் கொடுத்ததற்குத் தமது வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டார். கடைசியில் குமாரி செல்வம், பாரதியார் பாடல் ஒன்றைப் பாடினார். ரொம்ப நன்றாகப் பாடுவதாக ரஸிகமணி குமாரி செல்வத்தைப் பாராட்டினார். அத்துடன் காலைக் கூட்டம் கலைந்தது.

"இனி முக்கிய கூட்டம் மாலையில்தான் இருக்கிறது. அனைவரும் வருக" என்று ஒலிபரப்புக் கருவி எல்லோரையும் அழைத்தது. கூட்டம் நடந்த இடத்திலிருந்து நாங்கள் சாப்பிட வேண்டிய இடத்திற்குப் போய்ச் சாப்பிட்டோம். சாப்பிட்டவுடன் மணியைப் பார்த்தால் மாலை மணி நான்கு. "சரி; நான்கு மணியாகிவிட்டது. இனி எப்படித் தூங்க முடியும்?" என்று யோசித்துக் கொண்டிருக்கையில்

பாரதி சங்கத் தலைவர் ஸ்ரீ சீதாபதியும், உப தலைவர் ஸ்ரீ கிருஷ்ணனும், காரியதரிசி ஸ்ரீ தியாகராஜனும் எங்கே நாங்கள் தூங்கி விடுவோமோ என்று அஞ்சி ஓடி வந்து விட்டார்கள். பின்னர் அவர்களுடன் பாரதி தமிழ்ச் சங்கத்தில் ராஜாஜி படத் திறப்பு விழா வைபவத்துக்குக் கிளம்பினோம். கூட்டம் நடைபெற வேண்டிய இடமாகிய நேஷனல் ஹைஸ்கூல் மண்டபத்திற்குள் நுழையு முன் அநேக சிறுவர் சிறுமியர், "ஜே ஹிந்த்" "வந்தே மாதரம்" என்று கோஷம் போட்டார்கள். அத்துடன் விடாமல் இன்னொரு புதிய கோஷத்தையும் கிளப்பினார்கள். "மகா சக்கரவர்த்தி ராஜாஜிக்கு ஜே!" என்று அவர்கள் போட்ட ஜெய கோஷம் எங்களை யெல்லாம் பிரமிக்க வைத்து விட்டது!

கூட்டம் நாதஸ்வர கீதத்துடன் ஆரம்பமாயிற்று. நாதஸ்வர வித்வான் யாரும் அங்கே பிரசன்னமாயிருக்க வில்லை. கிராமபோன் வித்வான் தான் ஜமாய்த்துவிட் டார்! பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சிதாபதி கூட்டத் திற்குத் தலைமை வகித்தார். ரஸிகமணியையும் கல்கியை யும் வரவேற்றுப் பேசுகையில், "ரஸிகமணியை ராஜாஜி தம் குருவென்றே சொல்லி யிருக்கிறார். குருவே சிஷ்யரின் படத்தை இன்று திறந்து வைக்கப் போகும் காட்சியைக் காணக் கொடுத்து வைத்த நாம் மிகவும் பாக்கியசாலிகள்" என்று மகிழ்ந்து கொண்டார். கல்கியைப் பற்றிச் சொல் லும்போது "கல்கியை எனக்கு வெகுநாட்களாகத் தெரியும். அவரால் நம்முடைய குடும்பத்தில் அடிக்கடி சண் டைகள் நடைபெறுவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். கல்கி பத்திரிகை வந்து விட்டால் எனக்கு உனக்கு என்று குடும்பக் கலகம் உண்டாகி விடுகிறது. அப்படி நம்முடைய குடும்பத்தில் ஒருவராக நம்முடனே தினமும் வாழ்ந்து வருகிறவர் கல்கி" என்று சொல்லிவிட்டு என்னைப்

பார்த்தார். "சரி ஐமாயுங்கள்" என்றேன். அவருடைய புகழ்ச்சி மூலம் ஆகாயத்தில் பறந்து கொண்டிருந்த நான் என்னுடைய பிரசங்கத்தின் மூலம் மெதுவாகக் கீழே இறங்கி வந்து சேர்ந்தேன்!

பின்னர் ரஸிகமணி எழுந்ததும் மிகவும் நெருக்கியடித்துக்கொண்டிருந்த ஆயிரக் கணக்கான மக்கள் ஒரு சப்தமுமின்றி மிகவும் கவனத்துடன் ரஸிகமணியின் பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

"இமயமலையைத் தூக்கும்படி எனக்குக் கட்டளை இட்டிருக்கிறார்கள் இந்த பாரதி தமிழ்ச் சங்கத்தார். இமயமலையைத் தூக்க முடியாவிட்டால் அது என்னுடைய குற்றமில்லை' 'என்று கூறி ரஸிகமணி தமது பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

"ராஜாஜியை நான் நன்கு அறிந்தவன். அவருடைய அன்பையும் பெற்றவன். ராஜாஜி சமயத்தையே அடிப்படையாகக் கொண்டு வளர்ந்தவர். ராமானுஜர் கோபுரத்தின் மீது நின்று உலகறிய வேதத்தைச் சொன்னார். அதற்காகத் தாம் நரகத்துக்குப் போகவும் தயார் என்று கூறினார். அதைப் போலவே ராஜாஜியும் ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் விடச் சொல்கிறார். இதற்காக அவர் நரகம் செல்லவேண்டுமானாலும் தயார் என்று கூறுகிறார்" என்று ரஸிகமணி உணர்ச்சியுடன் பேசினார்கள்.

திருவிதாங்கூரில் ஆலயப் பிரவேசம் நடைபெற்ற பொழுது ராஜாஜி திருநெல்வேலி மார்க்கமாகச் சென்றாராம். போனபோது சோர்வாகச் சென்ற ராஜாஜியின் முகத்தில் திரும்பி வந்தபோது இளமை தாண்டவமாடியதாம். அவருடைய முதியோர்கள் நினைத்த நற்காரியம்

முடிந்துவிட்டதே என்ற ஆனந்தத்தில் மூழ்கியிருந்தாராம். "உஷ்ணத்தை அளப்பதற்குக் கருவி இருப்பதுபோல, ஆனந்தத்தை அளப்பதற்கும் கருவி இருந்தால் அன்று நான் அளந்திருப்பேன்" என்று ரஸிகமணி சொல்லியபோது சபையோரின் கரகோஷம் கட்டிப் பிடிக்க முடியாமல் போயிற்று.

"ராஜாஜி அறிஞராகவும் பொறுமைசாலியாகவும் இருப்பதற்குப் பல காரணங்கள் உண்டு. அவர் ஐந்து குழந்தைகளுக்குத் தகப்பனாராகவும் தாயாராகவும் இருந்து குழந்தைகளை வளர்த்தார். ஆடவர்களுக்கு இதை விடக் கஷ்டமான காரியம் வேறு கிடையாது. மூன்று ஆண் குழந்தைகளையும் இரண்டு பெண் குழந்தைகளையும் வளர்ப்பது சாதாரணக் காரியமா? அந்தப் பயிற்சியினால் தான் அறிவும் அன்பும் உண்டாயிற்று" என்று கூறி, 'அன்பு என்றால் என்ன?' என்பதற்கு ஒரு சிறு சம்பவத்தை உதாரணமாக எடுத்துக் காட்டினார்.

ஓர் ஆலையில் உயரமான கூண்டு ஒன்றில் ஐந்து பேர் வேலை செய்து கொண்டிருந்தார்களாம். மாலை ஆறு மணி ஆனவுடன் நாலு பேர் கீழே இறங்கி விட்டார்கள். மற்றொருவன் இறங்கவில்லை என்கிற விஷயம் தெரியாமலேயே நூல் ஏணியைக் கீழே இழுத்து விட்டார்கள். எனவே, ஐந்தாவது ஆள் கீழே இறங்க முடியாமல் தவித்துப் போனான். என்ன செய்வதென்று தெரியாமல் பெரிய பெரிய நிபுணர்களும் அச்சமயத்தில் தவித்துப் போனார்கள். அப்போது 'ஜான்' 'ஜான்' என்று கூவிக் கொண்டே மேலே நின்றவனுடைய மனைவி ஓடி வந்தாள். ஓடி வந்தவள் 'ஜான்' என்று உரக்கக்கூவி, 'உன்னுடைய 'ஸ்டாக்கிங்' பெருவிரல் துவாரத்திலுள்ள சிறு நூலைக் கீழே இறக்கு' என்றாள். ஜானும் அப்படியே செய்

தான். அச்சிறு நூல் கீழே வந்ததும் அது தாங்கும்படியான இன்னும் கொஞ்சம் பெரிய நூலை அதில் கட்டி அதை மேலே இழுக்கும்படிச் சொன்னாள். பிறகு இன்னும் கொஞ்சம் பெரிய நூல், அதற்கும் பெரிய நூல், இப்படியாகக் கட்டிக் கட்டி கடைசியாக நூல் ஏணியையும் கட்டி மேலே அனுப்பித் தன் கணவனைக் கீழே இறக்கி விட்டாள்.

"இவ்வாறு அவளுடைய அறிவை வேலை செய்யும்படித் தூண்டியது அவளுடைய அன்பேயாகும். சுற்றி நின்ற என்ஜினியர் முதலியவர்களுக்கு அப்பேர்ப்பட்ட அன்பு இல்லாததால் அறிவு வேலை செய்யவில்லை. அதைப் போலவே ராஜாஜி அன்பின் அடிப்படையிலே வளர்ந்து, அன்புடன் தம் குழந்தைகளை வளர்த்து, தேசத்தினிடம் அபரிமிதமான அன்பு செலுத்துவதனுல் தான் அவருடைய அறிவு பிரகாச மடைந்திருக்கிறது" என்றுர் ரஸிகமணி.

ஒரு சமயம் குற்றுலத்தில் ராஜாஜி அவர்கள் டி. கே. சியிடம் "காலையில் பூமி அதிர்ச்சி யடைந்ததே, கவனித்தீர்களா?" என்று கேட்டார்களாம். "பூமியாவது அதிர்ச்சியடையவாவது? ஒன்றையும் காணுமே. நாமெல்லோரும் நன்ருகத்தானே இருக்கிறேம்?" என்று ரஸிகமணி பதில் கூறினுராம். மறுநாள் ஹிந்து பத்திரிகையில், எங்கோ பூகம்பம் ஏற்பட்டதாகவும் அதனுல் சென்னை மாகாணத்திலும் பூமி அதிர்ச்சி உண்டானதாகவும் செய்தி வெளியாகியிருந்ததாம். ஸ்ரீ டி. கே. சிக்கு அப்பொழுதுதான் ராஜாஜியின் மகத்துவம் தெரிந்ததாம். "ஒரு சிறிய நுண்ணிய கருவியினுல் அறிய வேண்டிய அதிர்ச்சியை நுண்ணிய அறிவு படைத்த ராஜாஜி கண்டு விட்டார்" என்ற விஷயத்தை ரஸிகமணி ரொம்பவும் அனுபவித்துச் சொன்னுர்கள்.

ஓர் ஆசாமியைப் பார்த்தவுடன் இந்த ஆசாமி இப்படிப்பட்டவர் என்று ராஜாஜி சொல்லிவிடுவார். பின்னர், விசாரித்தால் அவர் சொன்னது சரியாகவே இருக்கும். அப்படிப் பார்வையிலேயே மனிதர்களின் தராதரத்தைத் கண்டு பிடித்து விடும் இயல்பு உடையவர் ராஜாஜி. "சுருக்கமாகச் சொல்லுவதானுல் தமிழ், சமூகம், பண்பாடு இவைதான் ராஜாஜி" என்று ரஸிக மணி பலத்த கரகோஷத்தினிடையே படத்தைத் திறந்து வைத்தார்கள். திறக்கப்பட்டவுடன் அங்கிருந்த ஆண்களும் பெண்களும் "ராஜாஜிக்கு ஜே!" என்று கல்கத்தா நகரமே அதிரும்படி கோஷம் செய்தார்கள். ஒரு பக்கம் சங்கநாதம் முழங்கியது. மற்ருெருபுறம் நாதஸ்வரகீதம். வேருெரு புறம் "ராஜாஜி வாழ்க!" என்ற பாடல். சபை முழுவதும் ஆரவாரமும் 'ஜே' கோஷமுமாக அமர்க்களப்பட்டது. இப்படியாகப் பதினைந்து நிமிஷ நேரம் சபை அல்லோல கல்லோலப்பட்டது. எனக்கோ ஒரே பிரமிப்பாகப் போய்விட்டது. கல்கியின் கண்களிலோ ஆனந்த பாஷ்பம் கரைபுரண்டு ஓடியது. மேற்படி காட்சி இதுவரை தமிழ் மக்கள் ஒருவருமே காணுத காட்சியாக இருந்தது! கல்கத்தா தமிழர்களின் உற்சாகத்தின் எல்லையை நாங்கள் அன்றுதான் கண்டோம். அடடா! எப்பேர்ப்பட்ட ஜனங்கள்! என்ன ஆர்வம்! என்ன பக்தி!

இவ்வளவு கோலாகலத்திற்கு மத்தியில் நான் பேச எழுந்தேன். என் மீது ஜனங்கள் அபாரப் பிரியம் காட்டினுர்கள். நான் பேச ஆரம்பித்தால் 'பாடு' என்றும், பாட ஆரம்பித்தால் 'பேசு' என்றும் கட்டளை போட்டு பிரமாதமாகச் சோபிக்க வைத்தார்கள். பிறகு, பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சீதாபதி எட்டயபுரம் பாரதி மண்டப நிதிக்குக் கல்கி ஆசிரியரிடம் கல்கத்தா

தமிழர்களின் நிதியைச் சமர்ப்பித்து விட்டு, கல்கி ஆசிரியர் பாரதியாருக்கும் தமிழ் நாட்டுக்கும் செய்துள்ள பெருமையை மிகவும் பாராட்டினர். பிறகு பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் கல்கி ஆசிரியர் பேச எழுந்தார்.

"இது வரையில் பத்திரிகைகளில் 'அரசியல் நெருக்கடி' என்று செய்தி வரும்போது அந்த நெருக்கடி எப்படி யிருக்கும் என்பதை ஒரு தரமாவது கண்ணால் பார்க்க வேண்டுமென்ற ஆசை எனக்கு ஏற்படும். ஆனால் அதைக் காண்பதற்கு இதுவரை சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை. இன்று இந்த ஹாலில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைக் கவனித்ததும் அரசியல் நெருக்கடி எப்படி இருக்கும் என்பதை ஒருவாறு தெரிந்து கொண்டேன்" என்று கூறியதும் கூடியிருந்த பெண்கள், குழந்தைகள் ஆண்கள் வெளியில் நின்று கவனித்துக் கொண்டிருந்த வங்காளிகள் . சகலரும் கட்டிடம் அதிரும்படிச் சிரித்து ஆரவாரம் செய்தார்கள்.

கல்கி ஆசிரியர் மறுபடியும் பேச ஆரம்பித்தார் :

"நான் இதுவரையில் இந்த வங்காளத்தில் பார்த்த வங்காளிகளின் முகங்களெல்லாம் கொஞ்சங்கூடச் சிரிப்பு என்பதில்லாமல் 'குரூப் போட்டோ'வுக்கு முகத்தை வைத்துக் கொள்ளுவது போலவே யிருந்தன. ஆனால் தமிழர்களாகிய நீங்களோ சிரிப்பை நிறுத்தமாட்டேன் என்கிறீர்கள்" என்றார். இந்தச் சமயம் சபையிலிருந்த ஒருவர் சட்டென்று எழுந்திருந்து "ஆமாம்; எல்லாம் தங்களால் வந்த வினைதான்; சென்ற இருபது வருஷமாகத் தங்கள் ஹாஸ்யத்தைப் படித்துக் கொண்டு வருவதன் பலன்தான்" என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்துவிட்டு உட்கார்ந்தார். பின்னர், கல்கி ஆசிரியர் தம்முடையபேச்சை மறுபடியும் தொடங்கினர்.

ஒரு சமயம் தமிழ் நாட்டில் 'ராஜாஜி வேண்டாம்' என்ற கிளர்ச்சி நடைபெற்றபோது 'இது என்ன தமிழ் நாடு! உயர்ந்த நாகரிகம், பண்பாடு என்றெல்லாம் சொன்னோமே, இப்படி ஒரு பைத்தியக்கார இயக்கம் நடைபெறுகிறதே, இதை விட்டு எங்காவது போய் விடலாமா?' என்று கூடக் கல்கி எண்ணியது உண்டாம். ஆனால் ஒரு இடமும் தட்டுப்படவில்லையாம். இனி அம்மாதிரி ஏதாவது சந்தர்ப்பம் ஏற்பட்டால் கல்கத்தாவிற்கு வந்து விடலாம் என்ற தைரியம் உண்டாகி விட்டதாம்.

"ராம பிரானுடைய ஆண்மையும், கிருஷ்ணனுடைய ராஜதந்திரமும், புத்தருடைய தூய்மையும், சிபிச் சக்கரவர்த்தியின் தியாகமும், ராமானுஜரின் மதபக்தியும், வள்ளுவரின் வாய்மையும் சேர்ந்து உருவெடுத்து வந்திருக்கும் ராஜாஜியைத் தமிழ் நாட்டில் சிலர் வேண்டாம் என்று சொல்லியபோது 'அடடா! தமிழ் நாடு எவ்வளவு கீழ் நிலைக்குப் போய் விட்டது, இதற்கும் ஒரு நல்ல காலம் வராதா?' என்று எண்ணிக் கொண்டிருந்தோம். அச்சமயத்தில் கல்கத்தா பாரதி தமிழ்ச் சங்கத்திலிருந்து 'ராஜாஜிதான் வேண்டும். அவர்தான் தமிழ் நாட்டுக்குத் தலைவர்' என்ற நல்ல வாக்குக் கிடைத்தது. சீதா தேவி ஒரு வருஷம் அசோக வனத்திலே சிறைப்பட்டு மனம் நொந்து 'சரி; இனி வாழ்ந்து பயனில்லை, கழுத்திலே சுருக்குப் போட்டுக் கொண்டு உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டியதுதான்' என்று முதலில் தீர்மானித்தார். பின்னர் சிந்தனை செய்து 'நமக்கும் ஒரு நல்ல காலம் வராமலா போகும்?' என்றிருக்கும் போது ஹநுமானுடைய 'ராம ராம' என்ற சப்தம் வந்ததாக ராமாயணத்தில் படித்திருக்கிறோம். அதைப் போலவே கல்கத்தாவிலிருந்தும் 'ராம ராம' சப்தம் வந்தது.

"கல்கத்தா மட்டுமல்லாமல் பம்பாய், நாகபுரி, டில்லி முதலிய இடங்களிலெல்லாம் இப்படியே வரவேற்ருர்கள். கொஞ்சம் விலகி இருந்தால்தான் புத்தி தெளிவடையும் போலிருக்கிறது" என்ருர் கல்கி' "அறிவைப் போன்ற செல்வம் வேறு கிடையாது' என்று சொல்லிய திருவள்ளுவர் பிறந்த தமிழ் நாட்டில் 'அறிவு வேண்டாம்' என்ற கிளர்ச்சி நடை பெற்றது வேடிக்கைதான். ஆனல் நீங்களோ 'அறிவு வேண்டும்' அத்துடன் அறிஞரான ராஜாஜியும் வேண்டும்' என்று படத் திறப்பு விழாவும் செய்திருக்கிறீர்கள். உங்களை எல்லாம் பார்க்க 1300 மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருக்கிருேம். உங்கள் குழந்தைகள் இன்று 'மகா சக்ரவர்த்தி ராஜாஜிக்கு ஜே' என்று கோஷம் போட்டதைக் கேட்டேன். ஆகா, இதுவரையில் ராஜாஜிக்கு எவ்வளவோ புகழ் கிடைத் திருக்கிறது. ஆனல் 'மகா சக்ரவர்த்தி ராஜாஜி" என்பதற்கு ஈடே கிடையாது. இந்த வார்த்தையைக் கேட்க 1300 மைலுக்கப்பா லிருந்து மட்டுமா 'வரலாம்? அமெரிக்காவிலிருந்து வரலாம், ஆப்பிரிக்காவி லிருந்தும் வரலாம்' சொர்க்கத்திலிருந்தும் வரலாம்" என்று கல்கி உணர்ச்சி ததும்பக் கூறியபோது சபையோரும் அதே உணர்ச்சியில் நிலைத்திருந்தார்கள்.

கல்கியின் ஆர்வம் கரை புரண்டு விட்டது போல் தோன்றியது. "கணீர் கணீர்" என்ற குரலோசையுடன் கல்கி பேசியதைச் சபையோர் ரஸிக்க, சபையோர் ரஸிப்பதை நானும் ரஸிகமணியும் ரஸிக்க இப்படியாக அன்று ஏக அமர்க்களமாகப் போய்விட்டது.

"ராம கிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் மூலம் ஹிந்து மதத்திற்குப் புத்துயிர் உண்டாயிற்று. தமிழ் நாடும் அப்பொழுது விழித்தெழுந்தது. அவர்கள் இரு

வரும் இந்த வங்காளத்தில் பிறந்தவர்கள். பின்னர் மற்றொரு வங்காள வீரர் விபின் சந்திரபாலர் சென்னைக்கு விஜயம் செய்து தம்முடைய ஆறு பிரசங்கங்களின் மூலம் தமிழ் நாட்டில் தேச பக்தியை உண்டாக்கினார்.

தேச பந்து தாஸ் வக்கீல் தொழிலை விட்டு நாடு முழுதும் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கினார். ராஜாராம் மோகன் ராய், ரவீந்திரநாத் டாகூர் முதலியவர்களால் தமிழ் நாட்டுக்கு எவ்வளவோ லாபம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற பல வருஷ காலமாக வங்காளம் நமக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட வங்கத்திற்கு நாம் என்ன கைம்மாறு செய்யலாம், செய்ய முடியும் என்று ஏங்கிக் கொண்டிருந்தோம். ஆனால், அதற்கெல்லாம் வட்டியும் முதலுமாக நாம் நமது ராஜாஜியைச் சுதந்திர வங்கத்திற்குக் கவர்னராகக் கொடுக்கிறோம். ராஜாஜியைக் கவர்னராக அடைய இவ் வங்காளம் 150 வருஷ காலம் தவம் செய்திருக்கவேண்டும்" என்று கல்கி ஆசிரியர் கூறியபோது, "ராஜாஜிக்கு ஜே!" என்ற கோஷம் வானை அளாவியது. பின்னர் பாரதி நிதிக்குப் பணம் கொடுத்ததற்குக் கல்கி ஆசிரியர் தம் மனப்பூர்வமான வந்தனத்தைத் தெரிவித்துக் கொண்டார். தலைவர் ஸீதாபதி முடிவுரையாகச் சில வார்த்தைகள் கூற, சங்கத்தின் காரியதரிசியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் ஜெயகோஷத்துடனும், மகிழ்ச்சிப் பெருக்குடனும் கலைந்தது.

மறு நாள் 11-8-47 அன்று நேஷனல் ஹைஸ்கூல் மாணவர்களும், உபாத்தியாயர்களும் பாரதி நிதிக்குப் பணம் கொடுத்தார்கள். ரஸிகமணி முகவுரையாகப் பேசிய பின், கல்கி ஆசிரியர் பணமுடிப்பிற்கு வந்தனம் கூறினார். "உபாத்தியார்களுக்கு இருக்கும் கஷ்டத்தைப் பார்த்தால்,

நாம் எங்காவது பள்ளிக்கூடத்துக்குப் போனால் அவர்கள் நம்மைப் பணம் கேட்பார்களோ என்று நான் பையில் பணம் கொண்டு போவது வழக்கம். ஆனால் இந்தப் பள்ளிக்கூடத்தில் அவர்களே கொடுப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்" என்று கூறினார். காகிதமும் பென்சிலும், மிட்டாயும் ரொட்டியும் வாங்குகிற பணத்தை எல்லாம் குழந்தைகள் பாரதி நிதிக்குக் கொடுத்ததைக் கல்கி ஆசிரியர் மிகவும் பாராட்டி வந்தனமும் வாழ்த்தும் கூறினார்.

அன்று இரவு கல்கத்தா காஸ்மாபாலிடன் கிளப்பில் எங்களுக்கு நண்பர் ஸ்ரீ வி. டி. சுவாமி ஒரு விருந்தளித்தார். வந்திருந்தோர் அனைவரும் கொஞ்சநேரம் சிரித்து விட்டுப் போகட்டுமே என்பதற்காக என்னுடைய ஹாஸ்யக் கச்சேரி ஒன்றைக் கல்கி ஆசிரியரும் ரஸிக மணியும் நடத்தி வைத்தார்கள்.

12-8-47 அன்று பல நண்பர்கள் எங்களுக்கு விருந்து நடத்தினார்கள்; அவர்களில் நேதாஜி சர்க்காரில் விளம்பர மந்திரியாக இருந்த எஸ். ஏ. ஐயருடைய சகோதரர் கர்னல் அண்ணுசாமி அவர்களும் ஒருவர். கர்னல் அண்ணுசாமியின் புதல்வி ஸ்ரீமதி மீரா வெகு நன்றாகப் பாடியதுடன், வெகு ஜோராகப் பரதநாட்டியமும் ஆடினார்.

ஸ்ரீமதி மீராவின் நாட்டியத்திற்கு அவருடைய தாயாரே பதம் பாடினார். அதை ஸ்ரீ டி. கே. சி ரொம்பவும் பாராட்டினார்கள். விருந்தளித்த மற்றொரு பிரமுகர் ஹிந்து பத்திரிகையின் கல்கத்தா காரியாலய நிர்வாகி ஸ்ரீ சாஸ்திரி அவர்கள். ஸ்ரீ சாஸ்திரி எங்களுக்குப் பல விதத்தில் உதவி புரிந்தார். அவர் சங்கீதத்திலும் சமையலிலும் மகா நிபுணர். அவருக்கு வீணை தனத்தின்

சங்கீதத்தில் அபார பிரியமும், பால சரஸ்வதி பரத நாட்டியத்தில் அபார மோகமும் உண்டு. அவருடைய பெண்கள் வெகு அழகாகவும் கணீர் கணீர் என்றும் பாடுகிறார்கள். பரதநாட்டியம் கூட வெகு நன்றாக ஆடுகிறார்கள் 'மாலைப் பொழுதினிலே' பாட்டுக்கு மிகவும் அழகாக அபிநயம் பிடித்தார்கள்.

விருந்தளித்த மற்றொரு பிரமுகர் ஸ்ரீ சி. எஸ். ரங்கசாமி அவர்கள். ஸ்ரீ ரங்கசாமி பத்திரிகை உலகில் மிகவும் பிரசித்தி பெற்றவர். 'இந்தியன் பினான்ஸ்' என்னும் பிரபல ஆங்கிலப் பத்திரிகையைக் கல்கத்தாவில் நடத்திக் கொண்டு வருகிறவர். பொருளாதார விஷயங்களில் மகா நிபுணர். அவர் ஏதாவது பொருளாதார சம்பந்தமாக எழுதிவிட்டால் அதைக் கவனத்துடன் அரசாங்கத்தார் பார்வையிடுவார்களாம். அவருடைய மனைவி ஸ்ரீமதி ரங்கசாமி அவர்கள் நல்ல குணசாலி. தெய்வ பக்தி மிகுந்தவர். அவர் வைத்துப் பூஜை செய்யும் விநாயகரைக் கண்டு ரஸிகமணி மிகவும் பரவசம் அடைந்தார்கள். நண்பர்களின் பாராட்டுதலுக்கும் விருந்துகளுக்கும் இடையிலே ரஸிகமணியின் கம்ப ராமாயணப் பிரசங்கங்களும் நடைபெற்றன.

ஒரு நாள் 'எட்டுத் திக்கும் பதினாறு கோணமும்' என்ற பட்டினத்தடிகளின் பாடலை ரஸிகமணி அவர்கள் விளக்கிச் சொல்லி 'பட்டப் பகலை இரவென்று சொல்லும் பாதகர்'களை வெளுத்து வாங்கினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும் எங்களுக்கெல்லாம் ஒரே உற்சாகமாக இருந்தது. வங்க மக்கள் அனைவரும் பிரமாத உற்சாகத்துடன் காணப்பட்டார்கள். காரணம் சுதந்திர வங்கத்திற்குக் கவர்னராகப் போகும் ராஜாஜி அன்று பிற்பகல் ஆகாய விமானம் மூலம் பறந்து

வரப் போகிறார் என்ற செய்தி வங்க மக்கள் அனைவருக்கும் எட்டி விட்டதுதான். எங்களுக்கோ உற்சாகத்துடன் கவலையும் அதிகரித்தது. "இந்தக் கலகம் மிகுந்த கல்கத்தாவிற்கு ராஜாஜிதானா கவர்னராக வரவேண்டும்? அதிலும் இந்த வங்காளிகள் ரொம்பப் பொல்லாதவர்கள் அல்லவா? எப்படித்தான் ராஜாஜி சமாளிக்கப் போகிறாரோ?" என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தோம்.

'டம் டம்' விமான நிலையத்துக்கு மத்தியானம் ஒரு மணிக்கு ராஜாஜி வருவதாகத் தெரிந்தது. நாங்கள் விமான நிலையத்துக்குச் செல்ல முடியாதென்று அறிவித்து விட்டார்கள். எனவே, நாங்கள் செல்லவில்லை. ஆனால், ராஜாஜி சரியாக ஏழு மணிக்குச் சௌகரியமாக கவர்னர் மாளிகைக்கு வந்து விட்டதாகத் தகவல் கிடைத்தது. எங்களுக்கு ராஜாஜியிடமிருந்து இரவு சாப்பாட்டுக்கு வந்து சேரும்படி டெலிபோன் செய்தியும் கிடைத்தது.

ராஜாஜியைப் பார்க்கப் போவதற்குள் எங்களுக்கிருந்த இரண்டு மூன்று நிகழ்ச்சிகளை அதிவேகமாக முடித்துக் கொண்டோம். பாரதி தமிழ்ச் சங்கத்தில் அன்று மாலை ரஸிகமணியின் கம்பராமாயணப் பிரசங்கம். அதன் பின்னர் குரு குஹ கான சபையார் பாரதிநிதிக்கு ரஸிகமணியிடம் பணமுடிப்பு ஒன்றைச் சமர்ப்பித்தனர். எல்லாவற்றையும் முடித்துக் கொண்டதும் ஸ்ரீ வி. என். ராஜன் எங்களை வெகு வேகமாகக் காரில் அழைத்துச் சென்று கவர்னர் மாளிகையில் கொண்டு நிறுத்தினர். அடேயப்பா! மாளிகை என்றால் மாளிகை! எப்பேர்ப்பட்ட மாளிகை! எங்களுக்கு அதில் தெற்கும் புரியவில்லை, வடக்கும் புரியவில்லை. இந்தச் சமயத்தில் 'நிமிர்ந்த, நன்னடை நேர்கொண்ட பார்வையுடன்' ஒருவர் வந்து எங்களுக்கு வணக்கம் செய்தார். நாங்களும் வணக்கம் செய்தோம்.

பிறகு அவர் வளையாமல் நிமிர்ந்தது நிமிர்ந்தபடி நடக்க ஆரம்பித்தார். நாங்களும் அவரைப் பின் தொடர்ந்தோம். எங்களைக் கூட்டிக்கொண்டு போனவர், கட்டிடத்தின் ஒரு மூலைப் பக்கமாக அழைத்துச் சென்றார். 'எங்கேயோ கூட்டிப் போகிறாரே; நாம் கவர்னரை அல்லவா பார்க்க வந்தோம்?' என்று நான் யோசித்தேன். இதற்குள் அவர் மாளிகையின் மூலை அறை ஒன்றில் கொண்டுபோய் உட்கார வைத்தார். 'ஓ! வந்து விட்டீர்களா' என்று விசாரித்துக் கொண்டே ராஜாஜியும் வந்து சேர்ந்தார்

"ஆமாம், ஒரு வித ஆபத்தும் இல்லாமல் வந்து சேர்ந்து விட்டோம்" என்று ரஸிகமணி பதில் சொன்னார்கள். எல்லோரும் சாப்பிட உட்கார்ந்தோம். 'இந்த அறையில் தான் ஜாகை' என்றார் ராஜாஜி.

"இவ்வளவு பெரிய மாளிகையில் ஏன் ஒரு சிறு அறையில் இருக்கிறீர்கள்?" என்று நான் அவரைக் கேட்டேன்.

"இது போதாதா? எப்பொழுதும் வீடு சிறிதாக இருப்பதுதான் சுகம்" என்றார் ராஜாஜி.

"ஆமாம்; திருச்செங்கோடு ஆசிரமம் போலிருந்தால் தங்களுக்கு இன்னும் சௌகரியமாக இருக்கும்" என்றார் கல்கி.

"அப்படி ஒரு இடம் கிடைத்தால்கூட நல்லதுதான்!" என்றார் ராஜாஜி.

ராஜாஜி மிகவும் அன்புடனும் கனிவுடனும் எங்களுக்கு விருந்தளித்தார்கள். எங்களுடன் விருந்துண்ட ஐ. சி. எஸ். காரரான ஸ்ரீ வி. என். ராஜன் சொன்னார்:

எத்தனையோ வருஷங்களாக அந்த மாளிகையில் விருந்து சாப்பிட்டிருக்கிறாராம்; எல்லா உத்தியோகஸ்தர்

களும் அவர்களும் இவர்களும் பிளேட்டுக்கும் கரண்டிக்கும் சண்டை போட்டுக்கொண்டு இங்லீஷ் பாணியில் ஸ்பூனை வைத்து ஆகாரத்தைக் குத்தி உள்ளே செலுத்துவார்களாம். "இன்றுதான் இந்த மாளிகையில் ரஸமும் சாதமும் போட்டுக் கையால் பிசைந்து அசல் தமிழ் நாட்டுப் பாணியில் சாப்பிடுகிறோம். இந்த மாளிகை கட்டிய பிறகு இம்மாதிரி நடப்பது இதுதான் முதல் தடவையாக இருக்கும்" என்று கூறினர்.

இரவு மணி பத்து ஆகி விட்டது. பன்னிரண்டு மணிக்கு (கல்கத்தா மணி ஒன்றுக்கு) கவர்னர் விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகையால் ராஜாஜி கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும் என்று நாங்கள் வீட்டுக்கு வந்தோம். மறுபடியும் சரியாக கல்கத்தா மணி ஒன்றுக்கு கவர்னர் மாளிகைக்குச் சென்றோம். எங்களை ஓய்வு எடுத்துக் கொள்ள விடுவதில்லை என்ற சபதம் பூண்டிருந்த ஸ்ரீ வி. டி. சாமி காஸ்மாபாலிடன் சங்கத்தில் நடைபெறும் சுதந்திர விழாவுக்குக் கூப்பிட்டார். அங்கு சுதந்திரவிழா ஏக அமர்க்களமாகக் கொண்டாடினார்கள். இந்தியாவிலுள்ள சகல பாஷைகளிலும் பாடல்கள் நடைபெற்றன. தமிழில் கர்னல் அண்ணுசாமியின் புதல்வி மீரா "ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" என்ற பாரதியார் பாட்டை வெகு அழகாகப் பாடினர். மீராவின் பரத நாட்டியமும் நடைபெற்றது. பிறகு பாரதமாதா சீன் நடைபெற்றது. ஸ்ரீ சி. எஸ். ரங்கசாமியின் புதல்வி வத்ஸலா பாரதமாதாவாக வேடம் பூண்டு வந்தாள். வத்ஸலாவுக்கு வேடம் ரொம்பப் பொருத்தமாக அமைந்திருந்தது. பாரதமாதாவின் பாதங்களில் இருந்த விலங்கை இரு தொண்டர்கள் வந்து உடைத்தார்கள்; உடனே பாரதமாத தலை நிமிர்ந்து தன் மக்களைப் பார்த்து புன்

னகை புரிந்தாள். உடனே இந்திய பாஷை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பிரதிநிதியாக வந்து பாரதமாதாவுக்கு வணக்கம் செலுத்தினர்கள்.

இதற்குள் மணி பன்னிரண்டு ஆகி விடவே நாங்கள் கவர்னர் மாளிகைக்கு விசுவாசப் பிரமாணம் எடுக்கும் காட்சியைப் பார்க்க விரைந்து சென்ருேம். விசுவாசப் பிரமாணம் எடுத்துக் கொள்ளப் போகும் மண்டபத்திற்குள் நுழைந்ததும், "இதென்ன, ஏதோ சினிமா ஸ்டுடியோவிற்குள் நுழைந்து விட்டோம் போலிருக்கிறதே?" என்றேன் நான். "இல்லை; இவர்களெல்லாம் பத்திரிகை, சினிமா கம்பெனி முதலியவற்றிலிருந்து போட்டோ எடுக்க வந்திருக்கிருர்கள்" என்று விளக்கினர் ராஜன்.

ராஜாஜி, மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் 'கிளிக் கிளிக்' என்ற சத்தம் காதைத் துளைத்து விட்டது.

பிறகு, ராஜாஜி கம்பீரமாக வந்து மேடை மீது நின்ருர். அங்கே வரிசையாக எட்டு ஒலி பரப்பும் கருவிகள் நிறுத்தப் பட்டிருந்தன. அவற்றுக்கு ஊடே நிற்கும் போது ராஜாஜியின் சிறைவாசம் என் ஞாபகத்துக்கு வந்தது! கல்கத்தா பிரதம நீதிபதி ராஜாஜிக்கு விசுவாசப் பிரமாணம் செய்து வைத்தார். பின்னர், ஹிஸ் எக்ஸலென்ஸி ராஜாஜி மேற்கு வங்காள மந்திரிகளுக்கு விசுவாசப் பிரமாணம் செய்து வைத்தார். பிறகு கவர்னரின் உத்தரவின் பேரில் கூட்டம் கலைந்தது. நாங்களும் அந்த இடத்தை விட்டுக் கலைந்து கவர்னரின் ஜாகைக்குச் சென்று கூடினேம். அங்கு மேற்கு வங்கப் பிரதம மந்திரி பிரபுல்ல சந்திரகோஷும் வந்திருந்தார். சிறிது நேரம் எல்லோரும் தமாஷாகப் பேசிக் கொண்டிருந்து விட்டு வெளியில் வந்தோம். நாங்கள் மாளிகையினுள் நுழையும் போது காலியாகக் கிடந்த தெருக்களில் ஆயிரக் கணக்கான ஜனங்கள் நின்று கொண்டிருந்தார்கள். 'வந்தே

மாதரம்' 'ஜே ஹிந்த்' என்ற கோஷங்களும், 'மகாத்மா காந்திக்கு ஜே' 'ராஜாஜிக்கு ஜே' என்ற வாழ்த்தொலிகளும் இடை விடாமல் கிளம்பின. வீதிகளை எல்லாம் விதம் விதமான விளக்குகளைப் போட்டு அலங்காரம் செய்திருந்தார்கள். பதினைந்தாம் தேதி என்ன நடக்குமோ என்று பயந்து கொண்டிருந்தது போக, பதினாலாம் தேதி இரவே கல்கத்தா நகரெங்கும் லாரிகளும், ஜிப்களும், கார்களும், பஸ்களும், டிராம்களும் நூற்றுக் கணக்கான பேரைச் சுமக்க முடியாமல் சுமந்து கொண்டு சுதந்திர வெறி பிடித்து ஓடிக் கெண்டிருந்தன. இரவெல்லாம் கல்கத்தா வாசிகள் தூங்கவே இல்லை. ஒவ்வொருவரும் சுதந்திர சூரியன் உதிக்கும் காட்சியைப் பார்க்க வேண்டுமென்று துடியாகத் துடித்துக் கொண்டிருந்தனர்.

பொழுது விடிந்தது. காலைக் கதிரவன் ஜகஜ் ஜோதியாய் என்றுமில்லா அழகிய சோபையுடன் தன் பொற் கிரணங்களை வான வெளியில் பரப்பிக் கொண்டு தோன்றினான். வங்கப் பிரிவினையுடன் தோன்றிய சுதந்திர இயக்கம் வங்கப் பிரிவினையிலேயே முடிந்தது. சுதந்திரம் வந்ததற்கு முக்கிய காரணஸ்தரான ராஜாஜி வங்கத்திலே கவர்னராகி அரசாட்சி புரியப் போகும் நாள் இது என உலகுக்கு அறிவிப்பது போல் கதிரவன் களிப்புடன் தோன்றினான். சுதந்திர சூரியனைக் கண்டதும் "ஹிந்து முஸ்லிம் ஏக்ஹோ" என்ற குதூகல கோஷத்துடன் கல்கத்தா வாசிகள் ஒருவரை ஒருவர் அணைத்துக் கொண்டார்கள். அக்கினித் திராவகத்தை ஊற்றிய கையினால் பன்னீரைத் தெளித்தார்கள். கத்தியால் குத்திய கையினால் களிப்புடன் ஒருவருக் கொருவர் மாலை சூட்டிக் கொண்டார்கள். முஸ்லிம்களெல்லாம் தேசீயக் கொடியை ஏந்தி வந்தே மாதர கீதம் பாடி வழி நெடுக 'ஜே ஹிந்த்'

கோஷத்துடன் பவனி வந்தார்கள். அடடா, கல்கத்தாவில் சுதந்திர தினத்தன்று கண்ட காட்சியை என்னவென்று சொல்லுவேன்! கொடிகளை எண்ணத்தான் முடியுமா? கார்களைத் தான் கணக்கிட முடியுமா? ஜீப்புகள் ஒரு லட்சம் என்றால் குறைவாகப் போகுமே? லாரிகள் ஐம்பதினாயிரம் என்றால் மிகையாகாதே! கார்களிலும் ஜீப்புகளிலும் இருந்தவர்களைத் தான் எண்ணி முடியுமா? டிராம், பஸ் ஒன்றிலும் அன்று கட்டணம் கிடையாது. ஆகா! ஊர்வலம் எத்தனை மணி நேரம் போயிற்று, எத்தனை மைல் நீளம் போயிற்று என்பதற்குக் கணக்கு ஏதாவது உண்டா?

அன்று காலையில் கவர்னர் மாளிகையில் கொடி ஏற்று விழா நடைபெற்றது. கொடியை கவர்னர் ராஜாஜி ஏற்றி வைத்தார். பின்னர் ராணுவத்தினர் ராஜாஜிக்கு மரியாதை செய்தார்கள். மரியாதைக் குண்டுகளின் சப்தம் காதைத் துளைத்தது. ராஜாஜியைக் காணவேண்டுமென்று கவர்னர் மாளிகையின் நாலாபுறத்திலும் லட்சக் கணக்கான மக்கள் துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தார்கள். இதை அறிந்ததும் ராஜாஜி எல்லோரையும் உள்ளே விடும்படி கட்டளை பிறப்பித்தார். உடனே பார்க்க வேண்டுமே! ஜனசமுத்திரம் 'ஹோ' வென்ற சப்தத்துடன் அலை புரண்டு வந்தது. கிட்ட நெருங்க சப்த சமுத்திரங்களும் ஒன்று திரண்டது போல எங்கு பார்த்தாலும் ஒரே தலைகளாகத் தென்பட்டன. மரங்களில் இலைகளுக்குப் பதில் மனிதர்கள்தான் தென்பட்டார்கள். இவ்வளவு கூட்டத்தையும் பார்த்து ராஜாஜி ஒரு பெரிய கும்பிடு போட்டு எல்லோரையும் உட்காரும்படி கையமர்த்தினார். உடனே, மந்திரசக்தியால் கட்டுண்டவர்கள் போல எல்லோரும் 'கப் சிப்' என்று உட்கார்ந்தார்கள். உடனே, ராஜாஜி மெதுவாக நடந்து தம்

காரில் ஏறி மாளிகைக்குள் சென்றுவிட்டார். மாளிகைக் குள்ளும் ஜனங்கள் புகுந்து விட்டார்கள். அந்த மாளிகையில் சுமார் லட்சம் பேருக்கு இடமிருந்தது. அன்று உள்ளே புகுந்தவர்களும் லட்சம் பேர் இருக்கலாம். உள்ளே புகுந்த ஒவ்வொருவனும் ஆனந்தத்தால் துள்ளிக் குதித்தான். சோபாவில் உட்கார்ந்து பார்த்தவனும், சுவரைத் தொட்டுப் பார்த்தவனும், இப்படியாக அவர்க ளுடைய சந்தோஷத்தைக் கட்டிப் பிடிக்க முடியவில்லை. ஜனங்களுடைய கோலாகலத்தைப் பார்க்கச் சகிக்காதது போல அந்த மாளிகையில் சிலர் இருந்தார்கள். அவர்களை யாரென்று நினைக்கிறீர்கள்? வேறு யாருமில்லை! இது வரை யில் நம்மையும் நமது முன்னோர்களையும் அடக்கி ஆண்டு வந்த வெள்ளை கவர்னர்களின் படங்கள் தான்! அவர்க ளுடைய கண்கள் கோவைப் பழமாகச் சிவந்திருந்தன! அந் தப் படங்களுக்கு மட்டும் அன்று உயிர் இருந்திருந்தால்... இருந்திருந்தால் என்ன? இந்தக் கூட்டத்தைக் கண்டு ஒரே ஓட்டம் பிடித்திருப்பார்கள்! ஆனால், ராஜாஜி மக்களின் கவர்னரல்லவா? ஆகையால் அவரும் கூட்டத்துடன் கூட்டமாகச் சேர்ந்து கோலாகலமடைந்தார். ஜன்னல் வழியாக நின்றவண்ணம் மாளிகைக்குள் வர முடியாதவர் களைக் கை எடுத்துக் கும்பிட்டார். உடனே அந்த ஜன சமுத்திரம் 'ராஜாஜிக்கு ஜே' என்று கோஷித்த ஒலி குமரி முனைக்குக் கூட எட்டி யிருக்கும்! பின்னர் மெது வாக ராஜாஜி கீழே இறங்கி வந்தார். எல்லோரையும் உட்காரும்படி கேட்டுக் கொண்டார். எல்லோரும் உட்கார்ந்தார்கள். சகஜமாகப் பேசினார்.

"நீங்கள் எல்லோரும் சுதந்திர மடைந்து விட்டீர்கள். எனக்குத் தான் சுதந்திரம் கொடுக்க மாட்டேன் என்கிறீர்கள்" என்றார். உடனே எல்லோரும் 'கொல்' லென்று சிரித்தார்கள். "அதோ மரத்தில் ஒருவர்

சுதந்திரமாக உட்கார்ந்திருக்கிறார் பார்த்தீர்களா?'' என்று ராஜாஜி கூறியபோது ஜனங்களுடைய உற்சாகம் கட்டு மீறிப் போய்விட்டது. மேலும் ராஜாஜி சொன்னார்: ''நீங்களெல்லாம் இங்கே கூடிக் கொண்டிருந்தால் என்ன பிரயோஜனம்? வெளியில் போய் சுதந்திர தினம் கொண்டாட வேண்டாமா? பின்னர் வெளியூர்க் காரர்களெல்லாம் 'இந்தக் கல்கத்தாக்காரர்கள் சுதந்திர தினத்தை நன்றாகக் கொண்டாடவில்லை' என்று சொல்லுவார்களே'' என்றவுடன் கூட்டம் கோஷித்தவாறு கலையஆரம்பித்தது. ராஜாஜியும் அதுதான் சமயம் என்று சட்ட சபைக் கூட்டத்திற்குச் சென்று விட்டார். நாங்களும் ஒரு வழியாகத் தப்பித்துக்கொண்டு சட்டசபைக்குச் சென்றோம். அங்கே எம். எல். ஏக்களுக்கே உட்கார இடமில்லாமல் போய்விட்டது. ஜனங்கள் 'டெம்பரரி எம். எல். ஏக்களாக உட்கார்ந்து கொண்டார்கள். அசல் எம். எல்.ஏக்கள் வெளியிலே நின்றார்கள். அவர்களே வெளியில் நிற்கும்போது நாங்கள் உள்ளே போவது முறையல்ல வென்று அங்கிருந்த 'கான்டீ'னுக்குள் நுழைந்து ரஸகுல்லாக்களைப் போட்டு வயிற்றை நிரப்பினோம். அதற்குள் அசெம்பிளியில் ராஜாஜி பேசி, அதற்கு பி. ஸி. கோஷ் வங்காளியில் பதில் சொல்லிக் கூட்டமும் முடிந்து விட்டது. எங்களுடைய சாப்பாடும் முடிந்தது. அப்படியே அங்கிருந்து கிளம்பி ஊரெல்லாம் சுற்றி வந்தோம். வந்தே மாதரம்' 'ஜே ஹிந்த்' என்று கோஷமிட்டதால் தாகம் அதிகம் எடுத்தது. வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். அன்று மாலை தட்சிண பாரத சேவா சங்கத்தின் சார்பாக சுதந்திர தினவிழா நடைபெற்றது. மேற்படி சங்கத்தில் தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடர்கள் எல்லோரும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். ஆகையால் கூட்டத்துக்குத் தலைமை வகித்த ஸ்ரீ சி.எஸ். ரங்கசாமி

கல்கி ஆசிரியரை ஆங்கிலத்தில் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

கல்கி ஆசிரியரும் யாதொரு தயக்கமும் இன்றி ஆங்கிலத்தில் வாசாம கோசரமாகப் பேச ஆரம்பித்தார் 'அனுமார் சீதா தேவியைக் கண்டேன்'' என்று சொன்னதும் வானரங்கள் எவ்வளவு குதூகலம் அடைந்தனவோ அதைப் போல இன்று சுதந்திர தேவியைக் கண்டதும் ஜனங்கள் குதூகலம் அடைந்திருக்கிறார்கள்'' என்று கல்கி சொல்லியபோது சபையோர் எழுந்து எழுந்து சிரித்தார்கள்' (இந்தக் கட்டுரையில் ஆரம்ப முதல் 'விழுந்து விழுந்து' சிரித்தார்கள்' என்ற சொற்றொடர் அதிகமாக வந்து விட்டதாகையால் ஒரு மாறுதலுக்காக அதை மாற்றி உபயோகித்திருக்கிறேன்.) மேற்படி கூட்டத்தில் ஸ்ரீமதி செல்லம்மாள் ஒரு சுதந்திர தினப் பாட்டுப் பாடினார்கள். பாட்டு வெகு ஜோராக இருந்தது.

''கலா விநயமுள்ள கல்கியின்'' என்ற இடத்தில் ஒரு பலமான 'அப்ளாஸ்' விழுந்தது. பிறகு ''திக்கிக்கும் செந்தமிழில் டி. கே. சி. பேச்சு, திஸ் தெட் என்பது எல்லாமும் போச்சு'' என்ற இடம் வந்தபோது சபையோர் கொண்ட குதூகலத்தைச் சொல்லி முடியாது.

மறுநாள் காலையில் தென்னிந்திய சங்கத்தில் உபசாரம் நடைபெற்றது. மேற்படி தென்னிந்திய சங்கத்தில் முக்கிய பிரமுகராக இருந்த ஸ்ரீ ஆர். எஸ். சாரியார் காலஞ் சென்றுவிட்டார். அவர் கல்கி பத்திரிகை ஆரம்ப காலத்தில் எவ்வளவோ உதவி செய்தவராம். அவருக்கு அன்று கல்கி, தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொண்டார். பின்னர் டி. கே. சியை அங்கு பேசச் சொல்லிவிட்டு நானும் கல்கி ஆசிரியரும் ஹௌரா தமிழ்ச் சங்கத்திற்குச் சென்றோம். ஹௌரா கல்கத்தாவில் ஒரு பாகம்

ஹௌராவில் தமிழர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் தான் வசிக்கிறார்கள். பார்ப்பதற்கு ஒரு தமிழ் நாட்டுக் கிராமம் போலிருக்கிறது! ஒரு பள்ளிக்கூடம் கூட நடத்துகிறார்கள். மேற்படி சங்கத்தில் ஸ்ரீ சீதாபதி தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

"சென்ற வருஷம் ராஜாஜி தமிழ்ச் சங்கத்திற்கு வந்த போது 'அடுத்த வருஷம் நிச்சயம் நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிடும் என்றார். அவர் சொன்னபடி நமக்குச் சுதந்திரம் கிடைத்துவிட்டது" என்று சீதாபதி குறிப்பிட்டார். பின்னர் என்னுடைய பாட்டுக் கச்சேரியும் பேச்சுக் கச்சேரியும் நடைபெற்றது. 'மன்னார்குடியில் கல்கி காலமானார்' என்று ஒரு சமயம் தினப் பத்திரிகை ஒன்றில் வெளியான தவறான செய்தியை ஸ்ரீ சீதாபதி பிரஸ்தாபித்ததால் நானும் கல்கியைப் பற்றியே பேசினேன். கல்கியைப் பற்றி நான் என்ன பேசுகிறேன் என்பதை கல்கி அவர்களே நேரே இருந்து கேட்டு அனுபவிக்கட்டுமே என்று தான்!

"ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள் சிறு பையனாக இருந்தபோது, நமது இந்தியா தேசம் அவருடைய சேவை யில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயமே அவருக்குத் தெரியாமலிருந்ததாம். அப்போதெல்லாம் அவர் மனதறிந்து தேசத்திற்காக ஒருவித சேவையும் செய்ததில்லையாம். ஒரே ஒரு தடவை செய்ய முயன்ற சேவையும் விபரீதமாக முடிந்ததாம்.

அந்தக் காலத்தில் ஒரு நாள் தேசம் அவருடைய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருந்த பாழும் கிணற்றில் விழுந்து விட்டதாம்! முழுகுவதற்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் தேசம் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் பக்கத்திலிருந்த தேசபக்தர்கள் சிலர் கல்கியைப் பார்த்து,

"அப்பா! தேசத்தைக் காப்பாற்ற ஒரு துரும்பையாவது நீ எடுத்துப் போடக்கூடாதா?" என்று சொன்னார்களாம்.

"உடனே கல்கி ஆசிரியர் துரும்பு என்னத்திற்கு? கல்லைத் தூக்கியே போடுகிறேன்" என்று கூறி விட்டு ஒரு கல்லைத் தூக்கிக் கிணற்றுக்குள் போட்டாராம். உடனே, தேசம் அந்த நாலு விரற்கடைத் தண்ணீரில் தலை கீழாக அமிழ்ந்து பிராணனை விட்டு விட்டதாம்!

இதன் பலனாகக் கல்கியின் தகப்பனார் ஒரு வராகன் தண்டம் கொடுக்கும்படி நேர்ந்ததாம். தகப்பனாரிடம் மூன்றரை ரூபாய் வாங்கிக் கொண்டுபோய் புதிய இந்தியா தேசப் படம் ஒன்றை வாங்கி வந்து பள்ளிக்கூடத்துச் சுவரில் மாட்டிய பிறகுதான் உபாத்தியாயர் அவரைப் பெஞ்சு மேலேயிருந்து கீழே இறக்கினாராம்.

அதற்குப் பிறகு வெகுகாலம் வரையில் தேசம் என்றாலே கல்கி ஆசிரியர் வெறுப்புக் கொண்டிருந்தாராம். அப்புறம் ஒரு நாள் தற்செயலாக "தேசத்திற்கே உழைக்க ஜன்மம் எடுத்தோம்" என்ற பாட்டை அவர் கேட்க நேர்ந்ததாம். உடனே ஜன்ம தேசத்திற்கு உழைக்க வேண்டுமென்ற ஆசை அவர் பிடரியைப் பிடித்து உந்தியதாம்.

மேல் சட்டை, மேல் வேஷ்டி எல்லாவற்றையும் கழற்றித் தலையைச் சுற்றி எறிந்துவிட்டு, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினாராம்.

"மகாத்மாஜி! நான் தேசத்திற்கு உழைக்கத் துணிந்து விட்டேன். அவ்விடம் நான் வரட்டுமா? அல்லது தேசத்தை இங்கே அனுப்பி வைக்கிறீர்களா?" என்று கேட்டாராம்.

மகாத்மாஜி, கேட்டதற்குப் பதில் சொல்லாமல், "கைராட்டையில் தினம் இரண்டாயிரம் கெஜம் நூல்

நூற்று வா! உன் மனது தெளிவடையும்" என்று பதில் கடிதம் எழுதினாராம்.

"ரொம்ப லட்சணம்! நான் தேசத்துக்கு உழைக்க வந்தேனா? நூல் நூற்க வந்தேனா?" என்று கல்கி தமக்குத்தாமே கேட்டுக்கொண்டு மகாத்மாஜியை விட்டு விட்டாராம்.

பின்னர், திடீரென்று தம் உடையை மாற்றினாராம். ஒரு கதர் ஜிப்பாவும், அதன் மேல் கம்பளி 'வெயிஸ்ட் கோட்'டும் அணிந்து தலையில் ஒரு காந்திக் குல்லா தரித்துக் கொண்டாராம். உடனே அச்சமயம் காங்கிரஸ் தலைவரா யிருந்த பண்டித ஜவாஹர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினாராம்.

"தேச சேவைக்குத் தயார்! காங்கிரஸ் தலைமைப் பதவி வகிப்பது சிரமமாயிருந்தால், தந்தி யடிக்கவும்; உடனே புறப்பட்டு வருகிறேன்!" என்று குறிப்பிட்டிருந் தாராம். ஜவாஹர்லால்ஜியிடமிருந்து பதில் வந்ததாம்.

"தற்சமயம் இந்தியாவுக்குச் சேவை சீனப் போர்க் களத்தில் செய்ய வேண்டும். உடனே புறப்பட்டுப் போகவும்" என்பதுதான் அந்த பதில்.

இதைப் பார்த்ததும் கல்கிக்கு கோபம் கோபமாய் வந்ததாம். உடனே வெயிஸ்ட் கோட்டையும் காந்திக் குல்லாவையும் எடுத்தெறிந்து விட்டுத் தலையில் உச்சிக் குடுமி வைத்துக்கொண்டாராம். புகைக் கண்ணாடியும் வாங்கி மாட்டிக் கொண்டாராம். பின்னர் நமது சொந்த மாகாணத் தலைவர் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினாராம்.

"தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன். எவ்விடத்தில் ஆரம்பிக்கலாம்?" என்று யோசனை கேட்டிருந்தாராம்.

"கள்ளுக் கடையில் ஆரம்பிக்கலாம். ஒரு குடிகாரனைக் குடியை விடும்படி செய்தால், ஒன்பது தடவை உயிரை விடுவதைவிட அதிக பலன் உண்டு" என்று ராஜாஜி பதில் எழுதினாராம்.

"இதென்ன பிரமாதம்? ஒரு குடிகாரனைக் குடியை விடும்படிச் செய்து ஒன்பது தடவை தேசத்திற்கு உயிர் விடுவோம்" என்று தீர்மானித்துக்கொண்டு கல்கி அவர்கள் திருச்செங்கோட்டுக்கு ராஜாஜியிடம் போய்ச் சேர்ந்தாராம்.

ராஜாஜி இவரைப் பார்த்தவுடன் "ஓ! நீங்கள்தானா தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்? உம்மிடம் உயிர் இருப்பதாகவே தெரியவில்லையே; பின் எப்படி அதைவிடப் போகிறீர்?" என்றாராம். உடனே கல்கி, "அதுவா? ரயிலில்—பஸ்ஸில்-வண்டியில் வரும்போது பத்திரமாக இருக்க வேண்டுமென்பதற்காகப் பெட்டியில் வைத்திருக்கிறேன்!" என்று சொல்லிப் பெட்டியிலிருந்து சில துண்டுப் பிரசுரங்கள், சின்னப் புத்தகங்கள் முதலியவற்றை எடுத்து வெளியில் போட்டாராம்.

ராஜாஜி அவற்றைப் படித்துவிட்டு. "பேஷ்! இதை நீர் உம்முடைய உயிர் என்று சொன்னது சரிதான்!" என்று மெச்சி விட்டு அதைப்போல நிறைய எழுதும்படி கல்கியைத் தூண்டினாராம்.

கல்கி தமிழ் எழுத ஆரம்பித்தார்!

அடடா! தமிழ் மொழிக்கு. யோகமல்லவா பிறந்து விட்டது!

கல்கியின் எழுத்துப் பைத்தியத்தை ராஜாஜி வளர்த்தது போலவே ஆசியர் திரு. வி. கல்யாண சுந்தர முதலியாரும் வளர்த்து வந்தார். "தமிழ் நாட்டில் பலர்

செய்வதுபோல என்னுடைய தமிழ் நடையைக் 'காப்பி' அடித்துக் கெடவேண்டாம்; உன் போக்கிலேயே செல்" என்று திரு.வி.க. அவர்கள் கல்கிக்கு போதனை செய்தார்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, தமிழ் மக்களாகிய நாம் மிஸ்டர் வாரன் என்னும் ஆங்கில துரை மகனுருக்கு ஒரு கோவில் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். ஏனெனில் கல்கியைத் தமிழ் எழுத்தாள ராக ஆக்கியதற்கு முக்கிய பொறுப்பாளி அவர்தான்!

1922–ம் ஆண்டிலே கூடலூர் சிறைச்சாலைக்கு கல்கியை மேற்படி துரைமகனுர் அனுப்பி வைக்கப் போக,— அங்கே சும்மா இருப்பதற்கு முடியால் கல்கி தமிழ் எழுத ஆரம்பிக்க, பின்னர் தமிழும் கல்கியும் ஒருயிரும் ஈருடலுமாகி, இப்பொழுது 'தமிழ் என்றால் கல்கி — கல்கி என்றால் தமிழ்' என்பது போன்ற பொய்யா மொழிகளும் உண்டாகி விட்டன.

தமிழ் வாழ்க! அதை வாழ்விக்க வழி செய்த வாரன் துரை மகனுரும் அடியோடு வாழ்க!" என்று வாழ்த்துவோமாக!

கம்பன் பிறந்த நாடு என்றும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு என்றும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ் நாடு என்றும், நாமக்கல் கவிஞர் உதித்த நற்றமிழ் நாடு என்றும், தேன் தமிழ் அளிக்கும் தேசிக விநாயகம் தோன்றிய தமிழ் நாடு என்றும், தமிழ் நாட்டின் பெருமைகளைப் பலர் பலவித மாகச் சொல்லிப் பாராட்டி மகிழ்கிறார்கள்.

இனி "கல்கி பிறந்த தமிழ் நாடு" என்று சொன்னாலே போதும். ஏனெனில் கம்பரும், வள்ளுவரும், இளங்கோவும்,

பாரதியும், நாமக்கல் கவிஞரும், தேசிகவிநாயகமும் கல்கியின் உருவத்திலே தமிழ் நாட்டில் உலாவுகிறார்கள். ஆகவே, 'கல்கி பிறந்த தமிழ் நாடு வாழ்க' என்று வாழ்த்துவோமாக!' என்று கூறி என் பிரசங்கத்தை முடித்துக்கொண்டேன்.

என்னுடைய சொற்பொழிவு முடிந்ததும் கல்கி ஆசிரியர் பேச ஆரம்பித்தார். "நல்ல வேளையாக நான் மன்னார்குடியில் காலமாகாமல் இந்தச் சுதந்திரத்தைப் பார்க்க இந்தக் கல்கத்தாவில் உயிருடனிருப்பது என் பாக்கியம்" என்றார். பிறகு சுதந்திர தினத்தைக் கல்கத்தாவில் கொண்டாடுவது தான் விசேஷம்" என்றார். "அதனால்தான் கல்கத்தாவில் மகாத்மாஜி, கிருபளானி, ராஜாஜி, நம்ம சின்ன அண்ணாமலை முதலியவர்கள் இருக்கிறார்கள்" என்று சொன்னபோது சபையோர் பலத்த கர கோஷம் செய்தார்கள். பின்னர் தலைமைவகித்த ஸ்ரீசீதாபதி "மனிதர்கள் ஒரு தடவை தான் இறப்பார்கள். அதன்படி நமது கல்கி ஒரு தடவை இறந்து போனதாகச் செய்தி வந்து விட்டது. இனி அவருக்கு இறப்பே கிடையாது. மார்க்கண்டனைப் போல் சிரஞ்சீவியாகவே இருப்பார்" என்று சொல்லிய போது சபையோர் "கல்கி கிருஷ்ணமூர்த்திக்கு ஜே!" என்று ஆரவாரம் செய்தார்கள். சங்கத் தலைவர் ஸ்ரீ ராமரத்னம் அவர்களும் காரியதரிசியும் வந்தனோபசாரம் கூற கூட்டம் முடிந்தது. அங்கு கூடியிருந்த தமிழர்களிடம் விடைபெற்றுக் கொள்ளும்போது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. "எப்படிப்பட்ட நல்ல ஜனங்கள்! இவர்களுடன் கூடவே இருந்துவிட முடியவில்லையே" என்று நினைத்துக் கொண்டேன். பின்னர் அன்று இரவு ஒன்பது மணிக்கு ராஜாஜியிடம் சென்று மறு நாள் காலையில் ஊருக்குப் போவதால் விடை பெற்றுக் கொண்டோம். ராஜாஜி என்னைப் பரிவுடன்

தடவிக் கொடுத்து "உடம்பை ஜாக்கிரதையாகக் கவனித்துக் கொள்" என்று ஆசீர்வாதம் செய்தார்கள். ரஸிகமணியும் கல்கியும் ராஜாஜியை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் பிரிந்தார்கள்.

"கடவுளே, இது வரையில் ராஜாஜிக்கு எத்தனையோ சோதனைகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர் அவற்றை யெல்லாம் வென்று வெற்றிக்கொடி நாட்டிவிட்டார். இப்பொழுதுகல்கத்தா சோதனைக்கு இலக்காகி இருக்கிறார் அதிலும்அவர் வெற்றி பெறுவார். அதற்கு நீயும் துணை புரிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்து கொண்டு காரில் ஏறினேன். கார் நேராக நேஷனல் ஹைஸ்கூலுக்குச் சென்றது

இரவு மணி பத்தாகிவிட்டது. பாரதி தமிழ்ச் சங்கத்தார் எங்களுக்குப் பிரிவு உபசாரக் கூட்டம் நடத்த ஏற்பாடு செய்திருந்தார்கள். இரவு பத்து மணியாக இருந்த போதிலும் கல்கத்தா தமிழ் மக்கள் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோரும் கூடிவிட்டார்கள். ஒரே கூட்டம். மிகவும் நெருக்கடியாக இருந்தது.

நாங்கள் உள்ளே பிரவேசித்ததும் ஜனங்கள் ஆரவாரம் செய்து வரவேற்றார்கள். தலைவர் ஸ்ரீ சீதாபதி நாங்கள் மறு நாள் காலை ஏழு மணிக்கு ஆகாய விமானம் மூலம் தமிழ் நாட்டுக்குச் செல்லப்போவதைக் கூட்டத்தினருக்கு அறிவித்து எங்கள் மூவருக்கும் வந்தனோபசாரம் கூறினார். அன்று அவருடைய குரலில் ஒரே சோகம் நிரம்பியிருந்தது. கூட்டத்தில் கூடியிருந்தவர்கள் முகத்திலும் ஒரு வருத்தக்குறி தென்பட்டது! முதலில் நான் விடை பெற்றுக் கொள்வதற்காகப் பேசினேன். கல்கத்தா தமிழர்கள் என்னிடம் செலுத்திய அன்பிற்கும், அவர்கள் என்னைப் பாராட்டிய முறைக்கும் நான் என்ன கைம்மாறு

செய்ய இயலும்? என்றால் இயன்ற கைம்மாருக 'சங்கநாதம் கேட்குது' என்ற பாடலை அவர்களுக்குப் பாடினேன். நாமக்கல் கவிஞரின் பாடல்களைக் கேட்டு கல்கத்தா தமிழர்கள் அடைந்த பரவசத்தைப் போல வேறு எங்கும் நான் கண்டதில்லை. ஸ்ரீமதி கமலாவதி பஞ்சரத்தினம் நாயுடு என்ற ஆந்திர அம்மையார் நாமக்கல் கவிஞரின் பாடல்களைக் கேட்டு மனமுருகி, கவிஞரிடம் கொடுக்கும்படி ரூபாய் ஐம்பது கொடுத்தார்கள்.

பின்னர் டி. கே. சி, சில வார்த்தைகள் சொல்லிக் கூட்டத்தினரிடம் விடைபெற்றுக் கொண்டார்.

கடைசியாகக் கல்கி பேச ஆரம்பித்தார். "நேற்று நடந்த கோலாகலத்தை மறந்தாலும் மறப்பேன். கல்கத்தா தமிழர்களின் அன்பை மறக்க மாட்டேன்" என்றார் நேற்று முழுவதும் 'ஜே' கோஷம் போட்டதால் தொண்டை கட்டிப்போய் விட்டதென்றார். ஏற்கெனவே வெகு நாட்களுக்கு முன் தேசிய கீதம் பாடியதால் கல்கிக்குத் தொண்டை கட்டிப் போயிருந்ததாம். பின்னர் 'கிரிடிஸிஸம்' எழுத ஆரம்பித்ததும் பாடுவதையே நிறுத்தி விட்டாராம். ஆனால், நேற்றைய வைபவத்தைப் பார்த்ததும், கல்கத்தா தமிழர்களின் அன்பைப் பார்த்ததும் அவருக்குக் கூடப் பாடவேண்டுமென்று தோன்றிவிட்டதென்றார். எங்கே பாடி விடுவாரோ என்று நான் பயந்து போனேன்! ஏனெனில் கல்கி செய்ய முடியாத காரியம் அது ஒன்றுதான் என்று நான் ஐம்மமாக இது வரை பாடிக்கொண்டு வந்திருக்கிறேன். அதையும் அவர் செய்ய ஆரம்பித்து விட்டால் பிறகு என்னை யார் மதிப்பார்கள்? ஆனால், நல்லவேளை, அப்படி எல்லாம் அவர் செய்து எனக்கு ஆபத்தை உண்டாக்கவில்லை.

பின்னர், கல்கி ஆசிரியர் ஸ்ரீனிவாச சாஸ்திரியார் எஸ். வி. வி. முதலியோரைத் தமிழில் பேசவும் எழுதவும் செய்தது போல ஸ்ரீ சி. எஸ். ரங்கசாமியையும் தமிழில் பேசும்படிச் செய்தார். ஸ்ரீ சி. எஸ். ரங்கசாமி தமிழில் பேச ஆரம்பித்தவுடன் சபையோர் கரகோஷம் செய்து மிகவும் மகிழ்ந்தார்கள்.

கூட்டம் முடிந்ததும் கல்கத்தா தமிழ் மக்கள் எல்லோரும் பிரிய மனமில்லாமல் எங்களைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். எங்களுக்கும் அவர்களை விட்டுப் பிரிய மனம் வரவில்லை. ஆயினும் என்ன செய்வது! கடைசியில் ஒரு வழியாக எல்லோருடைய கண்களும் கலங்க, எல்லோரும் கை எடுத்துக் கும்பிட எங்கள் கண்களிலிருந்து நீர்த் துளிகள் கீழே விழ விடை பெற்றுக் கொண்டோம்.

மறு நாள் காலை ஏழு மணிக்கு டம் டம் விமான நிலையத்தில் ஆகாய விமானத்தில் ஏறியதும் எனக்குச் சென்று போன பத்து நாட்களின் நினைவு மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

ரசிகமணி சாந்தி நிகேதனில் தமிழ்த் தாய்க்கு அமைத்த சிம்மாசனத்தை நினைத்துப் பூரிப்படைவேனா? எனது வணக்கத்திற்குரிய தலைவர் ராஜாஜி கவர்னரான கண் கொள்ளாக் காட்சியை நினைத்து நினைத்து ஆனந்த மடைவேனா? கல்கத்தா மக்கள் சுதந்திர தினம் கொண்டாடிய விதம் என் இதயத்தில் ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கியதை நினைத்து மனம் மகிழ்வேனா? பாரதி தமிழ்ச் சங்கத்தாரும், தென் இந்தியப் பெண்கள் சங்கத்தாரும் மற்றும் கல்கத்தாவிலுள்ள சங்கத்தார் அனைவரும் செய்த உபசாரத்தை, எண்ணி இதயம் குளிர்ச்சி யடைவேனா? எதைச் செய்வேன்? என் மனம் அப்படி நிரம்பிப் போய்விட்டதே! ஸ்ரீ வி. என். ராஜனும், அவர்

மனைவியாரும் எவ்வளவு உள்ளன்பு உடையவர்கள்! ஸ்ரீ வி.டி.சுவாமி எங்களுக்குச் செய்த சேவையை அளவிட முடியுமா? ஸ்ரீ சிவராமகிருஷ்ண ஐயரும், அவருடைய மனைவியாரும் எங்களிடம் செலுத்திய பிரியத்தை மறக்க முடியுமா? பாரதி தமிழ்ச் சங்கத் தலைவர் ஸ்ரீ சீதாபதி—ஆகா! எப்பேர்ப்பட்ட நல்ல மனிதர்! எவ்வளவு உயர்ந்த பண்பாடுடையவர்! குணம் என்றால் எவ்வளவு அமைதியான குணம்! அவர் எங்களைக் கௌரவப் படுத்தியதும், பாராட்டியதும், எங்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்ததையும் என்ன வென்று சொல்லுவது! பாரதி தமிழ்ச் சங்கக் காரியதரிசி ஸ்ரீ தியாகராஜனும், உப தலைவர் கிருஷ்ணனும் எங்களை நன்கு அறிந்து கொண்டு எங்களிடம் காட்டிய அன்பை அளவிட முடியுமா?

இப்பேர்ப்பட்ட அன்பர்களின் ஆரவாரத்தினாலும், உற்சாகத்தினாலும் ரஸிக மணியின் உடல் நிலை பூரணமாக குணமடைந்தது. "மனிதன் ஆனந்தத்தில் இளைஞனாகிறான்" என்பது போல டி. கே. சி ஓர் இளைஞராகவே ஆகிவிட்டார்கள். நானோ ஏற்கெனவே இளைஞனானபடியால் பாப்பாவாக ஆகிவிட்டேன்.

மீனம்பாக்கம் வந்து இறங்கியதும், நண்பர்களில் சிலர், "கல்கத்தாவில் கலவரமே இல்லையாமே?" என்றார்கள்.

"ஆமாம்; ராஜாஜி அந்த பூமியில் கால் வைத்ததும், கலவரம் அடங்கிப் போய்விட்டது. அத்துடன் நாங்கள் மூவரும் செய்த கலவரத்தினால் பழைய கலவரங்களுக்கு முக்கியத்துவம் இல்லாமலும் போய்விட்டது" என்றேன்.

இவ்வளவு வைபவங்களைக் காணும்படிச் செய்து வைத்த ராஜா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்களுக்கும் டாக்டர் அருணாசலம் அவர்களுக்கும் மறுமுறையும் என் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.